விலை யாழ். ரூ 30, வன்னி ரூ.20 பக்கங்கள் 48

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 199 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 31, ஞாயிற்றுக்கிழமை 14.06.2015

## ரணிலே தொடர்ந்தும் பிரதமர்

கொழும்பு, ஜூன் 14
எதிர்வரும் பொதுத்தேர்தலின் முடிவுகள் எப்படி இருந்தாலும் இன்றுபோல் என்றும் ரணிலே இந்நாட்டின் பிரதமராக இருப்பார் என வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸ கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.
எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா இந்நாட்டின் அடுத்த பிரதமராகும் கனவில் இருக்கிறார் எனவும் அவரது கனவு ஒரு நாளும் பலிக்கப் போவதில்லை எனவும் சஜித் பிரேமதாஸ கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் பகலில் பக்.21

# உள்ளக விசாரணை பயனற்றது

## கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் இதற்குச் சான்று என்கிறார் சுரேஸ் எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 14
போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சர்வ தேசப் பொறிமுறை எல்லாம் இருந்தாலும் கூட உள்ளக விசாரணை என்பது எந்த விதத்திலும் சரியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று கூற முடியாது. இந்த உள்ளக விசாரணை பிரயோசனமற்றது என்பதை நாங்கள் மிகத் தெளிவாகச் சர்வதேச சமூகத்துக்குக் கூறிக்கொள்கிறோம். நாம் கடந்த காலங்களில் கற்றுக்கொண்ட பாடங்கள் இவற்றுக்குச் சான்று என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஸ்பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த மார்ச்சில் வெளிவந்திருக்க வேண்டிய மனித உரிமை மீறல்கள் அறிக்கை செப்ரெம்பருக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இலங்கை அரசு, தான் ஒரு பொறிமுறையை உருவாக்கி உள்ளக விசாரணை ஒன்றைச் செப்ரெம்பரில் நடத்தவுள்ளதாகக் கூறுகிறது.
இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறுதல் மாத்திரமன்றி முழுமையான சர்வதேச விசாரணையைத்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வந்துள்ளது. அது ஈழத் தமிழர்களுடைய இனப் பிரச்சினைக்கான தீர்வினையும் ஏற்படுத்துவதற்கு உந்துசக்தியாக இருக்கும் என்ற அடிப்படையும் இருந்தது.
ஆனால் அந்த உள்ளக விசாரணைப் பொறிமுறைக்குள் இலங்கை அரசு போக இருப்பதால் அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு இருக்கும் என்றொரு கேள்வியுமுள்ளது. எனவே நாம் மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டியது பக்.21

## அரசின் அணுகுமுறை; சம்பந்தன் வரவேற்பு



கொழும்பு, ஜூன் 14
புலம்பெயர் தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லர் என்று அரசு பகிரங்கமாக அறிவித்துள்ளதை மனதார வரவேற்கின்றோம். புலம்பெயர் தமிழர்களுடன் இந்த அரசு மனம் விட்டுப் பேச முன்வந்துள்ளமை மிகவும் முற்போக்கான செயலாகும். மைத்திரி அரசின் இந்த முன்னேற்ற கரமான நடவடிக்கை முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கும் அவருடன் சேர்ந்து ஒப்பாரி வைக்கும் இனவாதிகளுக்கும் தக்கபாடமாகும்.
-இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் பக்.21

## ரவிகரனிடம் மீண்டும் விசாரணை

முல்லைத்தீவு, ஜூன் 14
மாவீரர் தினத்தன்று விளக்கேற்றியமைக்காக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் இரண்டாவது தடவையாகவும் நேற்றுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
கடந்த ஆண்டு நவம்பர் மாவீரர் தினத்தன்று தடைகளையும் மீறி வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் து.ரவிகரன் விளக்கேற்றி அஞ் சலி செலுத்தினார்.
அதனைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக கடந்த மே மாதம் 5 ஆம் திகதி முதல் தடவையாக ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.
அதன் பின்னர் நேற்றும் ரவிகரனின் வீட்டுக்குச் சென்ற சிவில் உடை தரித்த பக்.21

## இலங்கையில் டிசம்பரில் புலம்பெயர் சமூக விழாக்கள்

கொழும்பு, ஜூன் 14
வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசம்பர் மாதம் இலங்கையின் பல பாகங்களிலும் புலம்பெயர் சமூக விழாக்கள்' நடத்தப்படவுள்ளன என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர சபையில் அறிவித்தார்.
லண்டனில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் நடத்திய பேச்சு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா வியாழக்கிழமை சபையில் எழுப்பிய மறுநாள் வெள்ளிக்கிழமை பதிலளித்த போதே மேற்கண்ட அறி விப்பை விடுத்த அவர், மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த ஜனவரி 8ஆம் திகதி நாட்டில் ஏற்படுத்தப்பட்ட இன ஐக்கியத்துடனான சமா தானத்தின் பிரதிபலனை அனைத்து இன மக்களும் அனுபவிக்கவேண்டும். எனவே, இந்த நாட்டின் ஐக்கியம், பக்.21

## மலையக, முஸ்லிம் மக்களுக்கும் 20ஆவது திருத்தம் உகந்தது அல்ல

யாழ்ப்பாணம், ஜூன் 14
புதிய தேர்தல் சீர்திருத்தம் வடக்கு-கிழக்கில் தமிழர்களுக்கு மாத்திரமன்றி தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கும் மலையக மக்களுக்கும் உகந்ததாக இருக்காது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது பற்றி ஆராயும் என்று கருதுவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அதன் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித்தார்.
நீர்வேலியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். பக்.21

## விகாரையை அமைக்கும் பணி கொக்கிளாயில் இடைநிறுத்தம்

முல்லைத்தீவு, ஜூன் 14
கொக்கிளாய் பகுதியில் தனியார் காணியில் அத்துமீறி பிக்கு ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட விகாரை அமைக்கும் பணி நேற்று முன்தினம் முதல் இடைநிறுத் தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார்.
காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் பொருட்டு நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கூடிய காணி அமைச்சின் நடமாடும் சேவையிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய இரண்டு வருடங்களில் காணிப் பிணக்குகள் தீர்க்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளர் போன்ற அதிகாரிகளால் தீர்க்கப்படாத முல்லைத்தீவு மாவட்ட காணிப் பிணக்குகளை தீர்த்து வைப்பதற்காகக் காணி ஆணையாளர் நாயகம் உட்பட காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம், காணி அமைச்சு என்பவற்றைச் சேர்ந்த உயரதிகாரிகள் கலந்து கொண்ட நடமாடும் பக்.21

## 20 க்கு எதிராக உயர்நீதிமன்றம் செல்வோம்

### அரசை எச்சரிக்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூன் 14
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் எதிர்ப்பையும்மீறி தற்போது முன்வைக்கப் பட்டுள்ள யோசனைக்கு அமைய 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.
மாத்தளை நகர சபை மண்ட பக்.21

## இணைந்து செயலாற்றுதல் நல்லிணக்கத்தின் அத்திபாரம்

### ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 14
அனைத்து மொழிகளையும் பேசுகின்ற அனைத்து மக்களுடனும் சேர்ந்து செயலாற்றுதல் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கு அத்



திபாரமாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையின் 75 ஆவது பக்.21

ஐந்துக்கு பத்து
* உங்கள் 5 வருட நிலையான வைப்புக்கு ஆகக்கூடிய 10% வட்டி (நிறைவடையும் போது)
வ.நி.வீ. 8.45%

| | 3 மாதங்கள் | 6 மாதங்கள் | 1 வருடம் |
|---|---|---|---|
| நிறைவடையும் போது | 7.25% | 7.50% | 8.25% |
| வ.நி.வீ | 7.45% | 7.64% | 8.25% |

வேறு நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள சணச அபிவிருத்தி வங்கியை நாடுங்கள் அல்லது அழையுங்கள் 0242 227 928
SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

noolaham.org | aavanaham.org

# நாடு திரும்பும் குடும்பங்களுக்கு மருத்துவ அறிக்கைகள் தாமதம்

## பிரதேச செயலகத்தில் பதிவு செய்ய முடியாத நிலை

தென்மராட்சி, ஜூன் 14

இந்தியாவிலிருந்து சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிய குடும்பங்கள் உரிய மருத்துவ அறிக்கை வழங்குவதில் ஏற்படும் தாமதத்தினால் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யமுடியாத நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து சொந்த இடங்களுக்குத் திரும்பும் குடும்பங்கள் அந்தப் பகுதி சுகாதார மருத்துவமனை மற்றம் அரச மருத்துவமனைகளில் மலேரியா, தொழு நோய், காச நோய் மற்றும் பாலியில் நோய் ஆகியன்வ தொடர்பான அறிக்கை சமர்ப்பித்த பின்னரே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு குடும்ப அட்டை வழங்கப்படும்

இந்தியாவிலிருந்து ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பிய குடும்பங்கள் மருத்துவமனையொன்றில் சகல பரிசோதனைகளும் மேற்கொண்டதாகவும், ஏனைய அறிக்கைகள் கிடைத்தபோதிலும் மலேரியா அறிக்கை கிடைக்காததால் தினமும் அறிக்கை பெற அலைவதாகவும் தெரிவித்தனர்

இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது,

இவ்விடயம் தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும், மலேரியா தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் இருவருக்கிடையே காணப்படும் பனிப்போர் காரணமாக அறிக்கை வழங்கத் தாமதமாகியுள்ளது எனவும், நேற்று மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக இரு பகுதியினரையும் அழைத்து விசாரணை செய்த பின்னர் அறிக்கை பெறப்பட்டு அந்தக் குடும்பங்களுக்கு முழுமையான அறிக்கை கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு கடமையாற்றும் இருவருக்கிடையில் ஒத்தழைப்பு இல்லாததால் ஒருவரை வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தபோதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனவும் கூறப்பட்டது.

மூன்ற மாதங்களுக்கு முன்னர் மருத்துவமனையொன்றில் அறிக்கை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பாக வட மாகாண சுகாதார அமைச்சருக்குக் கிடைத்த முறைப்பாட்டினையடுத்து இந்தியாவிலிருந்து சொந்த இடங்களுக்கு திரும்புவோருக்குத் தாமதமின்றி அறிக்கை வழங்க வேண்டுமென மாகாண சுகாதார அமைச்சினால் சகல மருத்தவமனைகளுக்கும் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# பாசையூர் அந்தோனியாரின் அருள் பெற திரண்ட பக்தர்கள்



கொழும்புத்துறை, ஜூன் 14

பாசையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த பெருவிழா நேற்றைய தினம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்தி பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை நடைபெற்ற திருவிழாத் திருப்பலியை பாசையூர் மைந்தனும் பாகிஸ்தான் குவேட்டா மறை மாவட்ட ஆயருமான அருட்கலாநிதி மேதகு விக்டர் ஞானப் பிரகாசம் ஆண்டகை ஒப்புக்கொடுத்தார். திருப்பலி நிறைவில் புனித அந்தோனியாரின் அழியாத உடற்பாகங்களில் இருந்து எடுத்துவரப்பட்டு யாழ்ப்பாணத்தில் வைத்து பாதுகாக்கப்பட்டு வரும் திருப்பண்டத்தினால் ஆசீர் அளிக்கப்பட்டது.

முன்னதாகநேற்றுமுன்தினம்மாலை நடைபெற்ற நற்கருணை விழாவில் நற்கருணை ரதப்பவனி இடம்பெற்றது. யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகள் நற் கருணைப் பேழையைத் தாங்கி வந்தார்.

திருவிழாவின் நவநாள் காலங்களில் மறையுரையாற்றிய தமிழ்நாடு திருச்சி மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு அல்பேட் தாசிஸ் அடிகள் பாகிஸ்தான் ஆயரினால் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

புனித அந்தோனியாரின் தேர்ப் பவனி நேற்றுமாலை ஆயிரக் கணக்கான பக்தர்கள் புடைசூழ நடைபெற்றது. 5வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் நீண்ட பவனியாக ஆலயத்திலிருந்து கடற்கரை வீதி, புது வீதி, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளிச் சந்தி வழியாக கணக்கர் சந்தி சென்று ஆலயத்தை அடைந்து புனிதரின் ஆசீர் வழங்கப்பட்டது. (த-135)

# மாற்றுத் திறனாளிகளுக்கு புனர்வாழ்வுத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மாற்றுத் திறனாளிகளைச் சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் செயற்றிட்டத்தின் கீழான செயலமர்வுகள் மத்திய சமூக வேவைகள் அமைச்சினால் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் நடத்தப்படவுள்ளன.

நாளை யாழ்ப்பாணத்திலும் நாளை மறுதினம் கிளிநொச்சியிலும் இவை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலமர்வுகளில் மத்திய சமூக சேவைகள் அமைச்சின் செயற்றிட்ட இணைப்பாளர் எம்.கே.சாந்த குமார மற்றும் அந்தந்த மாவட்ட இணைப்பாளர்கள் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர், பிரதேச செயலக சமூக வேவைகள் அலுவலர்கள், சமூக சேவைகள் அபிவிருத்தி உதவியாளர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலர்கள், உளவளத் துணையாளர், முதியோர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், தொண்டர்கள், மாவட்ட மட்ட சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

# பணிப் பெண்ணாக சவூதி சென்றவர் திடீரென சாவு

வவுனியா, ஜூன் 14

வீட்டு பணிப்பெண் வேலைக்காக அரபு நாட்டுக்குச் சென்ற வவுனியாவை சேர்ந்த ஏழைக் குடும்பப் பெண் 20 மாதங்களின் பின் திடீரென உயிர் இழந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளதாக உயிரிழந்த பெண்ணின் கணவன் தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வவுனியா செட்டிகுளம் காந்தி நகரைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான நாகசந்திரராசா ஜெயரஞ்சினி (வயது-44) ஆவார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் கொழும்பு மருதானையில் உள்ள வெளிநாட்டு முகவர் ஒருவரின் மூலம் அரபு நாடான சவுதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காகச் சென்ற குறித்த பெண் குறைந்த சம்பளத்துடனே வேலை செய்துள்ளார். அவருக்குப் பேசிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. இதனால் அவர் தன்னைத் திரும்பி அனுப்புமாறு கேட்டபோது அந்த வீட்டில் இருந்து வேறு வீட்டுக்கு மாற்றியதாகவும், அதன் பின்னர் கடந்த 7 மாதங்களாக எந்தச் சம்பளமும் அனுப்பாத நிலையில் தற்போது உயிரிழந்துள்ளார் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளதாகவும் உயிரிழந்த பெண்ணின் கணவன் தெரிவித்தார்.

தன்னுடைய மனைவி கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி உயிரிழந்துள்ளதாகவே அவர்கள் கூறுவதாகவும், அதனை ஏன் இவ்வளவு காலதாமதமாகக் கூறுகிறீர்கள் என்று கேட்டபோது மே மாதமே அவர் உயிரிழந்ததாக மாறுபட்ட கருத்துகள் கூறப்பட்டதாகவும் கணவன் தெரிவித்தார். (த- 421-21)

# பேரம்பல வைரவர் ஆலயத்தில் நேற்று கடாக்கள் வெட்டிச் சரிப்பு



வலி.வடக்கு, ஜூன் 14

தெல்லிப்பழை துர்க்காபுரம் பேரம்பல வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் கடாக்கள் வெட்டிச் சரிப்பும் நேற்று இடம் பெற்றது. அதிகாலையில் இடம் பெற்ற பொங்கல்கள், படையல்கள் மற்றும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கடாக்கள் வெட்டிச் சரிக்கப்பட்டன.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.நந்தகுமார் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கடாக்களைப் பரிசோதனை செய்து அனுமதி வழங்கிய நிலையில் அவை வெட்டிச் சரிக்கப்பட்டன. 300 வரையான கடாக்கள் இவ்வாறு வெட்டப்பட்டன.

பாதுகாப்புக் கருதி தெல்லிப்பழை பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். [illegible]

# ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றின் திறப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 14

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தின் திறப்புவிழாவும், அதனை ஒட்டிய கலச விளக்கு வேள்விப் பூசையும் இன்று ஞாயிற்றுக்கிழமை, கல்வியங்காடு ஜி.பி.எஸ் வீதியில் நடைபெற உள்ளன.

ஆன்மிகக் குரு பங்காரு அடிகளாரின் பவள ஆண்டில், அவரது ஆசியுடன் நடைபெற உள்ள சமூக நலயாகமும் இன்று காலை 9மணிக்கு நடைபெறும் என்று ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# தொழில் வாய்ப்பு நிலையத்தின் கட்டடம் வவுனியாவில் திறப்பு



வவுனியா, ஜூன் 14

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலுடன் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக வவுனியா மாவட்ட செயலகத்தில் தொழில் வாய்ப்பு மத்திய நிலையத்துக்கான கட்டடம் ஒன்று கடந்த 11 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.ஜி.ஜி.ஜே. தர்மசேன தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு தொழில் அமைச்சின் செயலாளர் ஹேரத் யாப்பா மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் இலங்கை, மாலைதீவு அலுவலகப் பணிப்பாளர் டொங்லின்லீ ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தனர்.

இளைஞர், யுவதிகள் தமது விவரங்களை மேற்படி அலுவலகத்தில் தொழில் வாய்ப்பைப் பெற்று கொள்ளும் வகையில் பதிவு செய்துகொள்ள முடியும்எனகூறப்பட்டுள்ளது. (த-421)

# செயற்கைக் கை பொருத்தும் நிகழ்வு இன்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூன் 14

ஆஸ்திரேலியாவில்இருந்து வருகை தந்திருக்கும் றோட்டரி அமைப்பைச் சேர்ந்த செயற்கை கை பொருத்தும் மருத்துவக் குழுவினர் கிளிநொச்சி நகர றோட்டரி கழகத்துடன் இணைந்து கை இழந்து அங்கவீனமானவர்களுக்கு நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட செயற்கை கையை இலவசமாகப் பொருத்த உள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனையில் (பழைய கிளிநொச்சி வைத்தியசாலை) உள்ள செயற்கை அவயம் பொருத்தும்நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

போர் மற்றும் விபத்துகளால் தமது கைகளை இழந்த அனைவரும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட கைகளை இலவசமாக பொருத்தி பயன்பெற்றுக்கொள்ள லாம் எனக் கிளிநொச்சி நகர றோட்டரி கழகச் செயலாளர் அறிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடை மீளாய்வுக்கு

கொழும்பு, ஜூன் 14

தேர்தலை இலக்கு வைத்து மஹிந்த அரசால் விதிக்கப்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடை குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மேற்படி தடையில் உண்மைக்குப் புறம்பான விடயங்கள் காணப்படுகின்றன என்றும் குற்றஞ் சாட்டினார்.

லண்டனில் புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் நடத்திய பேச்சு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த வியாழக்கிழமை எழுப்பிய கேள்விக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தலை நோக்காகக் கொண்டு மஹிந்த அரசால் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டது. ஐ.நா. சாசனத்துக்கமைய இந்தத் தடை தொடர்பாக ஆண்டு ரீதியில் மீளாய்வு தேவைப்படுகிறது. தடை செய்யப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சிலர் மரணித்துள்ளனர். எனவே, இவ்வாறான நடவடிக்கை உண்மைக்குப் புறம்பானவையாகக்காணப் படுகிறது. எனவே, இது குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

**தனி ஈழம் கேட்கவில்லை**

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானு வேல் அடிகளார் தனிஈழம் கேட்கவில்லை. பிரிக்கப்படாத இலங்கைக்குள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே அவர் கேட்கின்றார். அவரது கூற்றுகளில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், தமிழர்களுக்கு எதிராக சிலர் தவறான கருத்துகளை முன்வைக்கின்றனர்-என்றார். (த)

## சு.கவின் வேட்பாளர்களாக 4 முன்னாள் முதல்வர்கள்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்களாகக் களமிறங்கு வதற்காக நான்கு முன்னாள் மாகாண முதலமைச்சர்கள் அக்கட்சியின் தலைமைப் பீடத்துக்கு விண்ணப்பம் செய்துள்ளதாகத் தெரியவரு கின்றது.

மத்திய மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, தென் மாகாணத் தின் முன்னாள் முதலமைச்சர் விஜயலால் சில்வா, வடமேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஜல ஜயரத்ன ஆகிய நால்வருமே எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பாகக் களமிறங்க விண்ணப்பம் செய்துள்ளனர்.

இவர்களுள் தயாசிறி ஜயசேகர நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து முதலமைச்சரானவர். சரத் ஏக்கநாயக்கவும்,ஐ ஜஷான் விஜயலால் சில்வாவும் பல ஆண்டுகளாக முதலமைச்சர் பதவிகளை வகித்தவர்கள். பேஜல ஜயரத்ன ஒரு சில மாதங்களுக்கு முன்பு வடமத்திய மாகாணத்தின் முதலமைச்சராக நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## கொக்குவிலில் இன்று லயன்ஸ் பதவியேற்பு

மாவட்டம் பி 1 கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் 2015/2016 ஆம் ஆண்டுக்கான பதவியேற்பு நிகழ்வு பொற்பதி அறிவாலய மண்டபத்தில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறுகிறது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இரண்டாவது உப மாவட்ட ஆளுநர் லயன் கமிலஸ் பெர்ணான்டோவும் சிறப்பு விருந்தினராக முன்னாள் ஆளுநர் லயன் எஸ்.சிவபாதசுந்தரமும் கலந்துகொள்வர். (த-4)

## நெடுந்தீவு நாககுறிச்சி வருடாந்த உற்சவம்

நெடுந்தீவு நாககுறிச்சி பெருக்கடி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை மு.ப 10மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகிபதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறும். (த-7)

# வலி.கிழக்கு, பூநகரிக்கு 45 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்டுள்ள பல தசாப்தங்களாகப் புனரமைக்கப்படாத வீதிகளைப் புனரமைப்பதற்கென 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேசத்தில் மழை நீர் ஓடுவதற்கான வாய்க்கால் வெட்டுவது, வீதி அமைப்பது, சிறிய குளம் அமைத்தலுக்கென 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நீர்வேலியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பூநகரியில் பல கிராமங்களில் குடிதண்ணீர்ப் பிரச்சினையாகவுள்ளது. கடல்நீர் நிலத்தினுள் வருவது அதனால் நன்னீர் உவராகிறது. பாடசாலை மாணவர்களுக்கு பஸ் இல்லாதுள்ளது. இவற்றைத் தீர்க்க வேண்டிய பிரச்சினை உள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி ஒதுக்காது மாகாண சபைக்கூடாக அபிவிருத்திகளைச் செய்ய வேண்டும் என்பது முதலமைச்சரிடமிருந்தான சரியான கருத்தாக நான் எடுத்துக் கொள்ளவில்லை. அது பிழையான கருத்து.

புதிய அரசு வந்த பின்னர் பன்முகப்படுத்தப்பட்ட நிதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும் சில அமைச்சர்கள் ஊடாக நிதியைப் பெற்று சில அபிவிருத்திகள் நடக்கின்றன. சில சபைகளுக்கு ஓரளவு வருமானம் உள்ளது. ஆனால் வலி.கிழக்கு பிரதேச சபைக்கு வருமானம் குறைவு -என்றார். (த-4)

# மஹிந்த அணியை உடைப்பதற்கு மைத்திரி ஒப்பரேசன் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 14

மஹிந்த ஆதரவு அணி பலமடைந்து வரும் நிலையில், அதை உடைப்பதற்குரிய வியூகத்தை வகுத்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவின் விசுவாசிகளை தம் பக்கம் வளைத்துப்போடுவதற்குரிய நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

இதன் ஓர் அங்கமாகவே முன்னாள் பிரதமர்கள் இருவரை தனது அரசியல் விவகார ஆலோசகர்களாக நியமித்து, மஹிந்த அணியிலிருந்து அவர்களை வெளியேறச் செய்துள்ளார். இரண்டாகப் பிளவுபட்டிருக்கும் சுதந்திரக் கட்சியில் மஹிந்த எதிர்ப்பு அணியை பலப்படுத்துவதற்குரிய பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் நால்வருக்கு அண்மையில் பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமையும் ஜனாதிபதியின் மேற்படி வியூகத்தின் ஓரங்கமே என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அத்துடன், மஹிந்த ஆதரவு அணியின் பக்கம் சாய்ந்துள்ள மேலும் சில சு.க. உறுப்பினர்களுடன் ஜனாதிபதி இன்னும் ஓரிரு நாள்களில் பேச்சு நடத்தவுள்ளார் என அறியமுடிகிறது.

அத்துடன், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்பதவிகளில் அதிரடி மாற்றத்தைக் கொண்டு வருவதற்குத் தீர்மானித்திருந்த ஜனாதிபதி, தற்போது அவ்வாறானதொரு மாற்றத்தை ஏற்படுத்தாதிருக்க உத்தேசித்துள்ளார் எனவும் அறியமுடிகிறது.

அதாவது, மஹிந்த சார்பு போக்கைக் கொண்டிருந்த சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்சனயாப்பா., தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரின் பதவிகளைப் பறிப்பதற்கு முன்னதாக ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அது மஹிந்த அணியை மேலும் பலப்படுத்தும் வகையில் அமைந்துவிடும் என்பதாலேயே முடிவை மாற்றுவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். இதனால் மேற்படி இருவரும் தற்போது மைத்திரிக்கு சார்பான போக்கைக்கடைப் பிடிப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் சுசில் பிரேமஜயந்த அறிக்கையொன்றை விடுத்திருந்தார். மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்துக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கோ எவ்விதத் தொடர்பும் இல்லை என அவர் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை தான் வகிப்பதால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியை வெற்றிப்பாதை நோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற விடயத்திலும் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார். இதற்காக சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் அவர் விரைவில் விசேட சந்திப்பொன்றை நடத்தவுள்ளார்.

அதேவேளை, மைத்திரி பக்கமா, மஹிந்த பக்கமா எனத் தெரியாது மதில்மேல் பூனைபோல் இருக்கும் சில சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பேச்சு நடத்தியுள்ளார் எனவும், சுதந்திரக் கட்சி இரண்டாக உடைவதைத் தடுத்து அதைப் பலப்படுத்துவதற்குரிய நடவடிக்கையில் அவரும் பங்கேற்று வருகிறார் எனவும் அரசியல் வட்டாரங்களிலிருந்து அறிய முடிகிறது.

# மோதல் தவிர்ப்பு வலயம் சர்வதேச நீதிமன்றத்துக்கு

லண்டன், ஜூன் 14

பிரிட்டனின் சனல்-4 ஊடகத்தால் தயாரிக்கப்பட்ட 'மோதல் தவிர்ப்பு வலயம்' ஆவணப்படம் சர்வதேச நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சட்ட அமைப்பு என்ற அமைப்பால் இவ்வாறு ஆவணப்படம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும், இந்த ஆவணப் படத் தின் காட்சிகள் இணையத் தளங்களில் முன்னதாகப் பதிவாகி யிருக்கவில்லை என்பதை அந்த அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த ஆவணப் படத்தின் உண்மைத் தன்மை குறித்து சர்வதேச சட்ட அமைப்பின் சட்டத்தரணிகள் ஆய்வு செய்து, அதன் உண்மைத் தன்மை குறித்து கண்டறிவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கெலும் மக்ரேயால் எடுக்கப்பட்ட இந்த ஆவணப்படம் தொடர்பான காட்சிக் கையடக்கத் தொலைபேசிகளின் ஊடாக எடுக்கப்பட்ட போதிலும், அவை எந்த இடத்தில் எடுக்கப்பட்டவை என்பதை உறுதிப் படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆவணப்படம் போலியானது என இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. எனினும், ஆவணப் படம் உண்மையான சாட்சியங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என கெலும் மக்ரே தெரிவித்துள்ளார். (த-சி)

# தமிழ், முஸ்லிம் கட்சிகளில் தங்கியிருப்பதை தவிர்ப்பதற்காகவே தேர்தல் முறை மாற்றம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டுக்கும் தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வேண்டிய தேவையுள்ளது. காரணம் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற ஆசனங்களில் தங்கியிராத தன்மையை அதாவது சிங்களம் அல்லாத கட்சியின் ஆதரவுக்குள் இருந்து செயற்படுவதைத் தவிர்த்து சிங்கள பௌத்தம் என்ற கொள்கையை முழுமை அடையச் செய்யும் நடவடிக்கையைச் செயற்படுத்தும் நோக்கில் இந்த இரு பெரும் கட்சிகளும் செயற்படுகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

நேற்றையதினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்ட பின்னர் இந்த பெரும்பான்மைக் கட்சிகளின் ஸ்திரத் தன்மையான செயற்பாடு கள் நடைபெற்றால் ஆட்சேபனை இல்லை. ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எட்டப்படுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாத [illegible]த்தில் தேர்தல் முறைமை மாற்றியமைக்கப்படுமாயின் தமிழ் மக்களின் தேவைகளும் பிரச்சினைகளும் இனியும் நிறைவேற்றப்படக் கூடிய வாய்ப்புக்கள் இல்லாமல் போய்விடும்.

எனவே தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய சூழ்நிலைமைகள் உருவான பின்னர் தேர்தல் முறைமை மாற்றங்கள் ஏற்படுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படாமல் அவர்களின் அரசியல் பலத்தை இல்லாமல் செய்யும் இந்த மாற்றத்துக்கு எந்தக் தமிழ்க் கட்சிகளும் சிறுபான்மைக் கட்சிகளும் அனுமதிக்கக்கூடாது -என்றார். (த-ம)

# கூட்டுறவுப் பணியாளருக்கும் மோ. சைக்கிள்கள் வேண்டும்

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

வடமாகாணத்தில் உள்ள கூட்டுறவுப் பணியாளர்களுக்கும் மோட்டார் சைக்கிள்களை பெற்றுத்தருமாறு வடமாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசு வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு குறைந்த விலையில் மோட்டார் சைக்கிள்களை விநியோகித்து வருகின்றது.

அதேபோன்றுமக்களுக்குசேவையாற்றி வரும் கூட்டுறவாளர்களுக்கும் இந்த குறைந்த விலையிலான மோட்டார் சைக்கிளைப் பெற்றுத் தருமாறு மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் தொழிற்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக வடக்கில் மூவாயிரம் வரையிலான கூட்டுறவுப் பணியாளர்கள் மாதாந்தம் குறைந்த வருமானத்தில் மக்களுக்குச் சேவையாற்றி வருகின்றனர்.

பணியாளர்களின் போக்குவரத்து வசதி கருதி அவர்களுக்கு அரசு குறைந்த விலையில் இந்த மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த குறைந்த விலையிலான மோட்டார் சைக்கிள்களை பெற்றுத்த ருமாறு கூட்டுறவாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### ஞானேஸ்வரன் கோகிலவதனன்



தெல்லிப்பழையைப்பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரன் கோகிலவதனன் 12.06.2015 வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஞானேஸ்வரன் கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகனும் இராசரத்தினம் பேரின்பநாயகி தம்பதியரின் மருமகனும் யபர்னாவின் பாசமிகு கணவரும் சதுன், சுஜான் ஆகியோரின் அன்புத்தந்தையும் கலைச்செல்வி, கோகிலரமணன், கலைமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜனுபன், றஜனிகாந், தயாளன், தர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2015) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை. (60979)

தகவல் :-
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு அருகில் ஏ9 வீதியிலிருந்து 400 மீற்றருக்குள் சண்முகம் வீதியில் 1¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 3907340, 021 221 7352

## கைத் தொலைபேசி திருத்துநர்கள் தேவை

கைத்தொலைபேசி மற்றும் கணினி திருத்து வதில் அனுபவம் வாய்ந்தவர்கள் யாழ். நகருக்கு அண் மையாகவுள்ள தொலை பேசி நிலையம் ஒன்றுக்கு தேவைப்படுகின்றனர். அனுபவம் உள்ளவர் கள் 5 நாள்களுக்குள் சுயவிவரக் கோவையுடன் விண் ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை rubantp @yahoo.com எனும் முகவரிக்கு மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

தொடர்பு:-
075 2421580

## CEYMED HOSPITAL SERVICES (PVT) LTD.

A Ceyline Group Company

CEYMED

Com.Reg.No.-PV 70074

### உடனடி வேலைவாய்ப்பு

**Medical Promotion Executive**
(யாழ்ப்பாணம், வவுனியா)

தகைமைகள்

* A/L மூன்று பாடநெறிகளில் சித்தி
* மருத்துவ துறையில் 2-3 வருட அனுபவம்
* மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம்
* வயதெல்லை 20-40

முன்னனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
கவர்ச்சிகரமான சம்பளமும் ஏனைய சலுகைகளும் வழங்கப் படும்.

உங்கள் சுயவிவரக் கோவையினை 7 நாள்களுக்கு முன் கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரியினூடாக விண்ணப்பிக்கவும்.

ccj400@ceymed.lk

தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி
550, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 221 9777, 071 4535258

## யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னாரில்

# AUTO CAD

Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D

Full time : 2 Weeks Part time : 2 Months

பாடநெறி முடிவில் மாணவர்கள் முற்றுமுழுதாக செயன்முறைப் பயிற்சித் தகைமை யடைவதோடு, அரச அங்கீகாரம் பெற்ற தொழில் தகைமைச் சான்றிதழும் வழங்கப்படும்.

Hot Line : 0777-596148

BRITISH COLLEGE
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927114, 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124, 077-3736882
20, Galle Rd, Dehiwala. 585, Peradeniya Rd, Kandy.

## Sponsor விசாவில் செல்லவுள்ளவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

IELTS Life Skills A1 B1

Spouse விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சான்றிதழுக்கான பாடநெறி

Hot Line : 0777-596148

BRITISH COLLEGE
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927114
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
39, Convent Rd, Mannar. Tel : 023-4924124
20, Galle Rd, Dehiwala. 585, Peradeniya Rd, Kandy.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம்
(டாக்டர் நந்தி)

தோற்றம் 30.03.1928 மறைவு 04.06.2005

நீதி: அபரக்க நிரயோதசி




ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
நீங்கள் குடும்பத்திற்காகவும் இச் சமூகத்துக்காகவும் செய்தவற்றை எப்போதும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

அன்புடன்
நந்தி குடும்பம்.

# அமரர் சின்னத்துரைக்கு எம் கண்ணீர் அஞ்சலி



சின்னத்துரை என்றால் ஆவரங்கால் தமிழரசு சின்னத்துரை தான்!
தந்தை செல்வநாயகம் தமிழரசுக் கட்சியைத் தொடங்கியபோது
செல்வாவுடன் தோள் கொடுத்து வளர்த்த பெருந்தகை
அகவை 89 வரை அசையாத தமிழ்த் தொண்டன் தமிழ்த் தலைவன்
தமிழினத்தின் விடிவுக்காகவும் விடுதலைக்காகவும்
இறுதிவரை அர்ப்பணித்து உழைத்த உத்தமனே!
எங்கள் இதய அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணம் மாவட்டக்கிளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## என்றும் பயன்தர வல்லது சிக்கன வாழ்க்கை முறையே

கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்.

இராமாயண காவியத்தில் கவிச்சக்கரவர்த்தி கம்பன் பொறித்த கவிதைகளில் ஒன்றின் வரியே மேற்போந்தது.

இந்தியாவின் பேரரசன் இராமனுக்கும் இலங்கை வேந்தன் இராவணனுக்கும் இடையில் நடைபெற்ற போரில், இரண்டாமவர் தோற்றுப் போனமையை விவரிக்கும் உயிரோட்டமான பாடல் வரியே இது வாகும்.

எங்கள் பிரதேசங்களிலோ, போர் முடிவுற்ற பின்னர், சிக்கனம் என்றால் கிலோ என்ன விலை என்று கேட்கும் நிலை மேலெழுந்து உள்ளதை அவதானிக்க முடிகிறது.

போர்க் காலத்தில் நிலவிய வாழ்க்கைத் தேவைகள் அன்றாட உணவு மற்றும் பிரதான பொருள்களுக்கு நிலவிய கிடையாமைகளை முற்றிலும் மறந்துபோன "யுகம்" இப்போது துளிர்த்துப் பெருத்து வருகிறது.

வங்கிகளில் அதிக பணத்தைக் கடனாகப் பெறுவதும், தவணைக் கட்டண அடிப்படையில் பொருள்களை வாங்கும் முறையின்கீழ், (Leasing) பலவகை சார்ந்த வாகனங்கள் மற்றும் பெறுமதி மிக்க பொருள்களை, எமது மக்களில் மிகப் பலர் வாங்குவதும் சர்வ சாதாரணமாகி வருகிறது.

கடன்பெற்றேனும் "சொகுசு" வாழ்க்கை வாழும் நிலை, மற்றவர் அனுபவிப்பது போன்று, தானும் அனுபவிக்க வேண்டும் என்ற வேண்டா ஆசை என்பன எமது பிரதேச மக்களை ஆட்டிப் படைக்கின்றன.

எமது பெற்றோரிடம் மற்றும் உறவினர்களிடம் ஊன்றிப் பதிந்திருந்த, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் ஆரோக்கியமான வழக்கம், இப்போதைய தலைமுறை மக்களுக்கு வேம்பாகக் கசப்பதும், கடன் வாங்கியாவது டாம்பீகம் காட்டும் போக்கு மெலெழுந்து வருவதும் தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

அடைவு வைக்கப்பட்ட தங்கம் போன்ற பெறுமதிமிக்க பொருள்களை மற்றும் ஈடுவைத்த காணிகளை மீள முடியாத நிலையில், அவை ஏலத்தில் விடப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த யதார்த்த உண்மையை உங்களால் நம்ப முடியவில்லை என்றால், இலங்கை அரசின் வாராந்த வர்த்தமானியில், வெளியிடப்படும் ஏலத்தில் விடப்படும் எம்மவரின் காணிகளின் எண்ணிக்கை பல பக்கங்களை நிரப்பி வருவதைக் காணமுடியும். மேற்போந்தவைக்குப் புறம்பாக, விபத்துச் செய்திகள் நாளாந்தம் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்பி வருகின்றன. அவற்றுக்கான காரணங்களும் பல வகையறாக்களாகப் பெருகுகின்றன. மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துவது நாளாந்தம் அதிகரித்து வருகிறது. அதிக வேகத்தில் வாகனங்களை போட்டிக்குச் செலுத்துதல், வீதிகளில் பயன்படுத்தத் தகுதியற்ற வாகனங்களை நீண்ட தூரப் பயணத்துக்கு பயன்படுத்தும் ஏனோ தானோ என்ற பொறுப்பற்ற போக்கு என்பன வாகனங்களைப் பயணிகளின் எமனாக்கும் நிலையை நாளாந்தம் உயர்த்தி வருகின்றன!

தத்தமது வாழ்க்கை நிலை குறித்த யதார்த்தத்தை உணராத போக்கு -- பகட்டு, படாடோபத்தில் மனதைப் பறிகொடுத்து தமது பிள்ளைகளது, எதிர்காலச் சந்ததியினரது வாழ்க்கை குறித்து சிந்தித்துப் பார்க்காது மனம் போனபடி வாழமுயலும் போக்கு --

இறுதியில், எமது லௌகீக வாழ்க்கை வட்டத்துக்கே நாசத்தை ஏற்படுத்தும் அபாயம் தலையுயர்த்தி நிற்கிறது.

இந்த விடயத்தில், எதையும் தமது இயல்புக்கேற்ப திட்டமிட்டுச் செயற்பட்டு வாழ்ந்த எமது மூதாதையரின் வாழ்க்கை நடைமுறையையும், அதனால் அவர்களுக்குக் கிட்டிய திருப்தியான, மகிழ்ச்சியான வாழ்வையும் இன்றைய தலைமுறையினர் கருத்தில் கொள்வது நன்மை பயக்கும்.

மனம் போன போக்கில் வாழ்வதல்ல வாழ்க்கை; நேர்ந்த விதம் வாழ்வது தான் வாழ்க்கை என்ற அவர்களது வாழ்வுமுறை பெறுமதிமிக்கது.

இவற்றைக் கருத்தில் கொண்டு, இன்றைய தலைமுறையினர் சிக்கனத்தைக் கடைப்பிடித்து வாழும் வாழ்க்கை வட்டத்தை வகுத்துக் கொள்ளுதல் இன்றைய காலத்தின் கட்டாயம்.

சிந்தித்துத் செயற்படுங்கள். அதுவே உகந்த பாதை.

# இலங்கை அரசியலில் இந்திய சீன நாடுகள்

சேரலாதன்

சீன அரசினால் முன்னெடுக்கப்பட்டு வந்த கொழும்பு துறைமுக நகர் வேலைத்திட்டம் தற்போதைய அரசினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை சீன அரசைக் கோபமடையச் செய்துள்ளது. முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு நலன்களைக்கூடச் சிந்திக் காது, சீன அரசின் தேவைகளை நிறைவு செய்வதில் தம்மை முழுமை யாக அர்ப்பணித்துச் செயலாற்றி னர். மஹிந்த சீனாவுக்கு அடுத்தபடியாகவே இந்தியாவைப் பார்த்துக் கொண்டார். இது இந்தியாவை எரிச்சலுக்குள் தள்ளிவிட்டது.



கடந்த இறுதிப்போரில் புலிகளை அழித்து ஒழித்ததில் இந்தியாவின் பங்களிப்புக் கணிசமானது. அப்போதைய சோனியா தலைமையிலான காங்கிரஸ் அரசு புலிகளைப் பழிவாங்குவதில் குறியாக இருந்தது. இதனால் இலங்கைக்குத்



தேவையான உதவிகளையும் வழங்குவதற்குப் பின்னிற்கவில்லை. இலங்கையும் இந்தியாவின் உதவிகளைத் தனக்குச் சாதகமாக நன்கு பயன்படுத்திக் கொண்டது. ஆனால் இறுதிப்போர் ஓய்ந்த பின்னர் இலங்கை தனது சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டது. இந்தியாஇதை உணராமல் இல்லை. ஆனால் உரிய காலம் கனியும் வரை காத்திருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக் ஷ தோற்கடிக்கப்பட்டதன் பின்னணியில் இந்தியா செயற்பட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் எழாமலில்லை. தாம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னணியில் இந்தியாவின் றோ அமைப்பும், மேற்குலக நாடுகளும் இருந்ததாக மஹிந்த பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருந்தார்.


தற்போது இலங்கை அரசியலில் பெரும் மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிறுத்தி மஹிந்த ராஜபக் ஷ பரப்புரைகளில் ஈடுபட்டு வருவதும், அவருக்கு ஆதரவான பொதுக்கூட்டங்கள் இடம்பெறுவதும், பிரதமர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதும் முக்கியமான விடயங்களாகக் காணப்படுகின்றன. மேலும் ஒருவருக்கொருவர் பகை உணர்வுடன் காணப்படும் மஹிந்தவும், மைத்திரியும் ஒரே கட்சியில் இருந்து கொண்டு வெவ் வேறு திசைகளை நோக்கிய அரசியலில் ஈடுபடுகின்றமை விசித்திரமான நிகழ்வாக மக்களால் நோக்கப்படுகிறது. தற்போது தமக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களில் சிலவற்றை இழந்து நிற்கும் ஜனாதிபதி மைத்திரியின்

> “மைத்திரி அரசால் முடக்கி வைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர்த் திட் டத்துக்கு மஹிந்த உயிர் கொடுப் பாரென்ற நம்பிக்கையுடன் சீனா காத்திருக்கின்றது. மேலும் தனது ஜென்ம விரோதியான இந்தியா வின் செல்வாக்கை இலங்கையில் தடுக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற நபர் மஹிந்ததான் என்பதால் மஹிந்தவின் அரசியல் மீள் பிரவேசம் சீனாவை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது. ஆனால் இந்தியா இதற்கு எதிர்மறையான மனோநி லையில் காணப்படுகின்றது.

நகர்வுகள் சற்று மந்தமானவை போன்றே காணப்படுகின்றன. இந்த மந்த நிலையை மஹிந்த தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி வருவது தெளிவாகத் தெரிகின்றது.

இந்த நிலையில் இலங்கையின் அரசியல் நிலைவரங்களை சீனா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. மஹிந்த மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதே அதன் விருப்பமாகவும் உள்ளது. எதிர்காலத்தில் நாட்டின் பிரதமரே அதிகாரங்களைக் கொண்டவராக இருக்கப் போவதால் அந்தப் பதவியில் மஹிந்த அமர்வதையே சீனா விரும்பி நிற்கின்றது. மைத்திரி அரசால் முடக்கி வைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர்த் திட்டத்துக்கு மஹிந்த உயிர் கொடுப்பாரென்ற நம்பிக்கையுடன் சீனா காத்திருக்கின்றது. மேலும் தனது ஜென்ம விரோதியான இந்தியாவின் செல்வாக்கை இலங்கையில் தடுக்க வேண்டுமானால் அதற்கு ஏற்ற நபர் மஹிந்ததான் என்பதால் மஹிந்தவின் அரசியல் மீள் பிரவேசம் சீனாவை மகிழ்ச்சியில் ஆழ்த்திவிட்டது. ஆனால் இந்தியா இதற்கு எதிர்மறையான மனோநிலையில் காணப்படுகின்றது. சீனாவைக் காட்டிக் காட்டியே மஹிந்த இந்தியாவை ஓரம் கட்டி வந்ததை அந்த நாடு இன்னமும் மறந்துவிடவில்லை. சீன நாட்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தங்கி நின்ற சம்பவத்தை இந்தியா தனக்கு எதிரான ஒன்றாகவே கருதுகின்றது. சீனாவின் நயவஞ்சகமான செயல்கள் இந்தியாவுக்கு ஒன்றும் புதிதல்ல. ஜவகர்லால் நேரு பிரதமராக இருந்தபோது, 1962ஆம் ஆண்டு வஞ்சகமான வகையில் சீனா இந்தியா மீது போர் தொடுத்து கணிச மான நிலப்பரப்பைக் கைப்பற்றி வைத்திருக்கின்றமை இந்தியாவுக்கு அழியாத வடுவாகவே இன்று முள்ளது. இந்த நிலையில் சீனா எதைக் கூறினாலும், அதை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இந்தியா இல்லை.

மேலும் மைத்திரிபால சிறிசேன மஹிந்தவைப் போலன்றி நம்பிக்கைக்குரிய ஒருவராகவே இந்தியா



வின் கண்களில் தென்படுகின்றார். இதனால் மஹிந்த அரசியலில் மீண்டும் வருவதை இந்தியா விரும்பவே மாட்டாது. ஆனால் சீனாவின் மனோநிலை இதற்கு எதிர்மாறான தாகவுள்ளது.

எதிர்வரும் பொதுத்தேர்தல் இலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையிலான ஒரு பலப்பரீட்சையாகவே விளங்கப்போகின்றது என்பதுதான் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
நாரந்தனை வடக்கு, பெரிய புலம் வீதியில் பாடசாலைக்கும் கோயிலுக்கும் அருகில் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.தரகர் தேவை இல்லை சிறந்த விலை தருபவருக்கு முன்னுரிமை.
தொடர்பு: 077 755 5868

### காணி விற்பனைக்கு
மிருசுவில் A9 வீதியில் 18½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 607 9340

### ஊர்க் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு
சிறந்த ரக ஒருநாள், ஒருமாத யாழ்ப்பாணக் குஞ்சுகள் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு.
ஒருநாள் குஞ்சு ரூபா 70/=
(59916)(45.3) தொடர்பு: 077 349 7277

### வீடு விற்பனைக்கு
உரும்பிராய் கிழக்கு, அரச வீதியில் 5 பரப்புக் காணியில் சுற்றுமதிலுடன் 3 அறை வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 614 8861 (60820)(6.3.7)

### விற்பனைக்கு
பாவித்த பெறுமதி மிக்க,தேக்கு, முதிரை, மரத்தளபாடங்கள் விற்பனைக்கு.
தொடர்பு.077 242 5509

### விற்பனைக்கு
தொட்டிலடி கீரிமலை வீதி, விளாவெளிச் சந்தியில் வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இருபது பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு.077 978 8635

### TV கள் மலிவு விற்பனை
SONY Wega Flat TVகள் 14"-6000/=, 21"-10000/=, DVD-3250/=, கசெற் ரேடியோ 3000/=Box வகைகள், குளிர்சாதனப் பெட்டிகள்- 19500/=
தொடர்பு: 077 044 0570 (60607)(45.3.7)
சோனிரேற்சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி இல.32, கச்சாய் வீதியில் சாவகச்சேரி நகரப்பகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையம், வாகன தரிப்பிடங்களுக்கு ஏற்ற 3 பரப்புக் காணி கட்டடத்துடன் உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 076 872 7356 (41181)(45.3.7)

### காணி விற்பனைக்கு
தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் ஒழுங்கையில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 075 731 6139

### விற்பனைக்கு
Sony Z7 Video Camara விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 477 6647

### நாய்க்குட்டி விற்பனைக்கு
40 நாள் நிரம்பிய ஜேர்மன் செப் பேட் நாய்க்குட்டிகள் (பூச்சி நீக்கப்பட்டவை) விற்பனைக்குண்டு.
மல்லாகம்
தொடர்பு: 071 925 3996

### காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை மகாஜன கல்லூரி வீதியில் யூனியன் கல்லூரிக்கு மிக அருகில் 5 பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். நேரில்வரவும்.
தொடர்பு : 077 276 1259

### காணி விற்பனைக்கு
மாவிட்ட புரம் தெற்கு பட்டிக் கடவையில் 7 பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம்.
தொடர்பு : 077 169 8487

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
நாரந்தனை, ஊர்காவற்றுறை, பெரிய புலம் வீதியில் நெற்பரப்பு 17 உம் வீடும், கிணறும் விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 751 3137

### விற்பனைக்கு
9½' x 2½' அளவுள்ள இரண்டு Tempered Glass Fittings உம் 7' x 5' அளவுள்ள Double Swing Tempered Glass Doors உம் விற்பனைக்கு உள்ளன. Going Cheap
(சி.17525)(45.3.7) தொ.பே. 077 730 7494

### காணி விற்பனைக்கு
இராச வீதியில் (நல்லூரில் இருந்து 2km) 25 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் கொள்வனவு செய்யமுடியும்.
தொடர்பு : 077 151 2032

### காணி விற்பனை
மட்டுவில் தெற்கு, பருத்தித்துறை வீதி துர்க்கை அம்மன் ஆலய வீதியின் ஆரம்பத்தில் காணி விற்பனைக்கு உண்டு .
தொடர்பு: 077 873 0129 (60419)(5.3.6)

### வீடும் காணியும் விற்பனைக்குண்டு
யாழ்ப்பாணம் 33 கலட்டி அம்மன் வீதி அருகில் காணியும் வீடும் உடனடி விற்பனைக்கு உண்டு. (தரகர் தவிர்க்கப்படுகின்றனர்)
தொடர்பு - 077 397 9388, 077 397 8550

### வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்கு
பிரசித்தி பெற்ற புலோலி புற்றளை பிள்ளையார் கோயிலுக்கும் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்திற்கும் அண்மையில் 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 233 8085

## வாடகைக்கு

### வீடு வாடகைக்கு
பூநகரி, வாடியடி பரந்தன் வீதிக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. தனியாருடன் நிறுவனங் களும் வரவேற்கத்தக்கது.
தொடர்பு: 076 669 7931

### வீடு வாடகைக்கு
இல ,282, அரசடி வீதி,கந்தர்மடம், நல்லூர், யாழ்ப்பாணத்தில் இரண்டு மாடி வீடு ஒன்று தனியார் துறைக்கு வாடகைக்கு விடப்பட உள்ளது.
தொடர்பு: 072 292 8781

### கடை வாடகைக்கு
சிறாம்பியடி லேன், ஸ்ரான்லி வீதியில் 24x32 அடி அளவும் அதே அளவான மேல் மாடியையும் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
(60886)(45.3.7) தொ.பே. 077 751 9440

### வாடகைக்கு உண்டு
சாவகச்சேரி, ஆஸ்பத்திரி A9 வீதிக்கு அருகில் ஒரு பரப்புக் காணியுடன் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 842 3734, 077 933 1712 (41179)(45.3.7)

## மணமகன் தேவை

### மணமகன் தேவை
யாழ். இந்து, 1977, உத்தர நட்சத்திரம், பாவம் 16, உயரம் 5'(5அடி) உள்ள மண மகளுக்கு மணமகன் தேவை.
(60886)(45.3.7) தொ.பே. 077 977 6294, 077 844 8447

### மணமகன் தேவை
யாழ். இந்து 1980,8 இல் செவ்வாய் கிரகபாவம் 71 அரச தொழில் பார்க்கும் மணமகளுக்கு அரச,தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 589 1016

## தேவை

### வீடு வாடகைக்குத் தேவை
மிகச் சிறிய குடும்பம் ஒன்றுக்கு சாவகச்சேரி, நுணாவில், கைதடி பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. (பிரதான வீதிக்கு அருகில் விரும்பத்தக்கது)
(60886)(45.3.7) தொ.பே. 077 288 7716, 077 002 8139

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு அருகில் இரண்டு படுக்கையறைகளுடன் கூடிய நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் வீடு வைத்தியர் ஒருவருக்குத் தேவை.
தொ.பே. 071 154 0221 (சி.17519) (45.3.7)

### பணிப்பெண் தேவை
சிறிய குடும்பம் ஒன்றிற்கு, வீட்டில் தங்கிஇருந்து பணிபுரியக்கூடிய பணிப் பெண் தேவை. தொடர்பு:- 077 327 6502

### சிரட்டைக்கரி தேவை
சில்லறையாகவோ அல்லது மொத்தமாகவோ கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு : 077 347 8427 (60870) (11.3)

### வேலைக்கு ஊழியர் தேவை
வவுனியா, ஏ9 வீதி புளியங்குளத்தில் இயங்கும் பல் பொருள் வாணிப கடைக்கு உதவியாளர் தேவை. விருப்பம் உடையவர்கள் நேரில் வந்து சம்பளம் வேலை விவரங்களை அறிய முடியும். தங்குமிட வசதி இல்லை.
தொடர்பு : 076 700 2502

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## ஏனையவை

### மயில் திருமண சேவை
எங்களிடம் உள்நாட்டு, வெளிநாட்டு அரச உத்தியோகத்தர்கள், டாக்டர் , எஞ்சினியர், எக்கவுண்டன் போன்ற மணமக்கள் உள்ளனர்.
தொடர்பு : இல. 20 A(54) செட்டித்தெரு ஒழுங்கை , நல்லூர்
077 868 0304 (60860) (11.3)

### European Language Training centre
இலங்கையில் முதல் முதலாக கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் ஐரோப்பிய மொழிகளுக்கான பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
Sponsor (ஸ்பொன்சர்) விசாவில் வெளிநாடு செல்பவர்களுக்கான 100% உத்தரவாதத்துடன்.
French , English , German அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற ஆசிரியர்களினால் பயிற்று விக்கப்படுகின்றது.
தொடர்பு : சிவன்கோயிலுக்கு முன்பாக கோவிற்குளம், வவுனியா
T.P: 072 613 4725
இல. 07. பழைய கச்சேரி அருகில் கிளிநொச்சி. T.P. 021 228 3690

### USA VISA
- ஆகக் குறைந்த தகமை O/L
- குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம்
- Part Time Job - Star Hotel களில் வேலைவாய்ப்பு College ஆல் பெற்றுத்தரப்படும்

### ITALY VISA
- 15 நாட்களில் Visa க்கு விண்ணப்பிக்கலாம்
- குறைந்த செலவில் விண்ணப்பிக்கலாம்
- ITALY யின் முக்கிய இடங்களை சுற்றிப்பார்ப்பதற்கான Visa

RATHA - 0773251673
MEERA - 0770085028
KAVISKA - 0778850315

max adz

### சேவை
எலும்பு முறிவு நெரிவு (Orthopedic) கிளினிக் வழமைபோல் நடைபெறு கின்றது .
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக் 08,இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 873 0129

### Canada வில்
கல்வியுடன் கூடிய வேலைவாய்ப்பு
- O/L உடன் Apply பண்ணலாம்
- 1 வருடத்திற்கு பின் Work Permit


BANK BALANCE
வங்கியில் 100% பணவைப்பு
ஒரே நாளில் 3,6,12 முன் பின் உங்கள் Account இல் பணம் போடுவோம்.சகல நாடும்

SHARMILA - 0778895640
TEENA - 0778848519
PRIYA - 0778898568
WORK PERMIT களும் உண்டு

max adz

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111



- பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உள்ளகப் பொறிமுறை மட்டும் பொறுப்புக் கூற போதுமானதல்ல

### அமெரிக்க செனட் சபை உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக் கூற உள்நாட்டுப் பொறி முறை மாத்திரம் போதுமானதல்ல என்று அமெரிக்க செனட் சபையின் முக்கிய உறுப்பினர் பட்ரிக் லேஹி தெரிவித்துள்ளார்.

நீதி நடைமுறை என்பது உண்மையைத் தெரிவிப்பதுடன் மாத்திரம் முடிவடையாமலிருக்காமல் விசாரணை செய்வது, நீதி விசாரணைகளை மேற்கொள்வது, உரிய தண்டனைகளை வழங்குவது போன்றவற்றை செயற்படுத்துவதற்காக நம்பகத்தன்மைமிக்க சுயாதீன பொறிமுறையொன்று அவசியம் எனவும் அவர் அமெரிக்க செனட் முன்னிலையில் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் உறவுகளைப் புதுப்பிப்பதற்கு எடுத்த முயற்சிகள் தனக்கு நம்பிக்கையளித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர், மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு அழைத்ததையும் பர்ராட்டியுள்ளார்.

நல்லாட்சி, மனித உரிமைகள், நல்லிணக்கம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு மைத்திரி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் அவர் பாராட்டியுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்களித்தலே இலங்கையின் மரபாகக் காணப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

## மத்துகம கைகலப்பு: ஒருவர் சாவு

கொழும்பு, ஜூன் 14

மத்துகம,எலதுவ பிரதேசத்தில் இடம்பெற்ற கைகலப்பில் காயமடைந்த 40 வயதான நபரொருவர் உயிரிழந்துள்ளார். இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் 17 வயதான இளைஞனைக் கைதுசெய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

எலதுவ பிரதேசத்தில் வசிக்கும் இருவருக்கு இடையில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற கைகலப்பில் காயமடைந்த நபர், களுத்துறை, நாகொட வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த நிலையிலேயே நேற்று சனிக்கிழமை உயிரிழந்துள்ளார். (த)

### ரூ.30 லட்சம் பெறுமதியான தங்கத்துடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 14

அபுதாபியிலிருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான 3 தங்கச்சங்கிலிகளை இலங்கைக்கு கொண்டுவர முயற்சித்த 33 வயதான நபரெருவரை, கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த நபர் தனது பயணப் பையில் தங்கச்சங்கிலிகளை மறைத்து கொண்டு வந்த போதே, அவரை கைது செய்ததாகச் சுங்கத்த திணைக்கள ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். (த)

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா அழகரத்தினம்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அழகரத்தினம் 2015.06.12 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளியம்மை தம்பதிகளின் ஏகபுத்திரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் இராசகுமாரன்(இராசன் - வவுனியா), தனலட்சுமி காலஞ்சென்ற செல்வக்குமரன் மற்றும் விஜயலட்சுமி, உதயகுமார்(உதயன்), சந்திரகுமார்(சந்திரன்) மற்றும் செல்வலட்சுமியின் அன்புத் தந்தையாரும் அன்ன லட்சுமி, இன்ப நாதன், யெயேந்திரன், சோபிதமலர், ஜெனந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரதன், பிரியாசினி, தனுசன், வித்தகன், அபிநயா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2015.06.14) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவாது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்துமயானத்துக்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பறாளாய் வீதி, சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
021 491 1594, 078 303 4892, 077 596 1120
(60893) (9.7.3)

### திருமதி ஞானேஸ்வரி பொன்னம்பலம்

(அறுகம்புலம், காரைநகர்)

தோற்றம்: 23.07.1939 மறைவு:11 . 06.2015



காரைநகர் அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானேஸ்வரி (செல்லம்மா) பொன் னம்பலம்11.06.2015 வியாழக்கிழமை கனடாவில் காலமானார் .

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை -வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் (ஆடியர் ) - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும் அருட்குமார் (UK) உமா (ஜேர்மனி),ஜெயக்குமார்(கனடா), தவக்குமார்(கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் குலமகள், சற்குணராசா ,சிவமதி, நேசராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மனோன்மனி (கனகம்மா) மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சண்முகம், கனகம்மா மற்றும் பூரணம், நடராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அறுகம்புலம், காரைநகர்.

தகவல்:
பரமேஸ்வரி-தம்பிராஜா
T.P: 021 320 2903

## மரண அறிவித்தல்

### நவரத்தினசாமி திருஞானசம்பந்தபிள்ளை



தோற்றம் 02.09.1927 மறைவு 11.05.2015

இன்பர்சிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தபிள்ளை 11.06.2015 வியாழக்கிழமைசிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினசாமி செல்லக்கண்டு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - சீவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் திலகவதி (ஜேர்மனி), திலகரூபன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சற்குணதேவன்(ஜேர்மனி), றஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுசன், லக்ஷன், டிலக்ஷி அனித்தன், சுனிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2015) திங்கட்கிழமை பி.பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
077 922 1175 ,076 635 7158
(59742) (9.7.3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி நல்லைநாதன்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நல்லைநாதன் 11.06.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.
(60878) (45.3.7) தொலைபேசி: 021 222 6207

### திருமதி அன்னலட்சுமி கதிரித்தம்பி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கதிரித்தம்பி நேற்று 13.06.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி கதிரித்தம்பியின் அன்பு மனைவியும் காளிதாசப்புலவர், காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் இரஞ்சிதமலர், காலஞ்சென்ற கண்ணதாசன் மற்றும் அருந்தவமலர் (ஆசிரியை - அளவெட்டி அருணோதயாக்கல்லூரி), திராவிடமலர் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மத்தி. 077 407 1503

(60891) (9.3)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

### பொன்னம்பலம் செங்கமலம் (கண்மணி)

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர், Green Memorial Hospital Manipay)



மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பொன்னம்பலம் செங் கமலம் (கண்மணி) 12.06.2015 வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் -வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, லெட்சுமி, மாரிமுத்து, கனகம்மா மற்றும் சிவகங்கை காலஞ்சென்ற விக்கினராஜா மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான பழனித்துரை, குமாரசுவாமி, சிவசம்பு, சதாசிவலிங்கம் மற்றும் யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தலைக்கிரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம், மண்டைதீவு.

தகவல்: சகோதரிகள், பெறாமக்கள்.
(60889) (45.6.7)

### திருமதி கண்மணி (சின்னம்மா) தம்பிப்பிள்ளை



உடுவிலை வசிப்பிடமாக தற்போது 12/23, கன்னாதிட்டி ஒழுங்கையில் வசித்தவருமாகிய திருமதி கண்மணி தம்பிப்பிள்ளை 12.06.2015வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அதிரியான்- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான தவமணி, Dr துரை ராஜா நவரட்ணம், ஜெயமணி மற்றும் ருக்மணி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பெறாமகள் :-சாந்தினி 077 819 7875
பெறாமகன்:- ரவீந்திரன் 077 724 4466
பெறாமகன்:-கண்ணன் 077 720 4959

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் முடி உதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???
இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய
"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"
தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலைக் கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.
சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா, இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13
Quality Royal A Kasthiya Hair Oil Guaranteed
யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி/15708) (4.3.7)

நீர்க்கசிவை தடுப்பதற்கு
Water Proofing
உங்கள் சிமெந்திலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகளில் ஏற்படும் வெடிப்பினூடாக வரும் நீர்க்கசிவைநாங்கள் சீர்செய்து தருகின்றோம்.
North and East Engineering
No.55. Stanley Road
Jaffna
(பீப்பிள் லீசிங்குக்கு முன்பாக)
021 222 2363
(C 17656) (11.3)

## விளையாட்டு விழா இன்று

தென்மராட்சி, ஜுன் 14

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே. பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (த-9)

## கலந்துரையாடல்

தென்மராட்சி, ஜுன் 14

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பெண்கள், சிறுவர் வன்முறைக்கெதிரான கண்காணிப்புக்குழு அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் இடம்பெறும்.இக் கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அலுவலர், பெண்கள் விவகார அலுவலர், பொலிஸார் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-9)

பதவி வெற்றிடம்



பிரபல விற்பனை முகவருக்கு கீழ் வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
1. உதவி கணக்காளர் / காசாளர்
தகைமை
AAT அல்லது HND அல்லது A/L கணக்கியல் பிரிவில் சித்தியடைந்தவர்கள் தேவை. அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
சம்பளம் தகைமைக்கேற்ப வழங்கப்படும்.
2. காட்சிப்படுத்துநர் (Merchandiser)
தகைமை
A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது.
3. உதவி வேலை ஆள்கள் (Poter)
தொடர்புக்கு:
AMT Marketing & Distributors
no.28, New Sivan Road, Thirunelveli, Jaffna.
amt.trans.jaffna@gmail.com
(60859)(10.6.3)

CHURCH OF THE AMERICAN CEYLON MISSION
POST OF FINANCE MANAGER
To Manage the Finance of a non Profit Organization.
Qualification: AAT, CIMA, Chartered. Accountancy.
Experince : 05 - 10 Years Depending of Qualification
Salary : Negotiable
Location : Jaffna
APPLY TO
TREASURER - CACM OR BY. email to
Vmilhiran@gmail.com
Asia House.
Maruthanarmadam,
Chunnakam.
(60821)(9.3.6) To Reach on or befor 30 June 2015

## மருத்துவ அதிகாரிகளுக்கு கருத்தரங்கு

தென்மராட்சி, ஜுன் 14

யாழ்.பிராந்தியத்தில் வேகமாகப் பரவி வரும் கண் நோய் தொடர்பாக மருத்துவமனைகளில் கடமையாற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கான கருத்தரங்கு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு யாழ் பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

கேப்டன் ஸ்டீல் (பிறைவேட்) லிமிட்டெட்
PIONEERS IN STEEL
CAPTAIN STEEL (PVT) LTD AN ISO 9001-2008 SLSI CERTIFIED BOI COMPANY



உறுதியானது | பாதுகாப்பானது | நீடிக்கக்கூடியது
CAPTAIN TMT 500 RB
ISO 9001:2008
Rs.100,000/= + NBT + VAT Upwards




கேப்டன் ஸ்டீல் (பிறைவேட்) லிமிட்டெட்
CORPORATE OFFICE :
No.220,என்.எம்.பெரேரா மாவத்தை.கொழும்பு-08.
Tel : (+9411) 592 5555 I Fax : (+9411) 592 7777
marketing@captainsteel.lk I www.captainsteel.lk

FACTORY UNIT II
No.249/3, வக்கியாவத்தை வீதி. பாஹல பொம்மிறியா.கடுவெல
Tel : (+9411) 557 5800 I Fax : (+9411) 214 2591
kaduwela@captainsteel.lk I www.captainsteel.lk

FACTORY OUTLET
No.461, பழைய சோனக தெரு.கொழும்பு-12.
Tel : (+9411) 434 5412-6
Fax : (+9411) 474 0690
factoryoutlet@captainsteel.lk
www.captainsteel.lk

077 668 3711 / 077 891 5770
077 722 4089 / 077-424 4556

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறைந்த முதலீட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்கும் தேசிய லொத்தர் சபை

நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் தேசிய லொத்தர் சபை, வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதாக தேசிய லொத்தர் சபையின் தலைவர் திருமதி சாமினா பெரேரா வழங்கிய விசேட செவ்வியின்போது கூறினார்.

கே :– தேசிய லொத்தர் சபையின் எதிர்காலதிட்டங்கள்ளைப்பற்றிக்கூறமுடியுமா?

ப :– நாங்கள் பல திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். மேலும் பல நல்ல திட்டங்களை எதிர்வரும் காலங்களில் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

கே :– நாட்டின் அபிவிருத்தியில் தேசிய லொத்தர் சபையின் பங்களிப்பு என்ன?

ப :– ஒரு நாட்டின் அபிவிருத்தி வெறுமனே பௌதிக வளங்களின் அபிவிருத்தியால் மாத்திரம் இடம்பெற முடியாது. மாறாக, அபிவிருத்தி பூரணப்படவேண்டுமானால், ஒப்பிட்டு அடிப்படையில் மனித வளங்களின் அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும்.

நாட்டில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் முகமாக சுகாதாரம், வீடமைப்பு, சிரமதானப் பணிகள், சமூகசேவைப் பணிகள் மேலும் பலதிட்டங்களுக்கு தேசிய லொத்தர் சபை மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றோம்.

கே :– தேசிய லொத்தர் சபையைப் பற்றிக் கூறமுடியுமா?

ப :– தேசிய லொத்தர் சபையானது நாட்டின் அபிவிருத்திக்குப் பெரும் பங்களிப்புச் செய்யும் நிறுவனமாகும். கடந்த வருடத்தில் இந்த நிறுவனம் பாரிய நட்டத்தை எதிர்நோக்கியது. தேர்தல் பிரசார நடவடிக்கை மற்றும் வீண் செலவினங்கள் காரணமாக இந்த நிறுவனம் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியது. தற்போது அவை அனைத்தும் மாற்றப்பட்டு வீணான செலவினங்களைக் குறைத்ததன் மூலம் இந்த நிறுவனம் பெரும் வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்கின்றது.



கே:–லொத்தர் விற்பனையைப் பற்றிக்கூறமுடியுமா?

ப :– லொத்தர் விற்பனையில் கடந்த இரண்டு மாதங்களில் பெரும் விற்பனை வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்துள்ளது. 'மஹஜன சம்பத' 4 மில்லியன் டிக்கட்டுகளையும், 'கொவி செத' 3.7 மில்லியன் டிக்கட்டுகளையும் விற்பனை செய்துள்ளது.

கே :– வடக்கு, கிழக்கில் லொத்தர் சபையின் பிரவேசம் எவ்வாறு உள்ளது?


ப:– வடக்கு, கிழக்கில் லொத்தர் டிக்கட் விற்பனையை அதிகரிக்கவுள்ளோம். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளில் விளம்பரம் செய்து லொத்தர் விற்பனையை ஊக்குவிக்கவுள்ளோம். அண்மையில் 'கொவி செத' லொத்தர் டிக்கட் மூலம் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் 70 மில்லியன் பணப்பரிசை வென்றுள்ளார். 20 ரூபா குறைந்த முதலீட்டில் பல இலட்சாதிபதிகளையும், பல கோடீஸ்வரர்களையும் உருவாக்கி தேசிய லொத்தர் சபை சாதனை படைத்துள்ளது.

கே :– எதிர்காலத்தில் புதிய லொத்தர் டிக்கட்டுகளை அறிமுகப்படுத்தவுள்ளீர்களா?

ப :– ஆம். ஓரிரு வாரங்களில் புதிய லொத்தர் டிக்கட்டை அறிமுகப்படுத்தவுள்ளோம்.

கே :– லொத்தர் விற்பனையின் மூலம் பெறப்படும் வருமானம், இலங்கைப் பொருளாதாரத்தின் பங்களிப்பு என்ன?

ப :– இலங்கைப் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்காக லொத்தர் விற்பனைமூலம் வருமானத்தைச் சேகரிப்பதில் முதன்மைப் பங்காளராக இருப்பதே எங்கள் நோக்கம். லொத்தர் விற்பனை மூலம் பெறப்படும் நிதி, பொருளாதாரம், சமூக அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் என்பவற்றுக்கான பங்களிப்பைச் செய்கின்றது. லொத்தர் மூலம் வருமான உற்பத்தியை விருத்திசெய்து நாட்டின் அபிவிருத்திப் பயணத்தில் எமது பணி அளப்பரிய தாகவுள்ளது. கலப்பு எயார்போர்ட் சுப் பர்ட்ரோ மூலம் பெறப்படும் வருமானம், விமான நிலைய மற்றும் விமான சேவைகள் அதிகார சபையின் அபிவிருத்திக்காகப் பயன் படுத்தப்படு கின்றது. இதேபோன்று மற்றைய லொத்தர் மூலம் கிடைக்கப்பெறும் வருமானம், இலங்கையின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இன்று தேசிய லொத்தர் சபை பெரும் வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிப்பதாகத் தேசிய லொத்தர் சபையின் தலைவர் கூறினார்.




## சியெட் புதிய உற்பத்தி நிலையத்தில் உயர் செயற்பாட்டு ரயர்கள் உற்பத்தி

நவீன பண்புகளுடன் கூடிய புதிய உயர் செயற்பாடுகள் கொண்ட நான்கு வகை டயர்கள் கண்ணைக் கவரும் வடிவமைப்புடன் ஏஸியன் டயர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தால் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அண்மையில் தொடங்கிய புதிய உற்பத்தி நிலையத்தில் இவை உருவாக்கப்பட்டுள்ளன.

கிறிப் என பெயரிடப்பட்டுள்ள நான்கு அளவுகளிலான இந்த புதிய டயர்கள் இலங்கை வீதிகளில் காணப்படும் 30 வகையான மோட்டார் சைக்கிள் வகைகளுக்கு உகந்தவையாகக் காணப்படுகின்றன. மோட்டார் சைக்கிள் பிரிவில் சியெட்டின் பங்களிப்பை இது கணிசமாக அதிகரிக்கவுள்ளது.

ரயரை சுதந்திரமான முறையில் சுழல வைக்கும் பண்பை உறுதி செய்யும் வகையில் வலிமையான பிடிப்பைக் கொண்டதாக இந்தப் புதிய உற்பத்திகள் அமைந்துள்ளன. வளைவுகளில் திரும்பும் போது அதற்கேற்றவாறு வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் இவை அமைந்துள்ளன. ஈரமான மற்றும் உலர்ந்த தரைகளில் தேவையான கட்டுப்பாடுகளை இலகுவாக மேற்கொள்ளத்தக்க தாகவும் இவை அமைந்துள்ளன.



சியெட் களனியின் வளாகத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள ஏஸியன் டயர்ஸ் (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின் புதிய உற்பத்தி நிலையம் உள்ளூர் மற்றும் சர்வதேச தரத்திலான மோட்டார் சைக்கிள் டயர்களை உற்பத்தி செய்யக் கூடிய அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளது. 17 அளவுகளில் வருடாந்தம் 162000 டயர்களை உற்பத்தி செய்யக் கூடிய ஆரம்ப நிலை ஆற்றலை அது கொண்டுள்ளது. புதிய முறைகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் இந்த டயர்கள் உள்ளூர் நிலைமைகளுக்கு மிகவும் ஈடுகொடுக்கக் கூடியவையாகும்.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் ஒரு அங்கத்துவ நிலையம் என்ற வகையில் இந்தப் புதிய உற்பத்தி பிரிவு டயர் இறக்குமதியை மேலும் குறைக்க வழியமைத்துள்ளது. சியெட் ஏற்கனவே டயர் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தியுள்ளது. அத்தோடு ஏற்றுமதி சந்தையில் அதிகபங்களிப்புச் செலுத்தி மோட்டார் சைக்கிள் டயர் பிரிவில் தனது சந்தை நிலையை மேலும் ஸ்திரப்படுத்தவும் வழிவகுத்துள்ளது.

சியெட் களனி நிறுவனம் தற்போது இலங்கையின் மோட்டார் சைக்கிள் சந்தைப் பிரிவில் 17 வீத பங்களிப்பைக் கொண்டுள்ளது.

இதுதவிர ரேடியல் பிரிவில் 30 வீதம், ட்ரக் மற்றும் இலகு ட்ரக் பிரிவில் 52 வீதம், முச்சக்கர வண்டி பிரிவில் 48 வீதம், விவசாய துறை டயர் பிரிவில் 73 வீதம் என தனது சந்தைப் பங்களிப்பினை அது கொண்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்த அரசின் கணினி வழங்கும் திட்டத்தில் பெரும் நிதி மோசடி

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் காலத்தில் பாடசாலைகளுக்கு கணினி வழங்கும் திட்டத்தில் பெரும் நிதி மோசடி இடம் பெற்றுள்ளது என குற்றஞ்சாட்டிய கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், 50 ஆயிரம் ரூபா சந்தைப் பெறுமதியுள்ள கணினியொன்று ஒரு இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இவ்வாறு முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டால் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்துக்கும், முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து, கல்வி அமைச்சர்கள் இருவரும் பிள்ளைகள்போல் செயற்படுவதை தயவுசெய்து நிறுத்துங்கள்" என்று கூறி வாக்குவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திடம் மேலதிக கேள்வியொன்றை எழுப்பிய ரீ.பி. ஏக்கநாயக்க, தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்வதற்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை என்ன? என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கடந்த அரசின் 1,000 பாடசாலைகள் வேலைத்திட்டத்தின்கீழ் ஒரு பாடசாலைக்கு 68 கணினிகள் வீதம் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், இந்தக் கணினிப் பாடத்துக்கான போதுமான ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படவில்லை.

இந்தப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணினியொன்றின் சந்தைப் பெறுமதி 40 முதல் 50 ஆயிரம் ரூபாவாகும். ஆனால், ஒரு இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிக விலை கொடுத்து ஒரு கணினியை அரசு கொள்வனவு செய்துள்ளது. இதனூடாக பாரியளவு பணம் நாசமாக்கப்பட்டுள்ளது" என்று குற்றஞ்சாட்டினார்.

கல்வி அமைச்சரால் மேற்படி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதையடுத்து, எழுந்த முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன,

இது புதியதொரு குற்றச்சாட்டாகும். 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினியை ஒரு இலட்சத்துக்கும் அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்யவில்லை. கல்வி அமைச்சர் இவ்வாறு பொறுப்பற்ற வகையில் குற்றச்சாட்டை முன்வைக்கக்கூடாது - என்றார்.

இதையடுத்து கருத்து வெளியிட்ட கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்,

இந்த அமைச்சைப் பொறுப்பேற்றது முதல் நான் மிகவும் பொறுப்புடன் செயற்படுகின்றேன். நீங்கள் பொறுப்பின்றி செயற்பட்டதனால் தான் பிரச்சினை ஏற்பட்டுள்ளது - என்றார்.

இதன்பின்னர் பந்துல குணவர்தன எம்.பி. கருத்து வெளியிட முற்படுகையில், கல்வி அமைச்சர்கள் இருவரும் பிள்ளைகள்போல செயற் படுவதை தயவுசெய்து நிறுத்துங் கள்" என்று கூறி வாக்குவாதத்தை முடித்துவைத்தார் பிரதிசபாநாயகர் சந்திமவீரக்கொடி.(த-சி)





மாபெரும் ஏல விற்பனை

100 ற்கும் அதிகமான டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள்





- ❖ உழவு இயந்திரம் ❖ டிமோ பட்டா
- ❖ முச்சக்கரவண்டி ❖ மோட்டார் சைக்கில்
- ❖ இருச்சக்கர உழவு இயந்திரம்

2015 ஜூன் 16 ம் திகதி

புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம் வவுனியா

ஜுன் 13,14,15 ஆம் திகதிகளில்
வாகனங்களைப் பார்வையிடலாம்

அழையுங்கள் : 011 511 81 81

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் புனித அந்தோனியாரிடம் மதபேதமின்றி அருள் பெறும் பக்தர்கள்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் - யாழ்.பல்கலைக்கழகம்



மானிப்பாய் புனித அந்தோனியார் திருவிழா ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 2015 அன்று (இன்றைய தினம்) யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை யாழ் ஆயர் பொறுப்பில் இருக்கும் போது கொண்டாடப்படுகின்ற மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய இறுதித் திருவிழா இதுவாகவே இருக்கும். எனவே இவ் விழாவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

மா - பலா - வாழை என முக்கனிகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து செழித்து வளரும் இயற்கை எழில் கொண்ட மானிப்பாய் மண்ணிற்கு மகுடம் சேர்ப்பது போல் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம் அமைந்து மத பேதமின்றி பக்தர்கள் கூடும் யாத்திரைத்தலமாக உள்ளது.

மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத் தலம் 1972 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பின்னர் மானிப்பாய் - நாவாந்துறை - ஆனைக்கோட்டை - பண்டத்தரிப்பு - மாதகல் - சில்லாலை - இளவாலை ஆகிய இடங்களில் இருந்து பக்தர்கள் இங்கு வந்து குவிகிறார்கள்.

எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய சரித்திரப் பதிவேட்டில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

எஸ்.ஜே.பிரான்சிஸ் அ.ம.தி அடிகளாரிடமிருந்து மானிப்பாய் பங்கை பொறுப்பெடுப்பதற்கு முன்னதாக யாழ்.மறை மாவட்ட ஆயராக இருந்த எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையிடம் 10 அடி 20 அடி கொண்ட சிறு கொட்டிலாக இருந்து மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தை புதிதாகக் கட்டியெழுப்புதவற்கு உத்தரவு பெற்றேன்.

5 ஆயிரம் ரூபாவை மட்டும் கையில் வைத்துக்கொண்டு ஆலயத்தைக் கட்டும் பணியை ஆரம்பித்து மொத்தமாக 85 ஆயிரம் ரூபாவைச் சேர்த்து 75 ஆயிரம் ரூபாவை ஆலயப் பணிகளுக்குச் செலவழித்தேன்.

அப்போது மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயம் 12 குடும்பங்களுடன் ஒரு பங்கு ஆலயமாகவே திகழ்ந்தது. மானிப்பாய் பங்கில் உள்ள பத்து ஆலயங்களுக்குமான யாத்திரைத் தலமாக மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தை கட்டி, துணை ஆயர் எல்.ஆர். அன்ரனி ஆண்டகையால் திறந்து வைத்த பின் யூலை மாதம் 1972 ஆம் ஆண்டு பங்கை விட்டு கண்டி தேசிய குருத்துவக் கல்லூரிக்கு விரிவுரையாளராகச் சென்றேன் எனத் தெரிவிக்கிறார்.

1999 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தல பரிபாலகராக இருந்த ஏ.எவ். பெனட் அடிகளாரின் காலத்தில் ஆலயத்திற்கு முன்புறமாக அமைந்துள்ள நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டதோடு போட்டிக்கோ - மணிக்கூட்டுக் கோபுரம் என்பன கட்டி எழுப்பப்பட்டு புது மெருகூட்டப்பட்டன.

2011 ஆம் ஆண்டு மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலத்தை பொறுபபேறற தறபோதைய பரிபாலகரான எக்ஸ்.டபிள்யூ.ஜேம்ஸ் அடிகளார் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு புது மெருகூட்டியுள்ளார்.

வரவேற்பு அந்தோனியார் சொரூபம் - செபமாலைக் கடை - மெழுகுவர்த்தி கொளுத்துமிடம் - பக்தர்கள் ஆலயத்தில் அமர்வதற்கான வாங்குகள் என்பன இவரின் காலத்தில் அமைக்கப்பட்டன. வரவேற்பு அந்தோனியார் சொரூபம் அழகிய முறையில் சிறப்பாக அமைக்கப்பட்டதோடு ஆலயத்தின் பீடம் புதிதாக வடிவமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்டமை இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

சி.எஸ்.ஐ திருச்சபையைச் சேர்ந்த அன்னப்பா ஜெயராஜன் - அவரின் மனைவி இவான் சலின் தங்கரட்ணம் ஜெயராஜன் குடும்பத்தினரை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் சந்தித்த போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வியப்பூட்டுவதாய் இருந்தன.

ஒவ்வொரு நாளும் நான் மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கு வருகிறேன். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் நானும் - அங்கு உதவி அதிபராக பணியாற்றும் எனது மனைவி யும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் குடும்பமாய் வந்து மானிப்பாய் புனித அந்தோ னியார் ஆலயத்திலும் - ஆலய வளாகத்திலும் நேரத்தை செலவிடுவது எமக்கு ஒரு மகிழ் வூட்டும் அனுபவமாக இருக்கிறது.





இங்கு நிற்கின்ற போது மன அமைதியை உடல் இளைப்பாற்றியை - பாதுகாப்பை - இனம்புரியாத ஓர் இறை அன்புறவை நானும் எனது குடும்பத்தினரும் அனுபவிக்கிறோம். இந்த இனம்புரியாத உணர்வை வார்த்தைகளால் என்னால் பெரிதாக விளக்க முடியாது.

குடும்பமாக ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் இங்கு வரும் எமது குடும்பத்திற்குத் தேவையான அனைத்து வரங்களையும் புனித அந்தோனியார் நிறைவு செய்கிறார் என்பதை நாம் எல்லோரும் முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம் என அன்னப்பா ஜெயராஜன் தெரிவித்தார்.

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டு 1991 ஆம் ஆண்டின் பின்னர் மானிப்பாயில் வசித்து வரும வி.கே.ராஜா எனற இந்து சமய அனபரை சந்தித்த போது அவர் புனித அந்தோனியார் தமது குடும்ப வாழ்வில் அள்ளிப்பொழிந்த அளப்பரிய நன்மைகள் பற்றி தெளிவாக விளக்கினார்.

காரைநகரில் இருக்கின்ற போதே மானிப்பாய் வர சந்தர்ப்பம் கிடைக்கும் போதேல்லாம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருவதுண்டு. இதயதாகம் இருப்போர் வருக என்று மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய கிறில் கதவில் எழுதப்பட்டிருக்கும் வசனம் எனக்கு ஓர் அமைதியைத் தரும் வசனமாக இருக்கிறது.

1991 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் போது மானிப்பாய்க்கு ஓடிவந்து இங்கே ஒரு வாடகை வீட்டில் குடியேறினோம். பின்னர் படிப்படியாக சொந்த வீடு - சொந்த உழைப்பு என புனித அந்தோனியார் தன் ஊரிலேயே தங்கியிருக்க எமக்கு வழி செய்தார்.

திருமணமான பின்னர் எனது முதல் பெண் குழந்தை வயிற்றில் இருக்கும் போது குழந்தைக்கு ஆபத்து என டாக்டர்கள் கைவிட்டமையால் உதவி செய்ய யாரும் இன்றி மானிப்பாய் புனித அந்தோனியாரிடமே வந்து தஞ்சம் புகுந்தேன்.

குழந்தை எந்த ஆபத்துமின்றிப் பிறந்தால் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அந்தோனியாருக்கு அணிவிப்பதாக நேர்ந்தேன். அனைத்தும் நல்ல படியாக நடந்தமையால் அப்படியே ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அந்தோனியாருக்கு அணிவித்தேன்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வருவது என் மனத்திற்கு அமைதியையும் அசைக்கப்பட முடியாத இறை நம்பிக்கையையும் தருகின்றது. அந்தோனியாரின் புகழ் இன்னும் பரவ என்னாலான எத்தனையோ உதவிகளை ஆடம்பரமின்றி அமைதியாக இன்றும் செய்துவருகிறேன்.

சட்டத்தரணி பி.தவபாலனையும் அவர் துணைவியார் விஜித்தா தவபாலனையும் புனித அந்தோனியார் யாத்திரைத்தல நோவினையின் பின்னர் இரவு 9.00 மணியளவில் சந்தித்த போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வியப்பும் ஆச்சரியமும் ஊட்டுபவையாக இருந்தன.

சட்டத்தரணி தவபாலன் தாம் ஜி.சி.ஈ சாதாரண தர வகுப்புப் படிக்கும் காலத்தில் இருந்தே அந்தோனியார் பக்தி கொண்டவராக இருந்ததாகத் தெரிவித்தார்.

அவர் தனது அந்தோனியார் பக்தி பற்றி மேலும் தெரிவிக்கும் போது நான் ஜி.சி.ஈ சாதாரண தர வகுப்புப் படிக்கும் போது ஏழு செவ்வாயக் கிழமைகள் அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வேண்டினால் விரும்பிய வரத்தை பெற்றுக்கொள்ளலாம் என எனக்கு ஒருவர் தெரிவித்தமையால் ஏழு கிழமைகள் தொடர்ந்து பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வேண்டினேன். ஏழாவது கிழமை எனது பரீட்சைப் பெறுபேறுகள் வந்தபோது புனித அந்தோனியாரின் வரத்தை உணர்ந்து கொண்டேன்.

எனது துணைவியார் விஜித்தாவை தேர்ந்து கொண்ட போது புனித அந்தோனியாரின் பக்தி பல மடங்கு அதிகமானது. ஜூன் மாதம் 13 ஆம் திகதி புனித அந்தோனியாரின் பெருவிழாவிலேயே பிறந்து தனது பிறந்த தினத்தை புனித அந்தோனியார் திருவிழா அன்றே கொண்டாடிவரும் அவர் புனித அந்தோனியார் பக்தியை எமது குடும்பத்தில் இன்னும் பல மடங்கு அதிகரித்தார். எமது பிள்ளைகளும் புனித அந்தோனியார் பக்தியில் வளர இது வழி செய்தது.

இன்றும் பாசையூர் புனித அந்தோனியார் நவநாளின் பின்னர் அந்தோனியாரின் படங்களை எடுத்து வைபர் மூலமாக எமது பிள்ளைகளுக்கு அனுப்பியுள்ளோம். நானும் எனது துணைவியாரும் எமக்குத் தெரிந்தவர்களுக்கு புனித அந்தோனியார் பக்தியைப் பரப்பி வருகிறோம்.

சட்டத்தரணி அரிச்சுனா விபத்தில் சிக்கி உயிராபத்தில் இருந்த போது அந்தோனியாருக்கு 100 மொழுகுவர்த்தி கொளுத்துவதாக நேர்ந்தோம். அவர் அற்புதமாக காப்பாற்றப்பட்டு இன்று சட்டத்தரணியாக தொடர்ந்தும் பணியாற்றுகிறார்.

பிரபல சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் முழங்கால் வருத்தத்தினால் சத்திர சிகிச்சைக்கு உள்ளாகி உயிர் ஆபத்தான நிலையில் இருந்த போது அவருக்காக மானிப்பாய் புனித அந்தோனியாரிடம் நேர்த்திவைத்தேன். ஆயிரம் மெழுகுவர்த்திகளை அவரின் பணத்தில் கொளுத்துவதாக நேர்ந்தேன். அவரிடம் இதைச் சொன்னபோது பெரிதும் நம்பிக்கையற்றவராக இருந்தபோதும் அவர் சம்மதித்தார்.

புனித அந்தோனியாரின் அருளால் அவர் அற்புதமாகக் குணமானபோது அந்தோனியாரின் பக்தி அவரிடமும் ஏற்பட்டது. 1000 மெழுகுவர்த்திகளுக்கான பணத்தை அவரே தந்தார். மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் அந்த மெழுகுவர்த்திகளைக் கொளுத்திக் கொண்டிருந்த போது இவ்வளவு மெழுகுவர்த்திகளை ஏன் கொளுத்துகிறீர்கள் - ஏன் அதனை பணமாகக் கொடுக்கலாமே என ஒருவர் கேட்டார். இனி வரும் காலங்களில் அவ்வாறு செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

அந்த வேளையில் நடந்த ஒரு சம்பவம் என்னையும் எனது துணைவியார் விஜித்தாவையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஒரு சிறுவன் வந்து எனக்கும் கொளுத்த மெழுகுவர்த்தி தாருங்கள் எனக் கேட்டார். எனது துணைவியார் அவரின் விரும்பம் தீர கொளுத்துவதற்கு கை நிறைய மெழுகுவர்த்திகளைக் கொடுத்தார். நாம் மெழுகுவர்த்தி கொளுத்தும் பணியில் ஈடுபட்டு முடித்து அந்த சிறுவனைத் தேடிய போது எங்கும் காணவில்லை எனத் தெரிவித்தார்.

36 ஆண்டுகள் மட்டுமே இவ்வுலகில் வாழ்ந்த புனித அந்தோனியார் தாம் ஆற்றிய அளப்பரிய புதுமைகளால் பதுவைப் பதியர் - நாவழியாப் புனிதர் - கோடி அற்புதர் - காணாத பொருள்களை காட்டிக்கொடுப்பவர் எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

இன மத பேதமின்றி அந்தோனியார் பதிகளில் கூடுகின்ற அனைத்துப் பக்தர்களுக்கும் அந்தோனியார் அன்பின் தந்தையாக என்றும் விளங்குவாராக. இலங்கை அரசியலில் நம்பிக்கையின் ஒளிக்கீற்று தோன்றுகின்ற வேளை புனித அந்தோனியார் தம் அருள் வளங்களைப் பொழிந்து தமிழ் மக்கள் வாழ்வில் மகிழ்வும் சுதந்திரமும் சுபீட்சமும் நிறைய தம் அருள் வளங்களை அள்ளிப் பொழிவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்வாதிகளுக்கு தண்டனை வழங்கு

## ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் கோஷம் இதுவாம்

கொழும்பு, ஜூன் 14

ஊழல்வாதிகளுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரும் கோஷத்துடன் ஜாதிக ஹெல உறுமய எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் என அதன் பொதுச் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

முக்கியமாக மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊழல், அவன்காட், ராடா நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் சம்பவங்களை பிரதான தொனிப் பொருளாகக் கொண்டு தமது கட்சி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நீதிமன்றச் செயற்பாடுகளில் உள்ள பலவீனம் காரணமாகச் சிலர் தப்பியுள்ளனர். வேறு சிலர் அரசியல் இலஞ்சம் காரணமாக தப்பியுள்ளனர். நாம் எமது போராட்டத்தை முன்னெடுப்போம்.

கடந்த காலத்தில் சில ஊடகப் பிரசாரங்களுக்காகவும் பணத்திற்காகவும் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதைத் தவிர்த்து அடுத்த தேர்தலில் வெற்றி பெறலாம் என எவரும் எண்ணினால் அது தவறு.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே அடுத்த தேர்தல் நடக்கும். அவற்றை பிரதான தொனிப் பொருளாக ஜாதிக ஹெல உறுமய மாற்றும். இது அனைவருக்கும் நாம் வழங்கும் எச்சரிக்கை எனவும் சம்பிக்க ரணவக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (த)

# இரட்டை வாக்குச்சீட்டு உரிமை அவசியமானது

## 18 கட்சிகள் கூட்டாக அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

வாக்காளர்களுக்கு 2 வாக்குச் சீட்டு உபயோகிப்பதற்கான உரிமை வழங்கப்படாவிட்டால் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என 18 சிறுப்பான்மைக்கட்சிகள் இணைந்து தெரிவித்துள்ளன.

20ஆவது தேர்தல் திருத்தம் தொடர்பில் வோட்டர் எட்ஜ் ஹோட்டலில் 18 சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

இது குறித்து கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்,

இரண்டு வாக்குச் சீட்டுக்களை வாக்களிக்க உபயோகிக்கும் முறை அவசியம் எனவும் அதை வழங்கத் தவறும் பட்சத்தில் ஆதரவளிக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார். (த)





## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணம், கண்டி கிளைகளில்.

**ஜூன் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்**

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும்
  பிள்ளைகளுக்கு(16-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ரூபா. 1000

70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை: 0830–1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900–1730
ஞாயிறு: 0900–1600 (விசாரணைகளுக்கு மட்டும்)

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை நடாத்துகின்றோம். மாத்தறை (041)2229555 காலி (091)2232755

www.britishcouncil.lk





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகத்தையும் சுவாசக் காற்றையும் அள்ளித்தரும் அட்சய பாத்திரங்கள்......

நோயுற்று மூச்சுத் திணறி உயிருக்காகப் போராடும் மனிதர்களை மீட்டெடுக்க ஈரலிப்புக் கலந்த ஒட்சிசன்வாயு தேவைப்படுகிறது என்பதை நாம் அறிவோம். ஒட்சிசன் இன்றி உயிரினங்கள் உயிர் வாழ முடியாது என்றும் தெரிந்து வைத்திருக்கிறோம். அசுத்தக் காற்றாலும், அசுத்த நீராலும் நோயுற்று விழும் மக்கள் தொகைபற்றியும் அறிந்து வைத்திருக்கிறோம். தூய காற்றுக்காகவும் நீருக்காகவும் போராடிக் கொண்டிருக்கிறோம். சுற்றாடல் வெப்பமாகி எமது சொந்தப் பூமி வறண்டுபோய் மண்ணும், மனித மனங்களும் மரத்துப் போன நிலையில் ஒரு குளிர்ச்சியான நிழல் தேடி அலைந்து கொண்டிருக்கிறோம். ஆனால் இவை அனைத்தையுமே அள்ளி வழங்க ஆயத்தமாக இருக்கும் அட்சய பாத்திரங்கள் பற்றி நாம் அக் கறைப்பட்டுக் கொள்வதில்லை. அதற்கும் ஒருபடி மேலே சென்று அவற்றை அழித்துவிடவும் ஆயுதம் தூக்கி நிற்கின்றோம்.

எம்மைச் சுற்றி பச்சைப்பசேல் என்று வளரும் தாவரங்கள் அனைத்தையும் அட்சய பாத்திரங்கள் என்று கருதுவது மிகைப் படுத்தப்பட்ட சிந்தனை ஆகாது.

பசுமையான மரங்கள் ஒவ்வொன்றும் நித்தமும் பல்லாயிரக்கணக்கான லீற்றர் ஈரலிப்பான ஒட்சிசனை உருவாக்கிக் கொண்டிருக்கும் அவை தொழிற்சாலைகளாக விளங்குகின்றன. அத்துடன் நாம் வெளிவிடும் அசுத்தக்காற்றை உள்ளெடுத்து சுத்திகரிக்கும் வடிகட்டிகளாகவும் அவை தொழிற்படுகின்றன. சுற்றாடலின் வெப்பநிலையைக் குறைத்து சூழல் வெப்பநிலையை மனிதன் சுகமாக வாழக் கூடிய ஒரு வெப்ப நிலையில் சீர் செய்து வைக்கும் ஒரு வெப்பநிலை சீராக்கி யாகவும் இந்த மரங்கள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தாவரங்களில் துளிர்த்துவரும் குருத்துக்களும், பசுமையும், குளிர்ச்சியும், நிழலும் அதன் மலர்களும் மனித மனங்களுக்கு புத்துணர்ச்சியையும், அமைதியையும் அள்ளி வழங்குகின்றன. மாதம் மும்மாரி பொழியா விட்டாலும், போதுமான அளவு மழை வீழ்ச்சி கிடைப்பதற்கும் எமது தண்ணீர்த்தேவையை நிவர்த்திப்பதற்கும் மரங்கள் இன்றியமையாதவை என்பதும், மரம் இன்றி மழை இல்லை என்பதும் எமக்குத் தெரியும். எமக்கு உணவுப் பொருள்களையும், வருவாயையும் தரும் தாவரங்கள் தான் பயனுள்ள தாவரங்கள் என்று எண்ணிக் கொள்கிறோம். அனைத்துத் தாவரங்களுமே பயனுள்ள அட்சய பாத் திரங்கள் என்பதை மறந்து விடுகின்றோம். இந்தப் பாத்திரங் களையும் அதன் பயன்களையும் பாதுகாக்க என்ன செய்யப் போகிறோம்?

மரங்கள் பல அநாவசியமாக வெட்டி எறியப்படுகின்றன. மரங்களால் சுத்திகரிக்கப்பட்ட ஆரோக்கிய காற்றுக்கு வீடு தோறும் கதவடைப்புப் போராட்டம் நடக்கிறது. ஜன்னல்கள் அனைத்தையும் அடைத்து மூடி உள்ளே மின்விசிறிகள் போட்டு நாம் சுவாசித்து வெளிவிடும் அசுத்தக்காற்றையே மீண்டும் மீண்டும் சுழலவிட்டு சுவாசித்து பல நோய்களுக்கு ஆட்பட்டுக் கொண்டிருக்கிறோம். அத்துடன் இவ்வாறான அசுத்தக்காற்றை சுவாசிப்பது மன அமைதிக் குறைவு, நித்திரைக் குறைவு, கற்றல் செயற்பாடுகளில் தாக்கம் போன்றவற்றையும் ஏற்படுத்தலாம்.


நாம் வெட்டி வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்காகவும் வேதனைப் படுவோம். அதற்குப் பிராயச்சித்தமாக வீழ்த்திய ஒவ்வொரு மரங்களுக்கும் பதிலாக 9 மரங்களை நட்டுவளர்ப்போம். மரம் ஒன்றை நட்டு வளர்ப்பது ஓர் உன்னதமான புண்ணிய காரியம் மட்டுமல்ல, மனித குலத்துக்கும், மருத்துவ உலகுக்கும் செய்யும் ஒரு மகத்தான சேவை என்பதை மனதில் நிறுத்துவோம். தாவரங்கள் மீதும் அன்பு செலுத்துவோம். நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்நாளில் எத்தனை மரங்களை நட்டு வளர்த்தோம் என்பதைக் கணக்கிட்டு வைத்துக் கொள்வோம். அதைச் சொல்லிக்கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்வோம்.

மனிதனுக்கு உணவு, உடை, உறைவிடம், மருந்து, சுவாசக்காற்று, நிழல், குளிர்ச்சி, மன அமைதி, மழை, நீர், எரிபொருள், மகிழ்ச்சி என அனைத்தையுமே தொடர்ந்து அள்ளிவழங்கிக் கொண்டிருக்கும் அட்சய பாத்திரங்களான தாவரங்களையும், மரங்களையும் நட்டு வளர்ப்பதில் பெருமிதம் கொள்வோம். வீட்டுச் சுற்றாடலையும், பொது இடங்களையும் தாவரங்களால் பசுமைப்படுத்துவோம்.

சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ். போதனா
வைத்தியசாலை .



# புகை நாற்றத்தை என் வாயிலிருந்து குறைத்தால்.....



- ✱ மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் குறைதல்.
- ✱ இரத்தத்தில் கொலஸ்ரோல் குறைதல்.
- ✱ மூளையுள் இரத்தப்பெருக்கு குறைதல்.
- ✱ கால், கை விரல்களில் எரிவுடன் கூடிய நோவு குறைதல்.
- ✱ நுரையீரல் பாதிப்புக்கள் குறைதல்.
- ✱ இருமல், முட்டு குறைதல்.
- ✱ வாய், உதடு, இரைப்பை, நுரையீரல், குடல், சிறுநீர்ப்பை என்பவற்றில் ஏற்படும் புற்றுநோய்கள் குறைதல்.
- ✱ இரத்தத்தில் காபன்மோனொக்சைட்டு குறைதல்.
- ✱ குறைப்பிரசவம் குறைதல்.
- ✱ நிறை குறைந்த குழந்தைகள் பிறப்பது (IUGR) குறைதல்.
- ✱ கர்ப்பிணித்தாயின் உயர்குருதியமுக்கம் குறைதல்.
- ✱ என்புகளின் தேய்மானம் குறைதல்.
- ✱ மறைமுகப்புகைத்தலினால் குடும்ப அங்கத்தவர்களின் இறப்புக்கள் குறைதல்.
- ✱ வயிறு, குடல், புண்கள் வேதனைகள் குறைதல்.

போன்ற நோய்கள், வேதனைகள் குறைந்து வாழ்வின் தரம் கூடும். வீட்டிலும் சமூகத்திலும் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இவை மட்டுமா?**

இவற்றுக்கு மேலதிகமாக உடனடியாக ஒருவரில் ஏற்படும் மாற்றங்களையும் பாருங்கள்.

- முதிய தோற்றம் மறைந்து பழைய இளமைத் தோற்றம் மீளப்பெறல்.
- கறுப்பு நிறமாகிய உதடுகள் பழைய நிலைக்குத் திரும்புதல்.
- மஞ்சள் காவிபடிந்த பற்கள் பழைய இயல்பு நிலைக்கு மாறுதல்.
- சகிக்க முடியாத நாற்றம், சுவாச நாற்றம் அற்றுப் போதல்.
- உணவில் விருப்பு ஏற்படுதல்.
- மெலிந்த உடல் சற்றுத் தேறிவருதல்.
- பாலியல் பலவீனம் குறைந்து வீரியத்தன்மை பெறல்.
- குழந்தைப் பாக்கியமின்மை குறைந்து குழந்தை கிடைக்கும் தன்மை அதிகரித்தல்.
- தாம்பத்திய உறவிலிருந்த கஷ்டம் நீங்குதல்.



போன்ற பல நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். புகைத்தலைக் குறைப்பதால் ஏற்படும் நன்மைகளை அனுபவிக்க நாம் ஏன் தவற வேண்டும்? ஏன் பணம் செலுத்திக் கல்லறைக்கு சீக்கிரம் நாம் செல்ல வேண்டும்.

**புகைத்தலிருந்து விடுபடுவதற்கு**

- புகைப்பதில்லை என எடுத்துக் கொண்ட நல்ல முடிவைப்பேண உறுதியான மனத்திடம் வேண்டும்.
- நல்ல நண்பர்கள் வட்டத்தை பேணிக்கொள்ளுதல்.
- ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுதல்.
- நல்ல பொழுதுபோக்குகளை ஏற்படுத்திக்கொள்ளுதல்.
- ✱ தினமும் உடல் அப்பியாசங்கள் செய்தல்.
- ✱ ஆன்மிகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மனம் அலைபாய்வதைத் தடுத்தல்.
- ✱ முடியுமாயின் தியான முறையில் ஈடுபடுதல்.

போன்ற செயன்முறைகளைப் பின்பற்றுவதனால் இந்தக் கொடிய பழக்கத்திலிருந்து மீண்டெழ முடியும்.

புகைப்பிடித்தல் தனி ஒருவரை மட்டும் பாதிப்பதில்லை. வீட்டிலுள்ள அவரது அன்புக்குரியவர்கள், தொழிலிடங்களில் கூடவே இருந்து தொழில்புரிபவர்கள் என அவர் சார்ந்த சமூகத்தையே பாதிக்கிறது.

புகைப்பழக்கத்தில் ஈடுபடுபவர்கள் இலகுவில் ஏனைய கெட்ட பழக்கங்களையும் பழகிக்கொள்ளும் வாய்ப்புக்கள் அதிகம். போதைப்பொருள் பாவனை, மதுப் பழக்கம், தகாத பாலியல் தொடர்புகள் என இந்த நச்சுவட்டம் பெருத்துக்கொண்டே செல்லும். இதன் விளைவாக வீட்டில் பணம் திருடுதல், சிறுசிறு திருட்டுக்களில் ஈடுபடுதல், குடும்ப வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் நடத்தைப் பிறழ்வுகள், பாலியல் வன்புணர்வுகள், கொலை என்பன ஏற்பட வாய்ப்புகள் ஏற்படுகின்றது.

புகையின் அரூபக் கரங்கள் புகைப்பவனின் கழுத்தை நோக்கி நீண்டு நெரிப்பது மட்டுமல்லாது, அவன்சார் சமூகத்தையே நோக்கி நீண்டு அதனையும் அழிக்க எத்தனிக்கும். இத்தகைய யதார்த்த நிகழ்வுகளை இன்று நாம் கண்கூடாகவே காண்கின்றோம்.

புகையின் வலைக்குள் தினம் தினம் பல நூறு இளைஞர்கள் விட்டில் பூச்சிகளாய் விழுந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது, மனம் மிக நோகிறது. இவர்களை எப்படித் திருத்துவது? யாரால் இவர்களை திருத்த முடியும்? என்ற கேள்விகள் தான் மனதில் மீண்டும் மீண்டும் எதிரொலித்து நிற்கின்றன.

தாமே உணர்ந்து புகையிலிருந்து தள்ளி நிற்காதவரை இவர்களைத் திருத்திட முடியாது. பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியர்கள் சில நிமிடங்களேனும் மாணவர்களுக்கு சில நல்வார்த்தைகள் கூறி கற்றதன் வழி நடக்க வலியுறுத்திட வேண்டும். மதிப்புக்குரிய சமயப் பெரியார்கள், பௌராணிகர்கள் சொற்பொழிவாளர்கள், பிரசங்கம் செய்வோர் என சமூகத்தின் பல மட்டத்தினரும் தமது கருத்துக்கு ஆர்வத் துடன் காது கொடுப்போருக்கு சில நிமிடங்களேனும் புகையை விலக்கிட சில நல்வார்த்தைகள் பகர்ந்திட வேண்டும்.

பாடசாலைக்கு அருகிலுள்ள வர்த்தகப் பெருமக்களாவது புகைப்பொருள்களை விற்காது பெருமனத்துடன் முன்வந்து உதவிட வேண்டும்.

**இளைஞர்களே ! வாருங்கள் !!**

புகையற்ற எதிர்காலத்தை நோக்கிப் பயணிப்போம்.

**Dr.பொ.ஜெசிதரன் (MBBS, DFM)**
சுகாதார வைத்திய அதிகாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது திருத்தம் குழப்பகரமானது

## மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 14

அரசமைப்புச் சட்டத்தின் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு அரசியல் கட்சிகள் முன்வைத்த யோசனைகளுக்குப் பதிலாக அமைச்சரவை மாற்று திருத்தச் சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகள் பொதுவான இணங்கிய யோசனைக்கு பதிலாக அரசு வேறு தேர்தல் முறை யோசனையை நிறைவேற்றியுள்ளது. இந்த திருத்தத்தைச் சட்டமாகும் உண்மையான தேவை அரசுக்கு இருக்கின்றதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

புதிய தேர்தல் முறை ஒன்றை ஏற்படுத்துவதற்காக அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கிய திருத்தச் சட்டத்திற்கு மறாக 8ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய திருத்தச் சட்டம் தொடர்பான யோசனை சிக்கலானது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பல்வேறு அணிகளாகப் பிரிந்து தேர்தல் திருத்த யோசனைகளை முன்வைப்பதன் காரணமாக நிறைவேற்றபோவது எந்த திருத்தச் சட்டம் என்பது தெளிவில்லை.

கட்சிகள் இடையில் ஏற்பட்டுள்ள இவ்வாறான கருத்து முரண்பாடுகள் காரணமாக புதிய தேர்தல் முறை திருத்தச் சட்டத்தைச் செய்து கொள்ள முடியாமல் போயுள்ளது.

சகல தரப்பினரின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை கவனத்தில் கொண்டு சகல அரசியல் கட்சிகளும் இணங்கக் கூடியதும், மக்களின் விருப்பம், ஜனநாயகம் மாத்திரமலாது நியாயம் பிரதிநிதித்துவம் செய்யும் தேர்தல் முறையை ஏற்படுத்த வேண்டும் எனவும் விஜித ஹேரத் கூறியுள்ளார். (த)











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









வவுனியா மாவட்டத்தில் பொதுமக்களின் தொழில் சேவையை மேம்படுத்தும் முகமாக மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை நிலையம் வவுனியா மாவட்ட செயலகத்தில் திறந்துவைக்கப்பட்டது. மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் நாயகம் தொழில்வாய்ப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத்யாப்பா, சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டொன்கிலின், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்.ஜி.ஜே.தர்மசேன, வவுனியா மாவட்ட அரசஅதிபர் எம். கே. பந்துல ஹரிச்சந்திரா, வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.(ஐ-402)



கற்சிலைமடுவில் அறநெறிப் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தபோது... (ஐ-500)





மந்திகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கலின் போது பக்தர்களால் காவடி, கரகம் போன்ற நேர்த்திக் கடன்கள் செலுத்தப்பட்ட போது.(ஐ)





சர்வதேச சுற்றுச் சூழல் தின நிகழ்வு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய மண்டபத்தில் சங்கத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுற்றுச் சூழல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் சுற்றுச் சூழல் அதிகார சபையின் யாழ் மாவட்ட அலுவலர் திருமதி குமுதினி வசந்தரூபா கருத்துரை வழங்கினார். (ஐ-83)



'மைஸ்ரிகல் ரோஸ்' சர்வதேச நிறுவனத்தின் சாவகச்சேரிக் கிளையின் வாய்மொழி மூலப்பரீட்சை அண்மையில் திருகோணமலையில் நடைபெற்றது. இதில் பதக்கங்களை பெற்ற மாணவர்களுடன் நிறுவன ஆசிரியர்களையும் காணலாம். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாமலிடம் விசாரணை



கொழும்பு, ஜூன் 14
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியிருந்ததுடன் அவரிடம் நான்கரை மணி நேர விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

அங்குன கொலபெலஸில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்ற கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலர் ஆயுதத்துடன் வந்த சம்பவம் மற்றும் தென் மாகாண சபை உறுப்பினர் டி.வி. உபுல், நிதி மோசடி பொலிஸ் விசாரணைப் பிரிவின் அதிகாரிகளைக் கல்லெறிந்து கொலை செய்வதாகக் கூறியமை ஆகிய தொடர்பிலேயே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் அவரிடம் இது தொடர்பில் வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அங்குனு கொலபெலஸ்ஸவில் கலந்துகொண்ட நிகழ்வொன்றில் நாமல் ராஜபக்ஷவின் பிரத்தியேக மெய்ப்பாதுகாவலரான இராணுவ கோப்ரல் ஒருவர் துப்பாக்கியுடன் காணப்பட்டமை தெரியவரவே அவர் கைதுசெய்யப் பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஏற்கனவே ஜனாதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றமையால் இது தொடர்பில் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டதுடன், நாமல் ராஜபக்ஷவிடமும் இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு கடந்த 8 ஆம் திகதி எதிர்வரும் 12ஆம் திகதி குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பாணை விடுத்திருந்தது.

இதற்கமைய நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகியிருந்த நாமலிடம் குற்றப்புலனாய்வுத்துறை நான்கரை மணித்தியாலம் துருவித்துருவி விசாரணை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் அவர் 1.30 மணியளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளார். (த–சி)

## இதய அஞ்சலி



ஜெய்ப்பூர் நிறுவனத்தின் முன்னாள்
கௌரவ தலைவரும், எமது நிறுவன
வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும்
பங்காற்றிய
திருமதி லங்கா சிவராமலிங்கத்தின்
அன்புக்கணவர்
அமரர்.
**சிவப்பிரகாசம் சிவராமலிங்கம்**
அவர்கள் ஆஸ்திரேலியாவில்
காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த
கவலையடைகின்றோம். அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அவரின் ஆத்மா சாந்திபெற
இதயபூர்வமான கண்ணீர்
அஞ்சலியினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

முகாமைத்துவக்குழு அங்கத்தவரும், ஊழியர்களும்,
யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்.
இல.05, பழையபூங்காவீதி, யாழ்ப்பாணம்.

(60862) (9.3)

## காசாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் ராசிகலக்ஷனில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள புதிய காட்சியறைக்கு முன் அனுபவம் உள்ள காசாளர் உடன் தேவை.
தொடர்பு : **ராசி கலக்ஷன்**
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5571

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர்
**ஐ.நா. தருமலிங்கம்**
(இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் தீவக வலயம்- திட்டமிடல்)
அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு கவலையடைகின்றோம். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினரின் துயருடன் நாமும் இணைந்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம், புங்குடுதீவு.**
(60882) (10.6.3)
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**வேலாயுதபிள்ளை பொன்னுத்துரை**
(கமநல பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்)



மண்ணில் 06.01.1940
விண்ணில் 15.05.2015

**திதி : துவாதசி 14.06.2015**

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கிச்
சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும்
மாதமொன்று ஆகிடினும் ஆறவில்லை
எம் துயரம்...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**கடந்த 15.05.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் வேலாயுதபிள்ளை பொன்னுத்துரை அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

சித்தர் மாவடி வீதி கல்வயல், சாவகச்சேரி.
077 058 4092 (41180)(9.3.7) குடும்பத்தினர்.

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**நடராஜா பெருமாள்பிள்ளை**



மலர்வு 12.10.1949
உதிர்வு 24.05.2015

24.05.2015 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்த சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பெருமாள்பிள்ளை அவர்களின் 21 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இடம்பெறவுள்ளது. இவ்வேளையில் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும், இழப்பினால் துயருற்றிருந்த வேளை எமது துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
மனைவி–திருமதி பெ. மோகனபுஷ்பம் (குஞ்சு)
T.P. 011 239 6227

## 12 ஆவது நினைவு தினம்

தோற்றம் 24 . 12 . 1957
மறைவு 14 . 06 . 2003



### தோழர் றொபேட் (த.சுபத்திரன்)

(முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர்)

தோழர் றொபேட் சுமார் 25 ஆண்டுகள் பொதுவாழ்வில் ஈடுபட்டு தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் பங்கெடுத்திருந்தார். ஈபிஆர்எல்எவ் இன் உருவாக்கத்தில் பெரும்பங்காற்றியவர். அதன் வளர்ச்சிக்காகவும் காத்திரமாக உழைத்தவர். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகவும், தமிழ் சமூகத்தில் நிலவிய பாரபட்சங்கள்,அநீதிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக மீட்சிக்காகவும்,மக்கள் நலனை முன்னிலைப் படுத்தும் உயரிய அரசியல் பண்பாட்டிற்காகவும் தன்னை அர்ப்பணித்து உழைத்த முழுநேரப் போராளி ஆவார்.

நோர்வே அரசின் மத்தியஸ்தத்துடன், இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில், 14.06.2003இல் பாடசாலை வகுப்பறையில் மறைந்திருந்த புலிகளின் துப்பாக்கிதாரியால் சுடப்பட்டார்.

அவரது இழப்பு மக்களுக்கும், கட்சிக்கும் ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும். அவர் தன்னை அர்ப்பணித்த மக்களின் விடுதலைக்காகவும், சமூக அநீதிகளுக்கு எதிராகவும் தொடர்ந்தும் போராட உறுதியேற்று அவரது நினைவு நாளில் அவருக்குஅஞ்சலி செலுத்துவோம்.

**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**

## 5ஆம் ஆண்டு நினைவுநாள்

பிறப்பு: 01 . 08 . 1941
இறப்பு: 08 . 06 . 2010



### கதிரவேலு மயில்வாகனம் (மகான்)

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் புகையிரதத் திணைக்களம்)

மறைந்தும் மறையாமல் எம் மனங்களில்
வீற்றிருக்கும் எம் குடும்பத்தின் மகுடமே!
வாழ்வில் நீங்கள் செய்த நற்
செயல்கள் எங்கள் வாழ்விற்கு
சிறப்புக்களை அமைத்ததய்யா...
ஒளி தந்த உங்கள் நினைவுகளுடன்
இன்றும் கூடி இறைஞ்சுகிறோம்
உங்கள் சாந்திக்காக...

சிவன் கோயிலடி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசா
கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, சுவிஸ், பல்கேரியா, ரஷ்யா, துருக்கி, ஜப்பான், கொரியா, தாய்வான், மலேசியா, சீனா, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா, மியான்மார் நாடுகளுக்கான விசா ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
வங்கி பணவைப்புகள்
அனைத்து நாடுகளுக்கும் Student விசிட், பிசினஸ் விசாக்களுக்கும் மற்றும் அனைத்து தேவைகளுக்குமான வங்கிப் பணவைப்புகள் (சேமிப்பு கணக்கு, நிலையான வைப்பு) செய்து கொடுக்கப்படும்.
Racas Travels & Tours (Pvt) Ltd.
டெம்லர் பிளேஸ், டெம்பிள் ரோட், கல்கிசை.
தொடர்பு: 0774 085 699, 0754 050 034

# சஜித்துக்கு அழைப்பாணை


கொழும்பு, ஜூன் 14

சமுர்த்தி நிதியத்தை முறைக்கேடாகப் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அமைச்சர் சஜித் பிரேமதாஸவை நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கமளிக்குமாறு உயர்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அமைச்சர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட குழுவினருக்கே நீதிமன்றம் மேற்கண்டவாறு கட்டளை பிறப்பித்துள்ளது.

சமுர்த்திப் பயனாளிகள் சார்பில் மேல் மாகாண சபையின் உறுப்பினர் ஜகத் குமாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே உயர்நீதிமன்றம் மேற்கண்ட கட்டளையை நேற்று முன் தினம் பிறப்பித்துள்ளது. சஜித் பிரேமதாஸ தன்னுடைய அரசியல் நண்பர்களுக்குக் கூடுதலாக பகிர்ந்தளிப்பதாகவும் இதனூடாக சமுர்த்திப் பயனாளிகளின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் சஜித் பிரேமதாஸ சமுர்த்தி பயனாளிகளின் அடிப்படை உரிமையை மீறிவிட்டார் என்று தீர்ப்பளிக்குமாறு அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. (த)

iSKILLS COLLEGE OF TECHNOLOGY
உயர் வருமானம் பெற்றுத்தரக்கூடிய அங்கீகாரமிக் என்ஜினியரிங் கற்கைநெறி
City & Guilds ENGINEERING
CIVIL / QS / ELECTRONIC / ELECTRICAL / AUTOMOBILE / MECHANICAL



புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

| Advanced Diploma Programmes | Date |
|---|---|
| Civil Engineering | 27th June |
| Civil Engineering (week days ) | 25th June |
| Quantity Surveying | 25th June |
| Motor Vehicle Engineering | 28th June |
| Electronics & Electrical Engineering | 28th June |
| Mechanical Engineering | 28th June |
| Refrigeration & Air conditioning | 28th June |
| AutoCAD | 28th June |
| **Graduate Diploma Programmes** | |
| Civil Engineering | 11th July |
| **Post Graduate Diploma Programmes** | |
| Civil Engineering | 12th July |
| Certificate in Engineering | 11th July |
| Certificate in Engineering (week days ) | 06th July |
| Diploma in AutoCAD | 11th July |
| Diploma in Revit | 12th July |

G.C.E. A/L ▶ Diploma in Engineering ▶ Advanced Diploma in Engineering ▶ Graduate Diploma in Engineering ▶ Post Graduate Diploma in Engineering

இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் தொழிற்பயிற்சி

எமது சிறப்புத்தன்மை
1) அனுபவமும் திறமையும் வாய்ந்த ஆசிரியர் குலாம்
2) டிப்லோமாவில் ஆரம்பித்து குறுகிய காலத்தில் பட்டப்படிப்பை எட்டும் வாய்ப்பு
3) இலகு தவணைக் கட்டண முறை
4) மக்கள் வங்கியில் குறைந்த வட்டியில் கடன் பெறும் வாய்ப்பு
5) நவீன வகுப்பறை மற்றும் ஆய்வுகூடம்
6) சிறந்த முறையிலான பரீட்சை வழிகாட்டல்

மேலதிக தகவலுக்கு
Jaffna 021 4 66 66 99

City & Guilds APPROVED CENTRE

Nugegoda Campus
No. 102,
Stanley Thilakaratne Mw,
Nugegoda.
011 4 696 666
scot@skillsinternational.lk

Kandy Campus
No. 511,
Peradeniya Road,
Kandy.
081 4 66 66 99
kandy@skillsinternational.lk

Kurunegala Campus
No. 252,
Puttalam Road,
Kurunegala.
037 3 61 68 68
kurunegala@skillsinternational.lk

Jaffna Campus
No.207,
Navalar Road,
Jaffna.
021 4 66 66 99
jaffna@skillsinternational.lk

Matara Campus
No. 68,
Dharmapala Mawatha,
Matara.
041 4 501 501
matara@skillsinternational.lk

## காரைநகர் கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவு

காரைநகர், ஜூன் 14

காரைநகர் பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவு அடுத்த மாதம் 5ஆம் திகதி இடம்பெற உள்ளதால் வாக்காளர் இடாப்பு கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், வாக்காளர் இடாப்பில் ஏதாவது ஆட்சேபனைகள் இருப்பின் நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துமாறு காரைநகர் பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம், கிராம சேவையாளர் அலுவலகங்கள், பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் என்பவற்றில் வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (த-250)

## தென்மராட்சிப் பாடசாலைகளில் போதைப் பொருள் விழிப்புணர்வு

தென்மராட்சி, ஜூன் 14

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 1ஏபி 1சி தரப் பாடசாலைகளில் போதைப் பொருள்கள் மற்றம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேச போதைப் பொருள் விழப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தின் ஏற்பாட்டில் பிரதி திங்கட்கிழமைகளில் பி.ப. 1.30 மணி தொடக்கம் 2.30 மணி வரை கருத்தரங்குகள் அந்தந்தப் பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளன.

பாடசாலைகளில் தரம் 9 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதலாவது கருத்தரங்கு நாளை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள 1ஏபி 1சி தரத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகளில் பிரதி திங்கட்கிழமைகளில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## திருநெல்வேலி முத்துமாரி கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்.திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

பத்து தினங்கள் மஹோற்சவத்தைக் கொண்ட இந்த ஆலயத்தின் தேர்த் திருவிழா இம்மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00மணிக்கு நடைபெறவுள்ளதுடன் மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளன. (த-7)

வேலை ஆள் தேவை
கடை ஒன்றுக்கு சிட்டை எழுதுநர் காசாளர் தேவை.
தொடர்பு: 077 911 6108 (60900) (10.6.)

காணி வாடகைக்கு
யாழ். ஸ்ரான்லி வீதியோரமாக 5 பரப்பில் உள்ள வெற்றுக்காணி யொன்று முழுதாகவோ, பகுதியாகவோ குத்தகைக்கு விடப்படவுள்ளது. தொடர்புகளுக்கு:
072 129 7756 (60951) (10.6.3)

சாரதி தேவை
* A, D அனுமதிப்பத்திரமுள்ள, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம், முல்லைதீவு சென்று வரக்கூடியவர்கள், லேலண்ட் 18 அடி வாகனம் செலுத்திய அனுபவமுள்ள சாரதி தேவை.
* சம்பளம் ; மாதம் 20,000/= மேற்கொண்டு நாளொன்றுக்கு ரூபா 300/= வழங்கப்படும்.
நீர்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 077 8956566 (60954) (10.6.3)

ஓம் சக்தி ஜோதிட நிலையம்
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்
சிவசங்கர் ஜோதிடர்
உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.
ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.
தொடர்பு: 077 618 7261
காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை
நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

உதயன் advt@uthayan.com 0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் அழிவுக்கு காரணம் மஹிந்தவே

## அர்ஜுன ரணதுங்க சாடல்

கொழும்பு, ஜூன் 14

கிரிக்கெட் விளையாட்டின் அழிவுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பொறுப்புக் கூறவேண்டும் என இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்று நாடு திரும்பும் விளையாட்டு வீரர்களை வரவேற்கக் கூட தற்போது எவரும் முன்வருதில்லை. இது விளையாட்டுத்துறையில் நாம் எதிர் நோக்கும் அனர்த்தமான நிலைமை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விளையாட்டு, கடந்த காலத்தில் அரசியல்மயமானது. விளையாட்டு வீரர்களின் அருகில் இருந்து ஒளிப் படங்களை எடுத்து அவற்றைக் கொண்டு தேர்தலில் வெற்றி பெறவே சில அரசியல்வாதிகள் முயற்சித்தனர்.

கடந்த காலத்தில் இது நடந்தது. நாட்டின் விளையாட்டு வீரர்களில் ஒரு சிலர் தமது நாட்டின் சர்வதேசப் போட்டிகளில் விளையாடாது தனிப்பட்ட போட்டிகளில் விளையாடச் செல்ல முன்னாள் ஜனாதிபதியிடம் அனுமதிப்பெற்ற நாடு இது.

அந்த நாள்களே எனது வாழ்க்கையின் மிகவும் கவலைக்குரிய நாள்களாகும். அப்போது கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக நானே இருந்தேன் என்பது எனது கவலைக்குக் காரணம்.

இதனைச் செய்ய வேண்டாம் என நான் கூறினேன். நாட்டின் போட்டிகளை நிறுத்தி விட்டு தனிப்பட்ட போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்ல அனுமதிக்க வழங்கவேண்டாம் என நான் கூறினேன்.

இவ்வாறு செய்ய வேண்டாம் என அன்றைய விளையாட்டுத்துறை அமைச்சரிடமும் முன்னாள் ஜனாதிபதியிடமும் கோரிக்கை விடுத்தேன். அதற்கு அவர்கள் செவி சாய்க்கவில்லை.

அன்றில் இருந்தே கிரிக்கெட் விளையாட்டின் அழிவு ஆரம்பித்தது என்று நான் எண்ணுகிறேன்.

கடந்த காலங்களில் நடந்தவற்றில் இருந்து பாடங்களைக் கற்று எதிர் காலத்தை வடிவமைக்க வேண்டியதே நாம் தற்போது செய்ய வேண்டியது–என்றார். (த–சி)

# நாட்டின் நெருக்கடிக்கு சந்திரிகாவே பொறுப்பு

## சிங்களயே ஜாதிக பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 14

நாட்டின் தேசிய பாதுகாப்பு தற்போது பாரதூரமான நெருக்கடி நிலைக்கு உள்ளாகி இருப்பதாக சிங்களே ஜாதிக பெரமுன என்ற அமைப்பின் தேசிய அமைப்பாளர் அங்குலுகல்லே சிறி ஜீனானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டின் தற்போதைய பிரதமர், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவான தோற்றத்தில் செயற்பட்டு வருகிறார்.

வடக்கு மாகாணத்தில் போர் ரீதியான விடுதலைப் புலிகளின் நினைவு கூரல்கள் நடத்தப்படுவதுடன் அவற்றுக்கு எதிராகப் பாதுகாப்புத் தரப்பினர் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க திரிபுபட்ட மனநிலையிலும் வெறுக்கத்தக்க வகையிலும் செயற் படுகிறார். நாடு தற்போது எதிர்நோக்கியிருக்கும் அராஜக நிலைமைக்கு அவரே நேரடியாகப் பொறுப்புக் கூறவேண்டும்–என்றார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கனகரத்தினம் செல்வராசா**

(முன்னாள் பிரபல வர்த்தகர் மாத்தறை)

மலர்வு 25.05.1931 — உதிர்வு 26.05.2014

திதி: (14.06.2015)

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம் என்றும் எம் மனதில் அணையாத ஒளிவிளக்காக வீற்றிருக்கும் எங்கள் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாசனி பரஞ்சோதிநாதன்



கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாசனி பரஞ்சோதிநாதன் (12.06.2015) வெள்ளிக் கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மனோன்மணி தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் பரஞ்சோதிநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற யசோதரன் மற்றும் கேஸிதரன் , ரமேஸ்தரன் (மலேசியா) , தாரணி , தர்சிகா , லபீனா ஆகியோரின் அன்புத்தாயாரும், சிறீதரன் (ஹொலண்ட்), ரவீந்திரன், நிதர் சினி ஆகியோரின் அன்புச்சகோதரியும் தவநிதி,பிரிய தர்சினி (மலேசியா), பகீரதன், தவரூபன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிஷாந்தன், ரம்மியா, நினுசா (மலேசியா) , றவின்சா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சத்திய சாயீஸ்வரி (ஹொலண்ட்) சுகுமாரன், சிவசோதி - இன்பராணி (லண்டன்) சோமநாதன் - பாஸ்கரி (லண்டன்), ஜெயசோதி - மங்களம் (சுவிஸ்), இராமநாதன் -மணி (கனடா) , கந்தசாமி - செல்வராணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் செந்தூரன் - தர்சிகா (பிரான்ஸ்) , டில்லி குமரன் (ஜேர்மனி) நிரோஷி - புஸ்பகுமார் ஆகியோரின் பெரிய தாயாரும் நிரோசன் (ஹொலண்ட்) , நேமிக்கா ( ஹொலண்ட்) ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### கதிர்காமு சின்னத்துரை



(முன்னாள் தலைவர்-தமிழரசுக் கட்சி,
ஆவரங்கால் கிளை)

எமது பாடசாலையின் புகழ் பூத்த பழைய மாணவனும் எமது பாடசாலையின் பழைய மாணவர்சங்க லண்டன் கிளையின் செயலாளர் திருமதி யசோக்குமாரன் வசந்தமாலா அவர்களின் அன்பு தந்தையாருமாகிய தமிழரசு **சின்னத்துரை** அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கமும் பாடசாலைச் சமூகமும்
யா/புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.

(சி.17659)
(45.8.7)

## மரண அறிவித்தல்

### திருமதி இராதாராணி சுவாமிநாதன்



மலேசியா, கோலாலம்பூரினைப் பிறப்பிடமாகவும்,புலவனார்வீதி கல்வியங்காட்டினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராதாராணி சுவாமிநாதன் 12.06.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேதுராசா, உமையவல்லி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுவாமிநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, மகேஸ்வரி மற்றும் பஞ்சாட்சரம் (ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரி, லண்டன்) , நேசரட்ணம் (ஓய்வு பெற்ற எழுது வினைஞர், கச்சேரி,யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் நடராஜா,பாபறா , சிவபாக்கியவதி அம்மா, பால சரஸ்வதி, காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் தில்லைநாயகி, சிவ ராஜா,வசந்த நாயகி, தர்மராசா ,வரதராசா,நபிலா,ஜெயந்தினி, கௌரி காம்பிகை,அம்பிகை ஆகியோரின் மைத்துனியும் ரொனி சிவஞானம் , ஆன்ரோகினி ,மார்க் நரேஸ் ,எமாராணி , நிர்மலா, சிவநேசன் (ஆசிரியர் - ஏழாலை மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் மங்கை மலர்,மதிவதனி (ஆசிரியை - யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை)மயில்ரதி (அமெரிக்கா), செல்வரட்ணம் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"இராணி இல்லம்"
புலவனார் வீதி , கல்வியங்காடு
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


## எதிர் காலத்தில் பசுமை உலகம்

## பசுமைப் பொதி

எதிர்கால பசுமை உலகமும் நானும்

அன்புள்ள எதிர்காலத்தில் பசுமை உலக் நிறுவனமே!

என்னுடைய சமூகமும் எனது வாழ்க்கையும் கடன் சுமையாலும் தொழில் இல்லாமையாலும் ஒரு சரியான தொழில் வழிகாட்டி இல்லாமையாலும் எனது வாழ்க்கையும் சமூக வளர்ச்சியும் சீரழிந்து காணப்படுகின்றது. இந்த நிலை எதிர்காலத்தில் பசுமை உலக நிறுவன ஊக்குவிப்பு திட்டத்தினையும் திட்ட நடைமுறைப்படுத்தலையும் அறிந்தவுடனும் செயற்பாட்டை பார்த்தவுடனும் எமது வாழ்வுக்கு ஒரு நிறைவு, ஒரு நல்லவழி கிடைத்துள்ளது என்பதை மனப்பூர்வமாக உணர்ந்துள்ளேன். இருந்தும் இந்நிறுவன சேவையானது சமூகத்தில் ஒரு சிலர் மாத்திரமே பயனடையக்கூடியதாகவுள்ளது. இதை மாற்றி சகல தரப்பினரதும் நிதி நிலைமைக்கேற்ப நிறுவனத்தின் செயல்திட்ட தொகுதியொன்றை அமுலாக்கி நடைமுறைப்படுத்தினால் எங்களின் சமூகமும் எதிர் காலத்தில் தன்னிறைவோடு வாழுமென்பதை நிறுவனத்தின் செவிக்குக்கொண்டு வருவதில் மன நிறைவடைகின்றேன்.

நன்றி.
உரிமையுடன்
அன்ரனி குரூஸ்
வவுனியா.

மேற்படி வேண்டுகோளுக்கமைய அனைத்து தரப்பினரையும் எமது செயற்பாடுகள் சென்றடையக் கூடிய வகையில் பின்வரும் இலாபகரமானதும் பயன்பாடுடையதுமான சிறியதோர் முதலீட்டில் புதியதோர் பசுமையை ஏற்படுத்துவோம் என்ற தொனிப் பொருளில் பசுமைப் பொதி எனும் வியாபாரப் பொதியினை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

| பயிர் / மரத்தின் பெயர் | இனம் | அறுவடைக் காலம் | நிலத்தின் தன்மை | அறுவடைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| 05 - சந்தன மரம் [illegible] | வெண் சந்தனம் | 16 வருடம் | வேம்பு வளரக்கூடிய பிரதேசம் | Rs. 7,500,000 (LKR) |
| 25 - தேக்கு | பர்மா ரங்கூன் | 20 வருடம் | அனைத்து இடங்களும் | Rs. 2,500,000 (LKR) |
| 25 - பப்பாசி | ரெட் லேடி | 06 மாதம் | அனைத்து இடங்களும் | Rs. 60,000 (LKR) |
| 10 Kg. - இஞ்சி | உள்ளூர் | 08 - 10 மாதம் | 75% நிழல் தரக்கூடிய உவரற்ற பிரதேசம் | Rs. 40,000 (LKR) |
| 02 - டொம் ஈ.ஜே.சி | ஏற்றுமதி | 18 மாதம் | அனைத்து இடங்களும் | Rs. 6,000 (LKR) |
| 02 - மாதுளை | இந்தியன் | 02 வருடம் | அனைத்து இடங்களும் | Rs. 4,000 (LKR) |
| 25 - கமுகு | உள்ளூர் | 03 வருடம் | அனைத்து இடங்களும் | Rs. 4,000 (LKR) |

### மேற்படி திட்டத்தின் நன்மைகள்

- ஒரே தடவையில் ரூபா 25,000/- வினை செலுத்துவதன் மூலம் இப் பெறுமதிமிக்க பொதியினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- 16 வருடங்களின் பின் சந்தன மரம் மற்றும் தேக்கு மரங்களின் அறுவடை ஊடாக அதிகளவு வருமானத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- பயன்தரு விளை நிலங்களை இரு தேவைக்கு உட்படுத்தி உச்ச இலாபத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- வனவள மற்றும் விவசாய நிபுணர்களின் ஆலோசனைகள் வழங்கப்படும்.
- சந்தனமர கன்றுகளுக்கு மூன்று வருடங்களுக்கு உத்தரவாதத்துடன் கூடிய மீள் நடுகைத் திட்டம் உண்டு.
- மேற்படி பொதிக்கான ஆலோசனைகளும் மேலதிக தகவல்களும் வழங்கப்படும்.
- உங்கள் நிலத்திலேயே பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள முடியும்.
- இஞ்சிப் பயிர்ச் செய்கைக்கான சேதன பசளையை எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்.
- முதலீட்டுக்கு ஏற்றவாறு இலாபம் பெறக்கூடிய திட்டம்.
- இயற்கைத் திரவ உரத்தினைப் பயன்படுத்த முடியும்.
- வர்த்தகச் சந்தையில் இவற்றுக்கான கேள்வி அதிகம்.
- தொலைபேசி ஊடான வாடிக்கையாளர் சேவை வழங்கப்படும்.
- மேலதிக தகவல்களுக்கு 076 531 0421 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- மேற்படி பொதியுடன் பின்வரும் ஏதாவதொரு பயன்தரு மரக் கன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விலாட்டு மாமரம் (ஒட்டு) - 2, கறுத்தகொழும்பான் மாமரம் (ஒட்டு) - 2, ஈரப்பலா (ஒட்டு) - 2, நெல்லி - 2, அம்பரலங்காய் - 2

மேலதிக தகவல்களுக்கு
HOT LINE - 076 531 0421

### திட்ட அமுலாக்கல் பிரிவு

எதிர் காலத்தில் பசுமை உலகம் (தனியார்) வரையறுக்கப்பட்டது

இல.133, கண்டி வீதி, [illegible] யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு நிதி உதவி வழங்கியதாம் இந்தியா

## பாகிஸ்தான் செனட் சபையில் குற்றச்சாட்டு

கராச்சி, ஜூன் 14

போர் இடம்பெற்ற காலத்தில் இந்தியா, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி வழங்கியதாக பாகிஸ்தான் செனட் சபையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தொடர்பில் இந்திய அரசு வெளியிட்ட அறிக்கைகளுக்குக் கடுமையாக கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் செனட் சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என செனட் சபையின் தலைவர் ராஜா மொஹ்முட் சபார் உல் ஹக் இந்தத் தீர்மானத்தை முன்வைத்திருந்தார்.

இந்தியாவின் இந்த மேலாதிக்க மனப்போக்கை, பாகிஸ்தான் நிராகரித்துள்ளதாக பாகிஸ்தான் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியத் தலைமை அறிக்கைகளுக்கு எதிராக நடந்த விவாதத்தின்போது இந்தியா எல்லைத் தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்தது என, செனட் சபையின் தலைவர் ராஜா மொஹ்முட் சபார் உல் ஹக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கும் வகையில் இந்தியா, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவிகளை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

குஜராத்தில் 2000 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதாகவும், இது குறித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடியினால் எவ்வித அனுதாபமும் வெளியிடப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் சார்க் மற்றும் பிற சர்வதேச அமைப்புக்களை அணுகி இந்தியாவின் தலைமைத்துவத்தைப் பற்றி அம்பலப்படுத்த வேண்டும். இந்தியா பொறுப்பற்ற நாடு என இதன் ஊடாக நிரூபித்துள்ளது.

சர்வதேச சமூகம் மோடியின் ஆத்திரமூட்டும் அறிக்கை தொடர்பில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என சையத் முசாபர் ஹுசைன் ஷா வலியுறுத்தியுள்ளார். இந்திய–பாக்கிஸ்தான் உறவு கள் சம நிலையில் நிறுவப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(த)


الــرواد
ROWAD
ROWAD ASIA OVERSEAS (PVT) LTD.
சிங்கப்பூரிலும் கட்டாரிலும்
பணிபெண்கள் வேலை வாய்ப்பு

| வேலை | நாடு | தொகை | சம்பளம் |
|---|---|---|---|
| பணிப்பெண் (முதல் தடவை ) | சிங்கப்பூர் | 50 | 45,000/= - 50,000/= |
| பணிப்பெண் அனுபவமுள்ளவர்கள் | சிங்கப்பூர் | 50 | 55,000/= - 60,000/= |
| பணிப்பெண் | கட்டார் | 50 | 37,000/= |

ADVT/AL2365/1/5,AL/2365/3/5
ROWAD ASIA OVERSEAS (PVT) LTD.
No. 74, 1st Floor, Sri Sangaraja Mawatha, Colombo - 10. Tel : 0115 515552, 077 4477280
E-mail : info@rowadasia.com L.L. No. 2365
Hotline : 077 44 77 280



ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மாரி அம்மன் பண்டிதர் ஸ்ரீ ராமலு
மெய்யன்பர்களே! T.P 076 770 0820
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுநர் கைரேகை மூலம் துல்லியமான நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை, சாதகம், கல்வி, உத்தியோகம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப்பயணம் பற்றிய விவரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.
இல 185, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
(நியூ லலிதா மாளிகை) மீனாட்சிதங்கமாடம் (ராஜா தியேட்டருக்கு அருகில்)
நேரம் காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்க்கப்படும்.



சர்வதேச அங்கீகாரம் பெற்ற விமானப் பயணச்சீட்டு முகவர் நிறுவனமான
IATA Accredited Agent
METRO Travels & Tours (Pvt) Ltd.
எமது சேவைகள். . . . .
* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* விசேடமான விலைக்கழிவில் கொழும்பிலிருந்து கட்டார் (DOHA) செல்வதற்கான பயணச் சீட்டு ரூபா 20,400/= மட்டுமே
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து, ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
தற்போது விசேட கழிவில்.....
RETURN FARE
சென்னை 23, 200/=
ONE WAY FARE
டோகா 20400/=
பிரான்ஸ் 49000/=
லண்டன் 39000/=
இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
METRO TRAVELS & TOURS (Pvt) Ltd,
#272/1, Stanley Road, Jaffna, Sri lanka.
Tel: +940212224647, +94 212217199, +94 777881115
077 379 8767, 021 221 9424
Email: Bartheeban@metrotravels.lk



WANTED!!!
நீங்கள் குழாய்க்கிணறு அமைப்பதில் நிபுணத்துவம் பெற்றவரா?
இதோ அரிய சந்தர்ப்பம்!
குழாய்க் கிணறு அமைத்து தண்ணீர்த் தாங்கி கட்டிக்கொடுப்பதற்கு
OHRD அரச சார்பற்ற நிறுவனம் உங்களுக்காக நல்ல சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.
பதிவுகளுக்கு முந்துங்கள். உங்கள் முழு விவரங்களுடன் கீழ்வரும் முகவரியில் உள்ள எமது கிளைக் காரியாலயத்துக்கு விரையுங்கள்
Organization for Habitation and Resources Development
Office Mannar, No/543, Pallimunai Road, Mannar.
Tel: 023 222 3447/ Fax: 023 222 3447
Wed: www.ohrdisl.com / E-mail:branchofficeohrd@gmail.com


# மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய பெருவிழா

## சிறப்பிதழ் 14.06.2015



### மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய திருவிழா

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இயற்கை எழில் நிறைந்த இடமாகிய மானிப்பாய் பதியிலே கோயில் கொண்டு பக்தர்களை தன்பால் ஈர்ப்பவரும் தலைசிறந்த போதகருமாகிய கோடி அற்புதராம் புனித அந்தோனியார் திருவிழாவை இன்றைய நாளில் பக்த கோடிகள் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்கள். மானியம் பதியின் புனித அந்தோனியார் திருத்தலத்துக்கு மலர்ந்த மலர்களில் மறைந்துள்ள தேனை நாடி வண்டுகள் வருவது போல மக்கள் கூட்டம் அலை அலையாக அணிதிரண்டு கோடி அற்புதரின் வரங்களைப் பெற்று சந்தோசமாகவும் , நிம்மதியாகவும்வாழ்ந்து வரும் பெருமைக்குரிய இடமாக இத்தலம் அமைந்துள்ளது.

புனித அந்தோனியார் கத்தோலிக்க திருமறைப் பொலிவுடன் திகழும் போர்த்துக்கல் பிரதேசத்தின் தலைநகரம் விஸ்பனில் 1195 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15ஆம் திகதி இந்த உலகில் அவதரித்தார். இவர் தமது திருமுழுக்கின் போது பேர்ஷனட் என்னும் நாமம் பெற்று துறவறம் கொண்ட பின் அந்தோனி என்னும் பெயர் சூட்டப்பட்டார். இவர் இவ்வுலகில் மிகக் குறுகிய காலமாகிய 36 ஆண்டுகள் வாழ்ந்தார். இவ்வாறு தன் 36 ஆவது அகவையில் இவ்வுலக இறைவாழ்வுப் பயணத்தை நிறைவு செய்து 1231 ஆம் ஆண்டு ஆனி 13ஆம் திகதி விண்ணக இறைவனின் தரிசன மாட்சியில் பங்கெடுத்தார்.

அந்நாளையே நாம் புனித அந்தோனியாரின் பெரு நாளாக கொண்டாடி வருகின்றோம். அருட்பணி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியார் அமதி அவர்களின் முயற்சியால் மானிப்பாய மண்ணிலே கோயில் கொண்டு அருள் பாலிக்கும் தூய அந்தோனியார் தன்னை நம்பிவரும் விசுவாசிகளுக்கும் அடைக்கலமாக விளங்குகின்றார்.


ராஜன் எலக்ரிக்கல்ஸ் & சவுண்ட்
யாழ் மின்னல் இசைக்குழு,
யாழ் வீதி, மானிப்பாய்.
யாழ் சென்ரல்
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு.
077 412 2001

ஐங்கரன் மோட்டோர்ஸ்
யாழ் வீதி, மானிப்பாய் (சந்தை முன்பாக)
021 225 5150

எல்லா விதமான புகைப்படத் தேவைகளுக்கும்
மோகன் வீடியோ & போட்டோ
யாழ் வீதி, மானிப்பாய்.

Naomi Studio
Photo & Video
Indoor, Outdoor Photography, Album Designing & Making, Banner Designing
Contact us : P.Partheepan
Manipay. Tel : 077 251 3567
e.mail: naomidigitalstudio@gmail.com

மானிப்பாயிலும்
Mayil Beauty Care & Moderling Studio
No.137,Post Box Junction, Palaly Road, Thirnelvely.
T.P: 021 568 7774, 0776914123
www.mayilbeautycare.com
Branch : No.07, Thavadi Road, Suthumalai Junction, Manipay.

SUNDHARSON
Importeres Distributers of Electrical & Plumbing Items
Jaffna Road, Manipay
021 225 5136
Fax:021 222 9984
Email: sundharson@yahoo.com

மூர்த்தி கலர்லாப்
திருமணம், போட்டோ, மங்கல நிகழ்வுகளுக்கான வீடியோ & போட்டோ
யாழ் வீதி, மானிப்பாய்.

பிறேம் நகைமாடம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
உரிமையாளர் இ.பிறேம்குமார்
No:- 171, PREM PLAZA, Jaffna Road, Manipay
077 724 1485, 077 303 9572

MILAN MOTORS
Toyota, Nissan, Isuzs, Mitsublishi, Mazda, Suzuki
Genuin Spare Parts Dealers.
Jaffna Road, Manipay.
T.P: 0774004727 021 2255312


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக,

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தத் தேர்தல் முறைமை மாற்றமில்லாது நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்டு அங்கீகரிக்கப்படுமாக இருந்தால் ஏனைய இனங்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் பலவீனப்படுத்தப்படும். முன்னர் மலையக மக்கள் வாக்குரிமை இல்லாது இருந்தனர். தற்போது வாக்குரிமை பெற்றாலும் நாடாளுமன்றுக்குத் தெரிவாகும் வாய்ப்பு இல்லையெனின் அது மிக மோசமானதாக இருக்கும். வடக்கு–கிழக்கிலும் போரின் பின்னர் பல லட்சம் மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். எனவே இடங்களைக் குறைக்காமல் ஆசனங்களைக் குறைக்காமல் சில வருடங்களுக்கு இந்த நிலையைச் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

முன்னர் 255 ஆசனங்களுக்கு முன்னனைய அமைச்சரவை அங்கீகாரம் கொடுத்ததாகக் கூறப்பட்டது. அதில் முன்னர் இருந்த 165 தேர்தல் தொகுதிகளும் இன்னொரு பகுதி விகிதார முறையிலும் மற்றும் தேசியப் பட்டியல் அடிப்படையிலும் கொடுக்கப்பட்டது.

பின்னர் ஐ.தே.க. 225 ஆசனங்களில் 125 தேர்தல் தொகுதி என்ற விடயம் கூறப்பட்டது. அதைப் பல கட்சிகளும் எதிர்த்தன. தற்போது 225 ஆசனங்களை 237 ஆசனங்களாக்கி அதனை அமைச்சரவையும் அங்கீகரித்துள்ளது. அவற்றில் 145 ஆசனங்கள் தொகுதி முறையாகவும், 55 ஆசனங்கள் விகிதாசார முறையிலும், மிகுதி 37 தேசியப் பட்டியலிலும் கொடுப்பதாகக் கூறப்பட்டது. அரசு திரும்பத் திரும்ப எண்ணிக்கைகளை அதிகரிப்பது பற்றியே கூறுகிறதே தவிர, தேர்தல் முறைமை எவ்வாறு கையாளப்படப் போகிறது ஏன்பதனைக் கூறவில்லை. 145 ஆசனங்கள் என்று கூறும்போது முன்னர் இருந்ததனைவிட 15 தேர்தல் தொகுதிகள் குறைகின்றன. ஆகவே எல்லைகளை மீள்நிர்ணயம் செய்தல் என்ற தேவை எழுகிறது. எல்லை மீள் நிர்ணயம் எங்கு செய்யப்படவுள்ளது? யாழ்ப்பாணத்திலா? வன்னியிலா? கிழக்கிலா? அது எவ்வாறு செய்யப்படப் போகிறது?

தொகுதி வாரி முறை இருந்தபோது யாழ்ப்பாணம்,கிளிநொச்சிசேர்ந்து 11 தொகுதிகள் இருந்தன. பின்னர் விகிதாகார முறை வந்தபோது அது 9 ஆசனங்களாகக் குறுகியது. பின்னர் வடக்கு மாகாண மக்கள் தொகை குறைந்ததனால் அது 7 ஆகச் சுருங்கியது. தற்போது 145 தேர்தல் தொகுதி புதிய நிர்ணயம் வந்தால் 7 ஆசனங்கள் 6 ஆசனங்களாகச் சுருங்கலாம். எனவே தற்போது அமைச்சரவை அங்கீகாரம் கொடுத்த தேர்தல் முறைமை நாடாளுமன்றில் சட்டவரைவாக வருவதற்கு முன்னர் அது ஏனைய இனங்களின் விகிதாசாரத்துக்கு அமைய நாடாளுமன்றில் அவர்களது பிரதிநிதித்துவங்கள் உறுதிப்படுத்தப்படுமா என்பதனைக் கொண்டுதான் இது பற்றிய முடிவுகளை எடுக்க முடியும்–என்றார்.

(த–4)

## அரசின்

நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.

இந்த அரசு தமிழருக்குத் தீங்கு செய்யாது என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. எனவே, உள்நாட்டு மற்றும் புலம்பெயர் தமிழர்களை இணைத்துக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் முன்னேற்றகரமான சகல செயற்பாடுகளிலும் இந்த அரசு விசுவாசமாக ஈடுபடவேண்டும் என்று நாம் கோருகின்றோம். இதற்கு எம்மாலான சகல ஒத்துழைப்புகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்றும் சம்பந்தன் கூறினார்.

புலம்பெயர் தமிழர்கள் பயங்கரவாதிகள் அல்லர், கொம்பு முளைத்த பேய்களும் அல்லர், சிவப்புக் குள்ளர்களும் அல்லர் எனக் கூறி எதிர்க்கட்சியின் குற்றச்சாட்டுகளை நேற்று நாடாளுமன்றில் அடியோடு நிராகரித்திருந்த வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, பயங்கரவாதிகள் எனக் கூறி புலம்பெயர் தமிழர்களை ஒதுக்க நாம் தயாரில்லை என்றும் உறுதிபடத் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் நல்லிணக்கத்தையும், இறைமையையும் பாதுகாத்து ஒன்றுபட்ட நாட்டைக்கட்டியெழுப்ப புலம்பெயர் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து புலம்பெயர்ந்தோரும் தயாராக உள்ளனர் என்றும் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், அவர்கள் இலங்கைக்கு வந்து நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்றிட்டத்துக்கு ஆதரவளிக்கவேண்டும் என்றும் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார்.

அதேவேளை, உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவேல் அடிகளார் தனிஈழம் கேட்கவில்லை எனவும், பிரிக்கப்படாத இலங்கைக்குள் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்றே அவர் வலியுறுத்துகின்றார் எனவும் தெரிவித்திருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தேர்தலை இலக்கு வைத்து மஹிந்த அரசால் விதிக்கப்பட்ட புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மீதான தடை குறித்து மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அரசின் இந்தக் கருத்துக்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில், அந்தக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேற்று தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்படி விடயங்களைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புலம்பெயர் தமிழர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எமது உறவுகள். அவர்களுக்கு இந்த நாட்டின் விவகாரங்களில் தலையிட உரிமையுண்டு.இந்த நாட்டுக்கு மீண்டும் வந்து வாழ உரிமையுண்டு.

வெவ்வேறு காரணங்கள் நிமிர்த்தம் அவர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறினார்கள். சமாதானம், சமத்துவத்துடன் இந்த நாட்டில் வாழமுடியாத சூழ்நிலை அன்று இருந்ததால் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறினார்கள்.

அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியிருந்தாலும் இங்குள்ள தமிழ் மக்களுக்கு தம்மாலான உதவிகளை அன்றுதொட்டு வழங்கி வருகின்றார்கள். அத்துடன் நாட்டின் அபிவிருத்துக்கும் அவர்கள் பெரிய பங்களிப்பைச் செய்யக் கூடியவர்கள். இதனால் பலவிதமான நன்மைகள் எமது நாட்டுக்குக் கிடைக்கும். இதனை இந்த அரசு நன்றாகப் புரிந்துகொண்டுள்ளது.

உள்நாட்டுத் தமிழர்களையோ, புலம்பெயர் தமிழர்களையோ எடுத்த எடுப்பில் பயங்கரவாதிகள் என்று கூறமுடியாது. பயங்கரவாதிகள் என்று கூறுவதற்கு தக்க சான்றுகள் இருக்கவேண்டும்.

ஆனால், கடந்த மஹிந்த அரசு சிங்கள வாக்குகளின் ஆதரவுடன் தமது ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்திருப்பதற்காகப் புலம்பெயர் தமிழர்களுக்குப் 'பயங்கரவாதிகள்' என்ற முத்திரையைக் குத்தியிருந்தது. தற்போது மைத்திரி அரசு இந்த முத்திரையை நாடாளுமன்றில் வைத்துக் கிழித்தெறிந்துள்ளது. அனைவரையும் இணைத்துக் கொண்டு ஒன்றுபட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் மைத்திரி அரசின் இந்தச் செயற்பாட்டை நாம் வரவேற்கின்றோம்–என்றார்.(த–சி)

## உள்ளக

என்னவெனில் தமிழ் மக்களைப் பொறுத்த வரை உள்ளக விசாரணையில் எந்தவித நம்பிக்கையும் இல்லாதுள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை, திருகோணமலையில் 5 மாணவர் கொலை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கையின் முன்னைய அரசு விசாரணை ஆணைக்குழுவை நியமித்தபோதும், அந்தக் குழுவை இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசர் பகவதி தலைமையில் சர்வதேச நிபுணர்கள் மேற்பார்வை செய்தும், முன்னர் ஐ.நா. சபையினால் இலங்கைப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவில் தருஸ்மன் போன்றவர்கள் இருந்தும்கூட விசாரணை ஆணைக்குழு பிழையான முறையில் – ஏற்றுக் கொள்ள முடியாத முறையில் நடைபெறுவதாகக் கூறி அதனை மேற்பார்வை செய்தவர்கள் விலகிவிட்டார்கள். அதனால் அந்த ஆணைக்குழுவும் இல்லாமல் போனதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

போர்க்குற்றச் சாட்டுக்களில் முக்கிய நபரான ஜெகத் டயஸ் படைகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த வகையில் அரசு விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை இனங்கண்டு சரியான தீர்வைக் கொடுப்பார்களா? என்றால் இல்லை என்பதே அண்மைக்கால வரலாறு.

அது மட்டுமன்றி, வடக்கு முதல்வர் தனது செய்தி ஒன்றில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்திக்குரிய பணம் கொடுக்கப்படுவதாகவும், அதனை மாகாண சபையூடாகக் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டிருந்தது. அதில் ஒரு விடயத்தைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எனவே அபிவிருத்திக்கு எமது பங்கு உண்டு.

போரின் பின்னர் பல்லாயிரக் கணக்கான பிரச்சினைகள் உள்ளன. அவற்றை நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவோ அல்லது மாகாண சபை மூலமாகவோ தீர்க்க முடியாது. இரு தரப்பினரும் இணைந்து முயற்சி செய்தாலும் தீர்க்க முடியாது. மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு இரு தரப்பினரும் இணைந்து செயற்படாததும் கவலைக்குரிய விடயம். போரின் பின்னரான மீள் குடியேற்றத்தில் மக்கள் பிரச்சினைகள் பல உள்ளன. கோடிக்கணக்கான பணம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வேண்டுவதாகப் பல ஊடகங்களில் புரளி கிளப்பப்பட்டுள்ளது. மக்களுக்கான சில கோரிக்கைகள் வைக்கப்பட்டன என்பதைத் தவிர நாம் யாரிடமிருந்தும் 5 சதம் கூடப் பணம் பெற்றுக்கொள்ளவில்லை. இது புனருத்தாரண அமைச்சினூடாகப் பெறப்பட்டுள்ளது. இவை த்விர எமக்கும் அரசு எந்த வித நிதிக் கொடுக்கலும் இல்லை –என்றார்.

(த–4)

## ரவிகரனிடம்

முல்லைத்தீவுப் பொலிஸார் சுமார் ஒன்றரை மணி நேரம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலத்தைப் பெற்றுச் சென்றுள்ளனர்.

(த–21)

## 20 க்கு எதிராக

பத்தில் நடை பெற்ற பேச்சின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிப்போம். காரணம் இதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தில் நிறைவேற்ற வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தடுக்க எமக்கிருக்கும் அதி கூடிய பலத்தை நாங்கள் பயன் படுத்தி அதற்கு எதிராக செயற் படுவோம். எமது எதிர்ப்பையும் மீறிச் சட்டவரைவாக அதனை வர்த்தமானியில் வெளியிட்டால், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவும் நாங்கள் எதிர்பார்த்துள்ளோம்.

ஜனாதிபதி அப்படியான ஒன்றைச் செய்ய மாட்டார். எமது எதிர்பார்ப்புகளுக்கு அவர் செவி கொடுப்பார் என நம்புகிறோம்.

நாங்கள் தெரிவு செய்த ஜனாதிபதி எமது கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளாது முடிவுகளுக்கு வருவது நியாயமானதல்ல. அத்துடன் அவரும் இது குறித்து கவனம் செலுத்துவார் என எதிர்ப் பார்க்கின்றோம் –என்றார்.

(த)

## இணைந்து

ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

75 ஆண்டுகளுக்கு முன்னர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கொழும்பு நகரம், ஒரு நாடு என்ற வகையில் இலங்கையிலும் உலகத்திலும் இருந்த நிலையிலிருந்து இன்று தொழில் நுட்பத்திலும் விஞ் ஞானத்திலும் புரட்சிகரமான மாற்றத்தை அடைந்துள்ளது.

ஆனால், அதற்கு இணை யான வேகத்தில் மனிதர்களின் ஒழுக்கமும் பண்பும் அபிவிருத்தி அடைந்துள்ளதா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பௌதீக வளங் களை அபிவிருத்தி செய்வதன்மூலம் மாத்திரம்நாட்டின்அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியா தெனத்தெரிவித்த ஜனாதிபதி பண்பும் ஒழுக்கமும் நிறைந்த பிரசைகள் நாட்டின் அபிவி ருத்திக்கு அத்தியாவசிய கார ணியாகும் –என்றார்.

இந்நிகழ்வில் பொது அமைதி, கிறிஸ்தவ அலுவல்கள் அமைச் சர் ஜோன் அமரதுங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோருடன் பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவி கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த–4)

## விகாரையை

சேவை ஒன்று நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நடமாடும் சேவையில், கொக்கிளாய் மக்களின் காணிகளில் அத்துமீறிப் பிக்கு ஒருவரால் விகாரை அமைத்துவரும் செயற்பாடு பற்றிய விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இந்தக் காணிக்குச் சரியான தீர்வு எடுக்கப்படும் வரை விகாரையின் கட்டுமானப் பணிகளை உடனடியாக இடைநிறுத்துவதற்குரிய நடவடிக்கையை எடுக்குமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகக் காணி உரிமையாளர்களால் தனக்கு தெரிவிக்கப்பட்டதாக ரவிகரன் கூறினார்.

இதேவேளை, குறித்த விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த–21)

## ரணிலே

இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனவுடனும் இரவில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் நட்பு பாராட்டி வருகிறார். பகலில் மீகெல் இரவில் டேனியல் என்ற அவரது கொள்கை எடுபடாது அவர் காரணமே இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நிலையியல் சட்டம் 23 (2) இன் கீழ் சமுர்த்தி நிவாரணம் தொடர்பில் வெளியிட்ட கருத்துகளுக்குப் பதிலளிக் கையிலேயே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

சமுர்த்தி நிவாரணம் சம்பந்தமாக ஏற்கனவே நீதிமன்றத்தில் வழக்கொன்று இருப்பதால் நாடாளுமன்ற நிலையியல் சட்டத்தின் கீழ் அது பற்றி நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவிக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(த)

## இலங்கையில்

அபிவிருத்தியில் பங்களிப்பை வழங்குமாறு இந்த நாடாளுமன்றம் ஊடாக அனைத்து புலம்பெயர் சமூகத்தினருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன்.

இதற்கமைய எதிர்வரும் டிசம் பர் மாதம் இலங்கையின் பல பாகங்களிலும் புலம்பெயர் சமூக விழாக்களை வெளிவிவகார அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தவுள்ளோம். பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரை இது நடத்தப்படும்.

இவ்விழாவில் பங்கேற்க தமிழ், சிங்களம், முஸ்லிம் என புலம்பெயர் சமூகத்தின் பலரும் ஆர்வம் காட்டியுள்ளதுடன், தமது வரவேற்பையும் தெரிவித்துள்ளனர். எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பாடகர்கள், திரைப் படத்துறையினர் எனப் பலரின் நிகழ்வுகள் டிசம்பரில் இலங் கையில் இடம் பெறும்' '–என்றார். (த–சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாகனம் வாடகைக்கு விடப்படும்

207 Pik up (Aluminija Full body

நாள், மாத அடிப்படையில்

Driver உடன் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 442 9316,

(58883)(4.3.7) 077 354 9092

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் உதயன் பணிமனைக்கு அருகில் உள்ள கட்டடத்தில் 4கடைகள் வாடகைக்கு உள்ளன. வாகன தரிப்பிட வசதியும் உண்டு. மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 075 891 6081 (60964)(9.3)

கலகலப்பான இசை நிகழ்ச்சியோடு முற்றுமுழுதாக இளங்கலைஞர்கள்

## சுன்னாகம் சுருதிலயா இசைக்குழு

உங்கள் விழாக்கள் சிறப்பாக அமைய அழைத்திடுங்கள்

077 110 7601

077 895 4262

(60965) 077 691 3010

## விற்பனைப் பிரதிநிதி தேவை

வவுனியா மாவட்டம்

முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு விநியோகஸ்தர் விற்பனைப் பிரதி நிதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

T.P: 077 971 7606, 077 524 6988

## விற்பனைக்கு

கூல்பார் ஒன்றின் கண்ணாடிக் கதவுகள், A/C கள், I 3 லப்டப், சுழல் கதிரைகள், Steel குசன் கதிரைகள், ஸ்ரீல் கபேட், சிறிய அலுமாரி, பித்தளைக் கிடாரங்கள் மலிவு விற்பனைக்கு

T.P: 077 295 8009

## காணிதேவை

கல்வியங்காடு கட்டைப்பிராய், உரும்பிராய், கோண்டாவில், திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் 03 பரப்புக் காணி உடன் தேவை.

பிரதான வீதிகளுக்கு அண்மித்த பகுதிகள் விரும்பத் தக்கது.

தொடர்பு:- 075 0457872, 077 9888127

## விற்பனைக்கு

- 6X9'' கருங்கல் (அத்திபாரக்கல்)
- 3/4'' கருங்கல் சல்லி
- ஆற்று மணல் (கண்டாவளை மண்) விற்பனைக்குண்டு

(60959) தொடர்பு :- 075 800 1643

## தவறிவிட்டது

கணரட்ணம்வீதி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இராஜரத்தினம் இரத்தினசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (422 580 239 V) கடந்த 11.06.2015 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

(60959) தொடர்பு :- 077 761 5281

## பணியாளர் தேவை

- முகாமையாளர் - பெண்
- கணினி ரைப்பிங் - பெண்
- புத்தகம் கட்டுநர் - ஆண்/பெண்
- வரவேற்பாளர் - பெண்
- உதவியாளர் - ஆண்/பெண்
- சுத்திகரிப்பாளர் - பெண்

ஆர்வம் உள்ளோர் சுயவிவரத்துடன் நாளை 15.06.2015 காலை 9-3 மணிவரை நேரில் வரவும்.

யாழில் கொழும்பு பிறின்டேர்ஸ்

666, கே.கே.எஸ். வீதி,

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)

T.P: 077 197 4875 (60976)(10.6.1)

## விஷேட விலைக்குறைப்பு

| | |
|---|---|
| 4R(10 படத்திற்க்கு மேல்) | - 10.00 |
| 4R(100 படத்திற்க்கு மேல்) | - 9.00 |
| 4R(300 படத்திற்க்கு மேல்) | - 8.00 |
| 4R(100UP INKJET PRINT) | - 6.00 |
| 12x30 NT ALBUM PRINT | - 200.00 |
| 12X30 EMBOSSING PRINT | -2000.00 |

*MOORTHY DIGITAL*

*62/20, STANLY ROAD, JAFFNA.*

*JAFFNA ROAD, MANIPAY*

---

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில்

நீங்களும் இரண்டு வருடத்தில் முகாமைத்துவ கணக்காளராகுவதுடன் மாதாந்தம் 150000/= மேல் சம்பாதியுங்கள்

Institute of Certified Management Accountants of Sri Lanka.

# CMA

Certified Management Accountants

அடிப்படைத் தகைமை A/L இல் ஏதாவது ஒரு பிரிவில் இரண்டு பாடச் சித்தி

தமிழ் / ஆங்கில மொழி மூலம்

MBA ↑ CMA ↑ A/L

விண்ணப்பத்திற்கும், பதிவுகளுக்கும்

0777-596148, 077-8927639

இலங்கை உறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம்

29/24, Visakha Rd, Colombo-04.

Accredited Centre & Implement Partnar

**BRITISH COLLEGE**

23, Kachcharinallur Rd, Jaffna.

103, Mannar Rd, Vavuniya.

## டோஹா-கட்டாரில் வேலைவாய்ப்பு

89

Ad.App.No:AL/2769/32/15

**01. சாரதி (TOYOTA கம்பனியில்)**

இலகுரக வாகன சாரதி

சம்பளம் 1600 QR 58,000/=

(செல்லுபடியாகும் கல்ப் லைசன்ஸ் உள்ளவர்களுக்கு)

கட்டணம் : இலங்கை அரசால் அனுமதிக்கப்பட்ட 55,000 ரூபா மட்டுமே.

வெளிநாட்டு அதிபர்களால் நேர்முகத்தேர்வு 25.06.2015 இல்

**02. NISSAN கம்பனியில்** Ad.App.No:AL/2769/48/15/

| தொழில் | எண் | சம்பளம் QR | Rs. |
|---|---|---|---|
| ஓட்டோ தொழில் டெக்னீசியன் | 45 | 2500 | 91,000 |
| ஓட்டோ பெயின்றர் | 05 | 2500 | 91,000 |
| ஓட்டோ டிடன்றர் | 11 | 2500 | 91,000 |
| பொலிஷர் | 02 | 1900 | 69,000 |
| பாட்ஸ் பிக்கர் | 10 | 1200 | 44,000 |
| டெலிவரி உதவியாளர் | 05 | 1500 | 55,000 |
| களஞ்சிய உதவியாளர் | 12 | 1400 | 51,400 |
| **03. பாதுகாப்பு உத்தியோகத்தர்** | 30 | 1200 | 43,000 |

Ad.App.No:AL/2769/37/15

கட்டணம் : இலங்கை அரசால் அனுமதிக்கப்பட்ட 100,000 ரூபா மட்டுமே.

**04. சாரதி (சொகுசு பஸ்-கனரகவாகனம்)**

பொதுவான நியந்தனைகள்:-

✱ இரண்டுவருட ஒப்பந்தம் ✱ தங்குமிடம் மருத்துவம் இலவசம். உணவு கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. ✱ இருவழி விமான டிக்கட் இலவசம். ✱ நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் வாரத்தில் 6 நாள்கள் வேலை. ✱ மற்றையவை டோஹா-கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திட்டங்களுக்கு அமையும்.

செல்லுபடியாகும் கடவுச்சீட்டுடன் எமது அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:

புரடென்ஷல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல. 72/1, 2ஆவது மாடி, கொழும்பு வீதி, குருநாகல்.

077 4574555 077 9 200 500 037 494 55 55

## மரண அறிவித்தல்

### திருமதி சுதாகினி பாலகிருஷ்ணன்

தோற்றம் : 22.01.1972 மறைவு: 10.06.2015



துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுதாகினி பாலகிருஷ்ணன் 10.06.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா-பூமலர் தம்பதியரின் அன்பு மகளும், பாலகிருஷ்ணனின் அன்பு மனைவியும், தவராசா, காலஞ்சென்ற தர்மபாலசிங்கம் மற்றும் பொன்ராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற புஸ்பராசா மற்றும் சிறிதரன், சிறீதராசா, லதாகினி, சிறிகரன், சுதாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அபிசாளினி, அபிசன், கம்சிகா ஆகியோரின் அன்புத் தாயும், மஞ்சுளா, சுசிநங்கி, சுதர்னி (பிரான்ஸ்), வனிதா, வாசுகி, சியாமளா, சந்திரகுமார், றாதிகா, கர்ஜினிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், கோபிராஜ், மயூரன், மகிந்தன், தனேஸ்ராஜ், ததீஸ்ராஜ், தர்மஜீவன், தஜீவன், தனுசிகா, தர்மவாணி, தனுஷன், பிரியங்கா (பிரான்ஸ்), டயானி (பிரான்ஸ்), டினால் (பிரான்ஸ்), திவ்யா (பிரான்ஸ்), லக்சனா, சபீனா, வானுஜன், மாதுளா, சினேகா, எம்சன், சிறிகா, டிலக்ஷி, கீர்த்தனா, தர்சிகா, கார்த்தி (பிரான்ஸ்), ஆசனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அத்தையும், டனுசன், சஞ்சுயன், தாருகா ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை எட்டு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(57744)(10.6.1)

வேம்படி, துன்னாலை தெற்கு, கரவெட்டி. 0778935289

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா இராமலிங்கம்



குப்பிளானைப்பிறப்பிடமாகவும் வதிவிட மாகவும் கொண்ட திருமதி தங்கம்மா இராமலிங்கம் 12.06.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு-கண்ணாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனை வியும், சுப்பிரமணியம், காலஞ்சென்ற விநாயக மூர்த்தி மற்றும் பரமேஸ்வரி, இராஜரட்ணம்(ஜேர்மனி), விமலாதேவி(கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசமலர், தயானந்தராசா, ராஜி, கனகசபாபதி(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரணவதரன் (பிரான்ஸ்), ஜசிதரன், சுகன்யா, ஹம்சா, யசோதரன்(பூநகரி பிரதேச செயலகம்), சராதரன், சாமினி(ஜேர்மனி), சாளினி(ஜேர்மனி), நிசாந்தா (கனடா), சாரங்கன்(கனடா), சௌதன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, அன்னம்மா, ஆறுமுகம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(15.06.2015) திங்கட்கிழமை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்.

(60971)

### வேலன் மார்க்கண்டு



வட்டுக்கோட்டையைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் மார்க்கண்டு 12.06.2015 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (14.06.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது மகனது இல்லத்தில் (கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை) நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொத்துத்துறை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-

போதகர் மா. செல்வராசா (மகன்)

அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை வட்டுக்கோட்டை

தொடர்பு :- 077 044 5948

### சிவகாமிப்பிள்ளை(பூரணம்) வைத்திலிங்கம்



யாழ்/நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாவியில் வசித்து வந்தவரும், தற்போது பிரான்ஸில் வசித்தவருமாகிய திருமதி சிவகாமிப்பிள்ளை வைத்திலிங்கம் 10.06.2015 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி - சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் இராமநாதன் - இராமாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, செல்லத்துரை, சுப்பிரமணியம், அன்னம்மா, சின்னத்தம்பி, கார்த்திகேசு, கணபதிப்பிள்ளை, பராசக்தி ஆகியோரின் அன்புச்சகோதரியும் விஜயரட்ணம் (மல்லாவி), சிதம்பரநாதன் (பிரான்ஸ்-முன்னாள் முகாமையாளர் இலங்கை போக்குவரத்து சபை-மட்டக்களப்பு)காலஞ்சென்ற கிருஸ்ணமூர்த்தி (பிரான்ஸ்), இராஜேஸ்வரன்(கனடா) வைத்திகனகரட்னம்(வடகாடு), குணசிங்கம் (மல்லாவி), தில்லைநாயகி(லண்டன்), புவனேஸ்வரி(கல்மடு நகர்), பரமேஸ்வரி (லண்டன்), தயாசீலி (பிரான்ஸ்), பேராசிரியர் கனகரத்தினம் (ஓய்வுநிலை, பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் யோகேஸ்வரி(மல்லாவி) சுசீலாதேவி (பிரான்ஸ்), சியாமளா(பிரான்ஸ்), பவானி(கனடா), உமா(வடகாடு), சோதிமணி (மல்லாவி), பூபாலசிங்கம் (லண்டன்)தியாகராஜா(கல்மடு நகர்), முருகேசப்பிள்ளை(லண்டன்), இராசன் (பிரான்ஸ்), மீனலோசனி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

(57124) தகவல் :- இரா.வை.கனகரத்தினம்

### திருமதி லட்சுமி பாலசிங்கம்



யாழ் சிவன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை பத்திரகாளி கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது ஜேர்மனி Dortmund ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லட்சுமி பாலசிங்கம் கடந்த (04.06.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மராசா, சுரேஸ்குமார் மற்றும் லலிதா, சியாமளா (ஜேர்மனி), காலஞ்சென்ற கௌசல்யா மற்றும் சுரேந்திரன், கௌரி (ஜேர்மனி), அருண் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், சடாசிவம் மற்றும் வடிவேலு, நாகலிங்கம், சரஸ்வதி, யோகம்மா, பாப்பா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), பார்த்தீபன் (ஜேர்மனி), அபிதாஜினி ஆகியோரின் அன்பு மாமி யும், ஷோபிகா, ரிஷிகேசவன், சுரேக்கா, றாஹவன் (ஜேர்மனி), மதுசன், விதுர்ஜா, தியேஷன் (ஜேர்மனி), அஜீனன், சஞ்சீவ், காலஞ்சென்ற பிரகாஷ்ராஜ் மற்றும் பிரவின், கண்ணன் ஆகியோரின் அன்புப் பாட்டி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2015) திங்கட்கிழமை 9.00-2.00 Am Gottesacher 25, 44143 Dortmund, Germany இல் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீட்டு முகவரி: Berliner str. 453, 44143 Dortmund, Germany

54, கேசாவில் பிள்ளையார் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தொடர்பு: 077 912 4327, 0049 231 28860933 (ஜேர்மனி)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூஸிலாந்து திரில் வெற்றி

நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி 13 ஓட்டங்களால் போராடி வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் மக்கலத்துடன் குப்தில். டெஸ்ட் ஆட்டங்களையே ரி–20 ஆட்டமாக மாற்றும் இந்த இருவரும் ஒருநாள் ஆட்டங்களில் எவ்வாறு செயற்படுவார்கள் என்று கேட்கத்தான் வேண்டுமா? வெளுத்து வாங்கினார் மக்கலம். மக்கலத்தின் மட்டையில் இருந்து அடிக்கொரு தடவை பந்து பவிலியன்வரை சென்று வந்தது. சிக்சர்களும் இருக்கத் தவறவில்லை. ஐந்தே பந்துப்பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் ஐம்பதை எட்டியது நியூஸிலாந்து. அளவுக்கு அதிகமான அதிரடியைக் காட்டமுனைந்து முதலாவதாக பவிலியனில் உட் கார்ந்தார் மக்கலம். மக்கலத்தின் இழப்பை உணர்ந்து அடக்கி வாசித்தார் குப்தில். ஆனாலும் விடுவதாயில்லை வில்லியம்சன். களமிறங்கி சிறிது நேரத்திலேயே அடுத்தடுத்து மூன்று பவுண்டரிகளை விளாசினார். மறுமுனையில் அரைச் சதத்தை எட்டினார் குப்தில். அதற்கும் அப்பால் அவரால் செல்ல முடியவில்லை. தற்பொழுது நியூஸிலாந்து 114–2. களத்தில் றெய்லரும் வில்லியம்சனும். பலம் பெற்ற நியூஸிலாந்து இந்த இணைப் பாட்டத்தின் மூலம் மேலும் பலம் பெற ஆரம்பித்தது. அதிரடி என்ற பெயரில் கண்மூடித்தனமாக விளாசித்தள்ளவுமில்லை. நிதானம் என்ற பெயரில் பந்துகளை தொடர்ச் சியாக வீணடிக்கவுமில்லை. சந் தர்ப்பத்துக்குஏற்றால் போல் சரியான ஆட்டம். ஏழு ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார் வில்லியம்சன். வில்லியம்சனின் தவறினை தானும் செய்யாது சதத்தை நிறைவுசெய்தார் றெய்லர். பின் வரிசை வீரர்கள் அதிரடியை இரட்டிப்பாக்க நியூஸிலாந்து நானூறு ஓட்டங்களை எட்டக்கூடிய நிலை யில் சென்றுகொண்டிருந்தது. அதே நிலைமை தொடரப்பட முடிவில் நியூஸிலாந்து 398–5..

399 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. பந்துப்பரிமாற்றத்துக்கு எட்டு ஓட்டங்கள் என்ற சராசரியில் செல்ல வேண்டும். முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து 408 ஓட்டங்களைக் குவித்த காரணத்தினால் அதே சராசரியில் இந்த ஆட்டத்திலும் பயணித்தால் ஆட்டம் இங்கிலாந்தின் கைகளுக்குள். களத்தில் றோய் மற்றும் ஹேல்ஸ். றோய் சற்று நிதானித்தாலும் ஹேல்ஸ் விடுவதாக இல்லை. வாணவேடிக்கைகளை ஆரம்பம் முதல் அவ்வப்பொழுது காட்டிக்கொண்டிருந்தார். இணைப்பாட்டம் 85ஆக இருந்த பொழுது விடைபெற்றார் றோய். நிலைக்க வில்லை ரூட். அதே பந்துப்பரிமாற்றத்தில் ஹேல்ஸும் பவிலியனில். இங்கிலாந்து 100–3. வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியானது. ஆனபோதிலும் தலைமை இன்னிங்ஸ் (மோர்கன்) தடுமாறவில்லை. நம்பிக்கையை மீண்டும் உருவாக்கினார். பட்லரும் சிறிது நேரம் தாக்குப்பிடிக்க இங்கிலாந்து 40ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 300 ஓட்டங்களை ஊதித்தள்ளியது. 64 பந்துகளில் 99 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. மழை குறுக்கிட ஆட்டம் தடைப்பட்டு 46 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டு 379 ஓட்டங்கள் இலக்காகக் கொடுக்கப்பட்டது. 88 ஓட்டங்களுடன் மோர்கனும் ஆட்டமிழக்க பின்வரிசை வீரர்கள் தம்மாலான பங்களிப்பை தவறாது செய்தனர். ஆனாலும் இலக்கை எட்டமுடியவில்லை. மொத்தத்தில் இங்கிலாந்து 13 ஓட்டங்களால் கௌரவத் தோல்வி. ஆட்டநாயகனானார் றெய்லர். (ம)


றெய்லர்

## நான்காம் நாளிலும் குறுக்கிட்டது மழை
## ஆட்டம் சமநிலையிலேயே முடிவடையும்


ஹர்பஜன்

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவதும் இறுதியானதுமான ஒரே டெஸ்ட் ஆட்டம் தற்பொழுது பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

மூன்றாம்நாள் முடியும் போது இந்திய அணி 462–6 என்ற நிலையில் இருந்தது. தொடர்ந்து நான்காவது நாளும் துடுப்பெடுத்தாடி வாய்ப்புக்களை மேலும் வீணடிக்காது ஆட்டத்தை இடைநிறுத்தி நான்காம் நாளின் ஆரம்பத்திலேயே பங்களாதேஷை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார் கோஹ்லி. மழையும் விடுவதாக இல்லை. இடையிடையே கிடைத்த வாய்ப்புக்களிலெல்லாம் களத்தடுப்பில் ஈடுபடப்போவதாக கோஹ்லி தெரிவிக்க ஒருவித கட்டாயத்தின் அடிப் படையில் களத்தில் இக்பாலுடன் கையிஸ். அஸ்வினின் சுழலில் அற்புதமாக ஸ்டம்ஸ் செய்து இக்பாலை பவிலியனுக்கு அனுப்பினார் சகா. கையிஸிடன் ஹக்கியூ. சொல்லிக்கொள்ளும்படியான இணைப்பாட்டம். மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறினை எட்டியது பங்களாதேஷ். ஹர்பஜனின் சுழலில் சிக்கினார் ஹக்கியூ. தலைமை இன்னிங்ஸிற்காக களத்தில் ரஹிம். வெறும் இரண்டே ஓட்டங்க ளுடன் பவிலியன் திரும்ப பங்களாதேஷ் ஆட்டம் கண்டது. அதே நேரத்தில் மழையும் குறுக்கிட்டது.

அளவுக்கு அதிகமான மழை ஆடுகளத்தை பாதிப்படையச் செய்ய நான்காம் நாள் ஆட்டம் அவ்வாறே முடிவுக்கும் வந்தது. தற்பொழுது பங்களாதேஷ் 111–3. களத்தில் கையிஸ் 59 ஓட்டங்களுடனும் சஹிப் அல் ஹசன் ஓட்டங்கள் எதனையும் பெறாமலும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். (ம)

## மூன்று வருடத்துக்கு முன்னரே
## கோஹ்லி தலைவராக வேண்டியவராம்


கோஹ்லி

இந்திய அணித் தலைவர் டோனி 2011 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் தனது தலைமைப் பதவியை இழந்திருக்க வேண்டியவர் என்று ஒரு காலத்தில் இந்திய அணியின் தெரிவுக் குழுவின் உறுப்பினராக இருந்த ராஜா வெங்கட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெங்கட் மேலும் தெரிவித்ததாவது; இந்திய அணி 2011 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் இருந்து 2012 ஆம் ஆண்டின் முதலிரு மாதங்கள் வரை ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தது. 4 டெஸ்ட் ஆட்டங்களை உள்ளடக்கிய தொடரின் முதல் மூன்று ஆட்டங்களிலும் இந்திய அணி 3–0 என்ற அடிப்படையில் தோல்வியடைந்தது. குறிப்பிட்ட 3 ஆட்டங்களின் தோல்விக்கும் பின்னர் டோனியை தலைமைப் பதவியில் இருந்துநீக்கி விட்டு கோஹ்லியை தலைவராக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தெரிவுக்குள் வலுப்பெற்றன. ஏனெனில் கோஹ்லி ஒரு ஆபத்தான வீரர். அணிக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த வல்லவர். இந்திய கிரிக்கெட்டில் புதிய அத்தியாயம் கோஹ்லி மூலம் திறக்கப்படும். ஆனால் டோனியை தலைமைத்துவத்தில் இருந்து நீக்க சீனிவாசன் அனுமதிக்கவில்லை. அதனால் தொடர்ந்தும் தலைவராக டோனி நீடித்தார்–என்றார். (ம)

# ஆஸி. மீண்டும் ஆதிக்கம்
## வெற்றி என்ற பேச்சுக்கே தீவுகளுக்கு இடமில்லை


சிமித்

ஆஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டத்தின் இரண்டாம் நாள் முடிவில் மே.தீவுகள் 143–8 என்று தடுமாற்றமான நிலைமையில் உள்ளது. பெரும்பாலும் தீவுகள் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸிற்காக களத்தடுப்பில் ஈடுபடும் தகுதியை இழந்து துடுப்பெடுத்தாடக்கூடிய சந்தர்ப்பங்களும் (பொலோ ஒன்) ஏற்படலாம்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகளின் தலைவர் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க முதலாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 258–4 ஓட்டங்களுடன் இருந்தது. சிமித் 135 ஓட்டங்களுடனும் வற்சன் 20 ஓட்டங்களுடனும் தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கினர். சிமித் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் நிலைக்கத் தவறினார் வற்சன். 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வற்சனின் இடத்தை நிரப்பிய ஹடின் வற்சனின பாணியிலேயே பயணித்து கிட்டத்தட்ட அதே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மறுமுனையில் இரட்டைச் சதத்தை நோக்கி பதட்டமில்லாது சென்றுகொண்டிருந்தார் சிமித். ஆனால் பின்வரிசை வீரர்கள் நிலைப்பதாக தெரியவில்லை. ஜோன்சன் 5 ஓட்டங்களுடனும் ஸ்ராக் 6 ஓட்டங்களுடனும் பவிலியன் திரும்ப ஆஸி. 330–8. 350 ஓட்டங்களில் சுருண்டு விடும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் நிதானித்து நம்பிக்கை கொடுத்தார் ஹசில்வூட். 58 பந்துகள் வரையில் தாக்குப்பிடித்து 24 ஓட்டங்களைக் குவித்தார். மறுமுனையில் இரட்டைச் சதத்தின் விழிம்பில் சிமித். தடுமாறு வதும் நிதானிப்பதுமாக படாதபாடு பட்டுக் கொண்டிருந்தார். தடுமாற்றத்தின் விளை வாக ஒரு ஓட்டத்தால் இரட்டைச் சதத்தைத் தவறவிட்டு 199 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முடிவில் ஆஸி 399.

400 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெற்றுவிடலாம் என்ற நிலைப்பாட்டில் களமிறங்கிய தீவுகளுக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. மூன்றாவது பந்துப்பரிமாற்றத்திலேயே ஸ்ராக்கின் வேகத்தில் சிக்கி டக்குடன் வெளியேறினார் சண்டிகா. லயனின் சுழலில் சிக்கினார் பிரீத் வைற். மொத்தத்தில் தீவுகள் பத்து ஓட்டத்தை எட்டுவதுக்குள் ஆரம்ப வீரர்களின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பதின்ம ஓட்டங்களைத் தாண்டாமல் மத்திய வரிசை வீரர்கள் பவிலியனுக்குச் செல்ல தீவுகள் 77–5. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கும் நோக்கில் முனைப்புக் காட்டினார்கள் ஹோப்பும் பிளெக்வூட்டும். ஆஸியின் பந்துகளுக்கு அளவுக்கு அதிகமாக நிதானித்தாலும் தவறு என்பதை சரியாக புரிந்து கொண்ட பிளெக்வூட் இடையிடையே அடித்தாடவும் செய்து அரைச்சதத்தையும் பதிவு செய்தார். இணைப்பாட்டத்தை பிரிந்தார் ஹோப். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே பவிலியன் திரும்பினார் பிளெக்வூட். இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் தீவுகள் 143–8.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஹசில்வூட், லயன் தலா 3 இலக்குகளையும் ஸ்ராக், ஜோன்சன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றியுள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னங்க சச்சினின் சாவி எங்கே?

சாதனையாளர்கள், பிரபலங்கள் அடிக்கடி புத்தம் புதிய கார்களை வாங்கினாலும் அவர்களின் பெயரில் கார்கள் அறிமுகமானதில்லை. இந்த வகையில் அந்தச் சாதனையையும் சச்சின் படைத்துள்ளார். பிரபல நிறுவனமான பி.எம்.டபிள்யூ. நிறுவனம் சச்சின் பெயரில் கார் ஒன்றைத் தயாரித்து அறிமுகப்படுத்தி யுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு முதல் பி.எம்.டபிள்யூ. நிறுவனத்தின் அதிகாரிகளில் ஒருவராக சச்சின் செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில் சச்சின் டெண்டுல்கரின் பெயரிலான கார்களை பி.எம்.டபிள்யூ. வெளியிட்டுள்ளது. மொத்தமே 15 கார்கள் தான் சச்சின் பெயரில் தயாரிக் கப்பட்டுள்ளன. இந்தக் கார்களில் சச்சினின் ஆட்டோகிராப்பும் இடம்பெற்றிருப்பது கூடுதல் அம்சம். (ம)



சச்சின்


## மலேசியாவில் வேலை வாய்ப்பு

வடக்கு வாழ் தமிழ் இளைஞர்களின் நலன்கருதி

Production Operators
உற்பத்தி உதவியாளர் 67



0779915160
077 6872656

அடிப்படைச் சம்பளம்
RM 900.00
(900.00x42=37,800.00)
8 மணிநேர வேலை
மேலதிக நேர வேலையும் உண்டு.
நாளொன்றிற்கு 8 மணிநேர வேலை, ஒரு வாரத்திற்கு 48 மணிநேரம்.

யாழ், வவுனியா முகவர்
இல. 87A மில் றோட், வவுனியா.

இலவசம்!!!
தங்குமிடம் வழங்கப்படும். அதற்காக RM 50 அறவிடப்படும். ஒப்பந்த காலம் 03 வருடங்கள், வைத்தியம், போக்குவரத்து, ஒப்பந்த காலம் முடிந்ததும் வருவதற்கான விமான டிக்கட் இலவசம் (உணவு வழங்கப்படமாட்டாது) ஏனையவை மலேசியா நாட்டு சட்டதிட்டங்களுக்கு அமைவானது.

APP No: 2486/Advt/02/15 அரச அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் : Rs. 125,000/=

GALAXY FOREIGN EMPLOYMENT AGENCY
No. 12, Noris Canal Road, Colombo 10.
LL No 2486 Tel: 011 2698912, Mobile: 0779915160, 077 6872656



LONDON METROPOLITAN COLLEGE
சர்வதேச தரத்திலான ஆங்கிலகற்கை நெறிகளை நடத்தும் யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கிலகல்வி நிறுவனம்
LONDON METROPOLITAN COLLEGE

IELTS
Duration: 60 hours, Week/ Week end
- ஒவ்வொரு மாணவர் மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-7.0 Band பெறுவதற்கான உத்தரவாதம்

IELTS
life skills A1,B1
(Speaking and Listening)
Duration: 48 hrs, Week/ Week ends
- UK settlement visa இற்கு அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாவிற்கான IELTS A1 வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

Certificate In SPOKEN ENGLISH WITH GRAMMAR
(Quick learning program)
Duration: 48hours, Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

DIPLOMA IN ENGLISH
Duration: 3 Months, Week/ Week ends
Writing -60Hrs Reading -48Hrs, Listening -48Hrs, Speaking -48Hrs
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்
- 2014 A/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்குசெய்யப்படு

Week days: 15.06.2015 | 22.06.2015
Week ends: 14.00.2015 | 21.06.2015
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்.
தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | | 021 753 8395
E mail; info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk



## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி, யாழ் நகரில் முன்னணி கணினி நிறுவனத்துக்கு Ms office, DTP தெரிந்த இருபாலாரிடமிருந்தும் கணினிப் போதனாசிரியர், வரவேற்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
தொடர்புகளுக்கு - 0777 173517



## வேலை ஆட்கள் தேவை

சமையல்காரர்
(யாழ்ப்பாண தென்னிந்திய சைவ உணவு வகைகள் தயாரிக்கத் தெரிந்த வர்கள் இனிப்பு வகைகள் தயாரிக்கத் தெரிந்தவர்கள்.(Sweet Makers)
ரொட்டி, தோசை, போளி தயாரிக்கத்தெரிந்தவர்கள்.
உணவு பரிமாறுபவர்கள் (Waiters)
மேசை சுத்திகரிப்பாளர் (Cleeners)
அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும் சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

ஸ்ரீ நிகேதபவன்
(சைவ உணவகம்)
163, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
UK Sponsor/ Settlement Visa
திருமணம் செய்து UK செல்வதற்கான ஆங்கில பரீட்சை
IELTS Life Skills (A1)
2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
சித்தியடைவதற்கான உத்தரவாதம்
IELTS (Duration: 50 hrs)
- Latest training materials. (BOOK 10)
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer
DMI COMPUTER EDUCATION
Spoken English
Veta Fluency Diploma
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி. Tel.:021-226 2470
சாவகச்சேரி (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் Tel.:021-224 1970



ஓம் நமோ நாராயண நமக
## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் தங்கபூபதி நடராசா



கடந்த 26.05.2015 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவி அமரர் தங்க பூபதி நடராசா அவர்களின் வீட்டுக் கிருத்தியகிரியைகள் இன்று (14.06.2015) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை. (60955) குடும்பத்தினர்.


# இன்றைய மோதல்கள்

*புனித தோமையார் வி.க.தொடர்*

யாழ்ப்பாணம், ஜூன் 14

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெருவிழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறை வையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

*யாழ்.மாவட்ட தாச்சித் தொடர்*

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி சென். றொக் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 7.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை காந்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.(ம-23)

## அரையிறுதிக்குள் நியூ பைட்

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இடம்பெற்ற மூன்றாவது காலிறுதியாட்டத்தில் நியு பைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்மதினா விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நியு பைட் விளையாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரை யிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 14.06.2015


# தமிழ்ப் பெண்களுக்கும் சம பிரதிநிதித்துவம் வேண்டும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.ஆ.சுமந்திரன்
நாடாளுமன்ற உறுப்பினர் (த.தே.கூ)

# தமிழ்ப் பெண்களுக்கும் சம பிரதிநிதித்துவம் வேண்டும்

இலங்கையின் நடைமுறை தேர்தல் சீர்திருத்தம் தொடர்பான வாதப்பிரதிவாதங்களானவை, நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகளுக்கான ஒதுக்கீட்டு (கோட்டா) முறைமையின் மூலம் ஆண், பெண் பிரதிநிதித்துவத்தில் சமத்துவத்தைவலியுறுத்துவதைக்காணலாம். மக்கள் தொகையில் 50 வீதத்துக்கும் அதிகமான பெண்களைக் கொண்ட நாட்டின் நாடாளுமன்றத்தில் 6 வீதத்துக்கும் குறைவான ஆசனங்களையே பெண்கள் கொண்டிருப்பது இலங்கையின் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் இருண்ட நிலையிலிருப்பதையே வெளிப்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் பெண் பிரதிநிதிகளுக்கான ஒதுக்கீட்டு முறைமை குறித்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பப்பட்டாலும் அரசியல் கட்சிகளும், அரசும் இது குறித்தான நிலைப்பாட்டில் பெரிய வித்தியாசத்தைக் காண்பிக்கவில்லை. பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் ஏன் இவ்வளவு தயக்கம்? நாடாளுமன்றத்தில் உள்ள பெண் பிரதிநிதிகள் உண்மையிலேயே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றார்களா?

**நாடாளுமன்றத்தில் பெண்கள் இருக்க வேண்டிய தேவையென்ன**

நாடாளுமன்றத்தில் பெண்களின் தேவையை வினவுவதானது சுயாட்சியின் தேவையை வினவுவதைப் போலாகும். ஜனநாயகத்தின் அடிப்படையானது தமது அரசியல் பிரதிநிதிகள் மூலம் தம்மைத் தாமே ஆட்சி செய்ய மக்களை வலுவூட்டுவதாகும். இதன்படி நாடாளுமன்றமானது தனது சமூகங்களைப் பிரதிநிதிப்படுத்துவதாக இருப்பதாகவே எதிர்பார்க்கப்படுகின்றது.

"நவீன நாடாளுமன்றமானது பொது மக்கள் தம்மை அடையாளம் கண்டுகொள்ளும் இடமாகவும் தமது கேள்விகள் மற்றும் அபிலாசைகளுக்குபதில்காணும் இடமாகவும் இருக்கின்றது" என்று 'எஸ் பல்மேரி, பால் நிலை உணர்திறனுள்ள நாடாளுமன்றம்'(S Palmeri, Gender Senstive Parliaments) எனும் நூலில் ஏ.பி.ஜோன்ஸன் (A.B.Johnsson) தனது முன்னுரையில் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் எமது பிரதிநிதிகள் உண்மையிலேயே எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்துவது அவசியமாகும். எமது பிரதிநிதிகள் என்போர் தம்மை எம்மோடு அடையாளப்படுத்துபவர்களாகவும் எமது பிரச்சினைகள், தேவைகள் மற்றும் அபிலாசைகளை அறிந்திருப்பவர்களாகவும் இருப்பதுடன் எமக்காக வழக்காடவும், எமக்காக ஆட்சி செய்யவும் வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளில் ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதும் ஆளப்படுவது ஒரு நாட்டுக்கு எவ்வளவு முக்கியமானதோ அதேபோல ஒரு நாட்டினை உருவாக்கும் பல்வேறு சமூகங்களின் பிரதிநிதித்துவத்தை அது கொண்டிருப்பதும் அவசியமாகும். இந்தப் பண்பே ஜனநாயகமானது பெரும்பான்மை வாதமாக உருவாகாமல் இருப்பதை உறுதிசெய்கிறது.

பெண்களின் பிரதிநிதித்துவத்துக்கான தேவையானது வெறுமனே அவர்களின் உரிமைகளை வெல்வதற்கும் அவர்களை வலுவூட்டுவதற்காகவுமல்ல. எமது அரசியல் வரலாற்றில் பெண் ஜனாதிபதியும், பெண் பிரதமரும் இருந்ததைக் குறித்து பெருமை, பாராட்டுவதோடு நின்றுவிடாது பெண்களின் உரிமைகளை வெல்லவும் அவர்களை வலுவூட்டுவதற்கும் அப்பால் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதி நிதித்துவமானது அவர்களின் ஜனநாயக உரிமையாகும்.

ஒரு நாட்டின் எல்லாச் சமூகங்களும் மிகவும் பயனுள்ள சட்டமன்ற மற்றும் அரச பிரதிநிதித்துவத்தினைக் கொண்டிருக்கும் அதேவேளை எமது சமூகமானது ஜனநாயகத்தினை நோக்கி நகர்வதோடு பெரும்பான்மைவாதம் எனும் அபாயத்தினையும் கடக்கின்றது. அத்தோடு ஒரு ஜனநாயக சமூகத்தில் நாம் அனைவருமே பயனடைவோம். எனவே நாடாளுமன்றத்தில் அதிகமான பெண்களின் பிரதி நிதித்துவமானது வெறுமனே பெண்களின் பிரச்சினையாகவல்ல, மாறாக நம்மனைவருக்கும் பொதுவான பிரச்சினையாகக் கருதப்படல் வேண்டும்.

**ஒதுக்கீட்டு முறைமை சாத்தியமானதா?**

குறைவான பெண் பிரதிநிதித்துவத்துக்கான துரித பதிலாக இந்த ஒதுக்கீட்டு முறைமையே பரிந்துரைக்கப்பட்டு வந்துள்ளது. பெண்களுக்கான நாடாளுமன்ற ஒதுக்கீட்டு முறையானது ஜோர்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற, அரசியலில் பெண்கள் ஈடுபட்டிராத வரலாற்றைக் கொண்ட நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும், அரசியலில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவம் என்ற உலகப் பிரச்சினைக்கு இது சிறந்த தீர்வாக அமையாதுள்ளது.

"ஒதுக்கீட்டு முறைமையினால் மாத்திரம் பெண்களின் பிரதிநிதித்துவம் எனும் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. அரசியல் கட்சிகள், கல்விமுறைமை, அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், திருச்சபைகள் என அனைத்துத் தரப்பினரும் தமது நிறுவனங்களுக்குள் படிப்படியாக கீழிருந்து மேலான பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். இதற்குக் காலம் எடுக்கும். ஒரே நாளிலோ, ஒரு வருடத்திலோ அல்லது ஐந்து வருடங்களிலோ என்று இல்லாது குறிப்பிட்ட அளவு மாற்றத்தைக் கண்டுகொள்ள ஒரு சில தலைமுறைகளை நாம் கடக்க நேரிடும்" என்கிறார் பர்கிற்றாடால் என்னும் சுவீடன் நாட்டு முன்னாள் நாடாளுமன்றப் பேச்சாளர்.

நாடாளுமன்றத்தில் உள்ளோரின் எண்ணிக்கையையும் தாண்டி குறைவான பெண் பிரதிநிதித்துவமானது மிகவும் ஆழமான பிரச்சினை என்பதை மறுக்க முடியாது. ஆணாதிக்க சமூகங்களின் விளைவே இதற்கான அடிப்படைக் காரணமாக அமைகின்றது. பெண்களை அரசியல் பிரதிநிதிகளாக சமூகம் காண்பதில்லை. ஆண்கள் மாத்திரமல்லாது பெண்களும்கூட தம்மையோ அல்லது வேறு பெண்களையோ தகுதியான அரசியல்பிரதிநிதிகளாக இனங்காண்பதும் இல்லை. குறைவான பெண் பிரதிநிதித்துவம் எனும் பிரச்சினையானது பல்வேறு நிலைகளில் கையாளப்பட வேண்டியதாகும். இவற்றுள் அரசு பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள், வாக்காளர்கள் போன்றவர்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்கல், பெண் வேட்பாளருக்கான பயிற்சிகள் மற்றும் சட்ட, அரசியல் பிரிவுகளில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையிலான அமைப்பு ரீதியான மாற்றங்கள் என்பன முக்கியமானவையாகும். இவற்றை அரசும் சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்தே அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும். அத்தோடுகூட இந்தமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட சில வருட காலம் தேவை என்பதோடு அவ்வளவு காலம் இலங்கை பொறுத்திருக்க முடியாதென்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

இதனாலேயே ஏனைய நீண்ட கால தீர்வுகளைக் காட்டிலும் ஒதுக்கீட்டு முறைமை அவசியமாகின்றது. இருந்த பொழுதிலும் கோட்டா முறைமையானது சில சமயங்களில் ஜனநாயகமற்ற ஒரு முறையாகக் கணிக்கப்படுகின்றது. ஏனெனில் இந்த முறைமையில் தமது விருப்புக்கு மாறாக வாக்காளர்கள், குறித்த அளவு ஆசனங்களுக்கான பெண் வேட்பாளருக்கு வாக்களிப்பது கட்டாயமாக்கப்படுகின்றது. மேலும் இந்த ஒதுக்கீட்டு முறையானது வெறுமனே சட்டத் தேவையைப் பூர்த்தி செய்யும் கட்டாயத்தின் பேரில் அரசியல் கட்சிகளை சில பெண் வேட்பாளர்களின் பெயரை முன்மொழியச் செய்யும் ஒரு செயற்திறனற்ற முறையாகவும் கணிக்கப்படுகின்றது.

இருந்தபோதிலும் பெண்களுக்கான ஒதுக்கீட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதானது பெண் பிரதிநிதித்துவத்தில் உடனடியான அதிகரிப்பை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாது, நீண்டகால மற்றும் அரசியல் பெண் பிரதிநிதித்துவத்துக்குத் தடையாக இருக்கும் காரணிகளுக்குச் சவால் விடுவதாயும் அமைகின்றது.

நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான ஒதுக்கீட்டு முறைமையானது பெண் வேட்பாளர்கள் நாடாளுமன்றத்துக்குள் வருவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது. காலப்போக்கில் ஆண், பெண் இருசாராரும் பெண்களைத் தமது அரசியல் பிரதிநிதிகளாகக் காண்பர். வேறு ஒதுக்கீட்டு முறைமை போன்று இம்முறையிலும் பெயரளவிலான வேட்பாளர் அமையும் அபாயம் இருக்கும் என்றாலும் நீண்டகால தீர்வைக் காணும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் பயனுள்ள பயிற்சி முறைகள் மற்றும் ஆலோசனை சேவைகளின் மூலம் நாடாளுமன்றத்தில் செயற்றிறன்மிக்க பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கமுடியும்.

> காலப்போக்கில் ஆண், பெண் இருசாராரும் பெண்களைத் தமது அரசியல் பிரதிநிதிகளாகக் காண்பர்.

*"இந்திய தேசத் திலே இந்த ஒதுக் கீட்டு முறைமை யில் தெரிவு செய் யப்பட்ட பெண்களை பதிலாள் பெண் (Proxy Women) எனப் பெயரிடப்பட்டுள் ளதைக் காணலாம். ஏனெனில் உள்ளூராட்சி மன்றங்களில் அவர் கள் தமது கணவர்களுக்கு பதிலாக நிற்பதாலும் கூட்டங்களில் அவர்க ளுக்கு பதிலாக கணவர்கள் பங்கு பெறுவதாலுமே உலகின் ஏனைய பாகங்களிலும் அரசியலிலுள்ள பெண்களை விசேடமாக ஒதுக்கீட்டு முறைமையில் தெரிவானவர்களை (Token Women) பெயரளவுப் பிரதிநிதியா கக் காண்பதை அவதானிக்கலாம். பெண்களுக்கான ஒதுக்கீட்டு முறைமை தொடர்பான பல ஆய்வுகளில் பெண்கள் வெறுமனே பெயரளவிலேயே பல இடங்களில் பிரதிநிதித்துவப் படுகின்றமை வெளிப்படுத்தப் படுகின்றது. தெரிவு செய்யப் படுகின்ற பெண்கள் தமது தொகுதியிலோ தமது கட்சியிலோ அல்லது அரசியல் நிறுவனங்களுக்குப் புறம்பான இயக்கங்களிலோ போதிய அதிகாரம் இல்லாதவராக இருத்தல் இதற்குக் காரணமாக இருக்கின்றது. இருந்தபோதி லும் ஆரம்பகாலத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவும் அதிகாரமற்றவர்களாகவும் காணப்பட்ட பல பெண்கள் காலப்போக்கில் தன்னம்பிக்கை கொண்டவராயும் செல்வாக்குச் செலுத்துகின்றவராயும் மாறிய பல கதைகளும் இருக்கத்தான் செய்கின்றன. செயற்றிறன் மிக்க பெண் அரசியல்வாதிகள் உருவாவதற்கு பெண்கள்சார் அமைப்புக்களால் அல்லது சர்வதேச நிறுவனங்களால் பெண்களுக்கான வலுவூட்டும் நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவது மிக அவசியமாகும்."*

இவ்வாறு சொல்கிறார் ட்றூட் டாலெரெப். "அதிகரிக்கும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம்: ஆண், பெண் ஒதுக்கீட்டு முறையிலான புதிய போக்கு" என்ற தனது நூலில்.

ஸ்பெயின் நாட்டின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அனா பலெட்போ இதுபற்றி வேறுவிதமாகக் குறிப்பிடுகிறார். "ஒதுக்கீட்டு முறையானது இருபுறமும் கருக்குள்ள வாளைப் போன்றது. ஒருபுறம் அது தீர்மானங்களை மேற்கொள்ளும் நிலைகளில் பெண்களை உள்வாங்க ஆண்களை உந்துவதோடு (ஏனெனில் பெண்களுக்கான இடத்தை ஆண்களே வழங்க வேண்டியுள்ளதால்) மறுபுறம் பெண்களுக்கான இடத்தை ஆண்களே வழங்குவதால் தம்மால் கையாளக்கூடிய வகையிலான பெண்களையே தேடிநிற்பர். (ஆண்களின் மேலாதிக்கத்தை இலகுவாக ஏற்றுக்கொள்ளக் கூடிய பெண்கள்)" என்று சொல்கிறார் பலெட்போ.

அரசியல் ரீதியான குறைவான பெண் பிரதிநிதித்துவம் எனும் தனது பிரச்சினைக்கு இலங்கை தீர்வு காண இது தகுந்த காலம் என்பதோடு பெண்களுக்கான ஒதுக்கீட்டு முறைமை என்பது அதற்கான ஓர் தொடக்கமுமாகும்.

**ஒரு முதற்படி**


இந்த மாத தொடக்கத்தில் அரசியல் கட்சிகளின் வேட்பாளர் பரிந்துரைப்பில் 50 சதவீதம் அல்லது (குறைந்தது மூன்றில் ஒரு பங்கு) பெண் வேட்பாளர்கள் இருத்தல் வேண்டும் என அறிவித்திருந்தேன். இதற்கு ஆரம்பப்படியாக எனது கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டி நிற்கிறேன். உயர் மட்ட தீர்மானமெடுக்கும் நிலைகளிலே எமது சகல தொகுதிகளும் சரியாகவும் செயற்றிறன் மிக்க முறையிலும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதை உறுதி செய்வதோடு இது ஒரு முக்கிய படிமுறை என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். அத்தோடு அனைத்துக் கட்சிகளையும் விசேடமாக இரு பிரதான கட்சிகளையும் தமது வேட்பாளர் பரிந்துரைப்பில் இதனை கவனத்தில் கொள்ளும்படி வேண்டி நிற்கிறேன். இது ஒரு நீண்ட பயணத்தின் முதற்படியே என்பதோடு ஒரு நாடாக நடைமுறைப்படுத்த இதுவே சரியான தருணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையை ஒழிப்போம்!





எஸ்.கார்த்திக்

கனடா நாட்டின் கியூபெக் மாகாண நீதிமன்றம் அண்மையில் ஒரு மகத்தான தீர்ப்பை வழங்கியுள்ளது. அதாவது, புகை பிடிப்பவர்கள் அனைவருக்கும் அந்த மாகாணத்தின் சிகரெட் தயாரிப்பு நிறுவனங்கள் 1,240 கோடி டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என்பதே அந்தத் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பால், அந்த மாகா ணத்தின் சிகரெட் தயாரிப்பு நிறுவனங்கள் அலறித்துடித்து வருகின்றன.

புகைப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள், நுரையீரல் பாதிக்கப்பட்டவர்கள், தொண்டைப் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களின் சார்பாக 1998இல் கியூபெக் மாகாணத்தின் உயர் நீதிமன்றத்தில் அந்த மாகாணத்தின் புகை பிடிப்போர் நலச் சங்கம் இரு மனுக்களைத் தாக்கல் செய்தது. இதை விசாரித்த நீதிமன்றம் 17 ஆண்டுகளுக்குப் பிறகு இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது.

இன்றைய இளைஞர் சமுதாயத்தைத் தவறான பாதைக்கு இழுத்துச் சென்று போதைப் பொருள்களால் சீரழித்து வரும் நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மிகப் பெரிய எச்சரிக்கை மணியாகவே இந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது.

இலங்கையை மட்டுமன்றி, இன்று உலக நாடுகள் அனைத்தையும் அச்சுறுத்தி வரும் மிகக் கொடிய போதைப் பொருளாக புகையிலை இருந்து வருகிறது. யாழ்ப்பாணத்தில் புகையிலை இன்னும் ஒரு பணப்பயிராகவே பயிரிடப்பட்டு வருகின்றது. அதிலிருந்து முன்னர் சுருட்டுச் சுற்றினார்கள். காலப்போக்கில் புகையிலை பீடியாக உருவெடுத்து, சிகரெட்டாக மாறி, இன்று பல்வேறு வடிவங்களில் பரிணாம வளர்ச்சி பெற்று பலதரப்பட்ட பெயர்களில் வலம் வருகிறது.

புற்றுநோய் தாக்குவதற்கு புகையிலையிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் தான் முக்கிய காரணம். மேலும், நுரையீரல் பாதிப்பு, மாரடைப்பு, பக்கவாதம் என மிகக் கொடிய நோய்களுக்கும் முக்கிய காரணியாக விளங்குவது இந்தப் புகையிலை சார்ந்த பொருள்கள்தான் என்பதையும் மறுப்பதற்கில்லை.

ஏழை, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த 80 சதவீதத்தினர் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகி இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இதில், பெரும்பாலானோர் இளைஞர்கள். மேலும், புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துவதால் ஒவ்வொரு 6 விநாடிகளுக்கும் ஒருவர் உயிரிழக்கிறார் எனவும், இந்த எண்ணிக்கை 10-இல் 1 என்ற விகிதத்தில் இருப்பதாகவும் குறிப்பிடுகிறது. இவ்வாறு ஆண்டுக்கு 60 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று அந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

தவிர, நேரடியாக புகையிலையைப் பயன்படுத்துவோரில் 50 லட்சம் பேரும், புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்தாவிட்டாலும், அதைச் சுவாசிப்பவர்களில் 6 லட்சம் பேரும் நோயால் பாதிக்கப்படுகின்றனர் எனவும் குறிப்பிடும் அந்தப் புள்ளி விவரம், புகையிலைப் பொருள்களைத் தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை 2030ஆம் ஆண்டில் ஆண்டுக்கு 80 லட்சத்தைத் தாண்டும் என்றும் தெரிவிக்கிறது.

புகையிலையால் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சைக்காக மட்டும் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் பல லட்சம் கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. புகை நமக்குப் பகை என சுகாதார அமைப்புகள் கூக் குரல் இட்டாலும், ஆண்டுக்காண்டு புகையிலைப் பொருள்கள் மீதான வரிகளை அரசுகள் உயர்த்தினாலும், புகையிலை சார்ந்த பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் அதை நிறுத்தவில்லை புகையிலை தயாரிப்பு நிறுவனங்களும் தமது தயாரிப்புகளை நிறுத்தவில்லை. விலை அதிகரிக்கப்பட அதிகரிக்கப்படவும் நாளுக்கு நாள் சிகரெட் விற்பனை அதிகரித்து வருகிறதே தவிர குறைந்த பாடில்லை.

காரணம், புகைப் பழக்கத்துக்கும், புகையிலை சார்ந்த பழக்கத்துக்கும் அடிமையாகிவிட்டவர்களால், அந்தப் பழக்கத்தை நிறுத்த முடிவதில்லை. இதனால், பெற்றோரையும், மனைவி, குழந்தைகளையும் தவிக்கவிட்டு இளம் வயதிலேயே புற்று நோய், மாரடைப்பு உள்ளிட்ட நோய்களால் பலர் பரிதாபமாக உயிரிழக்கும் நிலை நிலவி வருகிறது.

இதில், இன்னொரு வேதனைக்குரிய விடயம் என்னவென்றால், இன்று இளம் பெண்களும் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகி இருப்பதுதான். இதனால், அவர்கள் தாய்மை அடையும் புனிதத் தன்மையை இழப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக் கின்றன.

நாம் புகைக்கும் புகையிலையில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேதியல் பொருள்கள் இருப்பதாகவும், இதில் 250 வகையானவை தீங்கு விளைவிக்கக் கூடியவை என்றும், 50க்கும் மேற்பட்டவை புற்றுநோயை உண்டாக்கக் கூடியவை என்றும் உலக சுகாதார அமைப்பின் ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், கனடா நாட்டின் தீர்ப்பை முன்னுதாரணமாகக் கொண்டு இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துபவர்களுக்கு இழப்பீடாக குறிப்பிட்ட தொகையை, அந்தப் பொருள்களை தயாரிக்கும் நிறுவனங்களிடம் இருந்து வசூலித்துக் கொடுக்க வேண்டும்.

எரிகிற விறகைப் பிடுங்கினால் கொதிக்கிற தண்ணீர் தானாக அடங்கும் என்று கிராமத்து சொல்லடை ஒன்று உண்டு. அது போல, இப்படி ஒரு தீர்ப்பை வழங்கினால், புகையிலைப் பொருள்களைத் தயாரிக்கும் நிறுவனங்களும் தமது தயாரிப்புகளை நிறுத்தும், உலகம் முழுவதிலும் புகையிலைப் பொருள்கள் பயன்பாடும் பெருமளவு தவிர்க்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கில் ராணுவம் இனிமேல் எதற்கு?

■ அதிரன்

**போர்** முடிவடைந்த நாளிலிருந்து இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றுமாறு தமிழ் மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது. இராணுவம் வெளியேறுமானால் இராணுவம் அடாத்தாகப் பிடித்து வைத்துள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க முடியும். இராணுவ நெருக்குவாரமின்றி மக்கள் அமைதி வாழ்க்கை வாழலாம்.

ஆனால் புலிகள் இயக்கம் மீண்டும் எழுச்சி பெறுவதாகக் கூறி வடக்கிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெற முன்னைய மஹிந்த அரசு பிடிவாதமாக மறுத்து வந்தது. தற்பொழுது இந்த விவகாரத்தை ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்குப் பின்னர் அரசியலுக்குப் பயன்படுத்த மஹிந்த தரப்பினர் முயன்று வருகின்றனர். அவர்களது சமீபகால நடவடிக்கைகள் இதனைக் கோடிட் டுக் காட்டுகின்றன.

வித்தியா வன்புணர்வு, கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணையின்போது யாழ். நீதிமன்றம் கல் வீச்சுக்குள்ளாகியது. அப்பொழுது வடக்கில் புலிகள் மீண்டும் எழுச்சிபெறுகிறார்கள் என்று மஹிந்தவும் அவரது ஆதரவாளர்களும் கூச்சலிட்டனர். இந்தச் சம்பவத்துக்குப் புலிச்சாயம் பூசி அதன்மூலம் தெற்கு மக்கள் மத்தியில் இனவாதத்தைப் பரப்பி எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

இந்த வங்குரோத்து அரசியல் வாதிகளின் கையில் தற்பொழுது எஞ்சியுள்ள ஒரே ஆயுதம் இனவாதம்தான். இனவாதம் மூலம் சிங்கள பௌத்த மக்களின் ஆதரவைப் பெற்று பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவது இவர்கள் வகுத்துள்ள அரசியல் வியூகம். ஆனால் இவர்களது திட்டத்தைப் போட்டுடைத்து விட்டார் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த. வடக்கில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. தீவிர வாத நடவடிக்கைகள் இல்லை. தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டே வடக்கில் படையினர் நிலைகொண்டுள்ளனர். வடக்கில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. படையினரை வெளியேற்றுவது குறித்து அரசே முடிவு செய்யவேண்டும்" என்று மிகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளார் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த. வடக்கில் புலிகள் மீண்டும் எழுச்சி அடைகிறார்கள். அங்கு புலிக் கொடிகள் பறக்கின்றன. மைத்திரி அரசு தமிழீழத்தைப் பிரித்துக் கொடுக்கப்போகிறது. கிழக்கில் முஸ்லிம்களின் கிழக்கிஸ்தான் உதயமாகப் போகிறது , என்றெல்லாம் பொய்ப்பிரசாரம் செய்யும்–இனவாதம் கக்கும் மஹிந்த சார்பு அரசியல்வாதிகளுக்கு மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தவின் இவ்வாறான ஒரு சாட்டையடியாகும். அதேசமயம் வடக்கிலிருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையையும் இவரது நிலைப்பாடு நியாயப்படுத்துகிறது.

> வடக்கில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. அங்கு தீவிரவாதம் இல்லை என்றால் ஏன் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான இராணுவம் அங்கு வேண்டும்? போர் முடிவடைந்த பின்னர் ஓரிரு வருடங்களுக்கு இராணுவத்தை வைத்திருந்தால் அதனை நியாயப்படுத்த முடியும். ஆனால் தற்பொழுது ஆறு வருடங்கள் கழிந்தும்கூட இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருக்கிறது.

வடக்கில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை. அங்கு தீவிரவாதம் இல்லை என்றால் ஏன் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான இராணுவம் அங்கு வேண்டும்? போர் முடிவடைந்த பின்னர் ஓரிரு வருடங்களுக்கு இராணுவத்தை வைத்திருந்தால் அதனை நியாயப்படுத்த முடியும். ஆனால் தற்பொழுது ஆறு வருடங்கள் கழிந்தும்கூட இராணுவம் தொடர்ந்து நிலைகொண்டிருக்கிறது. மைத்திரி தலைமையிலான புதிய அரசு கடந்த ஜனவரியில் ஆட்சிக்கு வந்த பின்பு இராணுவத்தின் வசமிருந்த ஒரு தொகை நிலங்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் இன்னும் பெரும் பகுதி நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. தனது தேவைக்கு அதிகமான நிலங்களை இராணுவம் வைத்துக்கொண்டுள்ளது. பலாலி படைத் தலைமையகக் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களில் இன்னும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. ஆனால் வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை எவ்வளவு என்பது இன்னும் மூடுமந்திரமாகவே இருக்கிறது. ஐந்து பொதுமக்களுக்கு ஒரு சிப்பாய் என்ற விகிதத்தில் வடக்கில் படையினர் நிலைகொண்டுள்ளனர் என்று வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் குறிப்பிடுகிறார். ஆனால் படைத்தரப்பு இராணுவத்தின் எண்ணிக்கையை வெளியிட மறுப்பதால் முதல்வர் தெரிவித்த கணக்கு சரியாகவும் இருக்கலாம்.

ஆகவே, வடக்கில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத நிலையில், தீவிரவாத செயல்கள் இல்லாத நிலையில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையான படையினரைத்தொடர்ந்து நிலைநிறுத்தி வைத்திருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. போரில் தோற்றுப் போன இனம் ஒன்றை அடிமையாக வைத்திருக்கும் நோக்கத்தின் வெளிப்பாடுதான் இந்த அளவுக்கு மிஞ்சிய இராணுவக் குவிப்பு.

தமிழ் மக்களின் பேராதரவுடன் ஆட்சிக்கு வந்த மைத்திரி அரசு இனியாவது வடக்கிலிருந்து இராணுவத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களையெடுக்கும் எவ்சிஐடி: கதிகலங்கும் கடந்தகால பிரபலங்கள்!

ஸ்டோ ஸ்வாமி

தை மாதம் ஆட்சிக்கு வந்த புதிய அரசினால் தொடங்கப்பட்ட நிதி மோசடி விசாரணைப் பிரிவு (FCID) அரசியலில் சர்ச்சையைத் தோற்றுவித்து வருகிறது. பெரும் நிதிக்குற்றங்கள், மோசடிகள், தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்ட பெரும் திட்டங்கள், பொதுச் சொத்துக்களை சூறையாடிய விவகாரங்கள், விடுதலைப் புலிகளுடனான பணக் கொடுக்கல் வாங்கல்கள், சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள், சட்டவிரோத சொத்து சேகரிப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் நிதிமோசடிக் குற்றங்கள் என்பவற்றை விசாரணை செய்யவென அமைக்கப்பட்ட இந்த பிரிவின் செயற்பாடுகள், அண்மைக் காலமாக முந்தைய அரசில் அங்கம் வகித்த பெரும்புள்ளிகளை அமிலச் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றது.

இல 356/பி, கார்ல்வில் பிளேஸ், கொள்ளுப்பிட்டியைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் இந்த நிதி மோசடி விசாரணைப் பிரிவு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆணையின் பேரில் பொது நிர்வாக அமைச்சரினால் பொலிஸ் திணைக்களத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. 64 தொழிற்படு பிரிவுகளைக் கொண்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் ஒரு பிரிவாக அமைச்சரவை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் பொலிஸ் அவசரச் சட்டத்தின் (ஓர்டினன்ஸ்) 55ஆம் பிரிவிற்கு அமைவாக உருவாக்கப்பட்ட இந்த விசாரணைப் பிரிவு, பொலிஸ் மா அதிபரின் வழிகாட்டுதல் மற்றும் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றது. இதன் பணிப்பாளராக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியலங்கார பணியாற்றுகிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக் காலத்தில் மைத்திரிபாலவின் கோஷங்களில் ஒன்றாக மஹிந்தவின் காலத்தில் நிகழ்ந்த நிதி மோசடிகளை வெளிக்கொண்டு வருதல் முதன்மைப்படுத்தப்பட்டது. எனினும் அவர் பதவிக்கு வந்த ஆரம்ப நாள்களில் அந்தச் செயன்முறைகள் வேகம் கொண்டிருக்கவில்லை. இதுவே மைத்திரிக்கு வாக்களித்தோர் மற்றும் ஆதரவளித்தோர் மத்தியில் சிலபல விமர்சனங்களையும் தோற்றுவித்திருந்தது. எனினும் அண்மைக் காலமாகச் சுறுசுறுப்பாக இயங்கிவரும் நிதிமோசடி விசாரணைப் பிரிவு, அத்தகையோரின் ஏக்கங்களை நிவர்த்தி செய்து வருவதுடன் பொது நிதிக் கையாடல்களையும் அம்பலப் படுத்தி வருகின்றது.

இதுவரையில் சசி வீரவன்ஸமுன்னாள் வீடமைப்பு நிர்மான பொறியியல் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவியான சசி வீரவன்ஸ, கடந்த 4ஆம் திகதி எவ்சிஐடியினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சொத்துக் கைமாற்றம் தொடர்பான விவகாரம் பற்றிய அறிக்கை ஒன்றைப் பெறுவதற்காகவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

**ஜோன்சன் பெர்னான்டோ**

முன்னாள் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வாணிபத்துறை அமைச்சராக விளங்கியவரான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோ கடந்த மாதம் 5ம் திகதி எவ்சிஐடியினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின் கைது செய்யப்பட்டார். அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய விவகாரம் தொடர்பிலான அறிக்கை ஒன்றினைப் பெறுவதற்காக விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்ட அவர், அறிக்கையைப் பெற்ற பின் கைதானார். காவல்துறை ஊடகப் பேச்சாளர் ஏ.எஸ்.பி. ரூவான் குணசேகரவின் கருத்துப்படி, இவர் ரூபா. 5.2 மில்லியன் பெறுமதியான முறைகேட்டில் சம்பந்தப்பட்டிருக்கிறார். கடந்த 28ஆம் திகதி இவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

**நிஷாந்த ரணதுங்க**

இலங்கை கிரிக்கெட் நிறுவகத்தின் முன்னாள் செயலாளராக விளங்கியவரும் சிஎஸ்என் எனப்படும் யோஷித ராஜபக்ஷவின் தொலைக்காட்சி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றதிகாரியாகவும் பணியாற்றிய நிஷாந்த ரணதுங்க, சித்திரை மாதம் 15ஆம் திகதி எவ்சிஐடியினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சிஎஸ்என்தொலைக்காட்சி நிறுவனத்துடனான கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே இவர் விசாரிக்கப்பட்டார்.

**பஷில் ராஜபக்ஷ**

மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் மஹிந்தவின் மிக மூத்த ஆலோசகராகவும் விளங்கிய பஷில் ராஜபக்ஷ கடந்த சித்திரை மாதம் 22ம் திகதி எவ்சிஐடியினரால் விசாரணையின் பின் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். திவி நெகும திணைக்களத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் இவருடன் பொருளாதார அமைச்சின் செயலாளர் மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் என்போரும் கைதாகினர். விளக்கமறியலில் இருக்கும் இவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதிலும் எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

**கோத்தபாய ராஜபக்ஷ**

நிதிமோசடி விசாரணை பிரிவினரால், தான் கைதாவதைத் தடுப்பதற்கான இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றிருக்கும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, வைகாசி மாதம் 20ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். சர்ச்சைக்குரிய மிக் விமான விவகாரம் மற்றும் லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் பங்கு பரிமாற்றம் என்பன தொடர்பிலேயே இவர் 6 மணித்தியாலத்தியாலங்களாக துளைக்கப்பட்டார்.

**சாலிய விக்கிரமசூரிய**

ரடா (RADA) என்றழைக்கப்படும் இலங்கை மீள்கட்டுமான அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் முன்னாள் தலைமைச் செயற்பாட்டு அதிகாரியாக கடமையாற்றிய சாலிய விக்கிரமசூரிய, வைகாசி 09ஆம் திகதி எவ்சிஜடி அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். சுனாமி [illegible] மில்லியனை [illegible] தொடர்பில் இவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 2004 சுனாமியில் வீடுகளை இழந்த வடக்கு கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களின் வீட்டு நிர்மாணத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியை இவர் துஷ்பிரயோகம் செய்தார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. மஹிந்தவின் காலத்தில் இவர் இலங்கை முதலீட்டுச்சபை, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் பெற்றோலிய வள அபிவிருத்திச் செயலகம் என்பவற்றின் பணிப்பாளர் நாயகம் போன்ற பதவிகளையும் வகித்திருந்தார்என்பது நோக்கத்தக்கது.

**சஜின் வாஸ் குணவர்த்தன**

வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராகவும் மஹிந்த ராஜபக்ஷவின் பன்னாட்டு விவகாரங்களுக்கான ஆலோசகராகவும் செயலாற்றிய சஜின் வாஸ் குணவர்த்தன, ஜனாதிபதி செயலக வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் எவ்சிஐடி விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். பின்னர் இவர் சிஐடியினரால் கைது செய்யப்பட்டார்.

**ரெகான் வெலிவிற்ற**

சிஎஸ்என் தொலைக்காட்சி நிறுவனப் பணிப்பாளரும் முன்னாள் ஜனாதிபதியின் ஊடக ஒருங்கமைப்புச் செயலாளராகவும்



பணி யாற்றும் ரெகான் வெலிவிற்ற, சித்திரை மாதம் 19ஆம் திகதிக்கு வரவழைக்கப்பட்டிருந்தார். குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம்பெற்ற முறையற்ற கொடுக்கல் வாங்கல் தொடர்பிலேயே இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இது தொடர்பில் அறிக்கை ஒன்றும் பெறப்பட்டது.

**பிரதீப் குணவரத்தன**

அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவராக விளங்கிய கொழும்பு கிழக்கு பிராந்திய ஐ.ம.சு.மு. அமைப்பாளர் பிரதீப் குணவர்த்தன மீது எவ்சிஐடியினர் வைகாசி மாதம் 16ஆம் திகதி விசாரணை நடத்தினர். அவருடைய பதவிக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மற்றும் பால்மா தொடர்பில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பிலேயே அந்த விசாரணை அமைந்திருந்தது.

**அஜித் நிவாட் கப்ரால்**

200 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த ஹெட்ஜிங் உடன்படிக்கை தொடர்பில் முன்னாள் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், எவ்சிஐடியினரால் பங்குனி 30ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். வைகாசி மாதம் இவர் எவ்சிஐடிக்கு மீள விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தபோதும், மருத்துவகாரணங்களால் விசாரணைக்குச் சமூகமளிக்கவில்லை. முன்னதாக ஹெட்ஜிங் உடன்படிக்கை தொடர்பில் முன்னாள் திறைசேரி செயலாளரான பி.பி.ஜயசுந்தரவிடமும் எவ்சிஐடியினால் அறிக்கை ஒன்று பெறப்பட்டிருந்தது.

**நந்த மல்லவாராச்சி**

விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக முன்னாள் அரசில் பணியாற்றிய மேஜர் ஜெனரல் மல்லவராச்சி விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்ற 39 மில்லியன் ரூபா முறைகேடு தொடர்பில் எவ்சிஐடியினால் வைகாசி 8ஆம் திகதி விசாரணைக்கு அழைக்கப்பட்டார். இவரிடம் நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக விசாரணை நடைபெற்றது.


**டொனால்ட் பெரேரா**

முன்னாள் விமானப் படைத்தளபதியான எயார் சீவ் மார்ஷல் டொனால்ட் பெரேரா உக்ரேன் நாட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மிக் போர் விமானங்கள் தொடர்பிலான நிதி முறைகேடு பற்றி 8 மணித்தியாலங்களுக்கு மேலாக எவ்சிஐடியினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இந்த விசாரணை சித்திரை மாதம் முதலாம் திகதி இடம்பெற்றது.

இலங்கை வான்படை 2006இல் 4 மிக் வகை போர் விமானங்களை 14,676,000 அமெரிக்க டொலர் பெறுமதிக்குக் கொள்வனவு செய்தபோது, டொனால்ட் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி பதவியிலிருந்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்வேர்ட் ஸ்னோடன் (21 ஜூன் 1983) அமெரிக்காவில் பிறந்த கணினி வல்லுநர். அமெரிக்க அரசின் உளவு அமைப்பான சிஐஏ யின் முன்னாள் கணினி நிர்வாகி (சிஸ்டம் அட்மி னிஸ்ரேட்டர்). பாதுகாப்புப் புலனாய்வு முகவரமைப்பின், உளவு நடவடிக்கை களுக்கான எதிர் நடவடிககை குறித்த பயிற்சியாளர். பின்னர் டெல் கணினி நிறுவனத்தில் பணியாற்றினார். என்.எஸ்.ஏ. எனப்படும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு முகவரமைப்பின் பணிகளைக் கவனிக்கவென டெல் நிறுவனத்தால் ஒப்பந்தம் செய் யப்பட்டவர். 2013 மார்ச் மாதம் அவர் ஆலோசனை நிறுவனமான பூஸ் ஆலன் ஹமில்டன் என்ற நிறு வனத்தில் கட்டமைப்பு ஆய்வாளராக, என்.எஸ்.ஏயின் ஹவாயிலுள்ள அலுவலகத்தில் பணிக்கமர்த்தப்பட்டார். 2013 ஜூன் மாதம் என்.எஸ்.ஏயின் பெருந்திரள் கண்காணிப்பு விவ காரத்தை (ஒவ்வொருவருடைய தொடர்பாடலையும் ஒட்டுக்கேட்கும் முறைமை) அம் பலப்படுத்தினார். 2013 மே 20ஆம் நாள் ஸ்நோடன் ஹவாயி லிருந்து ஹொங்கொங்கிற்குப் பறந்தார். இரு பத்திரிகையாளர்களை அங்கு வரும்படி அவர் பணித்திருந்தார். ஜூன் மாதத்தில் அவர்கள் ஸ்நோடனிடம் இருந்த இரகசிய ஆவணங்களை அடிப்படையாக வைத்து அமெரிக்காவின் உளவு நடவடிக்கையை அம்பலப்படுத்தி னார்கள். உலகம் முழுவதும் ஒட்டுக் கேட்டதன் மூலம் அமெரிக்கா உளவு பார்த்தவர்கள் பற்றிய விவரங்கள் வெளியாகி உலகை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. செய்தி வெளியாகி 4 நாள்களின் பின்னர் ஜூன் 9ஆம் நாள் ஸ்நோடன் தன்னை உலகுக்குப் பகிரங்கப்படுத்திக்கொண்டார். ஜூன் 14ஆம் நாள் அமெரிக்க நீதித் திணைக் களம் அவர் மீது இரு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது. அமெரிக்க உளவுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டு மற்றும் அரச சொத்தைத் திருடிய குற்றச்சாட்டு ஆகியன அவர் மீது சுமத்தப்பட்டன. இவற்றுக்காக 30 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை கிடைக்கும். ஜூன் 22ஆம் திகதி அமெரிக்கா ராஜாங்கத் திணைக்களம் ஸ்டோடனின் கடவுச் சீட்டை இல்லாமலாக்கியது. அதற்கு மறுநாள் 23ஆம் திகதி, கியூபா வழியாக ஸ்நோடன் ரஷ்யா செல்ல இருந்தார். கடவுச் சீட்டு முடக்கப்பட்டதை அடுத்து, தான் ஹவானாவின் கலம் மாறும் பயணிகள் பகுதியில் (ரான் ஸிஸ்ட் ஏரியா) 39 நாள்கள் தங்க நேரிட்டதாக அவர் பின்னர் தெரிவித்தார். அங்கிருந்தபடியே அகதித் தஞ்சம் கோரி அவர் பல்வேறு நாடுகளுக்கும் விண்ணப்பித்தார். ஒகஸ்ட் முதலாம் திகதி ரஷ்ய அதிகாரிகள் அவரது கோரிக்கையை ஏற்றனர். ஒரு வருட தற்காலிக நுழை விசைவை வழங்கினர். பின்னர் 3 வருட வதிவிட உரிமையை வழங்கியதுடன் ரஷ்யா வின் எந்தப் பகுதிக்கும் சென்று வருவதற்கான அனுமதியையும் ஒரேயடியாக 3 மாதங்களுக்கு மேற்படாத வகையில் வெளிநாடுகளுக்குச் சென்று வரும் அனுமதியையும் ரஷ்யா அரசு வழங்கி யிருக்கிறது.



எட்வேர்ட் ஸ்நோடன்

# ஓர் உரிமையின் மதிப்பு!

## எட்வேர்ட் ஸ்நோடன்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 04-06-2013 அன்று, மூன்று பத்திரிகையாளர்களுடன் சேர்ந்து ஹொங்கொங்கில் உள்ள ஒரு ஹோட்டல் அறையில் பதற்றத்துடன் இயங்கிக்கொண்டிருந்தேன். அமெரிக்காவில் கிட்டத் தட்ட ஒவ்வொரு தொலைபேசி அழைப்பையும் தேசிய பாதுகாப்பு முகவரமைப்பு (என்.எஸ்.ஏ.) பதிவுசெய்த விவகாரம் வெளியே கசிந்ததை இந்த உலகம் எப்படி எதிர்கொள்ளப்போகிறது என்று எதிர் பார்த்துக் காத்திருந்தோம். எந்தக் குற்றமும் செய் யாத அப்பாவிக் குடிமக்களை உலகமெங்கும் உள்ள ஜனநாயக அரசுகள் எப்படியெல்லாம் கண்காணித்துக் கொண்டிருந்தன என்பது தொடர்பான ஆவணங் களை அதற்குப் பிறகான நாள்களில் நானும் அந்தப் பத்திரிகையாளர்களும் வெளியிட்டோம்.

தனிப்பட்ட அளவில் சில சமயம் ஒரு கவலை ஏற்பட்டதுண்டு. எந்தவிதப் பயனும் ஏற்படாமல் போய்விடக் கூடிய விடயத்துக்காக நாங்கள் எங்கள் வாழ்க்கையைப் பணயம் வைக்கிறோமோ என்ற கவலைதான் அது. எங்கள் முயற்சியை மக்கள் அலட்சியப்படுத்தி விடுவார்களோ, வழக்கமான சந்தேகத்துடன் நடந்துகொள்வார்களோ என்றெல் லாம் பயந்தோம். ஆனால், எனது பயமெல்லாம் பொய்த்துப்போனதில் எனக்கு ஏற்பட்ட நன்றியுணர்ச் சிக்கு ஈடே கிடையாது.

ஒருசில நாள்களுக்குள் அமெரிக்க அரசு முதல் உலகப் போர் காலத்திய உளவுச் சட்டங்களின் கீழ் என்மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தியது. என்னுடன் இருந்த பத்திரிகையாளர்கள் நாடு திரும்பினால் அவர்கள் கைதுசெய்யப்படும் அபாயத்தையோ, நீதி மன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்படும் நிலை யையோ எதிர்கொள்ள வேண்டி வரும் என்று அவர் களின் சட்டதரணிகள் எச்சரித்தார்கள். எங்கள் முயற்சி களையெல்லாம் அமெரிக்காவுக்கு எதிரானவை என்றும், தேச விரோதம் என்றும்கூட குற்றம்சாட்டுவதற்கு அரசியல்வாதிகளிடையே போட்டாபோட்டி நிலவியது.

### ஒபாமாவின் இரட்டை நாக்கு

இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு மாதத் தில், என்.எஸ்.ஏயின் தொலைபேசி ஒட்டுக்கேட்புத் திட்டம் சட்டவிரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப் பளித்தது. நாடாளுமன்றமும் அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. இந்தத் திட்டத்தால் ஒரு பயங்கரவாதத் தாக்குதலைக்கூடத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதை வெள்ளை மாளிகையால் நியமிக்கப்பட்ட மேற்பார்வை ஆணையத்தின் விசாரணை கண்டறிந்தது. முன்பொருமுறை இந்தத் திட்டத்தை நியாயப்படுத்திப் பேசியதுடன், அதன் ரகசியங்கள் அம்பலமானதை விமர்சித்தும் பேசிய அதிபர் ஒபாமாகூட இப்போது அந்தத் திட்டத்தை இழுத்து மூட உத்தரவிட்டுவிட்டார்.

### விழிப்புணர்வு பெற்ற மக்களின் சக்தி

தேசப்பற்றுச் சட்டத்தின் கீழ் தனிப்பட்ட தொலைபேசி அழைப்புகளைப் பெருந்திரளாகக் கண்காணித்ததை முடிவுக்குக் கொண்டுவந்தது குடிமக்கள் அனைவரது உரிமைக்கும் கிடைத்த வெற்றியே. அதே நேரத்தில், உலகளாவிய விழிப்புணர்வில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் சமீபத்திய விளைவுதான் இது.

2003இலிருந்து ஐரோப்பாவின் பல நாடுகளில் இது போன்ற சட்டங்களும் செயல்பாடுகளும் சட்டத்துக்குப் புறம்பானவை என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற வருங்கால செயல்பாடுகள் மீது புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. பெருந் திரள் கண்காணிப்பு என்பது அப்பட்டமான மனித உரிமைகள் மீறல் என்று ஐ.நா. அறிவித்திருக்கிறது. லத்தீன் அமெரிக் காவில், பிரேசில் மக்களின் முயற்சியால் மார்கோ சிவில் என்ற இணைய சுதந்திரத்துக்கான தீர்மானம் நிறைவேறியிருப்பதையும் குறிப்பிட்டுச் சொல்லவேண் டும். விசிலூதிகளைப் (அரச இரகசியங்களை வெளி யிடுபவர்கள்) பாதுகாக்கும் புதிய சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று ஐரோப்பிய மன்றமும் வலியுறுத்தியுள்ளது.

### புதிய முன்னேற்றங்கள்

சட்டத்தின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டுப் பார்த்தால், இன்னும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கும் கருவிகளின் பாதுகாப்பை வலுவாக மாற்றியமைப்பதற்காகவும், இணையத்தின் பாதுகாப்பை அதிகரிக்கவும் தொழில்நுட்ப வல்லு நர்களெல்லாம் இடையறாது பாடுபட்டிருக்கிறார்கள். அரசுகள் பெருந்திரள் கண்காணிப்பு மேற்கொள்வதற்கு ஏதுவாக முக்கிய மான கட்டமைப்புகளில் காணப்பட்ட ரகசிய ஓட்டைகள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுத் திருத்தப்பட்டிருக்கின்றன. கணினித் தரவுகளை சங்கேத மாக்குதல் உள்ளிட்ட அடிப்படையான பாதுகாப்பு நடை முறைகள் முன்பெல்லாம் தேவையற்றவையாகக் கருதப்பட்டன. ஆனால், ஆப்பிள் போன்ற நிறுவனங் கள்கூட இப்போது அந்த வழிமுறைகளைத் தனது தயாரிப்புகளில் வழங்குகின்றன. உங்கள் தொலைபேசி திருட்டுப் போனால் கூட உங்கள் அந்தரங்கம் பாதுகாக் கப்படுவதை இந்த வழி முறைகள் உறுதிசெய்கின்றன. இதுபோன்ற கட்டமைப்பு சார்ந்த தொழில்நுட்ப மாறுதல்கள் அடிப்படையான அந்தரங்கப் பாது காப்பை நாடுகள் கடந்தும் வழங்கும்.

### பின்வாசல் முறைகள்

அமெரிக்காவின் உரிமைகளுக்கான சட்டத்தில் குறிப் பிடப்பட்டிருக்கும் சுதந்திரச் செயல்பாடுகளுக்கு அடித் தளமே அந்தரங்கத்துக்கான உரி மைதான். நாம் நீண்ட தொலைவு வந்துவிட்டாலும் அந்தரங்கத்துக்கான உரிமை மீதான அச்சுறுத்தல் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

உலக அளவில் முன்னணியில் இருக்கும் இணைய சேவை நிறுவனங்கள் என்.எஸ்.ஏயின் பெருந்திரள் கண்காணிப்புத் திட்டத்தோடு சேர்ந்து செயல்பட்டி ருக்கின்றன. வாடிக்கையாளர்களுக்காக அல்லாமல் வாடிக்கையாளர்களுக்கு எதிராகச் செயல்பட வேண்டுமென்று உலகெங்கும் உள்ள தொழில் நுட்ப நிறுவனங்களை அந்தந்த நாடுகளின் அரசுகள் வற்புறுத்துகின்றன. கைபேசிகளின் இருப்பிடம் குறித்த பதிவுகளெல்லாம் பல கோடிக் கணக்கில் இன்னமும் இடைமறிக்கப்படுகின்றன.

பின்வாசல் முறைகள் மூலம் இணையத்தின் அடிப் படைப் பாதுகாப்பை அமெரிக்க அரசு வேண்டுமென்றே பலவீனப்படுத்துவதாகத் தெரியவந்திருக்கிறது. இதன் மூலம் நம் அனைவருடைய அந்தரங்க வாழ்க்கையும் திறந்த புத்தகங்களாக்கப்படுகின்றன. சாதாரண இணையப் பயனாளிகளின் நாட்டங்கள், தனிப்பட்ட ஈடுபாடுகள், பங்கேற்புகள் போன்றவை குறித்த தரவைப் பற்றிய தரவுகள் (மெட்டா டேட்டா) வரலாற்றில் முன் னெப்போதும் இல்லாத அளவில் இடைமறிக்கப் படுகின்றன, கண்காணிக்கப்படுகின்றன.

### நமக்குப் புரியாத வகையிலா

ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள இணைய உளவு நிபுணர்கள் எல்லாம் இணைய ஊடுருவல் கண்காணிப்பைச் செய்திருக்கிறார்கள். இவற்றால் எந்தத் தாக்குதலையும் தடுக்க முடிந்ததில்லை என்பதுதான் உண்மை. நம்மால் படிக்க முடியாத வகையில் மக்கள் தங்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம் செய்வதை நாம் அனுமதிக்கத்தான் வேண்டுமா? என்று சமீபத்தில் இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வளர்ச்சியடைந்த ஜனநாயக நாடுகளில் வெளிப் படையான சமூகம் என்ற கருத்தாக்கத்தைக் காப்பாற்று வதற்காகத் தங்களின் தலைவர்களுக்கு எதிராகப் போராட வேண்டியிருக்கும் என்று புத்தாயிரமாவது ஆண்டு தொடங்கும்போது குடி மக்கள் யாருமே நினைத்துப்பார்த்திருக்க மாட்டார்கள். எனினும் அப் படித்தான் நடந்தது. அதிகாரத்தின் சமன்பாடுகள் இடம்மாற ஆரம்பித்து விட்டன. பயங்கரவாதத்துக்குப் பிந்தைய தலைமுறையை நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம்; ஒரே ஒரு துயரச் சம்பவத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் குறுகலான கண்ணோட்டத்தை இந்தத் தலைமுறை யினர் உதறித் தள்ளி விடுவார்கள்.

செப்டம்பர் 11, 2001இல் இரட்டைக் கோபுரத் தாக்கு தலுக்குப் பின்பு முதன்முறையாக ஒன்றை நாம் கண் ணுற்றோம். பதில் நடவடிக்கை, அச்சம் ஆகியவற்றுக் குப் பதிலாக மீள்தன்மை, காரண அறிவு ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கும் அரசியல் உருப்பெற்று வருகிறது.

நீதிமன்றத்தில் கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியிலும், சட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு திருத்தத்தி லும், அச்சத்தைவிட தகவல்கள்தான் பயனுள்ளவை என்பதை நாம் படம்பிடித்துக் காட்டுகிறோம். ஓர் உரிமையின் மதிப்பு என்பது அந்த உரிமை எதை மறைக்கிறது என்பதில் அல்ல, அது எதைப் பாதுகாக் கிறது என்பதில்தான் இருக்கிறது என்பதை ஒரு சமூகமாக நாம் மறுபடியும் கண்டுபிடிக்கிறோம்.

*(மூலம்: தி நியூயோர்க் டைம்ஸ், சுருக்கமாகத் தமிழில்: ஆசை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,200 வருடங்களுக்கு முற்பட்ட

## தமிழ்க் கல்வெட்டுக்கள் சங்கமம் கண்டியில்

பேராசிரியர் சி.பத்மநாதன், வேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

2013 ஆம் ஆண்டு மே மாதம் முதற் பகுதியில் ஒரு நாள் தொல்பொருட் சின்னங்களைப் பார்ப்பதற்கென்று சங்கமம் கண்டிக்குப் போகும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு, எம்மை, முன்னாள் மாகாண சபையின் உறுப்பினர் புஷ்ப ராஜா அழைத்துச் சென்றார். வற்புறுத்திக் கூட்டிச் சென்றார் என்றும் சொல்லலாம். ஆர்வமிகுதியினால் அவர் அவ்வாறு செய்தார்.

சங்கமம் கண்டியில் காட்டுப் பகுதியில் புராதனமான தொல்பொருட் சின்னங்கள் பரந்து காணப்படுகின்றன. இலங்கைத் தமிழரின் புராதன கால வரலாற்றை ஆராய்வதற்கு அவை மிகவும் முக்கிய மானவை. மத்திய கால மட்டக்களப்புத் தேசத்தின் அரசியல் சமூக பண்பாட்டுப் பாரம்பரியங்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட (கிமு) காலத்தில் உற்பத்தியானவை என்பதை சங்கமம் கண்டியிலுள்ள காட்டுப் பகுதியில் காணலாம். அந்தக் காடு விசாலமானது. வனவிருட்சங்கள் செறிந்த காடு. யானைக்காடு.

அங்குபோய்வருவதற்கானபயண ஒழுங்குகளையும் பாதுகாப்பு ஒழுங்குகளையும் நண்பர் புஷ்பராஜா கவனித்தார். நாம் அங்கே சென்ற நாள், அவர் சீருடை அணிந்தவர்கள் சகிதமாய் பாது காப்பு ஒழுங்களைச் செய்யக் கூடிய கடைசி நாள். தனது மெய்க்காவலரோடும் வேறு சில இளைஞர்களோடும் எம்மை அவர் அழைத்துச் சென்றார். எமது வரலாற்றுத் துறை மாணவரான சதானந்தனையும் அழைத்துச் சென்றோம். அவரது வகுப்பிற் பத்து மாணவர்கள் ஏனையோர் அனைவரும் பெண்கள். வனத்துக் குள் பெண்களைக் கூட்டிச் செல் வது தகாது என்பதால் சதானந் தனை மட்டுமே கூட்டிச் செல்ல முடிந்தது.

தொல்பொருள்களில் ஈடுபா டுள்ளதால் சில பயனுடைய கருமங்களை அவராற் செய்ய முடிந்தது. காட்டினுள் நுழைந்ததும், என்னை ஓரிடத்தில் நிற்கச் செய்து விட்டு மற்றவர்கள் தொல் பொருள்களைப் பார்வையிடச் சென்றார்கள். பல விநோதமான சின்னங்களையும் அவர்கள் கண்டனர். சதானந்தன் அங்கு கண்டன பற்றிச் சொன்ன விடயங்களையும் அங்கு போனவர்கள் எடுத்து வந்த ஒளிப் படங்கையும் அடிப் படையாகக் கொண்டு சில கருத்துக்களை அனுமானித்துக் கொள்ள முடிந்தது.

சங்கமம் கண்டியிலிருந்து திரும்பி யதற்கு மறுநாள் அதிரதன் எமது பயணம் தொடர்பாக பேட்டி கண்டு, எழுதிய குறிப்புக்களை கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பினார். அந்தப் பத்திரிகையின் 06.06.2013இல் வெளி வந்த வாரமலரில் அது இடம்பெற்றது. சில படங்களும் கட்டுரையோடு வெளியிடப்பட்டன. ஈமற்கல் லறை ஒன்றின் மூடி, வேறொரு துண்டமான கல் ஆகியவற்றின் கரங்களும் மட்கலங்களின் ஓடுகள் சிலவும் வெளியிடப் பட்டன. அங்கிருந்து எடுத்துவந்த சில கலவோடுகளில் எழுத்துகள் இருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

இந்த மாதம் ஒரு நாள் (06.06.2015) எமது பழைய கோவைகளைப் பார்த்த பொழுது அந்தக் கட்டுரை கைக்கெட்டியது. அதிலுள்ள படங்களைப் பார்த்த பொழுது கற்களில் எழுத்துகள் தெரிந்தன. மண் அரிப்பினால் எழுத்துகள் பெருமளவிற்கு தேய்ந்து விட்டன. அவற்றின் மங்கலான அடையாளங்கள் மட்டுமே தெரிகின்றன. ஆயினும் கடந்த சில மாதங்களில் மட்டக்களப்பு மாவட்டத்திற் கண்டுபிடித்த தமிழ்ப் பிராமிச் சாசனங்களை வாசித்த அனுபவத்தினால் இச்சாசனங்களைப் படிக்க முடிந்தது. மேல்வருவன அவற்றின் வாசகங்கள்.

1. வேள் நாகன் மகன்வேள் கண்ணன்
வேள் கண்ணன் மகன் வேள் நாகன்
2. வேள் கண்ணன் மகன் வேள் நாகன்
வேள் நாகன் மகள் வேள் கண்ணன்

இவற்றுள் முதலாவது வாசகம் ஈமக் கல்லறை மூடி ஒன்றின் இடப்பக்கத்தில் வருகின்றது. அது மூன்று தலை முறைகளைச் சேர்ந்த வேளிரைப் பற்றிய குறிப்பாகும். நாகருடைய வழமைப்படி இந்தத் தொடர் தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் எழுதப்பட்டிருக்கின்றது. ஒரு பக்கத்தையே படம் எடுத்துள்ளனர். மூடியின் எல்லாப் பக்கங்களிலும் இவ்வாறு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருத்தல் கூடும்.

கிழங்கிலங்கையில், கதிரவெளியிலும் வேறிடங்களிலும் ஈமக் கல்லறைகள் பற்றி பேசப்பட்டுவந்த பொழுதிலும் அவற்றில் சாசனங்கள் அமைந்திருப்பதாக இதுவரை எவரும் சொல்லவில்லை. எனவே எழுத்துக்கள் அல்லது வாசகம் எழுதப்பட்ட ஈமக் கல்லறை யின் மூடி ஒன்று முதன்முதலாக சங்கமம் கண்டியில் கிடைத்துள்ளமை நாகர் பற்றிய ஆய்வில் மிக முக்கியத் துவம் வாய்ந்த விடயமாகும்.

வேளிருக்கும் ஆதி இரும்புக்கால (பெருங்கற் பண்பாட்டுக்கால) சமூகத்துக் கும் இடையில் தொடர்புகள் ஏற்பட்டிருந்தனவா என்ற ஐயம் தென்னிந்திய ஆய்வாளர்கள் மத்தியில் இதுவரை நிலைபெற்றுள்ளது. இந்தக் கண்டுபிடிப்போ அந்த ஐயத்துக்கு முடிவு கட்டுகின்றது. வேளிர் பெரு[illegible] நெரு[illegible] நாகர் அந்தப் பண்பாட்டிற்குரிய சமூகத்தின் ஒரு பிரிவினர் என்பன இப்பொழுது உறுதியாகியுள்ளன.

இதேபோன்ற சாசனம் எழுதிய ஈமக் கல்லறை மூடிகள் அகழ்வாய்வு செய்த சில இடங்களில் இருந்துள்ளன. ஆயினும் அவற்றை நடத்திய மேதைகள் இந்தப் பிராந்தியத்திலே மிகுந்த பிரபல்யத்தைத் தேடிக் கொண்ட போதிலும் இந்த விடயம் பற்றி எதனையும் கூறாதமை சற்று விசனத்திற்குரியதாகும். சங்கமம் கண்டியில் இதனைப் போன்ற பல கல்லறை மூடிகள் இருப்பதாக எம்மோடு கூடிவந்த சதானந்தன் சொல்கிறார். அவற்றைப் பாதுகாப்பதும் ஆய்வு செய்வதும் அவசரமான தேவைகளாகும்.


தொல்லியல் மேற்படிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர் ஒருவர் இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய என்னும் ஊரிலுள்ள வஞ்சமடம என்னும் இடத்தில் அகழ் வாய்வு செய்து ஆறு ஈமக் கல்லறைகளையும் அகழ்வு செய்துள்ளார். அவற்றுள் நாகர் பற்றிய குறிப்புகள் அடங்கிய வாசகங்கள் இருப்பதை நேரிலே பார்த்து எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது. அங்குள்ள கல்லறை ஒன்றில் திரிசூல வடிவமும் செதுக்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பான அம்சமாகும். நாகரின் சின்னமான பாம்புகள் இரண்டின் தலை அடையாள பூர்வமாக ஒரு கல்லறையிலே வெட்டப்பட்டுள்ளமையும் தெரிகின்றது.

சங்கமம் கண்டியில் மூன்று தலைமுறைக ளிலுள்ள வேளிர்களைப் பற்றி முன்னே குறித்த கல்வெட்டு குறிப்பிடுகின்றது. எனவே சங்கமம் கண்டி கி.மு. இரண்டாம் நூற்றாண்டுகளில் வேள்புரமாக வளர்ச்சியடைந்திருந்தமை தெரிய வருகின்றது. குடித்தொகைப் பெருக்கமும் உற்பத்தி முறையினால் பெருகும் வளமும் இதற்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். அங்கே ஈமக் கல்லறைகளோடு தொடர்புடைய கல்வெட்டுக்களின் தமிழ் மொழிக்கல்வெட்டுக்கள். அவற்றின் வரிவடிவ வளர்ச்சி கி.மு. முதல் இரு நூற்றாண்டு களுக்குரியவை.

இரண்டாவது கல்வெட்டு ஒரு அரைவட்ட வடிவமான கல்லொன்றின் துண்டமான பாதத்தில் எழுதப் பட்டுள்ளது. அதில் வேள் கண்ணன் மகன் வேள் நாகன் மகன் வேள் கண்ணன் என்ற வசனமும் எழுதப் பட்டுள்ளது. நாகர்கள் பயன்படுத்திய மட்கலங்கள், கட்டடப் பொருள்கள், கூரையோடுகள் எல்லாவற்றிலும் தங்கள் பதவிப் பெயர் களை பொறிக்கும் வழக்கம் உடையவர்கள்.

சங்கமம் கண்டியிலிருந்து எடுத்து வரப்பட்ட துண்டமான சிறிய மூன்று கலவோடுகளில் வேள் நாகன் மகன் வேள் கண்ணன் என்ற தொடர் தெரிகின்றது. நான்காவது கலவோட்டிலே வேள் நாகன் மகன் என்பது மட்டுமே [illegible]படுகின்றது. ஐந்தாவது [illegible]யில் வேள் கண்ணன் என்ற பெயர் தெரிகின்றது.

சங்கமம் கண்டியில் காணப்படும் மட்கல ஓடுகளும் துண்டங்களும் ஈமக் கல்லறைகளோடு தொடர்புடையவை. அவை ஒரே காலத்தவை. அங்கு பாவனையிலிருந்த மட்கலங்கள் பெருங்கற்கால பண்பாட்டுச் சமூகத்தினர் பயன்படுத்தியவற்றை ஒத்தன வாகும். சங்கமம் கண்டி தொல்பொருட் சின்னங்கள் மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்டிருப்பதால் கிழக்கு மாகாண சபையினர் அவற்றைப் பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டிய பொறுப்புடையோராவர்.


சங்கமம் கண்டியில் மீட்கப்பட்ட தொல்பொருள்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு குடும்பமானது நாடாளு மன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியாமல் நாட்டின் சொத்துக்களைத் திருடியுள்ளது. நாங்கள் அவைகளை ஆராய்கின்றோம். எந்த வகையிலும் திருடப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் மக்களுக்குத் திரும்பக் கிடைப்பதற்கு நாம் வழிசெய்வோம்.



# கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை மீண்டும் மக்களுக்குத் தருவோம்

## ரணில் விக்கிரமசிங்க

ரம்யன்

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் தரப்பில் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் குறித்து எழுப்பப்பட்டிருந்த பிரச்சினைகளுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்த விரிவான ஒரு பதிலறிக்கையில் சுவையான பல விடயங்களை வெளியிட்டிருந்தார். அவைகளில் சிலவற்றை இம்முறை நாம் அசைபோட எடுத்துக் கொள் வோம்.

ரணில் சொன்ன விடயங்கள் இவைதான். அர்ஜுன மகேந்திரன், இலங்கையில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று தொழில் செய்து வந்த ஒருவர். அவர் விவேகமுள்ள, இந்த நாட்டை நேசிக்கும் ஒரு கல்விமான். அவருடைய முதலாவது பணியும் மத்திய வங்கியில்தான் ஆரம்பித்தது. அங்கு அவர் 11 ஆண்டுகள் பணிபுரிந்தார். பிறகு பல தனியார் நிறுவனங்களில் பல்வேறு நிறைவேற்று அதிகார பதவிகளில் பணியாற்றியுள்ளார். 2002ஆம் ஆண்டு இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவரானார். 2004ஆம் ஆண்டு வரை பணியாற்றினார். பல்வேறு அரசுகளில் பல்வேறு அமைச்சர் பதவிகளில் இருந்தவரான ஜீ.எல். பீரிஸின் தலைமையிலும் அவர் பணியாற்றியிருந்தார்.

2004 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவிக்கு வந்ததன் பின்னர் அந்தப் பதவியை விட்டுவிலகி இந்த நாட்டை விட்டு வெளியேறினார். இதற்கு ராஜபக்ஷ நிர்வாகமே காரணம். எனவே தினேஷ் குணவர்த்தன எழுப்பியுள்ள கேள்விக்கு ஒரு வகையில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ தான் பதிலளிக்க வேண்டும்.

**நாட்டைச் சூழ்ந்திருந்த பயங்கர நிலைமை**

அர்ஜுன மகேந்திரனை மட்டுமல்ல ராஜபக்ஷவுக்கு ஆதரவாளர்கள் அல்லாத அனேக மதிப்பார்ந்த மனிதர்கள் நாட்டை விட்டு வெளியேறவேண்டிய சூழ்நிலையை ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் நாட்டில் ஏற்படுத்தி இருந்தார்கள். அதுவும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு நிலைமை இன்னும் மிக மோசமாக இருந்துள்ளது. ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் மற்றும் மகேஸ்வரன் போன்ற சகாக்களை நாம் இழந்தோம். பயங்கர நிலைமை நாட்டைச் சூழ்ந்திருந்தது. இதுதான் மகேந்திரனும் நாட்டை விட்டுச் வெளியேறி சிங்கப்பூருக்குச் செல்ல வேண்டியிருந்ததன் காரணம். இல்லையென்றால் லசந்த விக்கிரமதுங்க, பிரதீப் எக்னெலிகொட போன்றவர்களுக்கு ஏற்பட்டிருந்த முடிவுதான் அவருக்கும் ஏற்பட்டிருக்கும்.

ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவி ஏற்றவுடன் ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் காலத்தில் வெளியேறியவர்களில் மகேந்திரன் உட்பட பலரும் நாடு திரும்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொருளாதார நிபுணத்துவம் இல்லாத ஒருவரை ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் மத்திய வங்கி ஆளுநராக நியமித்தார்கள். அவர் மீது நிதிக் குற்றச்சாட்டுக்கள் இருந்ததும்கூட கண்டுகொள்ளப்படவில்லை. இந்த நியமனத்தையடுத்து மத்திய வங்கியின் தினசரி செயற்பாடுகள் பிரச்சினைகளுக்கு உள்ளாகின. அதனால் பொருளாதார நிபுணர் ஒருவரின் சேவை தேவைப்பட்டது. எனவே டொமினிக் ஸ்ட்ராஸ்கானின் சேவைகள் பெறப்பட்டன. அவர் ஒரு பொருளாதார நிபுணர் என்ற முறையில் மட்டும் புகழ் பெற்றவராய் இருக்கவில்லை. அவர் வல்லுறவு வாதி என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர். அவரது பணிக்காக 500,000 அமெரிக்க டொலர் சம்பளமாக வழங்கப்பட்டது. ஆனால் பயன் என்ன? ஊழல்களும் மோசடிகளும் தான் அதிகரித்தன.

ராஜபக்ஷவின் அடிவருடிகளால் ஊழியர் சேமலாப நிதியத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் பங்குச் சந்தை விரிவடையவில்லை. அதனால் பெருமளவு கடன்களைப் பெற வேண்டியேற்பட்டது. இவைகளுக்கிடையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் ஒரு பெரிய தங்கப் பொதியை ஓர் அவுன்ஸ் 1,600 அமெரிக்க டொலர் என்ற விலையில் தருவித்திருந்தார். அது 2013 – 2014 ஆண்டுகளில் பெரும் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது.

**உங்கள் ஊழல்களை கண்டுபிடிக்கின்றார்**

முன்னைய ஆட்சியாளர்கள் செய்ததுபோல் ஸ்ட்ராஸ்கான் போன்றவர்களை நாம் கொண்டு வரவில்லை. இலங்கையில் பிறந்து வளர்ந்த பொருளாதார நிபுணர் ஒருவரைத் தான் நாங்கள் திரும்ப அழைத்திருக்கிறோம். ஆனால் அவரைக் கண்டு நீங்கள் அஞ்சுகிறீர்கள். ஏனென்றால் உங்கள் தரப்பில் நடந்துள்ள ஊழல்களை அவர் கிளறிக் கண்டுபிடித்து வெளியிடுகின்றார். ராஜபக்ஷ காலத்தில் முறைகேடாக சம்பாதித்தவர்கள் அவைகள் கிடைக்காமல் போகுமே என்று அஞ்சுகின்றார்கள். அர்ஜுன மகேந்திரன் மீது இவர்கள் சுமத்தும் பொய்யான ஊழல் குற்றச்சாட்டுக்களின் அளவைவிட 270 மடங்கு அதிகமாக ஊழல்களை இவர்கள் புரிந்திருப்பது வெளியாகியுள்ளது.

அவர்கள் ஏனைய கட்சிகளை பிளவுபடுத்துவதில் நிபுணர்கள். ஆனால் இப்போது அவர்களின் கட்சியே சிதைந்து போயுள்ளது. இதைத்தான் தெய்வத் தண்டனை என்பார்கள். அவர்கள் செய்ததே இன்று அவர்களுக்கு நடந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் பிறந்த சிலர் பின்னர் வெளிநாடுகளில் குடியேறி அங்கு குடியுரிமை பெற்றிருந்தார்கள். அதேபோல் வெளிநாட்டவர் இலங்கையில் குடியுரிமை பெறுவதும் தொழில் செய்வதும் அனுமதிக்கப்படுகின்றது. ஆனால் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாக வருவதற்கு கட்டுப்பாடு அரசமைப்பில் உள்ளது. அதையும்கூட மீறச் செயற்பட்டுள்ளது முன்னைய அரசு.

குமரன் பத்மநாதன் அல்லது கே.பி. என்பவர் வெளிநாட்டுக் குடிமகன். அவருக்கு இலங்கையின் முன்னைய அரசு பாதுகாப்பு வழங்கியது. பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக விசாரிப்பதற்கு அவரை தம்மிடம் வழங்கும்படி வெளிநாடுகள் கேட்டபோது அதனை மறுத்து தொடர்ந்து பாதுகாப்பு வழங்கி வந்தார்கள்.

ஒரு நாட்டின் குடிமகனாக வேண்டுமானால் அந்த நாட்டின் சட்டப்படி சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் அவ்வாறு சத்தியப் பிரமாணம்செய்தவர். அவ்வாறே பாலித கொஹன்ன ஆஸ்திரேலிய பிரஜையாக இருந்தார். அமெரிக்கக் குடிமகனை அழைத்து பாதுகாப்புச் செயலாளராக பதவியில் அமர்த்தியது முன்னையப் அரசு. 2005 நவம்பர் 24ஆம் திகதி அவர் பாதுகாப்பு செயலராகப் பதவி ஏற்றார். நவம்பர் 30ஆம் திகதி இரட்டைக் குடியுரிமை பெற்றார். உங்கள் கருத்தின்படி இவ்வாறு செய்வது தவறாகும்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் முதலாவது இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவர் ஜோன் எக்ஸ்ரர் என்ற அமெரிக்கர். நீங்கள் எல்லாம் அமெரிக்க குடிமகன் ஒருவர் எவ்வாறு பாதுகாப்புச் செயலர் ஆகலாம் என்பது பற்றி பேசாதது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அதேபோல் எமது வெளியுறவுத் துறையின் நிர்வாகம் ஆஸ்திரேலிய குடிமகனானஒரு வெளிநாட்டவரின் ஆதிக்கத்தில் இருந்தது பற்றியும் பேசக் காணோம். ஆனால் அப்போதெல்லாம் மௌனமாக இருந்தவர்கள்தான், இப்போது அர்ஜுன மகேந்திரனின் குடியுரிமை பற்றிக் கேள்வி எழுப்புகிறார்கள். இப்போதாவது உங்களால் சுதந்திரமாக பேச முடிவது குறித்து நீங்கள் சந்தோஷப்படவேண்டும். தினேஷ் குணவர்த்தன அமெரிக்க குடிமகன் பற்றிக் கேள்வி எழுப்பியிருந்தால் வெள்ளைவானில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டிருப்பார் அன்று.

**வெளிநாடுகளில் குடியுரிமை**

இன்னொரு விடயத்தையும் இங்கு எடுத்துக் கூறவேண்டும். ராஜபக்ஷ ஆட்சியின்போது பெரும் அளவு சொத்துக்களை குவித்துக் கொண்டவர்கள் இரகசியமாக வெளிநாடுகளில் குடியுரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். இப்படியானவர்கள் செயில்செல்ஸ், கேமேன் தீவுகள், பிரிட்டிஷ்வேர்ஜின் தீவுகள், அண்டோரா, மொனாக்கோ மற்றும் உகண்டா போன்ற நாடுகளில் குடியுரிமை பெற்றிருக்கிறார்கள்.

இலங்கை நாட்டு மக்கள் உங்களின் இன, மத, சாதி கோட்பாடுகளை முற்றாக நிராகரித்து விட்டார்கள். ஜனவரி 8ஆம் திகதி மக்கள் உங்களை மெதமுலனவுக்கு துரத்தியடித்து விட்டார்கள். அர்ஜுன மகேந்திரனின் குடியுரிமை குறித்து கேள்வி எழுப்பும் நீங்கள் இலங்கையின் நிதி ஒழுங்குவிதிகள் சட்டத்தை விரிவாகப் படித்து விளங்கிக் கொள்ள முனையவில்லை. சட்ட அடிப்படையில் ஊழல் அலட்டத்தான் உங்களுக்குத் தெரியும். ராஜபக்ஷ ஆட்சியின்போது திறைசேரி கடன் முறிகள் பொது ஏலம் இன்றி தனிப்பட்டவர்களுக்கு விற்கப்பட்டபோது நீங்கள் ஒரு சொல்தன்னும் பேசவில்லை. அதேபோல் மத்தியவங்கியில் பங்குச்சந்தையில் நிதி மோசடிகள் நடந்தபோது பேசாமல் இருந்தீர்கள் – விசாரணைகள் நடத்தப்படவுமில்லை. நாங்கள் என்ன செய்தோம்? அண்மைக் கால திறைசேரி நிதிப் பிரச்சினை தொடர்பாக விசாரிக்க குழுவொன்றை நியமித்தோம். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னிலையில் புலன் விசாரணைகள் நடைபெற வசதிகள் செய்து கொடுத்தோம். இந்த விடயத்தைப் பற்றி ஆராய நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவுக்கும் சந்தர்ப்பம் வழங்கினோம். இது ராஜபக்ஷ காலத்தில் சாத்தியமா என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ள வேண்டும். நிதி ஒழுங்கு விதிகள் சட்டத்தின்படி இலங்கைக் குடியுரிமை இல்லாத ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுவது தடுக்கப்படுவதாய் இல்லை. எனவே மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப்பட்டிருப்பது சட்டத்துக்கு மாறானது அல்ல.

நான் இரண்டு விடயங்களை இங்கு முக்கியமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். அரசின் வளங்களை வெளிநாட்டு குடியுரிமையுள்ள ஒருவர் சுரண்டிக் கொண்டு பலத்த ஊழல் மோசடிகளை செய்து கொண்டிருந்தபோது பேசாமல் இருந்த நீங்கள், வெளிநாட்டு குடியுரிமையுள்ள ஒருவர் அரசின் வளங்களை பாதுகாக்கவும் ஊழல் மோசடிகளை தவிர்க்கவும் நிதி ஒழுங்குகளை நிலை நிறுத்தவும் முயலும்போது அவருக்கெதிராகச் செயற்படுகிறீர்கள். ஊழல்வாதிகளைப் பாதுகாக்க ஓர் இரவு முழுவதும் இந்த இடத்தில் கழித்தவர்களால் ஊழலுக்கு எதிராகக் குரல் எழுப்ப முடியாமல் போய்விட்டது.

இன்னொரு விடயம் என்னவென்றால் இவ்வாறு கேள்விகள் எழுப்புவதற்கு ஆலோசனைகள் கூறுபவர்கள் பற்றியது. இவை எல்லாவற்றுக்கும் பின்னால் செயற்படுபவர், நீதிமன்றம் ஒன்றை கண்ணால்கூடப் பார்க்காத ஆனால் சட்டத்தரணி என்று கூறப்படும் ஒருவராவார்.

இறுதியாக ஒரு குடும்பமானது நாடாளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியாமல் நாட்டின் சொத்துக்களைத் திருடியுள்ளது. நாங்கள் அவைகளை ஆராய்கின்றோம். எந்த வகையிலும் திருடப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் மக்களுக்கு திரும்பக் கிடைப்பதற்கு நாம் வழி செய்வோம்.

கடந்த தேர்தலின்போது நீங்கள் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு எதிராகச் செயற்பட்டீர்கள். இப்போதும் அதையே செய்து கொண்டிருக்கிறீர்கள். நாங்கள் அதற்கு இடம் தரமாட்டோம். நாங்கள் ஜனாதிபதி யையும் அவரது திட்டங்களையும் பாதுகாப் போம். உண்மையின் பக்கம் நாம் சேர்ந்து நிற்போம். திருடர்கள் குற்றவாளிகள், ஏமாற் றுக்காரர்களை தடுத்து நிறுத்துவோம். அந்த வகையில் கண்ணியம் பொருந்திய ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் பணிபுரிவோம் – என்று ரணில் விக்கிரமசிங்க தமது அறிக்கையில் கூறியிருந் தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook வலைப்பக்கம்

Wayfarer
இம்மியளவும் கசங்காதநிலையில் பழைய புத்தகக் கடையில் தென்படும் புத்தகம் மிகமோசமானது.

ஜார்விஸ்™
காதல் கானல் நீராய் காமம் மட்டும் அருவி யாய் கொட்டுகிறது சில ஆண் பெண் உறவுகளில்....

ஒரு சிறு புன்னகையுடன் இல்லையேல் உணர்ச்சியற்ற பார்வையுடன் கடந்து போகப் பழகிவிட்டது

மனம் விட்டு அழுது வெகுகாலமாயிற்று.... வாய்விட்டு சிரித்தும்!

21 10

நித்து
பிரச்சினைக்குள் இருக்கும் வரை அது பூதமென தோன்றும். வெளி வந்து மூன்றாம் மனிதராய் நின்று தீர்வு யோசிக்கையில் பூதத்தை அடக்கும் விளக்கு அகப்படும்.

FAVORITES
3
9:10 PM - 9 Jun 2015 Details

Sri @Srncalifornia 16h

Sri @Srncalifornia
ஒன்றை ஆதரிக்க மற்றொன்றை எதிர்க்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. வெறுப் பிருந்தால் தான் அன்பு செலுத்த முடியும் என்றில்லை.

2 4

suweetha
மௌனத்தைப் புரிந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை தவறாக மொழிபெயர்ப்பு செய்யாமலிருந்தாலே போதும்

RETWEETS 19 FAVORITES 5
9:02 AM - 8 Jun 2015 Details

காதல் கவிதைகள்
என் இதயம் எனக்காகத் துடித்ததை அந்தளவுக்கு நீ உயிராகி விட்டாய் என்னோடு......!!!




## தாலி மட்டும் இல்லைன்னா மணிரத்தினம் காலி

தாலி கட்டி அவரவர் வீட்டில் வாழ்ந்தால் " அலைபாயுதே"

தாலி கட்டாமல் ஊருக்கு தெரிய வாழ்ந்தால்
" ஓ காதல் கண்மணி"

தாலி கட்டியும் வாழாமல் இருந்தால் " மௌன ராகம்"

இன்னொருவன் தாலி கட்டிய பெண்ணை கடத்திக் கொண்டு போனால் " ராவணன்"

தாலி கட்டலாமா வேண்டாமா என சிந்தித்தால் "கடல்"

ஸ்கூல் பொண்ணுக்கு தாலி கட்டினால் " நாயகன்"

ஒரு மனைவிக்கு தாலி கட்டிவிட்டு இரு மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்தால் " அக்னி நட்சத்திரம்"

ஒரு பொண்ணுக்கு இரண்டு பேர் தாலி கட்ட நினைத்தால்
" திருடா திருடா"

தாலி கட்டிய புருஷனுக்காக போராடினால் " ரோஜா"

இன்னொருத்தர் மனைவிக்கு தாலி கட்டினால் " தளபதி"

ரத்னம் " டா" .......
மணிரத்னம் " டா"



## மனைவி லவ்வர்

லவ்வர்கிட்டே பொய்சொல்லி மாட்டிகிட்டா சரணம் - மனைவிக்கு இது தெரிஞ்சுபோச்சுன்னா அப்புறம் உனக்கு மரணம்!

'தாலி'ங்கிறது சுருக்கு மாதிரி டைட்டாதான் கட்டனும்! 'டை'ங்கிறது பொண்ணு மாதிரி மென்மையாதான் கட்டனும்!

போனில் 'அப்புறம்' வார்த்தையை அடிக்கடி உபயோகித்தால் எதிர்முனையில் காதலி! 'அப்புறம் என்ன?' என்று உபயோகித்தால் எதிர்முனையில் மனைவி

குதிரைமேல நீ ஏறினா சவாரி! ஆனா குதிரை உன்மேல ஏறிச்சினா அப்புறம் உனக்கு சமாதி!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறிவேப்பிலை சாதம்



**தேவையான பொருள்கள் :**

சாதம் - 2 கோப்பை
கறிவேப்பிலை - ஒரு கோப்பை
நல்லெண்ணை - 1 மேசைக்கரண்டி
கடலைப்பருப்பு ஒன்றரைத் தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு - ஒன்றரைத் தேக்கரண்டி
கடுகு - ஒன்றரைத் தேக்கரண்டி
பெரிய வெங்காயம் - 1
மிளகுத்தூள் - ஒன்றரைத் தேக்கரண்டி
மிளகாய் - 3
பெருங்காயம் - 1 சிட்டிகை
முந்திரி - 5
எலுமிச்சை 1 பழம்
நெய் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு


**செய்முறை :**

1. சிறிதளவு நெய்யில் கறிவேப்பிலையை மொறுவலாக வறுத்து, மையப் பொடித்துக் கொள்ளவும்.
2. பெரிய வெங்காயத்தை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
3. அரிசியைச் சாதமாக வடித்து உதிரி உதிரியாக ஓர் அகன்ற பாத்திரத்தில் வைக்கவும்.
4. அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு போட்டு வெடித்ததும், கடலைப்பருப்பு, உளுத்தம் பருப்பு போட்டு சிவந்ததும், வரமிளகாய், ஒரு கொத்து கறி வேப்பிலைப் போட்டு தாளிக்கவும்.
5. பின்னர் நறுக்கிய வெங்காயம் பெருங்காயத்தூள் சேர்த்து சிவக்க வதக்கவும்.
6. பிறகு பொடித்த கறிவேப்பிலையைப் போட்டு, உப்பு சேர்த்து வதக்கவும்.
7. அதனுடன் எலுமிச்சம்பழத்தை பிழிந்து சேர்க்கவும்.
8. பின்னர் அதனுடன் மிளகுத்தூள், நெய்யில் வறுத்த முந்திரியை சேர்த்து கிளறவும்.
9. பிறகு ஆற வைத்த உதிரியாக உள்ள சாதத்தைச் சேர்த்து சாதம் குழையாமல் நன்றாகக் கிளறி அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

***குறிப்பு :***

1. இதில் சிறிது இஞ்சி துருவலைச் சேர்த்து வதக்கினால் இன்னும் வாசனையாக இருக்கும்.
2. முந்திரிக்குப் பதிலாக, வறுத்த நிலக்கடலை, வறுத்த பொட்டுக் கடலை போன்றவையும் சேர்க்கலாம்.

# கால் நகங்களை சுத்தம் செய்யும் வழிகள்!



எவ்வளவு சுத்தமாக இருக்கிறார் என்பதை அவருடைய தலை மற்றும் பாதம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறது என்பதைக் கொண்டு சுலபமாக சொல்லி விட முடியும். இந்த வகையில் பாதங்களிலுள்ள கால் நகங்களை முறையாக சுத்தம் செய்வது எப்படி என்பது பற்றி தெரிந்து கொள்வோம்.

பல்வேறு விதமான காலணியுறைகளை இறுக்கமாகவும் மற்றும் பாதங்களுக்கிடையில் காற்று போய் வர போதிய இடைவெளி இல்லாதவாறும் அணிந்தால், அழுக்கான நகங்கள் கால்களை அலங்கரிக்கும் அவலமான நிலை ஏற்படும்.

ஆனால் இந்த கால் நகங்களை சுத்தம் செய்வது மிகவும் எளிதானது.

கால் நகங்களை சிறியதாக வைத்திருக்க வேண்டும். நீளமான கால் நகங்களை வைத்திருப்பது, எந்த காலத்திலும் அழகாக இருந்ததில்லை. நீளம் குறைந்த கால் நகங்கள் சுத்தமானதாக தெரிவது மட்டுமல்லாமல் மிகவும் அழகாகவும் தோற்றமளிக்கும். மற்றுமொரு முக்கியமான விடயம் சிறிய நகங்களை சுத்தம் செய்வது மிகவும் எளிது.

நகங்களை சுத்தம் செய்ய தூரிகைகளை பயன்படுத்துங்கள். இவை கையாளுவதற்கு எளிமையானதாகவும், கால் நகங்களுக்கிடையில் உள்ள இறந்த தோல் பகுதிகளை சலனமற்று நீக்கிட செய்து,கால் நகங்களை அழகாக தோற்றமளிக்கச் செய்கின்றன

குளிக்கும் வேளைகளில் கால் நகங்களை சுத்தம் செய்ய மறந்து விடக் கூடாது. குளிக்கும் போது உடல் அழுக்கினை நீக்கவும், உடல் துர்நாற்றத்தை நீக்கவும் சோப்புகளை பயன்படுத்துவோம். அவற்றையே கால் நகங்களை சுத்தம் செய்வதற்காக பயன்படுத்த ஏன் யோசிக்க வேண்டும்? அவ்வாறு மென்மையான சோப்பைப் பயன்படுத்தும் போது, நகங்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் சுத்தம் செய்யாமல், பாதத்தின் முன் மற்றும் குதிகால் பகுதிகளையும் சுத்தம் செய்ய மறக்கக் கூடாது.

நக வெட்டிகளில் காணப்படும் நகங்களை சுத்தம் செய்யும் கருவிகளை பயன்படுத்துவதை உறுதி செய்யுங்கள். இது நகங்களை சுத்தம்செய்வதுடன் அந்தப் பகுதிகளில் உள்ள அழுக்குகளையும் நீக்கிவிடும்.



# கூந்தலில் துர்நாற்றத்தை தவிர்க்க...





கோடைகாலத்தில் அதிகப்படியான வெப்பத்தினால் காய்ந்து போன நமக்கு மழைகாலம் ஆரம்பத்தில் இதமாகத் தான் இருக்கும். ஆனால் போக போக அது நமக்கு பல்வேறு சரும பிரச்சினைகளையும், கூந்தல் பிரச்சினைகளையும் ஏற்படுத்திவிடும். குறிப்பாக கோடைகாலத்தில் அதிக பாதிப்புக்கு உள்ளான கூந்தலானது மழைகாலத்தில் நன்கு குளிர்ந்து எப்போதும் ஈரப்பதத்துடன் இருப்பதால் வலுவிழந்து இருக்கும். மேலும் கூந்தலின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கு அன்றாடம் தலைக்கு எண்ணெய் தடவி வருவோம். அப்படி தடவி வரும் போது, மழையில் நனைந்தால், முடியானது பிசுபிசுவென்று இருப்பதுடன், முகத்தில் எண்ணெய் வழிய ஆரம்பிக்கும். அதுமட்டுமின்றி, ஈரப்பதத்துடன் எண்ணெய் பசையாக இருந்தால், கூந்தலில் இருந்து ஒரு வித துர்நாற்றம் வீச ஆரம்பிக்கும். எனவே மழைகாலத்தில் கூந்தலில் இருந்து துர்நாற்றம் வீசாமல் இருப்பதற்கு, தலையை சரியாக பராமரித்து வர வேண்டும். இதற்கு [illegible] தில் [illegible] இருந்து துர்நாற்றம் வீசாமல் இருக்க என்னவெல்லாம் செய்ய வேண்டு மென்று பார்ப்போமா!

கூந்தலின் ஆரோக்கியத்துக்கு முதன்மையானது ஸ்கால்ப்பின் சுத்தம் தான். ஸ்கால்ப்பானது சுத்தமாக இல்லாவிட்டால், மழைகாலத்தில் அதிகப்படியான ஈரப்பசையினால் பூஞ்சைகள் வளர்ந்து, அரிப்புகளுடன், துர்நாற்றத்தையும் ஏற்படுத்தும்.

எனவே வாரத்துக்கு மூன்று முறை தவறாமல் தலையை –ாம்பு போட்டு அலச வேண்டும். இதனால் ஸ்கால்ப்பில் பூஞ்சைகள் படிவதைத் தடுக்கலாம். மழைகாலத்தில் எண்ணெய் பசை அதிகமாக இருக்கும் –ாம்புவைப் பயன்படுத்தக்கூடாது. ஏனெனில் இவை இன்னும் கூந்தலில் எண்ணெய் பசையை அதிகரித்து, துர்நாற்றத்தையும் அதிகரிக்கும்.எனவே எண்ணெய் பசை முடி கொண்டவர்கள், மைல்டு ஷாம்புவைப் பயன்படுத்த வேண்டும். அதிலும் ஷாம்புவிற்கு பதிலாக, நெல்லிக்காய், சீகைக்காய் மற்றும் பூந்திக்கொண்டை போன்றவற்றைக் கொண்டு கூந்தலைப் பராமரிப்பது இன்னும் சிறந்தது.

கூந்தலில்துர்நாற்றம்வீசாமல் இருக்கவேண்டுமானால், கூந்தலுக்கு ஹேர் கண்டிஷனர் பயன்படுத்த வேண்டும். அதிலும்கண்ட கண்ட ஹேர்கண்டிஷனர் களைப் பயன்படுத்தாமல், விலை அதிகமாக இருந் தாலும் நல்ல தரமான ஹேர் கண்டிஷனர்களைப் பயன்படுத்த வேண்டும் அல்லது இயற்கையான ஹேர் கண்டிஷனர்களைப் பயன்படுத்த வேண்டும். இருந்தா லும், இயற்கை ஹேர் கண்டிஷனர்களையே எப்போதும் தேர்வு செய்யுங்கள். அதிலும்எலுமிச்சைசாறு,பேக்கிங்சோடா அல்லது அப்பிள் சீடர் வினிகர் போன்றவற்றைப் பயன்படுத்தி கூந்தலை அலசுவது இன்னும் சிறந்தது. நல்ல ஆரோக்கியமான கூந்தலுக்கு உண்ணும் உணவுகளும் முக்கியமான ஒன்று. எனவே தினமும் நல்ல அளவில் நீரைப் பருகுவதுடன், பழங்கள் மற்றும் காய்கறிகளை அதி கம் உட்கொள்ள வேண்டும்.

இதனால்உடலில்நீர்ச்சத்துக்கள்அதிகம்இருக்கும்.முக்கியமாககாப்பைன் உள்ள பொருள்களை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டாம்.ஏனென்றால்,இவை வியர்வையை அதிகரித்து,ஸ்கால்ப்பை பிசுபிசுவென்று மாற்றும். மேலும் ஆல்கஹால் அதிகம் குடிப்பதையும் தவிர்க்க வேண்டும். இல்லாவிட்டால், இரத்த நாளங் கள் விரிவடைந்து, வியர்வையின் அளவு அதிகரிக்கும்.

உங்களுக்கு ஹேர் ஸ்ட்ரைனிங், ஹேர் கலரிங் போன்றவற்றை செய்ய வேண்டுமென்று இருந்தால், மழை காலம் முடியும் வரை பொறுத்திருங்கள்.

ஏனெனில் மழைகாலத்தில் இந்த செயல்களை மேற்கொள்ளும் போது, கூந்தலில் பாதிப்பு அதிகரிப்பது டன், ஸ்கால்ப்பும் அதிகம் பாதிப்புக்குள்ளாகும். எனவே இந்த செயல்களை கொஞ்ச காலத்திற்கு தள்ளி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலங்களில் அவள் வசந்தம்!

மகளிர் தினம், காதலர் தினம் ,அன்னையர் தினம் முதியோர் தினம் என்று நாம் தினங்களைக் கொண்டாடுகிறோம். கொள்கைகளைக் கொண்டாடுகிறோமா?

மறுக்கப்பட்ட கல்வி பெண்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஒடுக்கப்பட்ட பெண்மைக்கு விடுதலை. ஆனால் எது விடுதலை எது எல்லை எது சுதந்திரம் என்பதில் நமக்குள் நிறையக் குழப்பங்கள். ஆடம்பரமான விருந்து விழாக்கள் என்ற பெயரில் பரவும் மேல் நாட்டுக் கலாசாரத் தாக்கங்கள் இதுவா பாரதி விரும்பிய பெண்கள் விடுதலை?

நதி தான் செல்லும் இடத்திற்கேற்ப தன் நிறம் மாறுகிறது. காற்று தான் கடந்துவரும் பாதையின் சுகந்தத்தையோ அல்லது துர்நாற்றத்தையோ தன்னுடன் எடுத்து வருகிறது. ஆனால் நெருப்பு மாசுகளை எரித்தாலும் தான் மாசின்றி சுடர்விடுகிறது. பெண்ணும் இப்படித்தான் குற்றங்களை எரிப்பவள், குடும்ப நன்மைக்காக உழைப்பவள். இன்று இவள் தோற்றங்கள் மாறிவிட்டன என்றாலும் பண்புகள் மிச்சமிருக்கின்றன இவைகளையாவது காப்பாற்ற வேண்டாமா?

வசந்தகாலமாக இருந்த அவள் தோற்றப் பொலிவை ஏன் இழந்தாள்? அவள் வசந்த காலமாக என்றும் இருக்க வேண்டுமென்றால் அவளைச் சூழந்துள்ள இலையுதிர் காலம் மாற வேண்டும் புதிய நம்பிக்கைகள் துளிர்க்க வேண்டும் அவளின் அக்கினிக் குளியல்களை நிறுத்தி தீமைகளைச் சுட்டெரிக்கும் புதிய ஜோதியாக இவள் சுடர் விட வேண்டும் தீயினிலே வளர் ஜோதியாக அவள் திகழ வேண்டும் சுடர் விடும் இந்தக் குத்துவிளக்கின் ஒளி இருளை அகற்ற வேண்டும் இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும்

மாதா பிதா குரு தெய்வம் என்ற வரிசையை உண்மை என்று சமுதாயத்தை உணரச் செய்ய வேண்டும் அன்று தான் உண்மையில் பெண்கள் தினம் சிறப்புப் பெறும்.

அந்தக் காலத்தில் கிராமங்களில் படிப்பறிவில்லா பெண்கள் வீட்டு நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள்.

அன்பு நீரும் பண்பு வேரும் மட்டும் போதும் பாலியல் பலாத்காரங்கள் அற்ற சக மனுஷியை நேசிக்கிற நல் எண்ணம் கொண்ட நினைவு நல்லது வேண்டும் என்ற பாரதியின் வாய் மொழிப்படி நடக்கிற மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்கிற ஒரு நல்ல சமுதாயம் உருவாக வேண்டும்

இத்தனை இடர்பாடுகளின் நடுவிலேயும் பெண்கள் சாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் மறுக்கப் பட்ட கல்வி கிடைத்ததும் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றதும் தனது கருத்துக்களை வெளிப்படுத்தும் தைரியம் பெற்றதும் ஒருகாரணம்.

பெண் என்றால் தீ என்பதால் தானோ என்னவோ இவளுக்கு அருந்ததி, சுகந்தி, வசந்தி என்று பெயரிலேயே திருப்தி அடைந்து விடுகிறார்கள் போலும். தீயினிலே வளர் சோதியே என்றான் பாரதி. நெருப்பு மாசுகளை அழித்தாலும் தான் மாசின்றி சுடர் விடுகிறது அழுக்குகளை அழிக்கும் நெருப்பு தான் அழுக்கடைவதில்லை அவளும் இப்படித்ததான் தவறுகளைத் திருத்துகிறாள். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பதை நிரூபிக்கிறாள் களங்கத்தைத் துடைத்து தான் கலங்கரைத் தீபமாகச் சுடர் விடுகிறாள். அவளுக்கு சமாதி கட்டி அகல் விளக்கு ஏற்றி ஆராதனை செய்யாமல் அவளை ஒலிம்பிக் தீபமாக்கி உலகெங்கும் இவளை ஒளி வீசச் செய்யவேண்டும். அந்த நாள் தான் இனிய நாள் பெண்மைக்குக் பெருமை சேர்க்கும் நாள். அவளின் வசந்தங்கள் வரவு வைக்கப்படும் நாள். அந்த நன்நாளுக்காகக் காத்திருப்போம்

# கலக்கும் பெண்கள் கலங்கும் கண்கள்

இன்று பெண்கள் கால்பதிக்காத துறை என்று எதுவுமே இல்லை எனலாம். விமானம் ஓட்டுவது முதல், அகழ்வாராய்ச்சி வரை எல்லாவற்றிலும், பெண்கள் சாதனை படைக்க வேண்டும் என்று துடிக்கிறார்கள். அதற்காகப் பாடுபடுவ்தோடு அதற்குரிய புகழையும் பெறுகிறார்கள். ஆணுக்குச் சரி நிகர் சமானமாக, வேலைக்குச் செல்வதோடு மட்டுமல்லாமல், பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளையும் அள்ளித் தருகிறார்கள். இதையெல்லாம் பார்க்கவும், கேட் கவும் மிகுந்த பெருமையாய் இருக்கிறது.

இது ஒரு புறம் இருக்கட்டும். மற்றொரு பக்கத்தில், அதுவும், குறிப்பாக, வேலைக்குச் செல்லும் இளம் பெண்கள், விரும்பி ஏற்கும் திருமண பந்தம் என்பது தழைத்து ஓங்கும் வாழையாக இனிப்பதில்லை. மாறாக, வேப்பங்காயாகக் கசந்து போகிறது. இது நெருடலாகவும் வேதனைக்கு உரிய விடயமாகவும் இருக்கிறது. திருமணம் ஆன, குறுகிய காலக் கட்டத்திற்குள், சண்டை, சச்சரவு, கருத்து வேறுபாடு ஆகியவை வளர்ந்து கொண்டே போகிறது. புரிதலின் அடிப்படையில்தான் வாழ்க்கை என்ற எளிய சூத்திரத்தை பெண்களும் மறந்து விடுகிறார்கள். இதற்குத் தற்கால வாழ்க்கை முறை மற்றும் பெற்றோரின் வளர்ப்பு முறை மற்றும் அணுகு முறையும் பெரும் பங்கு வகிக்கிறது எனலாம்.

கல்வி, வேலை இவை இரண்டும், மறைமுகமாக ஒரு வித மன அழுத்தத்தை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றன. அதனால், பிரச்சினை என்று வரும்போது, அதனை எதிர் கொள்ளும் வழி தெரியாது உடைந்து விடுகிறார்கள். குறிப்பாகத் திருமணத்துக்குப் பிறகு, உடனிருக்கும் பெற்றோரும், சிறிய பிரச்சினைகளை ஊதிப் பெரிதாக்கி, கணவன், மனைவி இடையே இருக்கும் நெருக்கத்தின் அளவைக் குறைத்து விடுவதோடு, தேவையற்ற நேரங்களில் தேவையற்ற விதத்தில், பெண்களுக்குத் தவறான ஊக்கத்தைத் தந்து விடுகின்றனர். விளைவு– பல திருமணங்கள், மணமிழந்த மல்லிகையாகி விடுகின்றன. இதில் விந்தைக்குரிய விடயம் என்னவென்றால், தற்காலத்தில் வாழ்க்கையில் அனுசரித்துச் செல்ல ஆண்கள் தயாராய் இருக்கிறார்கள். ஆனால் பெண்கள் தயாராக இல்லை என்பதே சோக மான செய்தி.!

திருமண பந்தம் என்று வரும்போது, ஆண், பெண் இருவரும் நம்பிக்கை, விட்டுக் கொடுத்தல், பொறுமை ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டால் தான் சிறப்பான வாழ்க்கை வாழ முடியும். எனவே சிறிய பிரச்சினை, தவறான புரிதல் ஆகியவை தலைகாட்டும் போது, பெற்றோர்கள் சரியான விதத்தில் வழி காட்டுவதோடு, ஒதுங்கிக் கொள்ள வேண்டும். ஆனால் அப்படிச் செய்வதில்லை. மாறாகப் பெண்களைத் தங்கள் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் கைப் பொம்மையாக்கி விடுகின்றனர். பலர் இன்னும் ஒரு படி மேலே சென்று, பெண்களைத் தங்களுடனே வைத்துக் கொண்டு விடுகின்றனர்.வாழ்க்கை என்பது வாழ்ந்து பார்க்க வேண்டிய ஒன்று. அதைப் பெற்றோரோ, மற்றவர்களோ பெண்களுக்கு அளிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டாலே பல விவாகரத்துக்கள் மாயமாய் மறைந்து போகும். அத்துடன் உண்மையான அன்பு என்பது உறவுகளுக்குத் தளைகளும், தடைகளும் போடாது. இந்த உண்மையைப் பெற்றோர்கள் புரிந்து கொள்வதோடு, தங்கள் பிள்ளைகளுக்கு வாழ்க்கை என்பது ஏற்றம், இறக்கமுள்ளது, இன்பம், துன்பம் இரண்டும் சேர்ந்த கலவை, அதனை எப்படி எதிர்நோக்க வேண்டும் என்ற வழிமுறையைச் சிறு வயதிலிருந்து கற்பித்தால், பெண்களின் வாழ்க்கை வளம் பெறுவதோடு, குடும்ப உறவு என்னும் இழைகளும் வலுப் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.மேனன்

ஒரு கிலோ சுத்தமான ஒக்சிஜன் ரூ.1000 வாங்கய்யா, வாங்கம்மா என நல்ல காற்றை தெருவில் கூவிக்கூவி விற்பர். அப்போது எவன் வீட்டில் அதிக ஒக்சிஜன் மூட்டை இருக்கிறதோ அவன் உலகப் பணக்காரனாய் அறியப்படுவான். இதிலும் பல ஊழல் நடக்கும்.



# மெல்லத் தமிழர் இனி எப்படியிருப்பர்?

உலகமயமாக்கல், தொழில்நுட்பப் புரட்சி, தகவல் யுகம் என்பவற்றால் நாம் வேகமாக மாறி வருகின்றோம். கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பாக நாம் மாற்றமடைந்த வேகத்தைப் போல பல மடங்கு வேகமாக இப்போது நாம் மாற்றமடைந்து கொண்டிருக்கிறோம். இனிவரும் காலங்களில் அந்த மாற்றம் இன்னும் இன்னும் வேகம் பெறும். வீரியமும் பெறும். அப்படிப்பட்ட நிலையில் இன்னும் சில தசாப்தங்களுக்குப் பின்னர் தமிழர்களின் நிலை எப்படிப்பட்டதாக அமையும் என்கிற எதிர்ப்பார்ப்பு இங்கே...! ஆண் துணை இல்லாமலே குழந்தை பெற்றுக்கொள்ளும் நிலை இன்றே உருவாகியுள்ளதால் வரும் காலத்தில் பெண்கள் ஆண் துணை இல்லாமலே வாழ்வர்.

- கூட்டுக்குடும்பவாழ்க்கை முறை சிதைந்து தனித் தனிக் குடிகளானது மாதிரியே நாளை, தனிக்குடும்ப முறை ஒழிந்து தனித்தனியாக வாழ்வர்.
- வீட்டில் நடக்கும் கொண்டாட்டங்கள், துக்க நிகழ்வுகளுக்கு அழைப்பிதழ்கள் நேரில் வந்து தருவது மெல்ல மெல்லக் குறைந்து, மின் அஞ்சல் வழியாக அல்லது குறுஞ் செய்தியாக அழைப்பிதழ் வந்து சேரும். அனேகமாக நிகழ்வுகளில் பங்கேற்பவர்கள் குறைந்து வாழ்த்துக்களும் ஆசிகளும் மின் அஞ்சல் அல்லது குறுஞ் செய்தி மூலமே வந்து சேரும். தமிழர்கள் வழங்கும் அழைப்பிதழில் சிறப்பாக அழைப்பவரின் வங்கிக் கணக்கு எண் இருக்கும். வர முடியாதவர்கள் கொடுக்கவேண்டிய பணத்தை நேரடியாக அவர்கள் கணக்கில் செலுத்த நேரும். தர வேண்டிய அன்பளிப்புகள் பொதிச் சேவை ஊடாக வந்து சேரும்.
- பாடத்தை மாணவர்கள் பாடசாலை சென்று படிக்கும் நிலை மாறி, தன் வீட்டிலேயே உள்ள கணினி முன்பாகவே அமர்ந்து படிக்கும் நிலை ஏற்படும். எங்கோ இருக்கும் ஆசிரியர் பாடம் நடத்த மாணவன் வீட்டிலேயே படித்துக்கொள்வர். புத்தகங்கள் எல்லாம் குறுவட்டுகளாகவும், பென்டிரைவாகவும் மாறிவிடும். தேர்வை தனது கணினியிலேயே நேரடி இணைய வசதி மூலம் (ஒன்லைன்) உரிய ஆசிரியருக்கு மின்னஞ்சலில் அனுப்புவர்.
- வேலைக்குநேர்முகம்நடத்தும்முறைமை ஒழிந்து கணினியிலேயே நேர்முகத்தேர்வு நடக்கும்.
- அலைபேசியை அதிக நேரம் காதில் வைத்துப் பேசுவதால் இனி பன்றி காது, மலேரியா காது, காது குனியா போன்ற புதுப்புது நோய்களும் வரலாம்.
- அலைபேசி கதிர்கள் மூளையைத்தாக்குவதால் சிந்திக்கும் திறன் குறைந்து, பழுதுபட்ட மூளையை வைத்துக்கொண்டு மருத்துவரிடம் சென்று மொத்தச் சொத்தையும் இழக்கும் நிலை உருவாகும்.
- படிக்கும் (வாசிக்கும்) பண்பாடு குறைந்து, பார்க்கும் கலாச்சாரம் பெருகி விட்டதால் கண் சம்பந்தப்பட்ட புதுப்புது நோய்கள் உண்டாகி கண் மருத்துவர்களும் நன்றாக உழைக்கும் காலம் வரும்.
- ஓடிச் செய்யும் வேலைகள் குறைந்து இயந்திரத்தின் வருகையால் அமர்ந்திருந்தே செய்யும் வேலைகள் பெருகும். அப்போது கண், கழுத்து, வயிற்றுப் பிரச்சினை, இடுப்பு வலி. மூலம், மூட்டுவலி என உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நோய்கள் பெருகிவிடும்.
- நேராகச் சென்று கலியாணத்துக்குப் பெண் பார்த்த காலம் மாறி இணையம், வட்ஸ்அப், பேஸ் டைம் மூலம் பெண் பார்க்கும் படலம் ஆரம்பித்துவிடும்.
- சாப்பிட உணவகத்துக்கோ, வீட்டுக்குத் தேவையான பொருள் வாங்கவோ எவரும் வெளியெ செல்ல வேண்டியதில்லை. சோம்பேறித்தனப்பட்டுக் கொண்டு அனைத்தையும் இணையத்திலேயே செய்து கொள்வர். ஆதலால் உணவகமும், சிறப்பங்காடிகளும் வெறும் குசினிகளாக மட்டுமே இயங்கும்.
- ஒரு கிலோ சுத்தமான ஒக்சிஜன் ரூ.1000 வாங்கய்யா, வாங்கம்மா என நல்ல காற்றை தெருவில் கூவிக்கூவி விற்பர். அப்போது எவன் வீட்டில் அதிக ஒக்சிஜன் மூட்டை இருக்கிறதோ அவன் உலகப் பணக்காரனாய் அறியப்படுவான். இதிலும் பல ஊழல் நடக்கும்.
- தியேட்டரில் புதுப்படத்தை வெளியீடு செய்த நிலை மாறி, நேரடியாக அலைபேசியிலேயே பட வெளியீடு செய்து கொள்வர்.
- இன்று பாலியல் ரீதியாக எதுவெல்லாம் நம் பிள்ளைகளுக்கு தெரியக்கூடாது எனப் பொத்திப் பொத்தி வளர்த்தோமோ அந்த விசயங்கள் எல்லாம் சாதாரண ஒன்றாக மாறிவிடும். ப்பூ.. இவ்வளவு தானா என அந்தத் தலைமுறை அலுத்துக் கொள்ளும்.
- சாலைப்போக்குவரத்து குறைந்து ஆகாயப் போக்குவரத்து கொடிகட்டிப் பறக்கும். யாழ்ப்பாணத்தில் ஒருவர் விமானம் ஏறி அம்பாந்தோட்டையில் வேலை செய்து விட்டு மாலை தன் வீட்டுக்கே வந்து விடுவார்.
- நிலவிற்கு நேரடியாக ஆகாயப் போக்குவரத்து தொடங்கப்பட்டிருக்கும். ஒரு மாத தேன் நிலவுச் சுற்றுலா என ஆகாயப் போக்குவரத்து நிறுவனங்களின் விளம்பரங்கள் வீதி தோறும் பறக்கும்.
- உணவுகள் குறுகி மருந்து வடிவங்களாய் மாறிவிடும். அப்போது மூன்று நேர உணவை ஒரு தீப்பெட்டிக்குள் அடைத்துச் செல்வர்.
- நிலத்தடி நீர் குறைந்து விடும். ஆதலால் எந்த நாடு நீர் அதிகம் பெற்ற நாடோ அதுவே உலக பணக்கார நாடாக மாறும். அப்போது நீருக்காக உலகப் போர் ஆரம்பமாகும்.
- தம் மனம் போன போக்கில் ஆண் ஆணையும், பெண் பெண்ணையும் சாதாரணமாக திருமணம் செய்து கொண்டு வாழும் நிலை உருவாகும். இவர்களுக்கு அரசு வேலையில் முன்னுரிமைகூட அளிக்கலாம். காரணம் இவர்களால் மக்கள் தொகை பெருகாது.
- ஆகாயப் போக்குவரத்து அதிகரிப்பால் ஆகாயத்தில் அதிக விபத்து நடக்கும். சாவு எண்ணிக்கை கொத்துக் கொத்தாக உயரும்.
- நிலத்தில் உள்ள கனிம வளங்களை எல்லாம் சுரண்டி சுரண்டி வரும் நிலையால் ஒரு கட்டத்தில் பூமியெங்கும் எலிப் பொந்துகளாகவும், குகைகளாகவும் காட்சி தரும். அதிக மக்கள் தொகை பெருக்கத்தால் வீடு இல்லாதவர்கள் அந்த குகைகளில் குடி இருப்பார்கள். அந்தக் குகையையே வாடகைக்கு விட்டுப் பிழைக்கும், முதலாளிக் கூட்டங்கள் முளைக்கும்.
விவசாயத்திற்கு நிலம் இருக்காது, குடிக்க தண்ணீர் இருக்காது, உண்ண உணவும், உறங்க இடமும் இருக்காது. அப்போது எப்படியாவது உயிர் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களிடையே பெருகுவதன் தொடர்ச்சியாக கொள்ளை, கொலை, திருட்டு, உணவு அபகரிப்பு, நீர் அபகரிப்பு எனக் கொடுஞ்செயல்களின் கூடாரமாக பூமி மாறும்.
- நிலத்தில் மக்கள் தொகை பெருகி விட்டதால் கடலில் சிறு சிறு கப்பல் வீடுகள் முளைக்கும். அதில் குடியேறி குடும்பம் நடத்தும் நிலை உருவாகும்.
- ஒரு புறம் துன்பங்கள், துயரங்கள் அதிகம் பெருகப் பெருக, மறுபுறம் வழிபாடுகள், வேண்டுதல்களால், நேத்திக்கடன்கள் பெருகும். 24 மணி நேரமும் மக்கள் வந்து போகும் இடமாக கோயில்கள் மாறும்.



## விடை ஒன்று பகர்தாயே!?

மடத்துக்கடவை
த. மோகன்ராஜ்

நர பிணம் புசித்து நம் தேசம்
நாளுக்கு நாள் பழக்கப்பட்டு விட்டது
நிலை கெட்ட பண்பாடு – இங்கு
நீண்டே வளர்கிறது.......?

போர் மேகம் சூழ்ந்து.....
பொடிப் பொடியாக்கியது.....
பஞ்சம் தீயாய் பொசுக்கியது! – எம்
பண்பாடு அன்றும் பறிபோகவில்லை!

முள்ளிவாய்க்கால் படுகொலையும்....
முப்பது வருட போர் வாழ்வும்.....

ஒரே நாளில் இப்படித் தந்ததில்லை – சோகம்!
தாய் மண்ணில் தங்கையின் கதறலாய்.......
ஒரே நாளிதனில்!

தன்மான இனத்தின் வாழ்வு!
தலை குனிந்து நிற்கிறது!
தாய் மண்ணில்........
[illegible]
[illegible]

தந்தி அறுந்து நாதமிழந்து.....
காமுகமும் போதைவஸ்தும்.....
தலை தூக்கும் தவப்பேறு பெற்றாய்!
யாழ்.மண்ணே! தாய் மண்ணே!
இனியாவது தங்கைகளைக் காத்திடு!
மீதியுள்ள பண்பாட்டை மீட்டிடு!
இரஞ்சியே வேண்டுகிறோம்
விடையொன்று பகர் தாயே!?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காக்கா முட்டை

## தமிழ் சினிமா அவ்வப்போது நிகழ்த்தும் அற்புதங்களில் ஒன்று



சென்னையின் குப்பம் ஒன்றில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தின் இளைய பிள்ளை சின்ன காக்கா முட்டை (ரமேஷ்), மூத்த பிள்ளை பெரிய காக்கா முட்டை (விக்னேஷ்). அப்பா ஏதோ குற்றத்துக்காகச் சிறையில் இருக்கிறார் *(படத்தில் கடைசிவரை என்ன காரணம் என்பதைச் சொல்லவேயில்லை)*. அவரை மீட்டு வரப் போராடுகிறார் அவர்களுடைய அம்மா (ஐஸ்வர்யா). ஒத்தாசையாக இருக்கிறார் பாட்டி (சாந்திமணி). இந்தச் சிறுவர்கள் அவர்களின் குடும்பத்தைச் சுற்றியதுதான் காக்கா முட்டை திரைக் காவியம்.

தந்தை சிறை சென்ற பிறகு, வாழ்க்கைச் செலவைத் தனியொருவராக சில்வர் பாத்திர உற்பத்தித் தொழிற்சாலையில் வேலை பார்த்துச் சமாளிக்க முடியாததால், பிள்ளைகளின் படிப்பை நிறுத்தி விடுகிறார் தாய். சிறுவர்கள் இருவரும் தண்டவாளங்களின் ஓரங்களில் தவறி விழும் நிலக்கரியைப் பொறுக்கி, பழையது வாங்கும் கடையில் விற்று ஐந்தோ பத்தோ சம்பாதிக்கிறார்கள். அதைத் தாயிடம் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்.

இவர்களது குப்பத்துக்கு அருகே புதிதாக 'பீட்சா ஹட்' ஒன்று உதயமாகிறது. அதன் திறப்பு விழாவை சிறுவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள். நடிகர் சிம்பு வந்து அந்தக் கடையைத் திறந்து வைக்கிறார். கடைக்காரர்கள் கொடுத்த பீட்சாவைத் தின்றுவிட்டு, அது, "சும்மா அந்த மாதிரி இருக்கிறது" எனச் சிறுவர்களைப் பார்த்து சைகை வேறு செய்கிறார்.

பங்கீட்டுக்கு அரிசி கிடைக்காதபோதும் இலவசமாக ஒன்றுக்கு இரண்டு தொலைக்காட்சிகள் வீட்டுக்குள் நுழைந்து விட, விளம்பரம் வாயிலாக பீட்சா சாப்பிட ஆசைப்படுகிறார்கள் சிறுவர்கள். 299 ரூபாய் பெறுமான பீட்சாவை அவர்கள் வாங்கவோ, சாப்பிடவோ முடிந்ததா என்பதை சுவாரஸ்யமான திரைப்படமாகத் தந்திருக்கிறார் புது இயக்குநர் மணிகண்டன். மிகவும் சாதாரண சம்பவங்களால் ஆன படம்தான் என்றாலும் அந்தச் சம்பவங்கள் மூலம் சொல்லவரும் விடயம் மிகவும் ஆழமானது. அதற்குக் காரணம் சம்பவங்களில் உள்ள யதார்த்தமும் அவை காட்சிப்படுத்தப்பட்ட விதமும்தான். படம் ஒரு வித உற்சாகத்துடன் நகர்ந்து கொண்டேயிருக்கிறது. சில இடங்களில் மெல்லிய சோகம் இழையோடுகிறது. ஆனால், அது இயல்பாக இருக்கிறது. எந்த இடத்திலும் உணர்வுகளைச் சுரண்டும் போக்கு இல்லவே இல்லை. முக்கியமாக தமிழ் சினிமாத்தனம் இல்லை. ஏழை எளிய மக்களின் இயல்பான வாழ்க்கை அப்படி திரையில் வாழ்கிறது.

ஏழைகளையும் அவர்களது குடியிருப்புகளையும் மையமாகக் கொண்ட கதையில் ஏழ்மையை விற்பனைப் பண்டமாக மாற்றும் தன்மையும் அதிலிருந்து வெளிவர சினிமா சாகசங்கள் செய்யும் பா்ங்கும் துளியும் இல்லை. விளிம்புநிலை மக்களின் வாழ்வை வெளியிலிருந்து பார்க்கும் கோணத்தில் அல்லாமல் உள்ளிருந்து காட்டும் கோணத்தில் மணிகண்டன் சித்தரித்திருக்கிறார்.

அவர்களது சோகங்கள் மட்டுமின்றி, சந்தோசங்கள், அவர்களுக்கேயான சிக்கல்கள், அவற்றிலிருந்து வெளியேற அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் ஆகியவையும் பதிவாகியிருக்கின்றன. பரிதாபத்துக்குரியவர்களாக அவர்களைச் சித்தரித்து, தள்ளி நின்று உச்சுக் கொட்டும் தொனி படத்தில் எங்கும் இல்லை. பார்வையாளர்களிடத்திலும் அத்தகைய அணுகுமுறை ஏற்படத் திரைக்கதை எந்த வாய்ப்பையும் கொடுக்கவில்லை. ஒரே நகரத்தில் இரு வேறு பொருளாதாரச் சூழ்நிலையில் வாழும் மனிதர்களிடையே தென்படும் ஏற்றத் தாழ்வுகளையும் அதனால் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களையும் அநாயாசமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் மணிகண்டன். ஏழை, பணக்காரன் உறவு எவ்வளவு இயல்பாக இயைந்திருக்கிறது என்பதையும் போகிற போக்கில் படம் சொல்கிறது. தத்தம் நிலைகளுக்காக யாரும் யார் மீதும் கோபம் கொள்ளவில்லை, அதேநேரம் ஏழை என்பதற்காகச் சுயமரியாதையையும் விட்டுக்கொடுக்கவில்லை.

மணிகண்டனுக்கு இது முதல் படம் என்பது ஆச்சரியமளிக்கிறது. காக்கா முட்டையை எடுத்துக் குடிக்கும் காட்சியில் பெரியவன் மூன்று காக்கா முட்டைகளில் ஒன்றைத் தனக்கும், மற்றொன்றைத் தம்பிக்கும் தந்துவிட்டு இன்னொன்றைக் காக்காவுக்காக வைக்கும் காட்சி நெகிழவைக்கிறது. ஏழ்மையின் நேர்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஆனால் பணக்காரர்கள் அந்த காக்கைக் கூட்டையே மரத்தை அடியோடு வெட்டிச் சாய்ப்பதன் மூலம் சிதறடிக்கிறார்கள்.

தோசை மாவில் பீட்சா செய்ய முயலும் பாட்டி, பையன்களைப் பார்க்க முடியாமல் தவிக்கும் அப்பா என்று பல காட்சிகள் மனதைத் தொடுகின்றன. பீட்சா கடை நிர்வாகத்தின் அணுகுமுறை, பொதுப் பிரச்சினையை அணுகுவதில் ஊடகங்களின் போக்கு, அரசியல்வாதிகள், அவர்களின் பின்னால் திரிபவர்களின் நடவடிக்கைகள் ஆகியவை யதார்த்தமாகவும் வலுவாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. "நாளைக்கு ஆர்ப்பாட்டத்துக்கு வந்துரு, நூறு ரூபாயும் பிரியாணியும் தராங்களாம்" என்னும் வசனம் யதார்த்தத்தைப் பளிச்சென்று புரியவைக்கிறது. சிம்புவைப் பயன்படுத்தியுள்ள விதம் படத்துக்கு சுவையைக் கூட்டுகிறது.

இந்தக் கதையை எல்லோரும் பார்க்கும்படியான சுவாரசியமான சினிமாவாக்கியதில் திரைக்கதைக்கும் ஒளிப்பதிவுக்கும், படத்தொகுப்புக்கும் முக்கியப் பங்கு உள்ளது. மணிகண்டனே ஒளிப்பதிவையும் மேற்கொண்டுள்ளார்.

சென்னையின் குப்பத்தைப் பிளந்துகொண்டு போய் வருகிறது கமரா. குப்பத்து மனிதர்கள், அழுக்கான ஆடைகள், சுகாதாரமற்ற தெருக்கள், தனிக் கழிப்பறைகூட இல்லாத குடிசைகள், அருகிலே ஓடும் கூவம் இத்தனையையும் கொஞ்சம்கூட சினிமாத்தனமே இல்லாமல் அப்படியே அள்ளியெடுத்து வந்திருக்கிறார் மணிகண்டன். மனிதர்கள் மீதும், வாழ்க்கையின் மீதும் நம்பிக்கை தரும் சினிமாவாக இது இருக்கிறது என்றால் அதற்கு முக்கியக் காரணம் படத்தைத் திரையில் தந்த விதம். திரை மொழி புத்துணர்ச்சியூட்டக்கூடியதாக உள்ளது. படத்தின் வண்ணமும் வசீகரமானதாக அமைந்திருக்கிறது. படத்தின் பக்க பலம் சிறுவர்கள் ரமேஷும், விக்னேஷும். அற்புதமாக நடித்திருக்கிறார்கள். நுணுக்கமான உணர்வுகளை அவர்களிடமிருந்து பெற்றிருப்பதில் மணிகண்டனுக்கு எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஐஸ்வர்யா, சாந்திமணி, சூது கவ்வும் ரமேஷ், பாபு அண்டனி, கிருஷ்ணமூர்த்தி, ஜோ மல்லூரி என அனைவருமே படத்தின் உயிரோட்டத்துக்கு உதவுகிறார்கள். வாழ்வு மீதான நம்பிக்கை துளிர்க்கச் செய்யும் ஆக்கபூர்வமான ஆற்றல் படம் முழுவதும் உள்ளது. பிற்பகுதிக் காட்சிகளில் சற்றே எட்டிப் பார்க்கும் நாடகப் பாணியிலான திருப்பங்களை ஒதுக்கிவைத்துவிட்டால் பிசிறற்ற, விறுவிறுப்பான, யதார்த்தமான கலைப் படைப்பு என்று இந்தப் படத்தைத் தயங்காமல் சொல்லிவிடலாம்.

வசனங்கள் இயல்பானவை. ஆனால் ஆழமானவை. படத் தொகுப்பாளர் கிஷோரும் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியவர். எந்தக் காட்சியும் தேவையான அளவுக்கு மேல் நீளவில்லை. பொலிதீன் பையில் தண்ணீரைப் பிடித்துவந்து பாத்திரத்தை நிரப்புவதைப் போகிற போக்கில் ஒரு ஷொட்டில் சாதாரணமாகக் காட்டி விடுகிறார். அழுக்கான களத்தை எடுத்துக் கொண்டு நேர்மறையான உணர்வை எழுப்பும் ஆரோக்கியமான படத்தைத் தந்திருக்கும் மணிகண்டனும் இதைச் சாத்தியமாக்கிய தயாரிப்பாளர்கள் நடிகர் தனுஷ், இயக்குநர் வெற்றி மாறன் ஆகியோரும் தமிழ் சினிமாவுக்குப் புதிய வழியைக் காட்டியுள்ளார்கள். பொதுவாக விருதுகள் பெறும் படமென்றால் அழுது வடியும் படங்கள் என்ற எண்ணத்தை மாற்றி ஆரோக்கியமான கலகலப்பைத் தந்திருக்கிறது காக்கா முட்டை. நகைச்சுவை படம் முழுவதும் இழையோடியிருக்கிறது.



பெருங்கவலை என்னவென்றால், இந்த அழகான படத்தை இங்கிருக்கும் எந்தத் தியேட்டரிலும் பார்க்கக் கிடைக்கவில்லை என்பதுதான். திருட்டு விசிடி தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் தியேட்டரில் பார்ப்பதுதான் இந்தப் படத்துக்கும் பார்ப்பவருக்கும் மதிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ச. புருசோத்தமன்
தரம்–2
மு/ முத்துஐயன்கட்டு
அ.த.க. பாடசாலை



அ.றெமிங்கன்
தரம்–9
கொக்குவில் இந்துக்
கல்லூரி




கொட்டும் மழை கொட்டட்டும்
வாழ்வு நன்றாய் செழிக்கட்டும்
விழுந்து நின்ற பயிர்களெல்லாம்
நிமிர்ந்து நின்று சிரிக்கட்டும்

தாகம் தணிந்து தேசம் என்று
நம்மைப் பார்த்து சொல்லட்டும்
நீரின் யுகம் தெரிந்த எமக்கு
வாழ்வு எப்போதும் ஜொலிக்கட்டும்




ஆழகான அழகான பேனை
விதவிதமான அழகில்
பிடித்து எழுதும் வசதி
எழுதும் எழுத்து வர்ணம்

ஜொலிக்கும் கலரில் பேனை
தொட்டுப் பார்த்தால் கடினம்
எழுத எழுத பெருமை
எழுதிப் பார்த்தால் அருமை

ஜெ.பி[illegible]

# மனம் திருந்திய மகள்



ஒரு ஊரில் புலவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அந்தப் புலவர் மிகவும் பண்புள்ளவராகவும் திறமை மிகுந்தவராகவும் இருந்ததால் பல நண்பர்கள் அவரைப் பார்க்க வருவார்கள்.

ஒரு முறை புலவர் நோய்வாய்ப்பட்டார். படுக்கையில் இருந்த அவரைப் பார்க்கத் தினமும் நண்பர்கள் வந்த வண்ணம் இருந்தனர். புலவரின் மகளுக்கு வந்தவர்களை உபசரித்துச் சலித்து விட்டது. சற்று அலட்சியமாகவே நடந்து கொண்டாள்.

ஒருநாள் அடுத்த கிராமத்திலிருந்து ஒரு புலவர் தனது நண்பனைப் பார்க்க வந்தார். சிறிது நேரம் இருவரும் அன்புடன் பேசிக் கொண்டிருந்தனர். படுத்திருக்கும் புலவர் நண்பனை உபசரிக்க எண்ணியவர் தனது மகளை அழைத்தார். அம்மா, இவருக்குப் பருகப் பால் கொண்டு வா என்று கூறினார், அவள் தான் அலட்சியமாக இருப்பவளாயிற்றே. அவளும் பாலை ஒரு குவளையில் கொண்டு வந்து கொடுத்தாள்.

அந்தக் காலத்தில் பாலை ஆடை நீக்குவதற்காக துணி வைத்திருப்பார்கள். அந்தத் துணியை ஒவ்வொரு முறை வடிகட்டிய பின் துவைத்து உலர்த்தியிருப்பார்கள்.

ஆனால் அந்தப் பெண் துணியை அப்படியே வைத்திருந்து உபயோகப்படுத்தினாள். அதனால் பாலைக் குடித்த புலவர் சற்றே முகம் சுளித்தார். ஏன் புலவரே, பால் என்ன கசக்கிறதா? என்றாள் அந்தப்பெண்.


உடனே புலவர் புன்னகை மாறாமல் இல்லையம்மா, பாலும் கசக்கவில்லை. துணியும் கசக்கவில்லை என்றார். தான் செய்த தவறை சிலேடையாகச் சொன்ன புலவர் முன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மனம் திருந்தினாள் புலவரின் மகள். பெரியோரை அலட்சியப் படுத்தினாலும் அவர்கள் அதை நாகரிகமாக வெளிப்படுத்துவார்கள் அவர்களே உயர்ந்தோர்.

## பொது அறிவு

- இலங்கையின் முதல் ஜனாதிபதி
  சேர்.வில்லியம் கொபல்லாவ
- இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர்
  குளோடியஸ் தொலமி
- இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர்
  கேணல் ஒல்கொட்
- இலங்கை சித்திர சிற்பக் கலை ஆராய்ச்சியாளர்
  ஆனந்த குமாரசுவாமி
- இலங்கையில் மரத்தளபாடத்துக்கு புகழ்பெற்ற இடம்
  மொறட்டுவ
- இலங்கையின் உயரமான அணைக்கட்டு
  விக்டோரியா
- இலங்கையின் இயற்கைத் துறைமுகம்
  திருகோணமலைத் துறைமுகம்
- இலங்கையின் தேசாதிபதியாக இருந்த முதல் இலங்கையர்
  சேர். ஒலிவர் குணதிலக

சி.சுவேத்தா
யாழ்.வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை





தி.பிருத்வி,
வளர்மதி முன்பள்ளி கொக்குவில்

சுரபி,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலத்து ஊற்று

தொடர்கதை

தேவி பரமலிங்கம்

மாலை மயங்கும் ரம்மியமான சூழல்! ஒளிபரப்பும் மின்கம்பங்களின் வெளிச்சமும் சாய்ந்து செல்லும் இயற்கை ஒளியும் சங்கமிக்கும் குளிர்ச்சியான பொழுதில் பாலசிங்கத்துடன் கதைத்தவாறே பாமாவை எதிர்பார்த்து கோவிலுக்கு முன்பாகக் காத்து நின்றான் கணேசன்.

அவனது விழிகள் ஆவலோடு கோவிலுக்கு வந்து செல்பவர் மீது மேய்ந்து கொண்டிருப்பதை பாலசிங்கமும் அனுபவித்து நின்றான். காதலர்வாழ்வில் தோன்றிய தடுமாற்றங்கள் கணேசனையும் பாதித்து இருந்ததைப் புரிந்து கொள்ள இயலாமலா போய்விடும்?

தனிமையாக சங்கீத பாடம் எடுக்கச் செல்லும் பாமாவுக்கு சமீபமாக இருக்கும் கோவிலுக்குப் போகவா துணை வேண்டும்? இன்று தனியவே வர இருந்த அவளோடு தம்பி ராஜனும் சேர்ந்து கொண்டான். அதனால் கரவு கொள்ளாமல் கந்தையர் கோவிலுக்குப் போகவிட்டிருந்தார். யாராவது துணையோடுதான் பாமா வருவாள் என்று நினைத்திருந்த கணேசனுக்கு தம்பியுடன் வந்துள்ளது தென்பைக் கொடுத்தது.

கோவிலுக்கு தொலைதூரத்தில் அவளைக் கண்டுகொண்டபோதே கணேசனுக்கு ஒருவித பதற்றமும் தோன்றி இருந்தது. கோவில் வீதியில் கணேசன் நிற்பானோ என்று துளாவிய பாமாவின் பார்வையில் பாலசிங்கத்துடன் கணேசன் நின்றதும் பட்டுவிடுகிறது. இருவர் பார்வையும் சங்கமித்த போதில் அனுபவித்த சுகானுபவம் இதுநாள் வரை அடைந்திருந்த தவிப்புக்களுக்கு சாமரம் வீசி இதம் கொடுத்ததாகவே உணர்ந்தனர்.

"மச்சான்..! ஆள் வருகுது... வேறொருவரும் இல்லை. தம்பியார்தான் கூட வாறான்.... நல்லதாப்போச்சுது இல்லையே..!"

தன்னுள் ஏற்பட்ட குதூகலத்தை பாலசிங்கத்துக்கு வெளிக்காட்டி அனுபவித்தான் கணேசன். பாமா தானடைந்த அனுபவத்தையாரிடம்வெளிக் காட்டிக் கொள்வாள்?

தனக்குள்ளே ஜீரணித்து கணேசனுடன் சங்கமித்த பார்வையில் அழைப்பு விடுத்தவளாக கோவிலுக்குள் நுழைந்தாள்.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்த கணேசனும், பாலசிங்கத்தோடு கோவிலுக்குள் புகுந்தான். கோவிலின் உள்ளே நெருக்கமாக இருந்தது. பக்தர்வழிபாடுகளில்மூழ்கிவிட்டிருந்தனர். ராஜன் அக்காட்சிகளில் தன்னையும் மறந்து ஏமிலாந்தி நின்றான்.

"பாமா நீயுமா என்னை வெறுக்கிறாய்..?" அவளை நெருங்கி நின்ற கணேசன் சுற்று முற்றும் கவனித்துக் கேட்டபோது பாமாவுக்கு இதயமே வெடித்து விடும் போலிருந்தது. பாலசிங்கம் அப்பால் கவனித்து கொண்டே நின்றான்.

"இல்லை... இல்லை... நானுங்களைச் சந்திக்க எவ்வளவு ஏங்கிக்கொண்டிருந்தன் தெரியுமா..?" பாமா கேள்விக்கு பதில் சொல்லிக்கொண்டே கோவிலில் வழிபடும் கடமைகளையும் நிறைவேற்றினாள்.

மற்றவர்கள் சந்தேகக் கண் கொண்டு தம்மை நோக்காவிதமாய் கணேசனும் பாமாவும் அங்கே அபிலாசைகளைக் கொட்டித் தீர்த்தனர். பாமாவினுடைய பதிலைக் கேட்டதுந்தான் கணேசனுக்கு நெஞ்சில் தென்பே பிறந்தது.

கோவிலுள் நிற்பதே இனிமையாக அமைந்தது அவனுக்கு.

"உங்கட அம்மா, அப்பா... என்னை வெறுக்கக் காரணமென்ன..? நான் எவ்விதக் குறையும் விடவில்லையே..!" அவளிடம் மறுபடியும் கேட்டான் கணேசன்.

இந்தக் கேள்விக்கு எப்பிடி பதில் சொல்வதென்பதில் பாமாவுக்கு சங்கடமாக இருந்தது. பெற்றோர் கற்பிக்கும் சிறுமையை அவனிடமே சொல்ல நேர்ந்தும்விட்டதால் அவளுக்கு அந்தச் சங்கடமான சூழ்நிலை தோன்றியுள்ளது.

"அதை எப்பிடிக் கணேஸ்... உங்களிட்டைச் சொல்லுவன்..!" உணர்ச்சி பாவத்தில் அவள் கூறியதுஅவனுக்குவிபரீதஎண்ணங்களையே நினைக்கவும் வைத்தது. "இதுகாரும் நினைத்தகாரணம் இல்லாமல் வேறேதுமா இருந்து விட்டால்...? சமூகத்தில் அவதூறு பரப்பும் காலத்தில் அப்படி ஏதுமா?" இவ்விதம் எண்ணத் தோன்றுவதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

"அது என்னவாக இருந்தாலும் சொல்லவே வேணும் இல்லாட்டி என்ர நெஞ்சே வெடித்து விடும் பாமா..." அவன் இவ்வாறு கூறியதும் இதயமே நெகிழ்ந்து போயிற்று பாமாவுக்கு. இத்தனை நாள்களும் அறியாமல் அவனுடைய இதயம் எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதை அப்போதே அவளால் உணரமுடிந்திருந்தது.

"நீங்க குறைஞ்ச சாதியாம்... அப்புடித்தான் கதைச்சுக் கொண்டினம்..."

பாமா சொன்னபோது எங்கெங்கே அலைந்து



> "இல்லை... இல்லை... நானுங்களைச் சந்திக்க எவ்வளவு ஏங்கிக்கொண்டிருந்தன் தெரியுமா..?" பாமா கேள்விக்கு பதில் சொல்லிக்கொண்டே கோவிலில் வழிபடும் கடமைகளையும் நிறைவேற்றினாள்.

கொண்டிருந்த எண்ண அலைகள் ஓரிடத்தில் குவிந்து கொண்டதால், அவனுக்கு நிம்மதிப் பெருமூச்சுப் பிறந்தது. அந்த நிம்மதியால் வேறெந்தக் களங்கமும் கற்பிக்கப்படவில்லை என்ற உண்மை இனித்தது.

"அதைப்பற்றி உன்ர எண்ணமென்ன..?"

மனதை அரித்துக் கொண்டிருக்கும் கேள்வியைப் போட்டுடைத்தான் கணேசன். அவளுடைய பதிலே தம்மை இணைத்து வைக்கமுடியும் எனக்கருதியதால் அந்தக் கேள்வியும் முக்கியமாய் அமைந்தது.

"அதில் வெறுக்கக் கூடியதாய் என்ன இருக்கு கணேஸ்...?" அவளின் பதில் கணேசனுக்குத் திருப்தியாக இருந்ததால், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அப்பால் நிற்போர் மீது பார்வையைச் செலுத்தினான். பாலசிங்கம் சிரித்ததைப் பார்த்த அவனும் பதிலுக்குச் சிரித்தான்.

கோவிலுள் பூசையைப் பார்ப்பவர், அர்ச்சனை செய்பவர், காணிக்கை செலுத்துவோர் தத்தமது வேலைகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். சிலர் புதிதாக கோவிலுள் நுழைவதும், வழிபாடுகளை முடித்த சிலர் வெளியேறுவதுமாக இருந்தனர்.

இயல்பாகத் தம்மை வழிபாட்டில் அர்ப்பணித்து இருந்தாலும் பாமாவும் கணேசனும் கிடைத்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தவும் தவறவில்லை. ராஜன் கோவில் புதினங்களில் லயித்து விட்டதால் இவற்றைக் கவனிக்காமல் பாமாவின் கைகளில் இழுபட்டான்.

"இப்ப எங்க இருக்கிறீங்க..? வசதியா இருக்கிறீங்களா..? சாப்பாடு எல்லாம் எப்புடி..?"

அக்கறையோடு கேட்டதைக் காதுற்ற அவனுக்கு அவளில் மேலும் அபரிமிதமான பாச உணர்வு ஊறியது. அவன் வளர்த்திருந்த மாறுபட்ட எண்ணங்களுக்காக வெட்கிக் கொண்டான். பாமாவில் வைத்திருக்கும் அபிப்பிராயத்தை மேலும் உயர்த்திக் கொண்டது அவள் அவனிடம் விசாரித்த பாங்கு.

"அதில நிக்கிறார் நண்பர். அவரிருக்கிற போடிங்கிலதான் இருக்கிறன்... எல்லா வசதிகளும் இருக்கு ஒண்டைத் தவிர... சாப்பாடு கடேலதான்..."

கணேசன் குதூகலமாகச் சொல்வதைப் பார்த்த பாமாவுக்கு கவலைகள் பறந்து போயிற்று. அவன் குறிப்பிட்ட அந்த ஒன்று எது?

"ஒண்டைத் தவிர எண்டீங்க எதை..?" மனதில் பட்டதைப் பட்டெனப் போட்டுடைத்தாள் பாமா.

"அது... இதுதான்..."

சுற்று முற்றும் பார்த்து விட்டு அவளைச் சுட்டிக்காட்டியதும் நாண ரேகைகள் அவள் முகத்தில் தோன்றி மறைந்ததைக் கணேசனும் கவனித்து அனுபவித்தான். மௌனமாக கோவில் ஆராதனைகளில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டனர் இருவரும்.

"அதுசரி பாமா..! இஞ்சைதான் சந்திக்க முடியுமா..? வேறெங்கேயும்..." மௌனத்தைக் கலைத்தான் கணேசன்.

கணேசனிடம் கேள்வி பிறந்தபோதுதான், பாமாவுக்கு சங்கீத வகுப்புக்குப் போய் வரும் நினைவு வந்தது. அறிந்து இருக்காததாலேயே, கேள்வி பிறந்ததுடன் வீதிகளில் அவனைக் காணவும் முடியாமல் இருந்ததென்னும் நினைவு ஓடிற்று அவளுக்கு!

"தெரியாதென்ன..? சங்கீத வகுப்புக்குப் போறனான்.. தினமும் ரெண்டு மணித்தியாலம்.... புதுச்செட்டித் தெருவிலுள்ள ஒரு வீட்டில்.. மாலைமூண்டுமணியிலிருந்து அஞ்சு மணிவரை... அந்நேரங்களில் சந்திக்கலாம்."

அவசர அவசரமாகச் சொல்லியவள். நேரம் வெகுவாய்ப் போய்விட்டதை உணர்ந்து கணேசனிடம் விடை பெற்று ராஜனைக் கூட்டிக் கொண்டு நடந்தாள். கணேசனும், பாலசிங்கத்துடன் கோவிலில் இருந்து வெளியேறினான். உள்ளத்தில் நிம்மதி ஏற்பட்டதை இப்பொழுது அவனால் அனுபவிக்க முடிந்திருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா



# அன்னத்தைக் கொட்டாதே! ஆபிரிக்காவை மறக்காதே

மனிதர்களுக்கு இறைவனால் தரப்பட்ட மிகப்பெரிய சொத்து அன்னம். இந்த அன்னத்துக்காகவே நாம் அயராது பாடுபட்டுக் கொண்டு இருக்கின்றோம். கல்வியில் ஒவ்வொரு பாடங்களைப் புதிது புதிதாகப் படிக்கும்போது எமக்கு ஆசீர்வாதம் தருவது அன்னமேயாகும். அன்னத்திலிருந்து தான் அனைத்தும் வெளிச்சமாகின்றன. எப்படி என்றால், ஆலயம் தொடக்கம் அரசு வரை, வீடு தொடக்கம் வேலைத் தலம் வரை, அந்தமான் தொடக்கம் ஆபிரிக்கா வரை, குழந்தை தொடக்கம் கோடீஸ்வரர் வரை, விவசாயிகள் தொடக்கம் விண்வெளி வீரர் வரை அன்னம் பிரதான உணவாக இடம்பிடித்துள்ளது.

அன்னம் என்றால் – சோறு என்று எத்தனை பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள்? அன்னமிட்டகை, அன்னதானம், அன்னப் பறவை, அன்னாபிஷேகம், அன்னசத்திரம், அன்னக்கொடி, அன்னம்மா, அன்னலிங்கம், அன்னாங்கை, அன்னம்மாச்சாரியார் – என அன்னம் என்ற மங்களகரமான சொல்லை வைத்து அட்சய பாத்திரமாய் வாழ்ந்தவர்கள் இப்போதும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எம்முன்னோர்கள் அன்னத்தைத் தெய்வமாப் போற்றிக் கைகூப்பி வணங்கித்தான் சாப்பிடுவார்கள். தண்ணீரால் சுற்றி ஈசான மூலையில் இறைவனுக்காக்கி, காகத்துக்கு வைத்து கருடபகவானைப் பார்த்து வணங்கிய பின்னர்தான் சோற்றிலே (அன்னத்திலே) கைவைப்பார்கள்.

வள்ளுவரின் மனைவியோ படைத்த சோறில் ஓரிரண்டு வாழையிலையிலிருந்து தவறி மண்ணிலே விழும்பட்சத்தில், ஊசியால் அவற்றைக் குற்றி நீரிலே வடிவாக அலம்பி, மீண்டும் உணவாகப் பெறுமதியாக்கினாராம். இவ்வாறு அன்னத்திற்குக் கொடுத்த மதிப்பு போற்றுவதற்கும் வாழ்த்துவற்கும் உரியது. எனது அம்மா அடிக்கடி சொல்லித் தந்த பாடம்: சோற்றைக் கொட்டாதீர்கள்; ஆண்டவனுக்கே ஏற்காது, சோற்றைக் கொட்டிச் சிந்தாதீர்கள்; ஆண்டவன் கோபிப்பார், சோற்றிலே மிச்சம் வைக்காதீர்கள்; ஆண்டவனுக்குப் பிடிக்காது. சிறுபிள்ளைதொடக்கம், அம்மாவின்கட்டளையை மீற முடியாதவர்களாக, சோற்றைக் கொட்ட மாட்டோம், சோற்றைக் கொட்டிச் சிந்தமாட்டோம், சாப்பிட்ட பின் மிச்சமும் வைக்க மாட்டோம். ஆதலினால் ஆண்டவன் எங்களோடு இருந்தார். ஆனால் இப்போது ஆண்டவன் எங்களோடு இருப்பாரென்று எப்படிச் சொல்ல முடியும். இப்போது நாங்கள்தான் கடவுள் என்று எண்ணிக்கொண்டு இருக்கின்றோம். இதுதான் பக்தனின் வேதனை.

ஆபிரிக்காவில் சில நாடுகள் பட்டினியால் வாடுகின்ற செய்தியைப் பார்த்து வேதனையடைகின்றோம். லட்சோப லட்ச மக்கள் இறக்கின்ற தறுவாயில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இலங்கையில் ஒவ்வொரு வீடுகளிலும் சிந்துகின்ற, அல்லது கொட்டப்படுகின்ற அல்லது வீசப்படுகின்ற அன்னத்தை ஒன்று சேர்த்து, கணக்கெடுப்போமாக இருந்தால், ஆபிரிக்காவில் பட்டினியால் தவிக்கின்ற ஒரு லட்சம் பேருக்கு ஒரு நேர உணவைத் திருப்தியாக வழங்கலாம் என்பது என் கருத்து. அடுத்ததாக இலங்கையில் நடைபெறுகின்ற திருமண, ஏனைய சடங்குகளிலே வீசப்படுகின்ற சோற்றை ஒன்றுசேர்த்து கணக்கெடுப்போமாக இருந்தால், ஐம்பதினாயிரம் பட்டினியாளர்களுக்கு ஒரு நேர உணவாவது வழங்கலாம்.

இலங்கையில் குறிப்பாக ஆலயங்களில் நடைபெறும் அன்னதானங்களின்போது வாழையிலையோடு வீசப்படும் அன்னத்தை ஒன்று சேர்ப்போமாக இருந்தால், ஒரு லட்சம் பட்டினியால் வாடும் குழந்தைகளுக்கு மூன்று நேர உணவு கொடுப்பதற்குத் திருப்தியாகப் போதும். மேற்சொன்னவாறு நாம் எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறோமா? இல்லையே! ஏன் அந்தச் சிந்தனையைச் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றோம்.

சந்நியான் ஆச்சிரமத்தில் தினமும் நடைபெறும் அன்னதானத்தின்போது, அன்னத்தைக் கொட்டாமல், சிந்தாமல், அளவோடு வாழையிலையில் போட்டு அன்னத்தைப் போற்றுகின்ற பக்குவத்தைக் கண்டு, நாம் வணங்குகின்றோம். இதனாலன்றோ ஆச்சிரமங்கள் மதிக்கப்படுகின்றன. சதா இறைவனையே எண்ணுகின்ற அடியார்களுக்கு அன்னதானம் பெறுமதியாக அமையும்.

ஆலயத்தொண்டு செய்கின்றவர்கள், இறைவன் புகழ் பேசுபவர்கள், இறைபுகழ் பாடுபவர்கள், இறைவனுக்கு உள் ளத்தால் வழிபாடாற்றுகிறவர்கள், அங்கப்பிரதட்சணம் செய்பவர்கள், ஆசார சீலராய் விரதம் நோற்பவர்கள், இயலாதவர்கள், நோய் வாய்ப்பட்டவர்கள், வீடுவாசல் இல்லாவதவர்கள், அம்மா அப்பா இல்லாதவர்கள், தாரமிழந்தவர்கள், இடம்பெயர்ந்தவர்கள், பசுக்கள், வாய்விடாச் சாதிகள் என அன்னதானம் சுவறுமாயின் இரண்டு கையெடுத்துக் கும்பிடலாம். விழுந்தும் கும்பிடலாம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 373

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ✿ | 5 |
| 6 | | ✿ | 7 | | ✿ | 8 | |
| 9 | | 10 | | ✿ | 11 | | |
| | ✿ | | ✿ | 12 | | ✿ | |
| ✿ | 13 | | 14 | | ✿ | 15 | |
| 16 | | | | ✿ | 17 | | ✿ |
| 18 | | | ✿ | 19 | | | 20 |
| 21 | | ✿ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:.............................................

பூரணமான தபால் விலாசம்: .............................................

.............................................

கையொப்பம்:.............................................

### இடமிருந்து வலம்

1. கட்டுப்பாடு, ஆதிக்கம், இல்லாத நிலை
6. அமைப்பு/வடிவம்
7. பாடல் யாப்பவன்
8. குளிர்மைத் தன்மை
9. கணவன்-மனைவி
11. காட்டு விலங்கொன்று
12. மழைக்காலம்
13. கால் இல்லாதவன்
15. உனது
16. சூரியன்
17. விலங்குகளின் உறைவிடப் பரப்பு
18. பாம்பு ரகம்
19. காலணி ஆபரணம்
21. சாப்பிடு
22. கடலில் விளையும் ஒரு சங்கு வகை

### மேலிருந்து கீழ்

1. உயிர் வாழ்க்கையின் வெளிப்பாடு
2. தகைமைத் தன்மை
3. தினசரி மாறுவது
4. சூரிய வம்சத்தை இந்தக் குலம் என்றும் கூறுவர்.
5. புலமை வாய்ந்தவன்
8. ஒரு குறியீடு
10. நகரம்
11. புகையின் கரிய நிறப் படிவு
12. தாவர உண்ணி விலங்கொன்று
13. சிவன் - பார்வதியின் இளைய புதல்வன்
14. பலவந்தமாக
15. ஊர்வன வகை விலங்கு
16. தொடக்கமே குறிப்பிட முடியாதது
17. நேரத்துடன் தொடர்புடையது
19. பலவல்ல
20. செய்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 371 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)சகவாசம் (5) சக (7) மருங்கு (8) சதிர் (9)கனிதல் (11)துகில் (13) விலாசம் (15) வலி (17) பனி (18) பதிகம் (21) மதியம் (22) ஊன் (23) மதில் (24) பிரதானி

**மேலிருந்து கீழ்**

(1) சமத்துவம் (2)கரு (3)வாங்கல் (4) சகுனி (5) சதி (6) கர்வம் (8) சல்லாபம் (10) தவி (12) கிலி (14) சனி (16) புதிய (18) பதில் (19) கம்பி (20) கன்னி (21) மதி (22) ஊதா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.373 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (24.06.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.373 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 28.06.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 371 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
பொன்.சஜீவன்,
விநாயகபுரம்,
துணுக்காய்.

**2 ஆம் பரிசு**
சாந்தகுமார் பிரகாஸ்,
நெல்லியடி மெ.மி.த.பாடசாலை,
கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
வாகினி கிருபாகரன்
இல.6 சேர்.பொன்.இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
சி.தர்மகுலராஜா,
களபாவோடை,
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

**5 ஆம் பரிசு**
ஏ.பெஞ்சமின்,
இல.25 வேளாங்கன்னி வீதி, சாவல் கட்டு, மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

செல்வி.பா.சிவகாமி இலக்குமிபதி,
பழைய தபால் நிலைய வீதி,
சங்கானை.

த.முகுந்தன்,
நாவலடி, கரணவாய்,
கரவெட்டி.

திருமதி பி.தாமோதரம் பிள்ளை
தபாற்கந்தோர் வீதி, பெற்றா,
மன்னார்.

**சொற்சிலம்பம் போட்டி 371 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருசுவில் தமிழ்தாசன்



# முரட்டு வாழ்க்கை

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிவப்பு நிற மின் குமிழ்கள் மங்கிய வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன. மின் விசிறிகள் வேகமாகச் சுழன்றடித்து இதமான காற்றைத் துப்பிக் கொண்டிருந்தன.

இரவு ஒன்பது மணிக்கு மேலாகியும் கனகசுந்தரம் அந்த இடத்தை விட்டு நகர்வதாயில்லை. நன்றாகப் போதை ஏறிவிட்டது. இருந்தாலும் இன்னும் ஒரு 'பெக்' பருகித்தான் போகவேண்டுமென்று அவரின் உள்மனம் சொல்லிக்கொண்டது.

"என்ன கண்டறியாத வாழ்க்கை! குடும்பமும் மண்ணாங்கட்டியும்" தன்னையுமறியாது சலித்துக் கொண்டார் கனகசுந்தரம்.

பருகிவிட்டு வைத்திருந்த வெற்றுச் சாராயப் போத்தல், எஞ்சிப் போயிருந்த சொற்பமான கொக்கோ கோலா, முழுவதுமே தீர்ந்து போயிருந்த முட்டை வறுவல் பிளேற் என்று அவர் முன்னால் பரந்து கிடந்தன. இன்று மட்டும் கணிசமான பணத்தைக் காலியாக்கியிருந்தார். நினைக்கும்போது அவரையுமறியாது பெருமூச்சொன்று பிரசவமாகி மறைந்தோடியது.

கனகசுந்தரத்தின் முன்னிருக்கையில் அமர்ந்திருக்கும் இருவர், அளவுக்கு மீறிய மதுபோதையால் ஏதோ வாக்குவாதப்பட்டுக்கொண்டிருந்தனர். பக்கத்தில் மொட்டைத் தலையன் ஒருவன் பலத்த சத்தமிட்டு ஓங்காளித்துக் குடித்த எல்லாவற்றையும் வாந்தியாகக் கக்கிக்கொண்டிருந்தான். பார்க்க வயிற்றைக் குமட்டிக் கொண்டுவர மிகவும் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டார். மறுபுறத்தில் பழைய சினிமாப் பாடல்களைப் பச்சைப் பிழையாகக் கத்திக் கொண்டிருந்தான் ஒரு வயோதிபன்.

இவைகள் எல்லாவற்றையும் பார்க்கப் பார்க்க கனக சுந்தரத்துக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. ஒழுக்கமில்லாத அறிவிலிகளும், மூடர்களும் முரடர்களும் வந்துபோகும் இந்த நரக விடுதிக்குள் அவரும் வந்துபோக வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டதை எண்ண எண்ண அந்தப் போதை நிலையிலும் அடக்க முடியாது அழவேண்டும் போன்றிருந்தது அவருக்கு.

துட்டனைக் கண்டால் தூர விலகி, கண்ணியமானவர்கள், கல்விமான்கள், ஒழுக்க சீலர்களுடன் பழகி அவர்களையே தனது வாழ்க்கையின் வழிகாட்டிகளாக எண்ணி வாழ்ந்த கனகசுந்தரம் இன்று காட்டுமிராண்டிகளுடனும், கயவர்களுடனும் ஒன்றாய் அமர்ந்திருந்து, ஒன்றாக மது வருந்தித் தன்னுடைய மதிப்பான வாழ்க்கையை மண்ணாக்கிக் கொண்டிருக்கின்றார்.

"மது நிம்மதியைக் கொடுக்கும் ஒரு அற்புதமான நிவாரணி" யாரோ சொன்னதை இவரும் நம்பினார். அப்படியே மதுவிடம் தஞ்சம் கோரினார். அவர் எதிர்பார்த்த நிம்மதி கிடைத்ததோ இல்லையோ, அதனிடம் சரண்புகுந்து விட்டார் தன்னை மறந்து.

அரச அலுவலகம் ஒன்றில் மதிப்பான பதவி, அதற்கேற்ற ஊதியம், அழகான மனைவி, ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்றாய் இரண்டு குழந்தைகள் இவை எல்லாவற்றையும்விட இனியென்ன வேண்டும்? அவரைத்தான் கேட்க வேண்டும்.

வயது நாற்பது நாற்பத்திரண்டுக்கு மேல் தேறாது. ஒல்லியான உடல் வாகு. சதா சிரித்த முகம். துர்ப்பழக்கங்கள் என்று எதுவுமேயில்லை. அனைவருடனும்கனிவாகக்குழைந்து பேசும் பண்பு. இப்படிப்பட்டவர் கடந்த மூன்று மாதங்களாகவே தனது பழக்கங்களையும் கோலங்களையும் மாற்றிக்கொண்டு விட்டார். இவைகளுக்குரிய காரண காரியங்களை யாராலும் அறிய முடியவில்லை. ஒருவேளை அவரின் மனைவி, பிள்ளைகளுக்குப் புரியுமோ என்னவோ!

"அம்மோய்! நீ பொய் யெண்டால் இருந்து பார்! சுமன் அந்தக் கார்த்திகாவைத்தான் கலியாணம் செய்யப் போறான். அவளைச் செய்தாற்தானெண அவளின்ரை குடும்பத்தைப் பழிவாங்கலாம். ஏற்கனவே அவன் இப்பிடித்தான் திட்டம் போட்டிருக்கிறான். கதை எப்பிடிப் போகப்போகுது எண்டு நீ பாரன்."

கனகசுந்தரத்தின் பிள்ளைகளில் மூத்தது ஆண். அடுத்தவள் பெண். மூத்தவன் படித்த குறையில் திரை கடலோடித் திரவியம் தேடவென லண்டனுக்குப் போய்விட்டான். மாதா மாதம் ஏதோ சம்பாத்தியத்தில் அனுப்புகின்றான். அடுத்தவள் லக்சிகா சாதாரணதரத்துடன் படிப்புக்கு 'குட் பாய்' சொல்லிவிட்டாள். தனக்குச் சாதாரண படிப்பே போதுமென்பது அவள்வாதம். மேலும், படிக்கும்படி தந்தை வற்புறுத்தினார். அவள் மசியவில்லை தாயாரோ இதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. லக்சிகா 'லச்சறி' வாழ்க்கையிலேயே ஓடிக்கொண்டிருந்தாள்.

வீட்டு முற்றத்துப் பூஞ்செடியில் அழகான இரண்டு வண்ணத்துப் பூச்சிகள் பறந்தோடி விளையாடி மகிழ்ச்சியில் லயித்திருந்தன. அவைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த லக்சிகா அப்போது தான் சுய நினைவு வந்தவளாகப் பரபரப்படைந்தாள்.

"எணே அம்மா! நேரம் ஆறு ஐம்பதாய்ப்போச்சு கெதி யாய்வாணை!" குரலெடுத்துக் கத்தினாள்..

"ஓமடி! நான் வாறன் நீ ரிவி யைப் போடடி"

கழிப்பறைக்குள்ளிருந்து பம்பரமாய் ஓடி வந்து கொண்டிருந்தாள் மாலதி. இவள்தான் கனகசுந்தரத்தின் வாழ்க்கைத் துணைவி. கதிரையில் அமர்ந்திருந்தபடி ஈரக் கைகளைச் சட்டையிலே தேய்த்துத் துவட்டிக் கொண்டாள். இன்னும் நாடகம் ஆரம்பமாகப் பத்து நிமிடங்களிருக்கின்றன. அப்படியிருந்தும் அதைப் பார்ப்பதற்கு இத்தனை அவசரம்.

"பாரடி! ஐயோ கடவுளே! உவன் காவேரியை கைகழுவிப் போட்டுக் கயல்விழியோடைதான் சேரப் போறான் போலை! கெட்ட ராசுக்கோல்! உப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யுற வங்களையெல்லாம் வெட்டித் தள்ள வேணும்."

"ஓமம்மா! உவனிலை எனக்கு அப்பவே ஒரு சமசியம்" அவன்ரை மூஞ்சையைப் பாத்தாலே ஒரு மாதிரித்தான் கிடக்கு.

"பொறடி பொறு கத்தாதை! என்ன நடக்குது எண்டு பாப்பம்"

மாலதிக்குக் கையுமோடவில்லைக் கர்லுமோடவில்லை. இந்த சீரியல் மிக விறுவிறுப்பாகப் போய்க் கொண்டிருக்கிறது. எப்படி முடியப் போகுதோ என மனமடித்துக்கொண்டிருந்தது.

மாலதிக்கும் மகள் லக்சி காவுக்கும் இப்போதுள்ள பெரிய பிரச்சினை இதுதான். இது முடிய இனி எட்டு மணிக்கு, நினைத் தாலே இனிக்கும் தொடர். அருமையான காதல்கதை. அதை நினைத்தாலே லக் சிகாவுக்கு இனிக்கும். ஏன்! தாய் மாலதிக்கும் தான்.

"அம்மோய்! நீ பொய்யெண்டால் இருந்து பார்! சுமன் அந்தக் கார்த்திகாவைத்தான் கலியாணம் செய்யப் போறான். அவளைச் செய்தாற்தானெண அவளின்ரை குடும்பத் தைப் பழிவாங்கலாம். ஏற்கனவே அவன் இப் பிடித்தான் திட்டம் போட்டிருக்கிறான். கதை எப்பிடிப் போகப்போகுது எண்டு நீ பாரன்."

லக்சிகா கதை யின் எதிர்வுகளை சரியாக அனுமானித்துச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவர்களுடைய ஊகங்கள் என்றைக்குமே தவறிப்போனது கிடையாது. எத்தனை காலமாக எத்தனை விதமான நாடகத் தொடர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இருவரிடமுமிருக்கும் அனுபவங்களைக் கொண்டு அவர்களும் இனி வரும் காலங்களில் சீரியல்களை தயாரித்து விட்டாலும் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அந்தளவுக்கு நாடகத் தொடர்களையே தமது முழுநேரப் பணியாக்கிக் கொண்டவர்கள்.

* * *

நேரம் இரவு பதினொன்றைத் தாண்டிவிட்ட நள்ளிரவுப் பொழுது எங்கும் நிசப்தமாயிருந்தாலும் எங்கேயோ ஒருசில தெரு நாய்களின் சில்மிசங்களும் இல்லாமலில்லை. அவைகட்கு ஒத்துவது போலச் சண்முகலிங்க வாத்தியாரின் இரண்டு நாய்க்கடுவன்களும் போட்டி போட்டுக் குரைத்துக் கொண்டிருந்தன. அவைகளிரண்டும் பொல்லாத சூரன்கள். நாய்க்கென்றொரு குரைப்பு. பேய்க்கென்றொரு குரைப்பு. பாம்புக்கென்று ஒருவிதக் குரைப்பு. வீம்புக்கென்று ஒன்று. ஆனால் இப்போது குரைக்கும் குரைப்பு மனிதருக்குரியது.

(18 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நான் ஆயள் கைதியாய்!

நீ என்னுடன் இல்லாத பொழுதுகளை
எழுத்துக்களாய் மாற்றி வைத்திருக்கிறேன்
என்றாவது உன் விரல்கள் - அந்த
எழுத்துக்களைத் தீண்டும் என்பதால்....

தொலைந்து போன வாழ்க்கையைத்
தேடிக் கொடுத்துவிட்டு - நீ
தொலைந்து போனது ஏன்.....?
நான் சிறை செல்லவில்லை
கம்பி எண்ணவில்லை....
ஆனாலும்
வாழ்க்கை எனும் கூண்டுக்குள்
ஆயுள் கைதியாய்......

எஸ்.தாசி
சுண்டுக்குளி

## குருட்டு வாழ்க்கை



தொடர்ச்சி.....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சண்முகலிங்கம் வாத்தியார் சரியாக அனுமானித்துக் கொண்டார். சேவையிலிருந்து ஓய்வுபெற்ற வாத்தியாருக்கு இரவில் சரியாகத் தூக்கம் வருவதில்லை.

எங்கேயோ வெல்லாம் அலைந் துலைந்து ஏராளமான புத்தகங்களைக் கொண்டு வந்து விடிய விடியக் கண்விழித்துப் படித்துக் கொண்டேயிருப்பார்.

இரவு வேளைகளில் அந்தத் தெரு வழியாகப் போகின்றவர்கள் யாருமே அவர் பார்வையிலிருந்து தப்பவே முடியாது.

"கடவுளே! உந்த மனிசனுக்கு ஏன் இப்பிடியொரு நிலைமையோ! படிச்ச இடத்துக்குப் புல்லு சாகாது. குடிவெறி பொண்டாட்டியெண்டு தெரியாது. இப்ப இப்பிடியொரு கேடுகெட்ட குடிகாரனாய்ப் போச்சுதே!" கவலைப்பட்டு உச்சுக் கொட்டினார் வாத்தியார்.

வீட்டின் வெளி விறாந்தை ஜன்னலுக்குள்ளால் கனகசுந்தரத்தின் உருவம் துலாம்பரமாகத் தெரிந்தது. ஷேர்ட்டைக் கழற்றித் தோளிலே போட்டிருந்தார். ஒரு காலில் செருப்பு. மறு செருப்பு அவர் கையில். அலுவலகப் பை அவரது வலது தோளிலே அனாயாசமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. பார்ப்பவர்கள் அவரை ஒரு அரச உத்தியோகத்தன் என்று கர்ப்பூரம் அணைத்துச் சத்தியம் செய்தாலும் நம்ப முடியாத பரதேசிக் கோலத்தில் தள்ளாடிய நடையில் போய்க் கொண்டிருந்தார். சண்முகலிங்கம் வாத்தியார் மீண்டும் நீண்டதொரு பெருமூச்சைப் பிரசவித்துத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

இரவு பதினொரு மணிக்கு முடிவடையும் நாடகத் தொடர் இப்போது முடிந்திருக்கும். மனைவியும் மகளும் நல்ல தூக்கத்தில் விழுந்திருப்பார்கள். கனகசுந்தரமும் போய்த்தன்பாட்டிலே படுக்கையில் விழ வேண்டியதுதான். இது தான் அவருடைய இப்போதைய வாழ்க்கை நிலை. இப்போது மட்டுமல்ல கிட்டத்தட்ட எப்போதுமே இப்படித்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் முடியவில்லை. மெல்லத் தன்னுடைய போக்குகளை மாற்றிக் கொண்டார்.

முன்பெல்லாம் வழமையாக அலுவலகத்திலிருந்து ஆறுமணிக்கெல்லாம் வீடுசேருமவர் வந்தகையுடன் தனது துணிமணிகளைத்துவைத்துக் காய வைத்துக் கால்முகம் அலம்பி வீட்டுக்குள் நுழைபவருக்கு ஒரு தம்ளர் தேநீர் கூடக் கிடைக்காது.

தேநீர் கொடுக்க வேண்டிய மனைவியும், மகளும் நாடகத்தில் லயித்துப் போய் இருப்பர். வெக்கத்தைவிட்டுக் கேட்டுப் பார்த்தாலும் கிடைப்பதில்லை. அதிகாலை வேளை அலுவலகத்துக்கு அரக்கப்பரக்கச் சென்று உழைத்துக் களைத்துச் சோர்வடைந்து வந்திருக்கும் கணவனுக்கு ஒரு தம்ளர் தேநீர் கொடுக்க முடியாதளவுக்கு அந்த வீட்டை தொலைக்காட்சிப்பெட்டி ஆட்சி செய்து கொண்டிருந்தது.

தாய் எப்படியோ! மகள் என்றாலும்—சே! நடக்கவே நடக்காது. மகள் லக்சிகாவும் சுத்தமாகத் தாயினுடைய போக்குளையும் பழக்கவழக்கங்களையுமே ஒத்திருந்தாள். கட்டிய மனைவியுடன் அன்பாக ஆசையாகப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பேயில்லை. பன்னிரண்டுமணி. அதாவது நள்ளிரவு நாடகம் முடிந்தவுடன் சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாகத் தங்களை மறந்து தூங்கி விடுவார்கள். மீண்டும் மறுநாள் காலை ஒன்பது மணிக்குமேல் விழித்துக் கொண்டால் மாதர் சங்கம், சமுர்த்திச் சங்கம் என ஊர்ச் சோலிகள் ஏராளம். தாயுடன்கூடவே மகளும் இணைந்து கொள்வாள். கிட்டத்தட்ட இரண்டு தோழிகள் போன்றே காணப்பட்டனர்.

கட்டிய கணவனைவிடப் பெற்ற அப்பனைவிட தொலைக்காட்சித் தொடர்களிலே அவர்கள் ஆர்வமாயிருக்க இங்கே ஆதரவில்லாத நிலையில் கொம்பு கொழுவில்லாத செடியொன்று திசை மாறிப் போகின்றது. அன்பு மழையின்றிப் பயிரொன்று பாழ்பட்டுப் போகின்றது. நிஜவாழ்வை மறந்து நிழல் வாழ்வைப்பற்றி நிற்கும் மாலதி போன்ற மதியிழந்த பெண்களினால் கனகசுந்தரம் போன்ற எத்தனை அப்பாவிகள் இப்போதும் எம் மண்ணிலே...

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**14.06.2015 முதல்
20.06.2015 வரை**



### மேடம்

உடல்நலத்தில் ஆரோக்கியம் மேம்படும். திட்டமிட்ட பணியை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சி தரும். புத்திரர்களின் செயற்பாட்டிலுள்ள குறைகளை சரிசெய்ய வேண்டி வரும். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை, கருத்து ஒற்றுமை கொள்வார்.



### இடபம்

குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். செலவில் சிக்கனம் பின்பற்ற வேண்டும். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். சிரமங்களை மன உறுதியுடன் சரி செய்வீர்கள். இல்லறத் துணையின் ஆறுதல் வார்த்தை, நம்பிக்கை தரும்.



### மிதுனம்

அதிக உழைப்பால் பணவரவு திருப்திகரமாகும். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பேச்சு, செயல், நேர்மை வழியில் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் நற்செயல், பெருமை தேடித் தரும். எதிரிகள் கூட உங்களிடம் அன்பு கொள்ளும் சூழல் உருவாகும். இல்லறத் துணை வழிசார்ந்த உறவினரால் உதவி கிடைக்கும்.



### கடகம்

சொல்லும், செயலும் வசீகரமாகும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரர்கள், உற்சாக மனதுடன் செயற்படுவர். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை, உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வார்.



### சிம்மம்

முயற்சி முழு அளவில் நிறைவேறும். தங்கையின் அன்பு, நெகிழ்ச்சி தரும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். புத்திரர்கள், பிடிவாத குணத்துடன் செயற்படுவர். நேரம் தவறாமல் உண்பதால், ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத் துணை விரும்பிய பொருளை, வாங்கித் தருவீர்கள்.



### கன்னி

பணிகளில் தைரிய மனதுடன் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்களின் எண்ணங்களை புறக்கணிக்க வேண்டாம். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் பேச்சும், செயலும் சிறப்பாக அமையும். எதிரிகள் விலகிப் போகிற நிலை உண்டாகும். இல்லறத் துணையின் ஒத்துழைப்புடன் பணவசதியைப் பெருக்குவீர்கள்.




### துலாம்

மனதில் நம்பிக்கை வளரும். ஆர்வமுடன் பணிபுரிவீர்கள். பேச்சில் நியாயம், தர்மம் இருப்பினும், இடம், பொருள் உணர்ந்து பேசுங்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரர்களின் நற்செயலை ஊக்கப்படுத்துவீர்கள். கஷ்டமான சூழல் விலகும். இல்லறத் துணையின் செயலில் குறை கண்டுபிடிப்பதை தவிர்க்கவும்.



### விருச்சிகம்

பேச்சில் கடுமையை குறைப்பதே உடலுக்கும், மனதுக்கும் நல்லது. உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். புத்திரர்களிடம் அனுசரித்து நடப்பதன் மூலமே, அவர்களின் அன்பைப் பெற முடியும். இல்லறத்துணை இன்ப, துன்பத்தில் பங்கு கொள்வார். தொழில், வியாபாரத்தில் இடையூறு இருந்தாலும், தாமதமின்றி சரிசெய்து விடுவீர்கள்.



### தனுசு

சாதனை நிகழ்த்தும் எண்ணத்துடன் செயற்படுவீர்கள். புகழும், பணமும் கிடைக்கும். சேமிப்பு கூடும். தம்பி, தங்கைகளின் திருமண பேச்சு முன்னேற்றம் பெறும். புத்திரர்களின் செயற்திறன் அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். இல்லறத்துணை, நல்ல ஆலோசனை சொல்வார்.



### மகரம்

நல்ல குணம் உள்ளவர்களின் உதவி கிடைக்கும். உடன்பிறந்தவர்களுக்கு ஓரளவு உதவுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பணவரவு சுமாராக இருக்கும். புத்திரர்களின் எதிர்காலம் சிறக்க, கடும் முயற்சி மேற்கொள்வீர்கள். உடல்நலத்துக்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம். இல்லறத்துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.



### கும்பம்

உங்களுக்கு புதன், சந்திரன் மட்டுமே நற்பலன் தருவர். சொல்லிலும், செயலிலும் நிதானம் வேண்டும். புகழ்ந்து பேசுவோரிடம் இருந்து விலகுவது நல்லது. பயணத்தில், பாதுகாப்பு வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். புத்திரர்களின் சிந்தனையில் நல்ல மாற்றம் ஏற்படும். சொத்து பராமரிப்பில், நம்பகமானவர்களுக்கு மட்டும் இடம் தர வேண்டும்.



### மீனம்

வாழ்வில் வளம்பெற, நல்ல வாய்ப்பு உருவாகும். பணவரவு அதிகரிப்பால், மனதில் நிம்மதி பிறக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர்கள் அறிவுத்திறனில் மேம்பட்டு, பெருமை தேடித்தருவர். கடனை அடைக்கவாய்ப்புக்கிடைக்கும். இல்லத் துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையோலை இராமன் க(ா)தைகள்

## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

ம.பா.மகாலிங்கசிவம்

பனையோலை ராமன் சேருக்கு சகோதரியுடன் உறவு அப்பிடியிப்பிடித்தான் எண்டாலும், மச்சானோடை உறவு எப்படி இருந்தாலும் மருமக்களிடம் மிகுந்த பாசங்கொண்டவர் சேர்.

அவர்களின் குறும்புத் தனங்களை ரசிப்பதிலும் கெட்டித்தனங்களை ஊரெங்கும் புளுகுவதிலும் அவருக்கு அலாதிப் பிரியம். ஒரு நாள் தனது முன் வீட்டுக்காரருக்கு மருமக்கள் படிப்பில் மிகவும் கெட்டிக்காரர்கள் என்று கூறினார். தன்பிள்ளைகளை விட இவர்கள் கெட்டித்தனமாக இருப்பதில் பொறாமை கொண்டமுன் வீட்டுக்காரர்,

சின்ன வயதிலை கெட்டிக்காரராக இருக்கிற பிள்ளையள் வளர மொக்காகிப் போய்விடும் என்றார் மிகக் குரூரமாக.

"அப்படியெண்டா நீங்க சின்ன வயதிலை சரியான கெட்டிக்காரனா இருந்தனியளோ?" என்று படக்கென்று கேட்டுவிட்டார் ராமன் சேர். அதுக்குப் பிறகு அந்தாள் ராமன் சேரோடு கதை பேச்சுக் கிடையாது.

ஒருநாள் இவரது சின்ன மருமகன் வீதியாற் சென்ற ஒரு பெண்ணை எடே, எடே என்று கூப்பிட்டான். இதைக்கேட்டுக் கோபமடைந்த அந்தப்பெண் ராமன் சேரிடம்,

சேர் உங்கடை மருமகன் என்னை எடே எண்டு கூப்பிடுறான் என்று கோள்மூட்டினாள். அவள் கண்ணுக்கு முன்னாலேயே மருமகனைக் கூப்பிட்டுக் காதை முறுக்கிக் கன்னத்தில் ஓர் அறை கொடுத்து விட்டுச் சேர் சொன்னார்,

"ஒரு தமிழாசிரியரின்ரை மருமகன் பொம்பிளையளை எடே எண்டு கூப்பிடக் கூடாது. எடியே எண்டுதான் கூப்பிட வேணும். சரியே!"



தனது தங்கைக்கு முதலிரண்டு பிள்ளைகளும் பெண்களாகப் பிறந்து விட்டது ராமன் சேருக்குப் பெருங் கவலையை ஏற்படுத்தியது. இரண்டாவது பிள்ளைக்கு கொடுக்கத் தங்கை தன்ரை வீட்டைத்தான் கேட்பாளோ என்று பயந்து கொண்டிருக்கும் அவர், எப்படி மூன்றாவது பிள்ளையும் பெண்ணாகப் பிறப்பதை விரும்புவார்? தங்கை மூன்றாவது பிள்ளைப் பேற்றுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது, என்ன பிள்ளை பிறந்தது என்று அறியும் நோக்குடன் அங்கேயே தவம் கிடந்தார். நீண்ட நேரக் காவலுக்குப் பின் நர்ஸ் ஒருத்தி ஒரு துவாயால் குழந்தையை முகம் மட்டும்தெரியும்படி மூடிக் கொண்டு வந்து சேரிடம் காட்டினாள். அவர் அக்குழந்தை ஆணா, பெண்ணா என்று அறியும் நோக்குடன் துவாயினூடாக மெதுவாகக் கையை விட்டு ஆராய்ந்து பார்த்து விட்டுத், "தங்கச்சிக்கு ஆம்பிளைப் பிள்ளை பிறந் திருக்கு, தங்கச்சிக்கு ஆம்பிளைப்பிள்ளை பிறந்திருக்கு" என்று ஆனந்தக் கூத்தாடினார். அப்போது இடைமறித்த நர்ஸ் மெதுவாகச் சொன்னார், "அது என்ரை சின்ன விரல்"

தங்கையின் பிள்ளைகளுக்கு நோய் நொடி வந்துவிட்டால் பனையோலை ராமன் சேர் துடித்துப் போய் விடுவார். ஒருமுறை மருமகனுக்கு கடுமையான வயிற்றுளைவு. எதைக்குடித் தாலும் குடித்துவிட்டுக் குனிந்து பார்க்க அவ்வளவும் துறாவாகக் கீழைவந்திருக்கும். இடையிலை எந்தத் தடையும் இருக்காது. யாழ்ப் பாணம் வைத்தியசாலைக்குத்தான் கொண்டு போனார்கள். குளுக் கோஸ் ஏற்றி...... ஊசி மருந்தேற்றி.... எதுவுமே வயிற்றுளைவை நிறுத்த வில்லை. வைத்தியர்கள்என்னசெய்வதென்றே தெரியாமல் துண்டு வெட்டி வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்.



பனையோலை ராமன் சேர் துடித்துப் போய்விட்டார். பிள்ளையையும் தூக்கிக் கொண்டு தனக்குத் தெரிந்த நாட்டு வைத்தியர் ஒருவரிடம் ஓடினார்.

நடந்த கதை எல்லாவற்றையும் கேட்டுவிட்டு நாட்டு வைத்தியர், "பயப்பிடாதையுங்கோ! உந்த வயிற்றுளைவைச் சிம்பிளா மாத்தலாம்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்றார். சிறிது நேரத்தில் திரும்பி வந்தார். கையில் ஓர் அகலமான சிவப்புத்துணி. சேரிடம் அதைக் கொடுத்து,

"சேர்! வீட்டைபோய் இந்தச் சிவப்புத்துணியைக் குறுக்கை கட்டுங்கோ. வயிற்றுளைவு தன்பாட் டில் நின்று விடும்" என்றார். பனை யோலை ராமன் சேருக்கோ ஆச்சரியம்! அதிர்ச்சி!

"என்னையா! குளுக்கோஸ் ஏற்றியும், ஊசிபோட்டும் நிக்காத வயிற்றுளைவு உங்கடை சிவப்புத் துணியைக் கட்ட நிண்டிடுமே?" என்று கேட்டார்.

நாட்டு வைத்தியரோ, "சேர்! சிவப்புத்துணியைக் கண்டா உந்தப் பெரிய றெயிலே நிக்குது. உங்கடை மருமகன்ரை வயிற்றுளைவு நிக்காதே?" என்று கேட்டார். மனுசனுக்கு அப்ப ஏற்பட்ட கடுப்பில, வைத்தியரை அப்பிடியே விட்டிட்டு வேற வேலை பார்க்கப் போயிட்டுது.

மருமக்களுக்கு நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுப்பதில் பனையோலை ராமன் சேர் கண்ணுங் கருத்துமாக இருந்தார். ஒரு நாள் இவர் பாடசாலை விட்டு வரும்போது, மருமகன் ஆள்கள் இல்லாத வீட்டில் ஒரு மரத்தில் ஏறிக்களவாகப் பலாப்பழம் பிடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தார். தான் நல்ல பழக்கங்கள் சொல்லிக் கொடுத்தும் மருமகன் இப்படிச் செய்கிறானே என்று கடுங்கோபம்.

"நிண்டுகொள். வீட்டை போய் அப்பாவிட்டைச் சொல்லிவிடுறன்" என்றுவிட்டு வேகமாகப் புறப்பட்டார். அவரை மறித்த மருமகன் "அப்பாட்டைச் சொல்லிறதெண்டா எதுக்கு வீட்டை போகவேணும்? இஞ்சை பக்கத்துப் பிலாவிலைதான் நிக்கிறார்"– என்று தந்தையைக் காட்டிக் கொடுத்தான்.

ஒரு நாள் சேர் மருமக்களுக்கு மரபுப் பெயர்கள் பற்றிச் சொல்லிக் கொடுத்தார். விலங்குகள், பறவைகளின்ரை இளமைப்பெயர், கூட்டத்தைக் குறிக்கும் பெயர், குரல் வகையைக் குறிக்கும் பெயர் எல்லாம் சொல்லிக்கொடுத்துவிட்டு ஏதோ ஒருவேலையாகவெளியேபோனார். நீண்டநேரத்தின் பின் வீட்டுக்குத் திரும்பி வரும்போது, அவரது மருமகன் காகம் ஒன்றைப் பிடித்து வாளிக்குள் இருந்த தண்ணீருக்குள் தோய்த்துத் தோய்த்து எடுத்துக் கொண்டிருந்தான். இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த ராமன் சேர், "எதுக்கடா காகத்தைத் தண்ணிக்குள்ளை தோய்க்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு மருமகன் "மாமா நீங்கதானே காகம் கரையும் எண்டு சொன்னீங்கள்! நானும் அப்போதை தொடக்கம் காகத்தைத் தோய்த்துத் தோய்த்து எடுக்கிறேன். அது கரையுதில்லை" என்றான்.

CMYK

# அலரி மரத்து விஷம்

தாயே!
மகளே!!
தங்கையே!!
சொல்லி மாளாத பெரும்
சோகத்தின் தீபத்தை
எல்லோர் மனங்களிலும்
எரிய விட்டுச் சென்றாயா
வீரக் குலமலரே வித்தியா
கட்டுக்குள் அடங்காத
கற்பனைகள் ஒரு கோடி
கலைஞான ரூபத்தில்
கல்விக்கோர் கலைவாணி
எத்தனையே எண்ணங்கள்
ஆழ்மனது கூடுகளில்
அத்தனையும் அழிவதற்கா
பெற்றோரின் பெரும் தவங்கள்

பள்ளிச் சீருடையில் பார் முழுதும்
துள்ளிப் பவனி வந்த
துளிர் நிலவே!
கஞ்சாவில் பிறந்தவர்கள்
ஐந்தாறு காசுக்கா
அழித்தார்கள் உன் உடலை
இயேசுவுக்கு பின்பு
இரண்டாவது முறையாக
சித்திரம் ஒன்று இங்கு
சிலுவையில் அறையப்பட்டு
குளத்தில் எறிந்த கல்லாய்!

குமுறுதம்மா எனது மனம்
அலரி மரத்தடியில் வீழ்ந்த
அக்கினிச் சிறு பொறி[illegible]
அகிலத்தை இன்று [illegible]

அணு வெடிப்பாய் ஆக்கியது
குமுறும் எரிமலைக்கு
குடைபிடித்தால் கூடாது
குளவிக் கூட்டு கல் எறியால்
குழப்பங்கள் தீராது

அன்றும் இப்படித்தான் ஆரம்பம்
இது மஹிந்தனின் தாரக மந்திரம்
கைதிகள் கண்துடைப்பும்
அரசியல் திசை திருப்பம்
சொல்லம்பாய்ப் பாயும்
சூரியகாந்தப் புயல்
எல்லோரையும் சுடும்
ஒருநாள் விரைவில் வரும்
[illegible]
[illegible]

போனவர் வருவார்கள்
அலரி மாளிகைக்கும்
அழைப்பாணை தருவார்கள்

அலறித் துடிதுடித்து
அலரிமரத்து ஆவி
அட்டமத்து சனியன்கள்
எல்லோரும் சேர்ந்து அங்கு
எமலோகம் வருவார்கள்
தீர்ப்பு முடியும் இங்கு
திருந்தாத ஜென்மத்தை
பார்த்துப் பார்த்து வித்தி
பழியைத் தீர்த்துக்கொள்

தொட்டவர்க்குத் தோசம்
அவதானம் மிகக் கவனம்
அலரி மரத்துச் செடியும்
ஆள் கொல்லி விஷம்
ஆண்டவன் தீர்ப்பும்கூட
அனைவர்க்கும் சமம்.

வேலணையூர் விஜயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்றின்பம் ஒழித்து பேரின்பம் பெறுவோம்



சைவப் புலவர்
அம்பலவாணர் இராஜரட்ணம்

சிற்றின்பம் என்பது நாம் வருந்தி எடுத்த இந்த அழியக் கூடிய உடலால் சொற்ப காலத்துக்கு அடையக் கூடிய இன்பம். பேரின்பம் என்பது உலகில் இறைவனால் விலக்கப்பட்ட தீய செயல்களை நீக்கி ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களிலிருந்து விடுபட்டு அன்பு, இரக்கம், தயவு, பொறுமை, ஈதல், இன்சொல் கூறல், நாவடக்கம் போன்ற நற்காரியங்கள் செய்து இறைவனின் திருவருளைப்பெற்ற உயிரால் நிரந்தரமாக அடையும் இன்பம்.

காமத்தால் அடைவது சிற்றின்பம், ஞானத்தால் அடைவது பேரின்பம். பஞ்சமாபாதங்களில் காமமும் ஒன்று. காமத்தால் அழிந்தோர் இந்தப் பூவுலகிலும் பலர், சாபங்கள் பெற்றோர் தேவ உலகத்திலும் பலர், அசுர உலகத்திலும் பலர் அழிந்திருக்கிறார்கள். காம இச்சை மனிதனை நரகத்தில் கொண்டு சென்றுவிட்டுவிடும். நரகத்தை விலத்தி மோட்சம் பெறவேண்டுமெனில் காம இச்சையை அறவே ஒழித்துவிடல் வேண்டும்.

காமம் என்பது மிகவும் பொல்லாத பொருள். அதனால்தான் சான்றோர்கள் அதைக் கடைசியில் வைத்தார்கள் போலும். கொலை, களவு, கள், சூது, காமம் என்ற பஞ்சமாபாதங்களில் கடைசியில் வருவது காமம். கொலை செய்வதை முயற்சியால் தவிர்த்து விடலாம். களவு செய்வதையும் கூடுதல் முயற்சி எடுத்தால் தவிர்த்து விடலாம். கள் குடித்தலையும் சிறிது கூடுதல் முயற்சி எடுத்தால் தவிர்த்து விடலாம். சூது கொள்வதையும் மிகக் கூடுதல் முயற்சி எடுத்தால் அதையும் தவிர்த்துவிடலாம். ஆனால் காமத்தை ஒழிப்பதற்கு மிக மிகக் கூடுதல் முயற்சி எடுக்கவேண்டும். அதன் காரணத்தால்தான் பலர் அழிந்தே போயிருக்கிறார்கள். சாபம் பெற்றிருக்கிறார்கள். ஈற்றில் சாப விமோசனமும் பெற்றிருக்கிறார்கள். இதற்கு உதாரணம் இராவணன், ஜமதக்கினி முனிவரின் மனைவி ரேணுகா, இந்திரன், அகலிகை போன்றோர்கள்.

சான்றோர் பாடலும் இதற்குச் சான்று பகர்கிறது. மன்மத லீலையை வென் றார் உண்டோ? இந்தப் பிரபஞ்சத்திலே மன்மதனானவன் சகல ஜீவராசிகளின் உடம்பிலும் இருந்து கொண்டு ஸ்திரீ புருஷர்களின் மனதில் சிற்றின்பத்தை வளர்த்து மோகத்தை அதிகரிக்கச் செய்து ஆசை என்னும் பந்தத்தினால் இந்தப் பிரபந்தத்தை விருத்தியடையச் செய்கிறான். ஜீவராசிகளிலுள்ள பிரம்ம ஞானத்தை நாசப்படுத்தி ஸ்திரீ, புருஷர்களை பிரமிக்கச் செய்கிறான். இதனால் ஜீவராசிகளுக்கு காமாதிசயத்தால் இச்சை உண்டாகிறது. இது பிறவிகள் தோறும் தொடர்ச்சியாக வந்துகொண்டே இருக்கும்.

ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறந்த குழந்தையானது படிப்படியாக வளர்ந்து வருடந்தோறும் மனமும் குணமும் வெவ்வேறாக மாறி ஒரு கட்டத்தில் சகல போகங்களையும் அனுபவித்து ஈற்றில் சரீர பலம் குன்றி, நரை, திரை வந்து பற்கள் விழுந்து கண்கள் இருட்சியடைந்து பார்வை குன்றி, தோல் சுருக்கங்கள் ஏற்பட்டு, நடக்கச் சத்தியில்லாமல் ஊன்று கோலுடன் நடந்து திரியும் போதிலும் அந்தக் கிழவனுக்கு காம இச்சை இருபது வயதில் எவ்வளவு இருந்ததோ அது போலவே எண்பது வயதிலும் இருக்கும்.

அந்தச் சமயம் சிறுபிள்ளைகள் அக்குடு குடு கிழவனைப் பார்த்து, பாட்டா கலியாணம் செய்து கொள்ளுகின்றாயா? என்று கேலியாகக் கேட்பதுண்டு. உடனே அந்தக் கிழவர் பொக்கை வாயால் சிரித்து கொண்டு ஆ...ஆ... என்று வாயைத் திறந்துகொண்டு "இப்பொழுது எனக்கு எவர் பெண் கொடுப்பார்கள்?" என்று கூறுவார்.

இப்படியான ஆசை தோன்றுவதற்குக் காரணம் அனேக ஜென்மங்களாய் மனிதனுடன் கூடவே வந்துகொண்டிருக்கும் காம ஆசை. அதுவே இவ்வாறு சொல்லச் செய்ததே ஒழிய, இந்த ஜென்மத்தில் புதிதாகத் தோன்றிய காமமல்ல. இப்படிப்பட்ட காம ஆசையுடனிருந்து சரீரத்தை விட்டுப் பிரிவதனால் அந்தக் கிழச்சரீரம் மாத்திரம் அழிவடைந்து அந்த காம உணர்வானது அந்தக் கிழவனின் உயிரானது வேறுதாயின் வயிற்றில் போய் புகுந்து மீண்டும் குழந்தையாகப் பிறந்து வளரும் போது அடங்கியிருந்து வாலிபப் பருவம் அடையும்போது ஸ்திரீ மீது அதிக மோகம் கொண்டிருப்பான்.

இப்படியே இந்தக் காமமானது அனேக பிறப்புகள் தோறும் தொடர்ந்து கொண்டே வருவதனால் ஆசைகள் அதிகமாக வேரூன்றி ஒவ்வொரு ஜென்மந்தோறும் வந்துகொண்டே இருக்கின்றன.

எண்ணங்கள் காமத்துக்கு விதையாகவும் இந்திரியங்கள் மனம் புத்தி போன்றவைகள் காமத்துக்கு இருப்பிடமாகவும் இருந்து ஞானத்தை மறைத்து ஜீவனை மயக்குகின்றன. இந்திரியங்கள் சப்தங்களை அறிந்து மனத்திடம் சேர்க்கின்றன. அதுவிடயங்களை அறிந்து புத்தியினிடத்தில் சேர்ப் பிக்கின்றது. பின்பு புத்தி அதை ஆன்மா விடம் சேர்ப்பிக்கின்றது. இப்படியே ஆன்மா காமம் என்னும் அசுத்தத்தைப் பெற்று அழுக்கடைந்து விடும். பரிசுத்தமான ஆத்ம ஞானம் மறைவு பட்டுவிடும்.

ஆகவே இந்த அசுத்தத்தை போக்கி ஆன்மாவில் ஆத்ம ஞானத்தை வளர்க்க வேண்டுமாயின் மனக்கட்டுப்பாட்டுடன் ஆசைகளை, எண்ணங்களை அடக்க வேண்டும். இதற்கு ஒரே வழி தெய்வ வழிபாடு. சான்றோர்களின் வாழ்க்கை வரலாற்றில் பொதிந்துள்ள உண்மைத் தத்துவங்களை அறிந்து உடலை ஓர் இழிந்த பொருளாகக் கருதி, அதிலுள்ள ஆசையை நீக்குதல் உதாரணமாக பட்டினத்தார் போன்ற இறையருள் பெற்றவர்களின் தோத்திரப் பாடல்களைப் பாடிப்பாடி அவற்றில் பொதிந்திருக்கும் உண்மைக் கருத்துக்களை மனதில் பதிய வைத்து மனதை அடக்க வேண்டும்.

காமத்தைப் பற்றிப் பட்டினத்தார் கூறும் கருத்துக்களை நோக்குங்கால் ஆண்கள் பெண்களைப் பற்றியும், பெண்கள் ஆண்களைப் பற்றியும் கொண்டுள்ள உடல் ஆசைகள் அருவருக்கத்தக்கன. முகஞ்சுழிக்க வைக்கும் வகையில் பட்டினத்தார் பாடிய பாடல்களை நாம் ஆழ்ந்து நோக்குவோமானால் எம் மனதில் உள்ள காம எண்ணங்கள் அற்றே போய்விடும். பேரின்பத்தை நோக்கிப் பயணிப்போம்

# களையெடுக்கும் எவ்சிஜடி

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிக் விமானக் கொள்வனவு விவகாரத்தில் அப்போது வான் படைத் தளபதியாக இருந்த றொஷான் குணதிலக்கவும் எவ்சிஜடியின் விசாரணைக்கு முகம் கொடுத்திருந்தார். தற்போது தலைமறைவாக உள்ள உதயங்க வீரதுங்கவும் இது தொடர்பில் தேடப்பட்டு வருகிறார்.

**சஷீந்திர ராஜபக்ஷ**

முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு சொகுசு பேரூந்துகளை தனிப்பட்ட பயணங்களுக்குப் பயன்படுத்திய விவகாரம் தொடர்பில் எச்விஜடியினரால் சித்திரை மாதம் 10ஆம் திகதியன்று 5 மணித்தியாலங்களாகத் துளைக்கப்பட்டார்.

**டேல பண்டார**

தலதா மாளிகைக்குரிய நிதிகளையும் இந்த முன்னாள் பிரபலங்கள் விட்டுவைக்கவில்லை. தலதா மாளிகையின் தியவதன நிலமேயாக விளங்கிய பிரதீப் நிலங்க டேல பண்டாரவையும் இந்த நிதிமோசடி விசாரணைகுட்படுத்தினர். தலதா மாளிகைக்குச் சொந்தமான நிதியில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் அறிக்கை ஒன்றினை பெறும் பொருட்டு எவ்சிஜடியினர் வைகாசி 12ஆம் திகதியன்று டேல பண்டாரவை விசாரணைக்கு அழைத்திருந்தனர். இது மாத்திரமின்றி, சட்டத்திற்கு முரணான வகையில் 25 நிறுவனாங்களிடமிருந்து பணம் பெற்றமை, தலதா மாளிகைக்குச் சொந்தமான சொத்துக்களை பகிரந்து விற்பனை செய்தமை, தலதா மாளிகையின் தங்கத்தினை தவறாகப் பயன்படுத்தியமை போன்ற பல குற்றச்சாட்டுக்களும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

**டிலித் ஜயவீர**

லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் பங்குப் பரிமாற்றத்தில் இடம்பெற்ற குளறுபடிகள் தொடர்பில் அறிக்கை ஒன்றினைப் பெறும் பொருட்டு பங்கு வர்த்தக பிரபலமான டிலித் ஜயவீர வைகாசி மாதம் 14ஆம் திகதியன்று எவ்சிஜடிக்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

**ஷிரந்தி ராஜபக்ஷ**

ஷிரிலிய பௌண்டேஷன் தொடர்பிலான அறிக்கை ஒன்றைப் பெறும் வகையில் நிதிமோசடி விசாரணைக்கு அழைக்கப்பட்ட முன்னாள் முதற்பெண்மணி ஷிரந்தி, எவ்சிஜடியின் தலைமையகம் அல்லாத வெளியிடம் ஒன்றில் வைத்துக் கடந்த முதலாம் திகதி விசாரிக்கப்பட்டார்.

**வடினாபஹ சோமானந்த தேரர்**

முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பௌத்த விவகாரங்களுக்கான ஆலோசகராக விளங்கிய வடின்பஹ சோமானந்த தேரர், 600 மில்லியன் ரூபா பெறுமதியான சில்க் துணிகளை தேர்தல் காலத்தில் பகிர்ந்தளித்த விவகாரம் தொடர்பில் எவ்சிஜடியினரின் விசாரணைக்கு முகம் கொடுத்தார். இந்த விசாரணை சித்திரை 18ஆம் திகதி நடைபெற்றது.

**லலித் வீரதுங்க**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் செயலாளராகவும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தலைவராகவும் பணிபுரிந்த லலித் வீரதுங்க, தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் இடம்பெற்ற நிதிக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் சித்திரை 27ஆம் திகதி எவ்சிஜடியினால் விசாரிக்கப்பட்டார். முன்னதாக சித்திரை 22ஆம் திகதியிலும் இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் வைகாசி மாதம் 13ஆம் திகதியன்று, ரடா (RADA) நிறுவனத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் 3.3 மில்லியன் பண மோசடி தொடர்பிலே பதில் வழங்குவதற்காக அழைக்கப்பட்டார்.

**காமினி செனரத்**

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானியும் மக்கள் வங்கி மற்றும் பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் முன்னாள் தலைவருமான காமினி செனரத், குறித்த லீசிங் நிறுவனத்தில் இடம்பெற்ற பண மோசடி தொடர்பில் எவ்சிஜடியின் விசாரணைக்கு ஆளானார். பங்குனி 16ஆம் திகதி அவரிடம் விசாரணை நிகழ்த்தப்பட்டது.

இன்னும் பல நிதிமோசடிகள் தொடர்பில் விசாரணைகளை முடுக்கிவிட காத்திருக்கும் எவ்சிஜடி, அதற்கான பட்டியலுடன் தயாராகவே காய்நகர்த்தி வருகிறது.

அலிபாபாவும் அவரின் நாற்பது திருடர்களும் கதையை ஞாபகமூட்டும் இந்தப் பிரபலங்களில் சிலர், மேடை சரியில்லை எனக் கவலை [illegible] நிதிமோசடி விசாரணைப் பிரிவின் [illegible] அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய, எவ்சிஜடியின் சட்டபூர்வ தன்மை குறித்து கேள்வியெழுப்பி அடிப்படை உரிமை மனு ஒன்றை கடந்த மாதம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்.

எவ்சிஜடியினால் கைதாகிப் பின்னர் பிணையில் விடுதலையான முன்னாள் அமைச்சர ஜோன்சன் பெர்னான்டோவும் எவ்சிஜடியினை உருவாக்குவதற்குப் பிறப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்திருக்கிறார்.

ரடா நிறுவன முறைகேடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர ரிரான் அலஸ் எவ்சிஜடியினரால் கைதாவதைத் தடுக்கும் வகையிலான உத்தரவு ஒன்றும் உயர் நீதமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

எவ்சிஜடியின் உருவாக்கம் சட்டத்திற்கு முரணானது என்னும் கருத்தினையே முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவும் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அரசியல் பழிவாங்கல்களை நிகழ்த்துவதாக கூறி, எவ்சிஜடிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்திருக்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆளுகையின் கீழ்வரும் அமைச்சரவை உப குழுவின் கட்டளைக்கு அமைவாக இயங்கும் எவ்சிஜடி, பக்கச் சார்பானது எனவும் சட்டவிரோதமானது எனவும் சுசில் பிரேமஜயந்தவினால் ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எவ்சிஜடிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ரிட், மனு கடந்த வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதி மன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. பேராசிரியர் காரலோ பொன்சேகா மற்றும் வண. எல்லே குணவன்ச தேரர் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் 17ஆம் திகதி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதனை விட எவ்சிஜடியின் அங்கத்தவர்களை ஆதியோடு அந்தமாக கல்லால் எறிந்து கொல்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்த தென் மாகாண சபை உறுப்பினர் உபுல், தற்போது கம்பிகளை கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறார். அவருக்கான விளக்கமறியல் நாளை (15) வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் பிரபலங்கள் மீது நிதிமோசடி விசாரணைப் பிரிவு முன்னெடுக்கும் நடவடிக்கைகளால், இந்நாள் பிரபலங்கள் தம்மை தாமே சுய பரிசோதனை செய்து கொள்வதே காலத்தின், மக்களின், நாட்டின் இன்றைய தேவை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியடிப் பிள்ளையாருக்கு பொங்கல் அரசடிப் பிள்ளையாருக்கு அகற்றல்

சந்திரசேகர ஆசாத்

வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வசாவிளான் தெற்கிலுள்ள புளியடிப் பிள்ளையார் ஆலயத்தில் விசாகப் பெருநாளை முன்னிட்டு மக்கள் சென்று வழிபாடு நடத்த அண்மையில் அனுமதியளிக்கப்பட்டது. ஆலயத்தைச் சுற்றியும் மக்கள் சென்ற பாதையிலும் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையிலும் மக்கள் இருபத்தைந்து வருடங்களின் பின்பு பொங்கிப் படைத்துப் பூசை வழிபாடுகள் செய்து திரும்பினர்.

அதேவேளையில் ஆக்கிரமிக்கப்பட்ட தங்களின் காணிகளையும், சிதைக்கப்பட்ட தங்கள் குடியிருப்புக்களையும், தரிசாகிப் போய்க்கிடக்கும் தமது விளைநிலங்களையும் கண்டு மனம் வெதும்பினர். எனினும்



தங்கள் சொந்தக் காணிகளுக்கு மீண்டும் செல்லும் தவிப்பு அவர்களின் ஒவ்வொரு வார்த்தைகளிலும் இழையோடிக் கிடந்தன. சற்றுத் தொலைவில் தெரிந்த படையினரின் புதிய புதிய கட்டடத் தொடர்களையும் அவர்கள் அவதானிக்கத் தவறவில்லை.

இருந்தாலும் தாங்கள் மீண்டும் தமது சொந்தக் காணிகளில் குடியேற முடியும் எனவும் பிள்ளையார் கோவிலைப் புனரமைத்து வருடாந்தம் திருவிழாவை நடத்த முடியும் எனவும் தாங்கள் கொண்டிருந்த நம்பிக்கையை மட்டும் அவர்கள் இழக்கவில்லை.

வலி. வடக்கில் 25 வருடங்களின் பின்பு புளியடிப் பிள்ளையாருக்குப் பொங்கல் இடம்பெற்ற அதேசமயத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் எல்லைக் கிராமமான கொக்கிளாயில் 33 வருடங்களுக்கு முன்பு அகற்றப்பட்ட அரசடிப் பிள்ளையாரின் ஆலயம் அமைந்த இடத்தில் பௌத்த விகாரை அமைக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்பு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து, இராணுவத்தினரால் முன்னர் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது. அரசால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளும் நம்பிக்கையூட்டும் வகையிலேயே அமைந்திருந்தன.

வசாவிளான் தெற்கில் புளியடிப் பிள்ளையாரை வழிபடவும், பொங்கல் செய்து ஆராதிக்கவும் அனுமதிக்கப்பட்டதும்கூட அந்த நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே கருதப்பட்டது. ஆனால் படையினரின் உதவியுடன் கொக்கிளாயில் பிள்ளையார் ஆலயம் அமைந்திருந்த தனியாருக்குச் சொந்தமான காணி ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கு ஒரு பிரமாண்டமான பௌத்த விகாரை அமைக்க எடுக்கப்படும் முயற்சிகள் ஏற்கனவே உருவான நம்பிக்கையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

ஒரு சிலரைச் சொந்தக் காணிகளில் குடியேற அனுமதிக்கும் நடவடிக்கைகள் தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்ற மேற்கொள்ளப்படும் கண்துடைப்பு நடவடிக்கைகளோ என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

இந்தக் காணி அந்தப் பகுதியின் பிரதேச சபை உறுப்பினருக்குச் சொந்தமான பாரம்பரிய உறுதிக் காணி. தற்சமயம் அந்தக் காணியும், அருகில் உள்ள இன்னொருவரின் காணி அனுமதிப்பத்திரம் கொண்ட காணியும், அந்தப் பகுதி கிராமிய மருத்துவமனைக்குச் சொந்தமான காணியும் ஒரு பௌத்த பிக்குவால் ஆக்கிரமிக்கப்பட்டு அதில் 9கோடி ரூபா செலவில் ஒரு பௌத்த விகாரை அமைக்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

காணி உரிமையாளர்கள் தமது சொந்தக் காணிகள் பௌத்த ஆலயத்தின் பேரால் நிரந்தரமாகப் பறிக்கப்படுவதை எதிர்த்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நடத்த முடிவு செய்து இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கும் அறிவித்திருந்தனர். ஆனால் அன்று அதிகாலையிலேயே செம்மலை, கருநாட்டங் கேணி, கொக்கிளாய் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கில் பொலிஸார் குவிக்கப்பட்டு மக்கள் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் செல்லவிடாமல் தடுக்கப்பட்டனர். பொலிஸார் உணவு தவிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வந்து அங்கு உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். பின்பு அவர்கள் மாகாண சபை உறுப்பினர்களின் தலையீட்டின் பேரில் அன்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

தனியார் ஒருவரின் காணிக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அப்படியான ஒரு குற்றச் செயலைப் புரியும் பௌத்த பிக்குவும் அவரைச் சார்ந்தவர்களும் கைது செய்யப்படவில்லை. ஆனால் அத்தகைய சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக ஜனநாயக முறையில் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளின் முன்பு சட்டம், ஒழுங்குகூட பொலிஸாரால் அலட்சியம் செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்களால், தமிழ் மக்கள் இந்த அரசிடம்கூட நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வியை எழுப்புகின்றது. இலங்கை அரசமைப்புச் சட்ட வரைவு குற்றவியல் பிரிவுகளிலிருந்து மஞ்சள் அங்கி அணிந்தவர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது போன்ற ஒரு தோற்றம் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும்.

### தமிழர் பூமி கொக்கிளாய்

கொக்கிளாய் பரம்பரை பரம்பரையாகத் தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் பூமி. இந்தப் பகுதி தென்னைமரவாடி வன்னிமையின் ஆளுகைக்குள் அமைந்துள்ள ஒரு வளமான விவசாய பூமியாகும். இந்தப் பகுதி மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். இதேவேளையில் முல்லைத்தீவு, செம்மலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிப்பருவ காலங்களில் வந்து வாடியமைத்துத் தங்கிக் கரைவலைத் தொழிலில் ஈடுபடுவதுண்டு. அங்கு கடலில் தொழில் செய்யும் முன் வழிபட்டுச் செல்ல ஒரு வேளாங்கண்ணி மாதா கோவிலையும் நிறுவியிருந்தனர்.

1970 – 1980 தசாப்தத்துக்குள் இறுதிப் பகுதியில் நீர்கொழும்பைச் சேர்ந்த இரு சம்மாட்டிகள் கொக்கிளாய்க்கு வந்து கரைவலைத் தொழிலை ஆரம்பித்தனர். அவர்களும் மீன்பிடி பருவகாலம் முடிந்த பின்பு தமது சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்று விடுவதுண்டு. ஆனால் அந்தச் சம்மாட்டிகளுடன் கூலித் தொழிலாளர்களாக வந்த சிலர் பருவகாலம் முடிந்த பின்பும் அங்கேயே தங்கி கொக்கிளாய் கடல்நீரேரியில் மீன்பிடித் தொழில் செய்தனர். காலப்போக்கில் மீனவர் குடியேற்றம் என்ற பேரில் முகத்துவாரப் பகுதியில் அவர்களுக்கு அரசால் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

1972ஆம் ஆண்டு பிரதேசசபை உறுப்பினரின் பேரனார் தனது பரம்பரை உறுதிக் காணியில் ஒரு பிள்ளையார் கோயிலை அமைத்து பொங்கல் செய்து வழிபட்டு வந்தார். அது கொக்கிளாய் மக்களின் பிரதான கோவிலாக விளங்கியது.

1982இல் அன்னை வேளாங்கண்ணி ஆலயப் பங்கு தொடர்பாகத் தமிழ் மக்களுக்கும் குடியேறிகளாகிய சிங்களவர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. இது பெரும் கலவரமாக வெடித்த நிலையில் பல தமிழர்கள் தலைமறவாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதேவேளையில் கள்ளக் குடியேற்றத்தைத் தடுப்பதற்கு என்ற பேரில் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த 10 பேர் கொண்ட சிறிய இராணுவ முகாம் சிங்களவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் முகமாக விரிவுபடுத்தப்பட்டது.

அடுத்து இடம்பெற்ற 1983 இனக்கலவரம், 1984 மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்பன காரணமாகத் தமிழ் மக்கள் முற்றாகவே கொக்கிளாயிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

தமிழ் மக்களின் வெளியேற்றத்தை அடுத்து படையினர் பிள்ளையார் சிலையை அகற்றிவிட்டு அந்த இடத்தில் புத்தர் சிலையை நிறுவினர். பிள்ளையார் கோயில் கட்டடமும் சிதைக்கப்பட்டது. அன்றிலிருந்து அண்மைக் காலம் வரை அந்தப் புத்தர் சிலை இராணுவத்தினரால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

30 வருடங்களின் பின்பு கொக்கிளாயைச் சொந்த இடமாகக் கொண்ட தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது பிரதேச சபை உறுப்பினரின் காணியில் பிள்ளையார் கோயில் அகற்றப்பட்டு அரச மரத்தின் கீழ் புத்தர் சிலை நிறுவப்பட்டிருந்தது. எனவே பிரதேச சபை உறுப்பினர் தனது சொந்தக் காணியை மீளப் பெறும் பொருட்டு சட்டபூர்வமான வழி முறையில் இறங்கினார். அப்படியான முயற்சிகள் அவரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் ஒரு பௌத்த பிக்குவால் பிள்ளையார் கோயில் அமைந்திருந்த பகுதியில் ஒன்பது கோடி ரூபா செலவில் ஒரு பௌத்த விகாரை நிறுவும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரம்பரிய தமிழர் கிராமமான கொக்கிளாயில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் முகமாக வந்த சிங்களவர்களில் 236 குடும்பங்கள் அங்கு நிரந்தரமாகவே தங்கி விட்டனர். அவர்களில் 4 குடும்பங்கள் மட்டுமே சிங்கள பௌத்தர்கள். ஏனைய 232 குடும் பங்களும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அன்னை வேளாங்கண்ணி கோவிலில் தங்கள் வழிபாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### விகாரை அமைப்பின் நோக்கம் என்ன?

தற்சமயம் அங்கு வாழும் 4 பௌத்த சிங்களக் குடும்பங்களுக்காக ஒரு பௌத்த பிக்குவால் தமிழர்களின் காணிகளும், மருத்துவமனைக் காணியும் அபகரிக்கப்பட்டு அங்கு ஒரு பிரமாண்டமான பௌத்த விகாரை அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒரு மதத்தைப் பின்பற்றும் மக்கள் தமக்கென ஓர் ஆலயத்தை அமைப்பதை எவரும் தவறு என்று சொல்லி விடமுடியாது. ஆனால் வழிபாட்டு நிலையம் அமைக்க சட்டவிரோதமாகத் தனியார் காணியை அபகரிப்பது, இந்துக் கோயிலை அகற்றிவிட்டு விகாரையை அமைப்பது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.

விகாரை அமைக்கக்கூடிய வேறுபல அரச காணிகள் இருக்கும் நிலையிலும் தமிழர்களின் காணி ஆக்கிரமிக்கப்பட்டு வருவதை ஒரு மத நடவடிக்கை என்ற எல்லைக்கு அப்பால், ஒரு இன ஒடுக்குமுறை நடவடிக்கையாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அது மட்டுமன்றி இன்று விகாரைகளை மையமாகக் கொண்டு இன முரண்பாடுகளையும், மோதல்களையும் ஏற்படுத்தி இந்த நாட்டில் தேசிய நல்லிணக்கம் உருவாக விடாமல் தடுத்து ஓர் இயல்புக்கு மாறான நிலையை ஏற்படுத்தும் அரசியல் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகவே இது பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இன்று மஹிந்த ராஜபக்ஷ விகாரைகளை மையமாக வைத்தே இனவாத அரசியலை முன்னெடுத்து வருவதையும், நாட்டில் இன மோதல்களை ஏற்படுத்தும் முகமாக அவரது மஞ்சள் அங்கி முகவர்கள் செயற்பட்டு வருவதையும் கவனத்தில் எடுக்காமல் விட்டுவிட முடியாது.

எப்படியிருப்பினும் வசாவிளானில் புளியடிப் பிள்ளையாருக்கு பொங்கல் செய்து வழிபட அனுமதிக்கப்பட்டமை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாக இருக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் விருப்பமாகும். எனவே கொக்கிளாயில் விகாரை அமைக்கும் முயற்சிகள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

> வழிபாட்டு நிலையம் அமைக்க சட்டவிரோதமாகத் தனியார் காணியை அபகரிப்பது, இந்துக் கோயிலை அகற்றிவிட்டு விகாரையை அமைப்பது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நடப்பு



# ஈராக், சிரியாவில் புராதன சின்னங்கள் தகர்த்து நாசம்

## விற்பனை செய்து பணம் சம்பாதிப்பதிலும் நாட்டம்

ரெங்கன்



சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் பகுதிகளைப் பிடித்து ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு உருவாக்கிய இஸ்லாமிய அரசு, தமது பகுதிகளில் உள்ள பழங்கால விலைமதிப்பில்லாத சின்னங்களை எல்லாம் பெரிய சுத்தியல்கள் – புல்டோசர்களைக் கொண்டு இடித்துத் தகர்த்துவரும் செய்தி உலகம் முழுவதிலும் அதிர்ச்சி அலைகளைப் பரப்பியுள்ள அதேநேரம், அவர்கள் புராதன சின்னங்களைத் தகர்ப்பதில் மட்டும் ஈடுபடவில்லை. ஈராக், சிரியா போன்ற நாடுகளில் தாம் கைப்பற்றியுள்ள பகுதிகளில் காணப்படும் சிறிய அளவிலான சின்னங்களை விற்பதிலும் அதன் மூலம் லட்சக்கணக்கான அமெரிக்க டொலர்களைச் சம்பாதிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும் செய்திகள் கூறுகின்றன.



இந்தச் செயல்களை அவர்கள் அமைப்பு முறையில் திட்டமிட்டு, அந்தந்த நாடுகளின் தேசிய சொத்துக்களைக் கொள்ளையடித்து வருகிறார்கள் என்று அந்த நாடுகளின் அதிகாரிகளும் நிபுணர்களும் தெரிவித்துள்ளார்கள்.

இஸ்லாமிய அரசு கிளர்ச்சியாளர்கள் தாம் புராதன சின்னங்களை அழிப்பதற்கு கூறிவரும் காரணங்களில் அவை உருவ வணக்கத்தைக் (விக்கிரக ஆராதனை) குறிப்பனவாக இருப்பதுடன் இஸ்லாத்துக்கு [illegible]ந்திய கலாசாரத்தைக் குறிப்பனவாகவும் இருக்கின்றன என்பதும் சிலவாகும். ஆனால் திரை மறைவில் இந்த அமைப்பினர் திட்டமிட்ட வகையில் பழைய சின்னங்களைக் கொள்ளையடித்து வருகிறார்கள்.



தன்னைத்தானே கலிபா என்று அறிவித்துக் கொண்டுள்ளவரின் திட்ட செயற்பாடுகளில் ஒன்றாக இதனை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெறுமதிமிக்க வளங்களுக்கான அவர்களின் அதிகாரப் பிரிவு, வரலாற்று முக்கியத்துவமான இடங்களைத் தோண்டி எடுப்பதற்கும் உரிமை வழங்கியுள்ளது.

இந்தத் தீவிரவாதக் குழுவின் பிடியில் 2000 ஆண்டு பழைமையான [illegible]ராஜதானி சிதைவுகளைக் கொண்ட புராதன நகரம் பல்மைரா அகப்பட்டிருப்பது பெரும் கவலையைத் தோற்றுவித்துள்ளது. "தம்மால் விற்கக்கூடிய எல்லாவற்றையும் திருடுகிறார்கள். திருட முடியாதவற்றைத் தகர்த்து விடுகிறார்கள்" என்று ஈராக்கிய பழம் பொருள்களுக்கான பிரதியமைச்சர் ஹுசேன் ரஷீத் கூறியுள்ளார்.



கடந்த ஜூனிலிருந்து புராதன சின்னங்கள் கடத்தப்படுவது அதிகரித்து வருவதாகக் கூறப்படும் அதே காலகட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பகுதியான அசிரிய தலைநகர் நிம்ருட்டைத் தம்வசப்படுத்தினார்கள். அதற்கு முன் ஈராக்கின் வடக்கில் பெரும் பகுதியையும் மோசுல் நகரையும் கைப்பற்றி இருந்தார்கள். இந்த வருடம் முற்பகுதியில் இஸ்லாமிய அரசு வெளியிட்டுள்ள ஒரு வீடியோவில் அந்தப் புராதன பெருநகரின் வாயிலில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கற்பாறைகளினாலான விசாலமான இறகுகளைக் கொண்ட எருதுகளின் முகங்களை போராளிகள் துளைபோட்டுத் தகர்ப்பது காட்டப்பட்டது. மோசுல் அருங்காட்சியகத்திலுள்ள சிலைகளை அவர்கள் தகர்க்கும் காட்சிகளும் படமாக்கப்பட்டிருந்தன.

இஸ்லாமிய அரசு தீவிரவாதிகள் எண்ணெய் விற்பனையிலும் ஈடுபடுவதாகத் தெரிகிறது. ஆனால் எண்ணெய் கிடைக்கும் பகுதிகள் பெரும்பாலும் அமெரிக்க விமான தாக்குதல்களுக்கு உள்ளாகி வருவதால் புராதன பொருள் விற்பனையில் அதிக நாட்டம் செலுத்தப்படுகின்றது. அத்துடன் புராதன திரவியங்கள் கிடைக்கக்கூடிய இடங்களும் அழிவுக்குள்ளாக்கப்படுகின்றன.

## பிரிட்டனில் அரசமைப்பு உருவாக்கும் முயற்சி

இதுவரை காலமும் எழுத்து மூலம் அரசமைப்பு ஒன்று இல்லாது செயற்பட்டு வந்துள்ள பிரிட்டனுக்கு இப்போது அப்படியான ஒன்று அவசியம் தேவை என்ற வகையில் பல பிரிட்டிஷ் குடிமக்கள் யோசிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். உலகில் செயல்பட்டு வரும் மூன்று பிரதான ஜனநாயக நாடுகளில் அரசமைப்பு ஒன்று இல்லாதிருக்கும் நாடுகளில் பிரிட்டனும் ஒன்று என்று கருதப்படுகின்றது.



பிரிட்டன் இதுவரை காலமும் இல்லாத வகையில், தனது அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்வதில் இன்று எதிர்நோக்கும் சவால்கள் முக்கியமானவை என்று கருதப்படுகின்றது.

கடந்த செப்ரெம்பரில் ஸ்கொட்லாந்து சுயாதீனமான பொது ஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி அனேகமாக ஐக்கிய ராஜ்யத்தையே பிரித்துவிடும் முயற்சியில் இறங்கியிருந்தது. அதன் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் ஸ்கொட்லாந்து தேசியவாதிகள் மீண்டும் பெரும் வெற்றி பெற்றிருந்தார்கள். தமக்கு மீண்டும் கிடைத்த வெற்றியை வைத்து மீண்டும் பிரிட்டனைப் பிரித்துவிடும் முயற்சியில் இறங்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம் பிரிட்டனும் முழு அளவில் ஐரோப்பாவின் ஒரு பங்காளியா என்பதைத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. பிரிட்டனில் நிலவும் விசித்திரமான தேர்தல் முறையில் கடந்த மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே மோசமாக திரிபுபட்ட வகையில் முடிவுகள் கிடைத்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளின் வலைக்குள் சிக்கியுள்ள நாட்டுக்கு இப்பொழுதாகிலும் எழுத்து முறையிலான அரசமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வது அவசியம் என்று நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். அடிப்படையிலான சில ஒழுங்குமுறைகளை எழுத்தில் வடித்துக்கொள்வது அவசியமாகும் என்கிறார்கள் அவர்கள். ஏனைய பல நாடுகள் தமது பிரச்சினைகளுக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த வழியில் தீர்வு கண்டுவிட்டன என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

பிரிட்டிஷ் பிரபுக்கள் சபையின் உறுப்பினரான ஜெரமி பூர்விஸ் என்பவர், கடந்த வாரம் சபையில் ஒரு பிரேரணையை முன்மொழிந்தார். அது ஏற்றுக் கொள்ளப்படுமானால் அரசமைப்புக்கான ஒரு வழிமுறையைத் தோற்றுவிக்கும் என்று கருதப்படுகின்றது. அவர் கூறுகையில், அரசமைப்புக்களை உருவாக்கிக் கொள்ள ஏனைய பல நாடுகளுக்கு அறிவுரைகள் வழங்கும் பாரம்பரியத்தை கொண்டுள்ள நாம், எங்களுக்கும் அதுதேவை என்பதை அங்கீகரிக்காமல் இருந்து வருகின்றோம். அதற்கு இதுதான் தக்க தருணம் – என்றார்.

## ரஷ்ய அதிபரின் இத்தாலிப் பயணம்

ரஷ்ய அதிபர் விளாடிமிர்புடின் இத்தாலிக்குப் பயணம் மேற்கொள்ளும்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதித்திருப்பது தொடர்பாக ஏதும் மாறுபாடான அல்லது தமது நாட்டுக்குச் சார்பான கருத்துக்கள் காணப்படுகிறதா என்பதில் கவனமாக இருப்பார் என்று விமர்சகர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் அவ்வாறு மாறுபாடான அல்லது ரஷ்யாவுக்குச் சார்பான கருத்தை எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்த்தால் அவருக்கு ஏமாற்றம்தான் கிடைக்கும் என்கிறார்கள் வேறு சிலர்.

மிலான் நகரில் நடைபெறுகின்ற எக்ஸ்போ 2015 உலக தொழில் நுட்ப கண்காட்சியில் கலந்து கொள்ள புடின் செல்கின்றார். அச்சமயத்தில் இத்தாலிய பிரதமர் மாட்டியோ றென்சியை, புடின் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கிறார்.

கிரிமியாவை 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டதைக் கண்டித்து ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. அத்தடையை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கான மாநாடு இன்னும் இரண்டு வாரங்களில் இடம்பெறவிருக்கின்றது.

இத்தாலியில் புடினுக்கு நட்பு ரீதியில் வரவேற்பு அளிக்கப்படும் என்றாலும், இத்தாலிய பிரதமர் ஐரோப்பிய நாடுகளின் எதிர்ப்பைச் சம்பாதிக்கும் விதத்தில் நடந்து கொள்ள மாட்டார் என்றே கருதப்படுகின்றது. அண்மையில் நடந்து முடிந்த ஜி – 7 நாடுகளின் மாநாட்டில் ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதென்று தீர்மானித்துள்ளார்கள். உக்ரேனில் வன்முறைகள் அதிகரிக்குமானால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அந்த மாநாட்டில் பிரதமர் றென்சியும் கலந்து கொண்டிருந்தார்.

இருந்தாலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளை விட இத்தாலியுடன் ரஷ்யாவுக்கு அதிக நெருக்கம் உண்டு. ரஷ்யாவுக்கு எதிரான தடைகளை இத்தாலி தயக்கத்துடனேயே கடைப்பிடிக்கிறது என்று ரஷ்யர்கள் நம்புகிறார்கள்.

## செவ்வாயில் கண்ணாடிப் பாளம் கண்டுபிடிப்பு

செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக் கோள் ஒன்று, அங்கு எரிமலைகள் இருந்துள்ள பகுதிகளின் வாயில்களில் கண்ணாடிகள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளது. பழங்காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மிக உயர்நிலை வெப்பம் காரணமாக இந்தக் கண்ணாடி உருவாகி இருக்கலாம். அதில் அங்கு உயிர்கள் வாழ்ந்திருக்கக்கூடிய அடையாளங்களும் இருக்கலாம் என்று நாசா விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆதிகாலத்தில் நிகழ்ந்த மோதலின் காரணமாக பூமியில் காணப்படும் கண்ணாடிப் பாளங்களில் அந்த மோதலின் போது காணப்பட்ட உயிரினங்களின் அணுக்கள் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். அதேபோல் செவ்வாய்க்கிரகக் கண்ணாடிப் பாளங்களிலும் உயிர் அணுக்கள் காணப்படுமானால் அங்கும் உயிரினங்கள் வாழ்ந்திருந்த உண்மைகள் வெளிப்படுவதாய் இருக்கும்.

கோள்கள் தொடர்பான நாசா பிரிவின் பணிப்பாளர் ஜிம் கிறீன் என்பவர் இதுபற்றிக் கூறுகையில், "குறித்த பகுதிகள்தான் எமது எதிர்கால றோபோ ஆராய்ச்சிக்குரிய பகுதியாக இருக்கப்போகின்றது. அதன் மூலம் 2030 அளவில் மனிதர்கள் சென்று இறங்குவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்" – என்றார்.

"இவ்வாறு செவ்வாய்க் கிரகத்தில் கண்ணாடிப் பாளங்களைக் கொண்டுள்ள பகுதியில்தான், 2020ஆம் ஆண்டளவில் பூமியிலிருந்து ஆய்வுக்கலம் ஒன்று சென்று இறங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் எமது கலம் ஆய்வுக்கான மாதிரிகளை சேகரித்து ஒருநாள் பூமிக்கு அனுப்புவதாய் இருக்கும். அப்போது நாம், இப்போது அறிந்துள்ளதைவிட விரிவாக செவ்வாய்க்கிரகக் கண்ணாடிகள் பற்றி அறியக் கூடிய வாய்ப்பு ஏற்படும்" என்கிறார்கள் நாசா விஞ்ஞானிகள்.

செவ்வாயில் மார்ட்டின் எரிமலை வாயில்களில் தாங் [illegible] கண்ணாடிப் பாளங்கள் புதைந்திருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கால்நூற்றாண்டு காத்திருப்புக் கனவு



தி.அமுதன்

கால்நூற்றாண்டு நாளையுடன் முடிகின்றது. தங்கள் வாழ்விடத்தைவிட்டுத் துரத்தியடிக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் 26ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றது. விடை தெரியாத கேள்விகள் போலவே அவர்கள் வாழ்வும் இருக்கின்றது. விடுவிக்கப்படுமா தங்களின் பூர்வீகப் பூமி? என்ற ஏக்கத்துடனேயே போர், சமாதானம், ஆட்சி மாற்றம் எல்லாவற்றையும் அவர்கள் கடந்துபோகிறார்கள்.

**கணப்பொழுதில் இடப்பெயர்வு**

1990.06.15 அன்று பி.ப. 3 மணியளவில் தாக்குதல் தொடங்குகின்றது. உலங்கு வானூர்தியிலிருந்து ஜாம் போத்தல் குண்டுகள் வீசப்படுகின்றன. பலாலி, மயிலிட்டி ஆகிய வளங்கொழிக்கும் இரு துருவங்களிலிருந்து சம நேரத்தில் மக்கள் மந்தைகள் போல நகரத் தொடங்குகின்றனர்.

இவ்வாறான இடப்பெயர்வுகள் அடிக்கடி நடக்கும் காலம் அது. இடம்பெயர்ந்து சென்ற இரண்டு மணி நேரங்களில் அல்லது இரண்டு மூன்று நாள்களில் வீடு திரும்புவது அந்தப் பகுதி மக்களுக்கு வாடிக்கை. அன்றும் அப்படியான மற்றொரு இடம்பெயரல் என்றுதான் நினைத்தார்கள். போட்டதைப் போட்டபடி விட்டு விட்டு ஊர் போன போக்கில் கால்களை நகர்த்தத் தொடங்கினார்கள்.

ஆண்டாண்டு காலமாக சந்ததிகளுடன் வீடு திரும்பக் காத்திருக்க வேண்டும் என்று சத்தியமாக அவர்கள் கனவிலும் நினைக்கவில்லை. வழமை போன்று வீடு திரும்பலாம் என்ற எண்ணத்தில் குடிபெயர்ந்தவர்களுக்கு, வாழிடமே எதுவென்று தெரியாத நிலையில் ஊர் ஊராகச் சுற்றத் தொடங்கினார்கள். அன்று தொடங்கிய அவர்களின் அகதி வாழ்வு இன்னமும் முடிவுக்கு வரவில்லை.

1995ஆம் ஆண்டு ஒட்டுமொத்த யாழ்ப்பாணமுமே இடம்பெயர்ந்தது. ஆனால் ஓராண்டுக்குள்ளேயே திரும்பியது. வலி. வடக்கு மக்களால் மாத்திரம் தங்கள் ஊர்களுக்குச் செல்ல முடியவில்லை. இதன் பின்னரான மோதல் சூழ்நிலைகளும், வன்னி நிலப்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியும், வலி.வடக்கு மக்களுக்கு சொந்த மண்ணுக்குச் செல்வதற்கான நியாயத்தை கேட்பதற்கு இடமளிக்கவில்லை.

**திரும்ப முடியாத பாதை**

போருக்கு ஓய்வு கொடுத்து சமாதானம் என்ற பெயரில் சில காலம் வந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்த பேச்சில், வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு முன்னுரிமைப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் சுற்றுச் சுற்றாக நடந்த பேச்சில் முன்னேற்றம் இல்லை. அப்போதைய யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா (இப்போது பீல்ட் மார்ஷல்) வலி.வடக்கில் ஒரு துளி நிலத்தை தானும் விடுவதற்கு தயாராக இருக்கவில்லை.

இந்தக் காலப் பகுதியில்தான், முதன் முதலில் நில விடுவிப்புக்காக நீதிமன்றத்தை அந்த மக்கள் நாடினார்கள். நீதிமன்றம் அவ்வப்போது கட்டளைகளை வழங்கினாலும் அதனை எவரும் அக்கறை எடுத்துச் செயற்படுத்தவில்லை. ஓய்வு கொடுக்கப்பட்ட போர் மீண்டும் தொடங்கியதும் எல்லாம் முடங்கிப் போனது. 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததாக அரசு அறிவிக்கும் வரையில், வலி. வடக்கு மீள்குடியமர்வு அனைவருக்கும் மறக்கப் பட்டதானது.

போரின் பின்னர் வலி. வடக்கு மக்களை மீளக்குடியமர்த்த வேண்டும் என்ற குரல் பலமாகத் தொடங்கியது. வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் கட்டம் கட்டமாக குடியமர்த்தப்பட்டுக் கொண்டு வந்தனர். எனவே வலி. வடக்கு மக்கள் தாமும் வீடு திரும்ப. வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கினர்.

பல்வேறு போராட்டங்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் அழுத்தங்கள் என்பவற்றால் வலி. வடக்கில் முதலாவது மீள்குடியமர்வு 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்றது. தொடர்ந்து 2011ஆம் ஆண்டு மே மாதம் மேலும் சில இடங்களில் இடம்பெற்றது. அதற்குப் பின்னர் வலி. வடக்கு மீள்குடியமர்வுக்குச் சேடம் இழுக்கத் தொடங்கியது.

தேர்தல் காலத்தில்கூட மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கக்கூட மஹிந்த அரசு முன்வரவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சர்வதேச சமூகமும் நில விடுவிப்புக்காக அரசை திடிக்கிப் பிடி பிடித்தபோதும் எதுவும் நடக்கவில்லை. மக்களின் முகாம் வாழ்வும் – அகதி வாழ்வும் தொடர்ந்தன. பிரிட்டன் பிரதமர் கமரூன்கூட அந்த அகதி வாழ்வை வந்து பார்த்துப் போனார். அவருக்கு அது அரசியல் லாபகரமானதாக அமைந்தாலும் வலி. வடக்கு மக்களுக்கு எந்த விடிவும் கிடைக்கவில்லை.

கடைசியில் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தமிழ் மக்களும் சேர்ந்து வாக்குகளை அள்ளிக்கொட்டி மஹிந்தவை அகற்றி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியைக் கொண்டு வந்து மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீண்டும் [illegible] ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது. பௌதிக ரீதியாக ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டதாக அரசு கணக்குக் காட்டினாலும் அதனால் நூற்றுக் கணக்கில் மாத்திரமே மக்கள் பயன் பெற்றார்கள். அதிலும், இராணுவ முகாம்களும் – தரைமட்டமான வீடுகளுமே அவர்களுக்கு பரிசாகக் கிடைத்திருந்தன.

வளமான பூமியான பலாலியோ அல்லது மயிலிட்டியோ இந்தக் காணி விடுவிப்புக்குள் உள்வாங்கப்படவில்லை. இன்னமும் 5 ஆயிரத்து 400 ஏக்கர் நிலப் பரப்பு இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்கின்றது. 8 ஆயிரம் குடும்பங்கள் அந்த நிலப் பரப்புக்குள் மீளக்குடியமர வேண்டியவர்களாக இருக்கின்றனர்.

**தொடரும் காத்திருப்பு**

25 வருடங்களை நாளையுடன் முடித்து 26ஆவது வருடத்திற்குள் நுழையும் அவர்கள் எழுப்பும் ஒரே கேள்வி, இந்த ஆண்டாவது விடிவு கிடைக்குமா என்பது. ஒவ்வொரு ஆண்டும் தொடங்கும்போதும் அவர்களின் கேள்வி இதுவாக இருப்பினும், அந்தக் கேள்விக்கான பதில் இதுவரை அறியப்படவில்லை.

ஆட்சி மாற்றத்தினால் முழுமையாக காணிகள் விடுவிக்கப்படும், கால்நூற்றாண்டுடன் தமது அகதி வாழ்வு முடிந்து விடும் என்று நினைத்தவர்களுக்கு அது முற்றுப் பெறாமல் தொடர் கதையாகப் போனது ஏமாற்றமாகிவிட்டது.

"கொஞ்ச நிலத்தை விட்டாங்கள். எங்கட நிலம் எல்லாம் விடுவாங்கள் போல கிடந்தது. நாங்கள் எங்கட நிலத்துக்குப் போறதுக்குத்தான் உவங்களுக்கு 'வோர்ட்' போட்டனாங்கள். ஆனால் இப்ப 'பார்ளிமென்ட்' தேர்தலைக் காரணம் காட்டி, அதுக்குப் பிறகுதான் மிச்ச நிலம் விடுவிப்பு எண்டுறாங்கள். இப்பிடியே போன, இருபத்தாறாவது வருசத்திலையும் காணிக்க போவமோ தெரியாது, சில நேரம் 'மேல' போனா லும் போடுவம்."

இவ்வாறு சலித்துக் கொண்டு சொல்கின்றார், வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம்.

தாங்கள் பிறந்து – தவழ்ந்து – வளர்ந்த மண்ணிலேயே சாவை அரவணைத் துக் கொள்ள வேண்டும் என்று விரும் பும் பலரை சாவு ஏமாற்றியிருக்கிறது. [illegible] இருக்கும் போதே சாவு அவர்களை முத்தமிட்டுக் கொள்கின்றது. அவர்கள் நிறைவேறாத ஆசைகளுடன் கண்களை மூடுகின்றனர்.


நிறைவேறாத ஆசைகளுடன் சாவடைபவர்கள், ஆவியாக வந்து தமது ஆசைகளை அடைந்து கொள்வார்கள் என்று சினிமா உலகத்தில் காண்பிக்கப்படுவது உண்மையாக இருந்திருந்தால், இன்று வலி. வடக்கில் அப்புகாமியின் புதல்வர்கள் எவரும் இருந்திருக்க முடியாது. வலி. வடக்கு மீள்குடியமர்வு என்பது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை போல என்றும் தீராமல் இழுபட்டுக் கொண்டேயிருக்கின்றது. மஹிந்த அரசின் காலத்தில், நில விடுவிப்புக்காக இருந்த சர்வதேச அழுத்தம் தற்போது தணிந்துள்ளது. இதனால் புதிய அரசு நில விடுவிப்பில் முழுமையாக இறங்கவில்லை.

கடந்த அரசின் காலத்தில், 2012ஆம் ஆண்டு வலி. வடக்கு மீள்குடியமர்வுக்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் மக்களை விடுவிக்க முடியும். ஏனெனில் காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் தவிர்ந்த ஏனைய காணிகளை விடுவிக்க முடியும் என்று 2012ஆம் ஆண்டே தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு இராணுவத்தினரும் இணங்கியிருந்தனர். அப்படியானால், குறித்த இரு இடங்களையும் தவிர எஞ்சிய இடங்கள் இராணுவத்திற்கு மிதமிஞ்சியவை என்பதை இராணுவம் அப்போதே ஏற்றுக் கொண்டிருந்தது. எனவே அந்த இடங்களை விடுவிப்பது புதிய அரசுக்குச் சிக்கலாயிருக்காது. அதனை தேர்தலைக் காரணம் காட்டி காலம் தாழ்த்தாமல், விடுவிக்க வேண்டும். கால் நூற்றாண்டுகளுடன் வலி. வடக்கு மக்களின் அகதி வாழ்வும் முடிவுக்கு வரட்டும்.

> போரின் பின்னர் வலி. வடக்கு மக்களை மீளக் குடியமர்த்த வேண்டும் என்ற குரல் பலமாகத் தொடங்கியது. வன்னிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் கட்டம் கட்டமாக குடியமர்த் தப்பட்டுக் கொண்டு வந்தனர். எனவே வலி. வடக்கு மக்கள் தாமும் வீடு திரும்ப வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அதே ஆறடிதான்




மெவதர்



வைரங்கள் பொறிக்கப்பட்ட ஆபரணங்கள்



மெவதரின் விலை உயர்வான கடிகாரம்



மெவதரின் காலணிகள்


ஒரு வருடத்தின் ஜூன் மாதத்திலிருந்து அடுத்த வருடத்தின் ஜூன் மாதம் வரையுமான ஒரு வருட காலப்பகுதிக்குள் விளையாட்டு உலகின் பிரபலங்களின் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முதல் நூறு பணக்கார வீரர்கள் யார் என்ற தரப்படுத்தல்கள் வெளியிடப்படுவது அனைவரும் அறிந்த தொன்றே. இந்த தரப்படுத்தில் கடந்த சில வருடங்களாக அசைக்க முடியாத சக்தியாகவுள்ள குத்துச்சண்டை வீரரான மெவதர் நடப்பு வருடத்திலும் அதிகம் சம்பாதிக்கும் வீரராக தெரிவுசெய்யப்பட்டு அசத்தியுள்ளார்.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் மெவதர் சம்பாதித்தது இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட நான்காயிரத்து எழுநூறு கோடிகள். அதாவது ஒரு மாதத்தில் கிட்டத்தட்ட 391 கோடிகள் இன்னும் சொல்ல வேண்டுமாயின் ஒரு நாளில் 13 கோடிகள் வரை சம்பாதிக்கிறார்.

மெவதருக்கு இவ்வாறான செல்வக்குவியல் வருவதுக்கு காரணம் தோல்வியையே காணாத அவரது அற்புதமான குத்துச்சண்டைத் திறமைதான். இதுவரை தான் சந்தித்த 49 ஆட்டங்களில் ஒன்றில்கூட மெவதர் தோல்வியடையவில்லை. இந்த 49 ஆட்டங்களில் 27 ஆட்டங்களில் நொக் அவுட் முறைமூலம் அதாவது எதிர் வீரருக்கு வாய்ப்புக்களை வழங்காமல் தனித்து ஆதிக்கம் செலுத்தி ஆட்டத்தை முடித்துள்ளார். இதனால் மெவதருடன் விளம்பர ஒப்பந்தம் செய்ய பல்வேறு நிறுவனங்கள் வரிசையில் உள்ளன. குத்துச் சண்டைக்கான ஒப்பந்தமும் விதிவிலக்கானதல்ல. மிக அண்மையில் உலகமே திரும்பிப்பார்த்த ஒரு குத்துச் சண்டை நடைபெற்றது. இதில் பணக்காரப் பட்டியலில் முதலிடத்தில் உள்ள மெவதரும் இரண்டாம் இடத்தில் உள்ள மேனி பாக்கியாவும் மோதினர்.

பணக்காரப் பட்டியலில் மட்டும் இவர்கள் முதல் இரு இடங்களிலும் இருப்பவர்கள் அல்லர். மாறாக குத்துச் சண்டை வீரர்களுக்கான தரப்படுத்தலிலும் மெவதர் முதல் இடத்திலும் மேனி பாக்கியோ இரண்டாவது இடத்திலும் உள்ளனர். குத்துச் சண்டையின் இரு துருவங்கள் நேருக்கு நேர் சந்தித்துக்கொண்ட அந்த ஆட்டத்தைக்காண குத்துச் சண்டை உலகமே திரண்டிருந்தது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறுபவருக்கு பரிசுத் தொகையாக இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட ஆயிரத்து எண்ணூறு கோடிகள் அறிவிக்கப்பட்டன. எந்த வொரு ஆட்டத்திலும் தோல்வியைக் காணாமல் தொடர் வெற்றியை பதித்துவரும் மெவதர் இந்த ஆட்டத்திலும் வெற்றிபெறத் தவறவில்லை. மேனி பாக்கியாவை திரிலாக வீழ்த்தி ஆயி ரத்து எண்ணூறு கோடிகளையும் முழுமையாகக் கைப்பற்றினார்.

ஒரு வருடத்திலேயே நான்காயிரத்து எழுநூறு கோடிகள் என்றால் மெவதரின் மொத்த சொத்து மதிப்பு எவ்வளவாக இருக்கும்? குத்துச் சண்டையில் எவராலும் தடுக்க முடியாத சக்தியாக விழங்கும் மெவதர் இதுவரை இலங்கை மதிப்பில்




கிட்டத்தட்ட ஐம்பத்து நான்காயிரம் கோடிகளைச் சேர்த்துள்ளார்.


**மெவதரின் ஆடம்பரங்கள்**

பொதுவாக அளவுக்கு அதிகமான சொத்துக்களைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் தம்மிடம் உள்ள சொத்துக்களையும் அவற்றின் பெறுமதிகளையும் வெளிக்காட்டிக்கொள்ள மாட்டார்கள். அங்கேதான் மெவதர் அனைவரிலும் இருந்து வேறுபடுகிறார். உணவுண்ணும் மேசையில் இருந்து படுத்துறங்கும் கட்டில் வரை பூச்செண்டுகளுக்குப் பதிலாக பணக்கட்டுக்களே வைக்கப்படவேண்டும் என்பது மெவதரின் அரண்மனையின் அடிப்படைக் கட்டளைகளில் ஒன்று. மெவதர் படுத்துறங்குவதே பணத்தை மாதிரியாகக் கொண்டு செய்யப்பட்ட ஒரு போர்வையில்தான்.

உடுத்தும் ஆடைக்கேற்ற கார் தெரிவிலும் மெவதர் தவறுவதில்லை. உயரிய அரண்மனை உயரிய கார்கள், உயரிய கைக்கடிகாரங்கள், என்று அனைத்திலும் உயரிய என்ற சொல்லைத் தவறாது இடம்பிடிக்கச் செய்யும் மெவதர் பணம் என்றால் என்ன? என்று ஏங்கும் ஏழை மக்களுக்காக என்னத்தைச் செய்தார். ஒன்றை மட்டும் செய்துவிடுகிறார். ஒவ்வொரு வெற்றியின் பின்னரும் தனது வெற்றியின் நினைவாக பணத்தை எரிப்பதற்கு அவர் தவறுவதில்லை. பணம் என்றால் என்ன? என்று தெரியாத ஏழை மக்களைப் போல கஸ்டம் என்றால் என்ன? என்று தெரியாத மெவதருக்கும் அதே ஆறடிதான்.



வெற்றியின் பின்னர் மெவதர் பணத்தை எரிக்கும் காட்சி.





மெவதரின் வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org